மாரியம்மன் கதைப்பாடல்

மாரியம்மன் கதைப்பாடல்

(விளக்க உரையுடன்)

பதிப்பாசிரியர்

டாக்டர் ஆ. தசரதன்

தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்
4/130A, களத்துமேட்டுத்தெரு
கொட்டிவாக்கம், திருவான்மியூர் (அஞ்சல்)
சென்னை - 600 041

Title : **Mārlyammaṉ Kataippāṭal**
(The Palm-leaf ballad on Goddess **Mārlyammaṉ**)

Editor : **Dr. A. Thasarathan** M.A., Ph.D, Dip. in Ling.

First edition : December, 1995

Publication No. : 9

© Centre for Preservation of Tamil Palm-leaf Manuscripts

Price : Rs.49.00

Pages : 240

Typesetted by : **Valluvar Muthamil Manram,**
103/1, Ashok Nagar Main Road,
Kodambakkam, Chennai - 600 024.

Printed at : Pavai Printers (P) Ltd.
Chennai - 14

Copies can be had from :

Centre for Preservation of Tamil Palm-leaf Manuscripts

4/130 A, Kalathumedu Street
Kottivakkam, Thiruvanmiyur (PO),
CHENNAI 600 041, INDIA

பொருளடக்கம்

பதிப்புரை v

முன்னுரை vii

மாரியம்மன் கதைப்பாடல் ***1–96***
(பாட்டும் விளக்கவுரையும்)

சொல்லகராதி

பெயரகராதி

பதிப்புரை

மாரியம்மன் கதையை நூலாக அச்சிட்டு வெளியிட வேண்டும் எனும் எண்ணம் எனது இளமையிலேயே ஏற்பட்டது. எங்கள் குடும்பக் கோயிலான மாரியம்மன் கோயிலில், கொடை விழாவின்போது எனக்கு ஓர் அருள்வாக்கு கிடைத்தது. அப்போது நான் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். மாரியம்மன் சாமியாடியானவர் என் தலை மேல் தமது வலது கையை வைத்து, ஆடிக்கொண்டே, சிறிது நேரம் கண்களை மூடியபின் 'குறி' சொன்னார். 'நீதானப்பா! பெரிய படிப்பு படிக்கப் போகிறாய்' என்று சொல்லி, திருநீறு பூசி ஆசிகூறினார். பல ஆண்டுகளாக மறக்கமுடியாது நினைவிலிருந்துவரும் அச்செய்தி இப்போது பலித்துவிட்டது.

நெல்லை மாவட்டம், தென்காசி வட்டத்தைச் சார்ந்த எங்கள் ஊரான குறும்பலாப்பேரியில் வில்லுப்பாட்டுக்காரர் எவரோ ஒருவர் தம் ஓலை சுவடியைப் பார்த்து எழுதி வைத்திருந்த **மாரியம்மன் கதை** நோட்டுப் பிரதி எனக்கு 1985 ஆம் ஆண்டு கிடைத்தது. அதே கதையை வில்லிசையில் பாடி வைத்த ஒலி நாடாவும் அதே ஆண்டு கிடைத்தது. அவ்விரண்டையும் பெயர்த்தெழுதி தட்டச்சு செய்து வைத்திருந்தேன். இதைப் போன்ற பிரதி இதுவரை நூலாக வெளியிடப்படவில்லை. ஆறுமுகப்பெருமாள் நாடார் வெளியிட்ட **மாரியம்மன் கதை** முற்றிலும் இதிலிருந்து வேறுபட்டது ஆகும் எனத் தெரியவருகிறது.

03-01-1992 ஆம் ஆண்டு மூலப்பொழி விக்னேசுவரன் அவர்களும், நானும் திருச்செந்தூர் வட்டம் வன்னிமா நகர்க்கு ஓலைச் சுவடிகள் சேகரிக்கச் சென்றிருந்தோம். அந்த ஊரில் தருவைக்கரை முத்து நாடார் என்பவர் தம்மிடம் இருந்த **மாரியம்மன் வருகைக் கதை** என்ற ஓலைச் சுவடியைத் தந்தார். அதையும் பெயர்த்தெழுதித் தட்டச்சு செய்து வைத்துக் கொண்டேன். குறும்பலாப்பேரியில் கிடைத்த மாரியம்மன் கதைப்பிரதிக்கும் வன்னிமா நகர்ப் பிரதிக்கும் கதைத் தொடர்ச்சி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவை இந்த நூலில் பதிப்பாகியுள்ளன.

சென்னையிலுள்ள அரசினர்க் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் **மாரியம்மன் வர்ணிப்பு** என்ற தலைப்பில் இருக்கும் சுவடியானது வன்னிமா நகர்ச் சுவடியைப் போன்றது. அதனால் பாடபேத, பிரதிபேதத்திற்கு அச்சுவடியிலுள்ள வர்ணிப்பைப் புயன்படுத்தினேன். மாரியம்மன் பேரில் துதி, அகவல், தாலாட்டு, ஊஞ்சல், கும்மி போன்ற பல

பாட்டு வகைகள் சுவடிகளாகவும் அச்சு நூல்களாகவும் கிடைத்தாலும் அவற்றில் கதை அமிசம் எதுவும் இல்லை யாதலால் அவை இப்பதிப்புக்குப் பயன்படுத்தப்பெறவில்லை.

இங்குப் பதிப்பாகும் **மாரியம்மன் கதைப் பாடலில்,** மாரியம்மன் 'புதுமாரி' யாகப் பிறவி எடுத்து, வரம்பெற்று, கயிலாயத்திலிருந்து டில்லிக்கு வந்து, பின் பல ஊர்களுக்கும் அம்மைநோயைப் பரப்பிச் செல்வதும், அவளுடன் பல தெய்வங்களும் பூதகணங்களும் செல்வதும், அம்மை நோயால் மக்கள் படும் அவலமும், அந்நோயைப் போக்கி அருளுமாறு அவளை வேண்டுவதுமான கதை அமைந்துள்ளது. இக்கதை யினூடே பல தெய்வங்களின் கதைகளும் விவரிக்கப் படுகின்றன. அக்கதைக் குறிப்புகளை விளக்கவுரை போல அடிக்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளேன். மாரியம்மன் கதைப் பிரதியில் விடுபட்ட எழுத்துக்களைப் பகர அடைப்புக்குள் [ ] இட்டுக் காட்டியும், தேவையற்ற எழுத்துக்களைப் பிறை வடிவ ( ) அடைப்புக்குள் இட்டும் காட்டியுள்ளேன்.

மாரியம்மன் பற்றிய அனைத்துச் செய்திகளையும், அனைத்துவகை ஆய்வு முறைகளையும் முன்னுரையில் எழுதி விட வேண்டுமென்பதே எனது விருப்பம். ஆயினும் நம் நாட்டிலுள்ள பல மாரியம்மன் கோயில்களைப் பற்றி உடனடி யாகத் தெரிந்து கொள்ள முடியாததால் தெரிந்தவரை அக் கோயில்கள் பற்றிய செய்திகளை இடம்பெறச் செய்துள் ளேன். மேலும் மேலும் செய்திகள் கிடைக்குமாயின் அவை இனிவரும் பதிப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பெறும். அதைப் போன்று விடுபட்ட ஆய்வு நுணுக்கங்கள் தெரியவரும்போது ஏற்றுக் கொள்ளப்படும்.

மாரியம்மன் கதைப்பாடலின் பதிப்பின்போது எனக்குப் பலருடைய உதவி கிடைத்தது. அவர்களுள் தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் சிலகாலம் உதவிப் பதிப்பாளர்களாக இருந்த விருதசாரணி, தேரியப்பன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இதன் முன்னுரையில் சேர்ப்பதற்காகக் கொங்குநாட்டு, தொண்டைநாட்டு மாரி யம்மன் கோயில் களைப் பற்றிய செய்திகளை எழுதித் தந்தும், அடிக்குறிப்புகள் சிலவற்றை அமைத்தும், சொல்லகராதி, பெயரகராதி ஆகிய வற்றைத் தயாரித்தும் அரும்பணியாற்றிய விருதசாரணியைப் பாராட்டுகின்றேன். எனது அருமை நண்பர் ஜே. ஆர். சுரேந்திரன் அவர்கள் மதுரை மாவட்ட மாரியம்மன் கோயில்கள் பற்றிய சிறப்பான செய்திகளை எழுதி அனுப் பினார் அவர்க்கு என் நன்றி.

டாக்டர் ஆ. தசரதன்

முன்னுரை

பெண்முதன்மைச் சமுதாயமும் தாய்த்தெய்வ வழிபாடும்

மனித வரலாற்றில், பயிர்த்தொழிலின் மூலம் மனிதனுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பெற்ற காலத்திலிருந்து பெண்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கி விட்டனர். அவர்களின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பெண் தெய்வ வழிபாடுகள் தோன்றின. கிரேக்கம், பாபிலோனியம், எகிப்து முதலிய நாடுகளின் மக்களிடையே தாய்த்தெய்வ வழிபாடு இருந்துள்ளது. நம் தாய்த்திரு நாட்டிலும் அத்தகு நிலை இருந்துள்ளது. சிந்துவெளி நாகரிக காலத்திலேயே பெண் தெய்வ வழிபாடு சிறப்புற்று விளங்கியது. இதை மொகஞ் சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் நடைபெற்ற அகழ் வாராய்வுகள் தெரிவிக்கின்றன. அங்கு வாழ்ந்த மக்களிடத்தில் வீரம், வெற்றி, வளமை இவற்றின் அடிப்படையிலேயே தாய்த் தெய்வ வழிபாடு அமைந்திருந்தது. இதனடிப்படையிலேயே திராவிட மொழிகள் பேசும் இனக்குழுவினரிடையே தாய்த் தெய்வ வழிபாடு இருந்து வருகின்றது எனலாம்.

வீரமும் காதலும் விளங்கிய தமிழ்ச் சமுதாயப் பிரதிபலிப் பான சங்க இலக்கியங்கள், பெண் முதன்மைச் சமுதாயத்திற்குப் பின் தோன்றிய தமிழ் இலக்கியங்களாகப் கருதப்பெறுகின்றன. சங்க நூல்களுக்குப் பின் தோன்றிய இலக்கியங்களாகப் கருதப் பெறும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் பெருங்காவியங் கள் பெண்ணுக்குரிய முதன்மை இடத்தை வலியுறுத்துகின்றன. பெண்தெய்வங்கள் பற்றிய பல செய்திகளைப் பிறவற்றாலும் அறிய முடிகிறது.

தமிழ்நாட்டில்,

1. பழங்குடியினர் தம் முன்னோர்களில் முக்கியமாக விளங்கிய பெண்களை வழிபட்டதால் அவர்களிடையே தாய்த்தெய்வ வழிபாடு ஏற்பட்டதாகவும்,
2. கொற்றவை போன்ற தாய்த்தெய்வ வழிபாடுகளை வீரர்கள் மேற்கொண்டதாகவும்,
3. அசுரர்களைக் கொல்ல ஆண்டவனால் பிறவி செய்யப் பெற்ற சக்தியின் அமிசமான துர்க்கை போன்ற பெண் தெய்வங்கள் பரவலாகத் தமிழர்களால் வழிபடப்பட்டு வருகின்றன எனவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆயினும் பழங்காலத்திலிருந்து குடியானவர்களுக்குரிய தாய்த்தெய்வமாக மாரி அம்மன் விளங்கிவருவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

தாய்த்தெய்வ வழிபாட்டில் மாரியம்மன்

தொடக்ககால தாய்த்தெய்வங்கள் பெரிய வயிறும், பெரிய கொங்கைகளும் கொண்டவையாக அமைக்கப்பட்டன. இவை போன்ற சுடுமண் உருவங்கள் மோடி, முண்டி என வழங்கப் பட்டன. மோடு என்றால் வயிறு என்று பொருள். இது எல்லோரையும் பெற்ற வயிறாகக் கருதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பிற்காலச் சோழர்கள் எழுச்சிக் காலத்தில், பராந்தகச் சோழனால் போற்றப்பெற்ற நிதம்பசூதனி என்ற தாய்த் தெய் வம் பெரிய உருவ அமைப்புப் பெற்றிருந்தது என்பது இங்கு நினைக்கத்தக்கது.

இவற்றால் பழங்காலத் தாய்த்தெய்வ உருவம் பெரியதாக இருந்ததை அறிந்து கொள்ளலாம். பழந்தமிழரின் வெற்றித் தெய்வமான கொற்றவைக்குப் பலி கொடுக்கப் பெற்றதுடன், வெறியாட்டும் நடைபெற்றது. அன்பு, அருள் வடிவமாகக் கருதப் பெற்ற பிற அம்மன் தெய்வங்கள் அக்காலத்தில் இருந்ததையும் பழந்தமிழ் நூல்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. தாய்த் தெய்வம் அல்லது பெண்தெய்வம் அல்லது வீர வழிபாட்டுத்

தெய்வம் என்றிருந்த தெய்வ வழிபாட்டில், பத்தினி வழிபாடு என்பதும் தோன்றியது. சமய வளர்ச்சிக் காலத்தில் தாய்த் தெய்வம், கன்னித்தெய்வம், பத்தினித்தெய்வம், காளி போன்ற நாட்டுப்புறப் போர்த் தெய்வங்களையும், இணைத்தனர். நம் சமுதாயத்தில் சமயம் முதன்மை பெறத்தொடங்கியபோது சக்தி யின் அமிசமான காளிஅம்மன், முத்தாரம்மன், பிரமசக்தி போன்ற போர்த் தெய்வங்களின் பிறவி பற்றிய கதைகள் புனையப்பட்டன. சில தெய்வங்கள் துர்க்கை என்னும் தெய்வ மும் கொற்றவையும் ஒருங்கிணைந்து தோன்றியவையாகக் கருதப்படுகின்றன. அதனால் காடுகளில் இருப்பவளை வன துர்க்கை என்றும், சிவத்தோடு இருப்பவளைச் சிவதுர்க்கை என்றும், திருமால் உருவத்தன்மை பெற்றவளை விஷ்ணு துர்க்கை என்றும் அழைத்தனர்.

இவ்வாறு பழம்பெரும் பெண்தெய்வங்கள் சமய வளர்ச்சிக் காலத்தில் சமயங்கள் கூறும் பெண்தெய்வங்களோடு இணைக் கப் பெற்றுவிட்டாலும், நாட்டுப்புறத் தெய்வங்களில் சில இன்றும் தனித்தன்மையை இழக்காது அப்படியே இருந்து வருகின்றன. சான்றாக, 'சப்த மாதர்கள்' எனும் 'கன்னிப் பெண்டிர் எழுவர் வழிபாடு' அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்து இருந்து வருவதைக் கூறலாம். இதே போன்று பிற கிராமப் பெண்தெய்வங்களும், திராவிடத் தெய்வங்களும் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. வேறு ஆண் தெய்வங் களுடன் இணைக்கப்படாது தனிக்கோயில், தனிவழிபாடு என எல்லா நிலைகளிலும் இவை முதன்மை பெற்று விளங்கு கின்றன. இவ்வாறு தனிக்கோயில் பெற்ற தெய்வங்கள் நம் நாடு முழுவதிலும் வணங்கப்பெறவில்லை. சில சில பகுதிகளிலேயே வணங்கப்பெறுகின்றன. இவற்றுள் மாரியம்மனே நாடு எங்கி லும் பரவலாகத் தனிக்கோயில்கள் பெற்று வழிபடப்பெற்று வருகிறாள். நம் சமுதாயத்தில் மாரியம்மன் வழிபாடு மிக முக்கியத்துவம் பெற்றுள்ளதற்குக் காரணம் இப்பரவலான வழிபாடே எனக் கூறலாம். வேறு எந்த நாட்டுப்புறத் தாய்த் தெய்வத்திற்கும் இத்தகு பெருமை இல்லை. இதற்குக் காரணம் மாரியம்மன் பழங்காலத்திலிருந்தே தமிழர் வாழ்வியலுடன் இயைந்து வருவதே ஆகும்.

மாரியம்மை : பெயர்க்காரணம்

'மாரி' என்பதற்கு 'மழை' என்பது பொருள். 'மழை' என்பது குளிர்ச்சி பொருந்தியது. அம்மை என்றால் 'அம்மா' அல்லது 'அம்மை நோய்' (Small-Pox) என்பது பொருள். அம்மை நோய் வெம்மைத் தன்மையால் ஏற்படுவது. எனவே மாரியம்மை குளிர்ச்சியும், வெம்மையும் நிறைந்த தெய்வம் எனலாம். வெம்மைக்குப்பின் குளிர்ச்சியைத் தருகின்ற தெய்வம். அதாவது வெப்பத்தால் ஏற்படும் வறட்சிக்குப்பின் மழையைத் தந்து செழிக்கச் செய்பவள் என மக்கள் நம்புகின்றனர். நாட்டுப்புறங் களில் இந்த அடிப்படையிலேயே மாரி அம்மன் கோயில்கள் அமைந்துள்ளன.

பொதுவாக அம்மன் தெய்வங்களுக்கு 'வளமைப் பண்பு' அடிப்படையிலும்; ஆண் தெய்வங்களுக்குச் 'செயல்' அடிப் படையிலும் பல பெயர்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. தவிர அம்மன் தெய்வங்களுக்கு முதல், சினை, இடம், காலம், குணம், தொழில் ஆகிய ஆகுபெயர்களின் அடிப்படையில் பெயர்கள் அமைந்துள்ளன. இந்த நிலையிலேயே 'மாரியம்மன்' பெயரும் அமைந்துள்ளது.

மேலும் 'உடல் மாறி அம்மன்' அல்லது 'தலை மாறி அம்மன்' என்ற அடிப்படையிலும் மாரியம்மன் பற்றிய பெயர் வழங்கப்படுகின்றது. சான்றாக, சமதக்கினி முனிவர் தன் மனைவி ரேணுகா தேவியின் கற்பில் சந்தேகங்கொண்டு, தன் இளைய மகன் பரசுராமன் மூலம் அவளைச் சிரச்சேதம் செய்ய வைத்தார். பின் பரசுராமன் தன் தந்தையிடமே வரம்பெற்றுத் தன் தாய்க்கு உயிர்கொடுக்க முனைந்தபோது அவள் தலை மட்டுமே கிடைத்து, உடல் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அப்போது அத்தலையுடன் சக்கிலியப்பெண் ஒருத்தியின் உடலைப்பொருத்தி விட்டதாகவும், 'உடல் மாறி அம்மன்' என அதன்பின் அவள் அழைக்கப்பெற்றாள் என்றும் அப்பெயரே 'மாறி அம்மன்' என வழங்கி, இறுதியில் 'மாரி அம்மன்' என ஆயிற்று என்றும் கூறப்படுகிறது. இதற்குப் புறம்பாக, 'உடல்

மட்டும் கிடைத்து, தலை கிடைக்காத நிலையில் சக்கிலியப் பெண் தலையைப் பொருத்தினார் என்றும் கூறப்படுகிறது.

மாரியம்மனுக்கு வேறு பெயர்களும் வழங்கப்படுகின்றன. அவள் 'அம்மை முத்தை' விதைப்பவள் என்பதால் 'முத்துமாரி' என்றும், கருமை நிறத்தினள் என்பதால் 'கருமாரி' என்றும், சந்தனத்தால் மாரியம்மன் உருவம் செய்து வைத்து வழிபடுவ தாலும், சந்தனம் போன்று குளிர்ச்சியும் மணமும் உடையவள் என்பதால் 'சந்தனமாரி' எனவும் கூறப்படுகிறாள். மேலும், 'கௌமாரி' என்றும் 'கோட்டை மாரி' என்றும் பலவாறாகப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. மாரியம்மன் கோயில்கள் அமைந்துள்ள ஊர்ப்பெயர்கள் அடிப்படையிலும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவை கன்னனூர் மாரி அல்லது சமயபுரம் மாரி, புதுக்கோட்டை மாரி, மதுரை மாரி, இருக்கங்குடி மாரி, துலுக்காணத்து மாரி, மலையாள மாரி, விடாலபுரமாரி, கடும்பாடிமாரி, ஊத்துக்காட்டு மாரி, படவேட்டு மாரி, பெரியபாளையத்து மாரி, கோலியனூர் மாரி, வீராம்பட்டண மாரி, காசிவளநாட்டு மாரி, சேலம் கோட்டை மாரி, தஞ்சாவூர் மாரி, திண்டுக்கல் கோட்டை மாரி, உப்பிலிப் பாளையம் தண்டுமாரி, கொளாநல்லி கோட்டை மாரி, பண்ணாரி மாரி, திருவேற்காடு கருமாரி, திருவம்பட்டுமாரி போன்று பல பெயர்கள் அவளுக்கு அமைந்துள்ளன.

தவிர, கால அடிப்படையில் 'கலியுகக் கருமாரியம்மன்' என அமைந்துள்ளது. பண்பு அடிப்படையில் 'கருமாரி', 'தண்டுமாரி' எனப் பெயர்கள் அமைகின்றன. தண்டு என்றால் தண்டிப்பவள் என்பது பொருள். தண்டு என்றால் 'சிறுபடை' என்றும் பொருள்.

மாரி அம்மன் எல்லா ஊர்களிலும் எல்லா சமூகத்தின ராலும் வழிபடப் பெறுபவள். ஆதலால் அவளுக்குரிய பெயர் கள் பல பல. மக்கள் தங்களுக்குப் பொருத்தமாக எது தோன்று கிறதோ அதையே மாரிக்குப் பெயராகச் சூட்டுகின்றனர்; பின் அது வழக்கில் நிலைத்துவிடுகிறது.

மாரியம்மன் கதைவேறுபாடுகள்

ரேணுகாதேவி என்ற மாரியம்மன் கதை

சிவபெருமான் மானிடப் பிறவியெடுத்து 'சமதக்கினி' எனும் பெயர்கொண்டும். பார்வதி, 'ரேணுகாதேவி' எனும் பெயர்கொண்டும் புவியில் இல்லற தர்மத்தை மேற்கொண்டனர். அவர்களின் நான்கு பிள்ளைகளில் இளையவரான பரசுராமன் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். சமதக்கினி முனிவர்க்குப் பெருந்துணையாக ரேணுகாதேவி பணிவிடைகள் செய்துவந்தார். நாள்தோறும் ஆற்றில் குளித்துவிட்டு. தன் கற்பு வலிமையால் மந்திரம் கூறி, ஆற்று மணலில் இருகைகளையும் வைத்துப் பானை போல் செய்து, குடம் உருவாக்கி அதில் நீரை வழிபாட்டுக்கு எடுத்துச் செல்வது அவள் வழக்கம். அவ்வாறு ஒரு நாள் ஆற்றில் நீராடியபோது ஆகாயத்தில் இனிய பாடல் பாடியவாறு சென்ற ஒரு கந்தருவன் உருவம் நீரில் பிரதிபலித்தது. அதைக்கண்ட ரேணுகாதேவி ஒரு வினாடி இனிய ஒலியையும், பாடலையும் கேட்டதுடன் அவன் பேரழகு கண்டு சற்று மெய்மறந்து நின்றாள். பின் மணலைக் குடமாகத் திரட்ட அது உருவாகாததால் வருத்தமுற்று. சமதக்கினி முனிவரின் திருவடி தொழுது நடந்தவற்றைக் கூறி மன்னிப்புக் கோரினாள். சமதக்கினி முனிவர் தன் ஞானக்கண்ணால் நடந்ததை அறிந்து, ரேணுகாதேவியிடம், "நீ மனக்கற்பு தவறி விட்டதால் என்னுடன் வாழமுடியாது, உயிருடன் இருக்கக் கூடாது" எனக்கூறி, தன்னுடைய நான்கு மகன்களையும் ஒவ்வொருவராக அழைத்துத் தாயின் தலையைத் துண்டித்து விடும்படிக் கூறினார். முதல் மூன்று மகன்களும் மறுத்துவிட அவர்களைச் சபித்தார். பின் பரசுராமன் தந்தைசொல் மிக்க மந்திரமில்லை, என்ற தத்துவத்திற்கு இணங்கி, மலையடிவாரத்தில் ஓர் இடத்தில் 'பரசு' (கோடரி) என்ற ஆயுதத்தால் தாயின் தலையைத் துண்டித்தார். கட்டளையை நிறைவேற்றிய பரசுராமனிடம் அவர் தந்தை 'வேண்டிய வரம் கேள்' எனக் கோரினார். பரசுராமனும் 'தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை' என்பதைத்

தாங்கள்தான் கற்றுக் கொடுத்தீர்கள்; எனவே அத் தாயை உயிர்ப்பிக்க வரம் வேண்டும்; மேலும் தமையன்கள் மூவர் களும் பழைய நிலை அடைய வரம் வேண்டும் என இரு வரங்கள் கேட்டார்.

முனிவர் தன் மகன்கள் மூவரையும் பழையபடி ஆகுமாறு வரமளித்தார். ஆனால் தன் மனைவியை உயிர் எழுப்ப பரசுராமருக்கு மந்திரம் உபதேசித்து, நீரையும் ஒரு பிரம்பையும் கொடுத்து, 'தலையையும் உடலையும் இணைத்துத் தீர்த்தத்தைத் தெளித்துப் பிரம்பால் தடவிவிட உன் தாயார் உயிர்பெறுவாள்' எனக் கூறினார். அதன்படி, பரசுராமன் தன் தாயாரை வெட்டிய இடத்திற்குச் சென்றார். அப்போது சூரிய குல அரசனாகிய கார்த்தவீரியார்ச்சுனன் தனது தந்தை சிரசைக் கொய்த சமதக்கினியைக் கொல்ல இதுதான் சமயமென்று எண்ணி, சமதக்கினி ஆசிரமம் சென்று அவர் சிரசைக் கொய்து, பரசுராமர் வந்தால் விடமாட்டாரென்று பயந்து சென்று விட்டான்.

மலையடிவாரம் சென்ற பரசுராமர் தன் தாயார் ரேணுகை யின் உடலைக் காணாமல் தாயின் தலையுடன் வேறோரிடத்தில் கிடைத்த சக்கிலியப்பெண் உடம்பை வைத்துப் பொருத்தி உயிர் எழுப்ப ரேணுகாதேவி உயிர்பெற்றாள். அவர் பரசுராமனை ஆசிர்வதித்து ஆசிரமத்திற்கு வந்தபோது அங்குச் சமதக்கினி இறந்து கிடந்தது கண்டு அழுது புலம்பினாள்; பரசுராமர் தன் தந்தையைக் கொன்ற கார்த்தவீரியார்ச்சுனனின் சிரசையறுத்து, அவன் குலத்தை இருபத்தொரு தலைமுறை கருவறுப்பதாகச் சபதம் செய்தார். கணவன் இறந்தபின் ரேணுகாதேவியும் தீயில் விழுகின்றபோது சிவபெருமான் தடுத்து, 'உன் உடல் வேறு, சிரசு வேறாக இருப்பதால் இந்தத் தீயில் விழ உனக்குத் தகுதி இல்லை' என்று கூறினார். அதற்கு ரேணுகாதேவியோ 'தன் உடல் வேறுபட்டதால் தான் இந்த உலகத்தில் எப்படி இருப்பது' என்று பரமனிடம் வினவினாள். அதற்குப் பரமன், "நீ உடல் மாறியதால் 'உடல் மாறி அம்மன்' எனப் பெயர் பெற்று உலக மக்களுக்கு முத்தை (அம்மை நோய்) விதைத்து உலகை ஆட்சி செய்து வருவாய்" என வரம் அளித்தார். இவ்வாறு

'ரேணுகாதேவியே மாரியம்மனாக ஆனார்' எனக் கதை யொன்று வழங்கப்படுகிறது.

'உடல் மாறியம்மன்' எனப் பெயர்பெற்ற ரேணுகாதேவி பரமன் வரத்தைச் சோதித்துப் பார்க்க, பரமனுக்கே முதலில் முத்தை விதைத்தாள். அதன் கடுமையைத் தாங்காத பரமன் முத்தை இறக்குமாறு அவளிடம் வேண்ட, முத்தை இறக்குவதற்கு வழிகூறுமாறு அவள் அவரிடம் கேட்டாள். வேப்பிலையும், துளிமாவும், விளாவிய கூழுங்கொண்டு படைத்தால் முத்து இறங்கிவிடும் என்று அவர் பரிகாரம் கூறினார். அதன்படி அவள் செய்து முத்தை இறக்கினாள். மேலும் பரமன் 'உடல்மாறியம்மனிடம்' தனக்கு அளித்த முத்தைப் போல் உலக மக்களுக்கு அவள் அளித்தால் அவர்கள் தாங்கமாட்டார்கள் என்றும், அவள் வளர்த்த அனலானது சுரமாக மூன்று நாளைக்கு இருந்து, அதன்பிறகு நீங்கும். அவர்க்களித்த முத்தில் பதினாயிரத்திலொன்றுதான் மனித உடலில் போடவேண்டும் என்றும் வேப்பிலை, துளிமாவு, கூழ்கஞ்சி படைத்தால் முத்து இறங்கிவிடும் என்றும், உலக மக்களுக்குப் படிப்பினையாக இவ்வாறு செய்து வருக எனவும் அவளிடம் கூறி அனுப்பி வைத்தார்.

அதன்படி ரேணுகாதேவியே மாரியம்மனாக உருப்பெற்று ஆட்சி செய்து வருகிறாள். இது **சிவபுராணம்** கூறும் ரேணுகாதேவி வரலாறு. இதனடிப்படையில் **மாரியம்மன் உற்பத்தி நாடகம்** என்ற ஒரு நாடகம் வெளியாகியுள்ளது.

மற்றொரு பெண்தலை மாரியம்மன் தலையாகிய கதை

தந்தை சொற்படி பரசுராமன் தன் தாய் ரேணுகாதேவி தலையையும் உடலையும் ஒன்றாகச் சேர்த்து உயிர்ப்பிக்கச் செல்வது வரை முன்கதை போன்றே இக்கதை உள்ளது. பிற்பகுதி மாறுபடுகிறது.

குழந்தைப் பேறு அற்ற சிவபக்தர் ஒருவர் இறைவன் அருளால் கண்டெடுத்த பெண்குழந்தை ஒன்றை மிகவும் சீராட்டி வளர்த்து வந்தார். அக்குழந்தை பருவம் எய்தியதால் அவளுக்கு

மணம் முடிக்க அவர் முடிவு செய்தார். வளர்ப்பு மகளோ அதற்கு உடன்பட மறுத்தாள். மனித வாழ்க்கை நிலையற்றது. நான் என்றும் இறைவனின் அடிமையாக இருக்க விரும்புகிறேன்; என் இதயத்தில் தந்தையாகிய தங்களையும் இறைவனையும் தவிர வேறு யாருக்கும் இடமில்லை. பிள்ளை இல்லாக் குறையைப் போக்கவே இறைவன் என்னைத் தங்களிடம் அனுப்பினார் என்று கூறினாள். மேலும் தந்தை வற்புறுத்தவே "ஒழுக்கமற்ற சண்டாளர்களை மணக்கமாட்டேன்" என்று இறுதியாகக் கூறினாள். இதைக் கேட்ட அச்சமூகத்தினர், தம்மைச் சண்டாளர்கள் என்று ஏசிவிட்ட அப்பெண்ணைத் தம் வழக்கப்படி கொன்றுவிட வேண்டும் என்று முடிவெடுத்தனர். அச்சமூகத்திற்குத் தலைவராக விளங்கிய அந்தச் சிவபக்தர் நீதிக்குக் கட்டுப்பட்டுத் தன் வளர்ப்பு மகளின் தலையைத் துண்டிக்குமாறு கூறினார். அதன்படி கொலையாளிகள் வளர்ப்பு மகள் தலையைத் துண்டித்தனர். அத்தலை ஒரு முட்புதரின் மேல் சிரித்த முகத்துடன் விழுந்துகிடந்தது.

அந்நிலையில், பரசுராமன் எங்குத் தேடியும் தன் தாயின் தலை கிடைக்காமல் தவித்தார். தேடிக்களைத்து இருண்ட மனம் போல இருள் வந்தபோது முட்புதரின் மேல் கிடந்த தலை தன் தாயின் தலைபோல் இருப்பதைப் பார்த்து அதை எடுத்து வந்து தன் தாயின் உடலுடன் இணைத்து, முனிவர் கூறியது போல் தீர்த்தம் தெளித்து, மந்திரம் சொல்லி, பிரம்புக் குச்சியால் தடவி உயிர்ப்பித்தார். பின் தாயிடம் நடந்ததைக் கூறித் தந்தையிடம் வரும்படி அழைத்தார். அதற்கு ரேணுகாதேவி, 'பெற்ற வயிற்றுக்கு உரிய உடல் இதுவாயினும், தலை வேறு; எனவே எனது முன் உருவம் மாறிவிட்டது. நான் அங்கே வருவது நல்லதல்ல; தந்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று மறுத்தார். ஆனால் பரசுராமன் விடாப்பிடியாக ரேணுகாதேவியை ஆசிரமத்திற்கு அழைத்து வந்தார். ஆயினும் முனிவர் தேவியை ஏற்க மறுத்துவிட்டார். ரேணுகாதேவி தன் கணவரிடம் நான் எத்தனைப் பிறவி எடுத்தாலும் தங்கள் துணைவியாக இருக்க அருள் வழங்க வேண்டும் என வேண்டினாள். முனிவரும் உருவமின்றி அருவமாய்த் தன்னுடன் இருப்பாய் என வரமளித்தார். மேலும் அவளை மக்கள் 'முத்தலையம்மன்' என்று

பெயர் சூட்டி வணங்குவார்கள் என்றும், தலை வேறு, உடல் வேறாக உருவம் மாறி இருப்பதால் அவளை 'மாறியம்மன்' என்று பெயர் வைத்தும் வணங்குவர் என்றும் கூறி, உலக உய்வுக்கு நற்றொண்டாற்ற அவளை அனுப்பிவிட்டு மறைந் தார். கால மாற்றத்தால் முத்தலையம்மனை 'முத்தாலம்மன்' என்றும் 'முத்தாலையம்மன்' என்றும் மக்கள் இன்று அழைக்கின்றனர்.

இவ்வம்மன் 'முகமாறி' அம்மன் என நாட்டுப்புறங்களில் அழைக்கப்படுகிறாள். இந்த 'முகமாறி' அம்மனுக்கு முழு உருவச் சிலைகள் எதுவும் இல்லாது, வெறும் வடிவமற்ற கல்நட்டு வழிபடுகின்றனர்.

சேரியிலிருந்து வந்த மாரியம்மன் கதை

சமதக்கினி முனிவர் கார்த்தவீரியார்ச்சுனனால் இறக்க, அவர் மனைவியான ரேணுகாதேவி தீப்புகுந்தாள். அவளது உடல் முழுவதுமாக எரியுமுன் இந்திரன் வருணனைக் கொண்டு மழை பொழிவித்துத் தீயைத் தணிவித்தான். ரேணுகாதேவி அணிந்திருந்த ஆடை முழுவதும் எரிந்து உடலெங்கும் தீக்கொப்பளங்கள் அரும்பின. அவள் உடனே எழுந்து ஆடையில்லாமையால் அவ்வனத்திலிருந்த வேம்பின் தழை களை ஆடையாக அணிந்துகொண்டு அருகிலிருந்த புலச்சேரி யடைந்து தன் பசிக்கு ஏதேனும் தரக் கேட்டாள். அவர்கள் யாரோ வேதியப் பெண் என்று எண்ணித் தங்கள் ஆகாரத்தைக் கொடுக்காமல் பச்சரிசி மாவு, வெல்லம், இளநீர், பானகம் முதலிய தந்து உபசரித்தனர். பின்பு அவ்விடம் நீங்கி வண்ணார் வீதி வந்து அவர்கள் கொடுத்த ஆடையைத் தரித்துக் கொண்டு இறந்து கிடந்த சமதக்கினி முனிவரின் உடல்முன் வந்து அழுது துயருற்றாள். அப்போது தேவர்கள் தோன்றி அவள் துயரமகற் றினர். சிவமூர்த்தியும் அங்குத் தோன்றி, அவள் சக்தியின் அம்ச மாதலால் பூமியிலிருந்து கிராமத்தில் உண்டாகும் தீமைகளை விலக்கி வருமாறு அவளுக்கு வரம் தந்தார். அவள் உடம்பில் ஏற்பட்ட கொப்பளங்கள் உலகத்து உயிர்கள் உடம்பின்மீது ஏற்படும் அம்மைக் கொப்பளங்களாகும்; அதனால் ஏற்படும்

துன்பம் தணிய அவள் தரித்த ஆடையாகிய வேப்பிலையே மருந்தாகும். அவள் உண்ட பச்சரிசி மாவு, இளநீர், வெல்லம் ஆகியன அவளுக்குப் படையல் பொருள்கள் ஆகும். இவ்வாறு சிவன் அவளுக்கு வரம் அருளினார். அவளை வழிபடா தோரைச் சண்டாள ரூபத்தை வருவித்து அவர்களை வருத்துக, என்றும் அருளினார். அதிலிருந்து அவள் முத்துமாரி என்று பெயர் பெற்று, கிராம தேவதையானாள்.

தலை மட்டும் உள்ள ரேணுகாதேவி அம்மன் கதை

சமதக்கினியின் மனைவியான ரேணுகாதேவி என்பவள் கங்கைக்குச் செல்ல, அந்தரத்திற் சென்ற கந்தருவனாகிய சித்திரசேனனை நீரில் கண்டு, மனங்கெட்டு, கற்புக் குலைந்தாள். குற்ற உணர்வுடன் தன் கணவர் முன்நின்றாள். காரணத்தை முனிவர் அறிந்து தன் இளைய மகன் பரசுராமரை நோக்கி அவளைக் கொல்க, என்றார். அவ்விதம் தாயைக் கொலை செய்து அச்செய்தியைத் தந்தையிடம் அவர் கூறினார். பின் தந்தையிடம் தன் தாயினை உயிர்ப்பிக்க வரம் கேட்டார். அதன்படியே அவர் இறந்த ரேணுகாதேவியை எழுப்ப, தீர்த்தத்தையும் மந்திரத்தையும் நல்கினார். பரசுராமர் தன் தாயின் வெட்டுண்ட உடலைத் தேடிச் சென்று, அங்குப் பல உடல்கள் தாயுடம்புடன் கலந்திருப்பதைக் கண்டு வேறுபாடு அறியாது திகைத்தார். தன் தாயின் தலையை வேறு ஒரு உடலில் பொருத்தி மந்திரம் ஓதி, நீர் தெளித்து எழுப்பினார். உயிர் வந்து எழுந்த ரேணுகாதேவி தன் கணவரிடம் சென்று அருள் வேண்டினாள். அவரோ அவளைத் தான் ஏற்றுக்கொள்ளவியலாது என்றும், இருடியாகிய அவள் கிராமங்களில் சென்று அவர்களுக்குக் காவலாக இருந்து அவர்கள் கொடுக்கும் பலியை ஏற்றுவர வேண்டும் என்றும் கூறினார். அவளும் அன்று முதல் கிராமங் களில் தங்கி ஊராரின் பூசையை ஏற்றுவருகிறாள். இக்கோயில் களில் எல்லாம் ரேணுகாதேவியின் தலை மட்டுமே வைத்து வழிபடப்பெற்று வருகின்றது. இங்குச் சக்கிலியப் பெண்ணின் உடலையோ வேறு பெண்ணின் உடலையோ மக்கள் தெய்வ வடிவாக ஏற்கவில்லை. தலைமட்டுமே உள்ள இந்த அம்மனை 'உடல் மாறியம்மன்' எனக் கூறி வழிபடுகின்றனர்.

கயிலாயத்தில் மாரியம்மன் பிறந்து தென்னாடு வந்த கதை

தென்பாண்டி நாட்டின் நாட்டுபுறக் கதைப்பாடலாசிரியர்கள் மாரியம்மன் பிறவியைப் பின்வருமாறு சித்திரித்துள்ளனர்.

கயிலாய மலையில், ஒலக்கால் மண்டபத்தில், சிவன் வலப்பக்கமாகவும் பார்வதி இடப்பக்கமாகவும் வீற்றிருந்தனர். அவர்களின் மூத்த பிள்ளை கணபதி அவர்களைப் போற்றி நின்றார். கயிலையின் ஒரு பக்கத்தில் மாரியம்மன் தூய்மை செய்து, விளக்கேற்றி வைத்துச் சிவனை நோக்கித் தவம் மேற்கொண்டிருந்தாள். மாரியம்மன் தன் உடல் அசையாது இரவு, பகல், வெயில், மழை என்ற வேறுபாடின்றித் தொடர்ந்து தவம் செய்தாள். தவமிருந்த இடம் புனிதமானது. மாரியம்மனை ஒட்டி வளர்ந்த வேம்பானது அவளுக்குக் கற்பக மரமாக இருந்து, கோட்டையாகவும் அமைந்தது. அம்மரத்தின் இலையும், காயும், கனியும் மக்களின் நோய்தீர்த்து மானிடரை உய்விக்கும் தன்மை கொண்டிருந்தன.

பல பூதங்கள் காவல் காத்து நிற்க மாரியம்மன் கையில் பிரம்பு ஏந்தி, திருநீற்றால் ஒரு காத வழியளவு கோடு இட்டு, தோளில் சூலம் தாங்கி, தன் கையிலுள்ள திருநீற்றுக் கப்பரையிலிருந்து படியளந்தவாறு தவமிருந்துவந்தாள். அவளது கொண்டையில் அன்னங்களும் குருவிகளும் முட்டையிட்டு அடைகாத்தன. அவளுடைய சடை முடியானது வளர்ந்து பூமியில் விழுதூன்றியது. அவள் சேலையில் ஐந்து தலை நாகம் படம் எடுத்து நின்றது. அவள் ஏந்திய கைகளில் கிளியும் பூச்செண்டும் வாடாதிருந்தன. பல புலிகள் அவளது உடலை உராய்ந்து சென்றன. மாரியம்மனின் தவத்தைப் பாராட்டிச் சிவபெருமான் மாரியம்மனுக்குக் காட்சி தந்தார். மாரியிடம், 'வேண்டும் வரத்தைக் கேள்' என்றார். அதற்கு மாரியம்மன் முன்பு ஒரு முறை தான் வரம் பெற்று முத்தாரம்மனாகவும், பின்பு சந்தனமாரியாகவும் பூவுலகில் அவதரித்ததாகக் கூறினாள். அப்போது மக்கள் தன்னை ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு பூசை செய்து வழிபட்டனர். ஆனால் அவர்கள் இப்போது தெய்வங்களை மறந்து பேய்களுக்குப் பூசை செய்து வருகின்றனர். இதனால் தீமைகள் உலகில் மிகுந்துவிட்டன.

அம்மக்களை நல்வழிப்படுத்த புது வரம் தரவேண்டும் எனக் கேட்டாள். சிவனும் அவளுக்குப் புது மாரியாக வரம் அளித்தார். வரத்தைப் பெற்றுக்கொண்ட புதுமாரியம்மன் கயிலாயத்திலிருந்து புறப்பட்டு, காசி வளநாட்டில் டில்லி பாதுஷா மன்னன் ஆண்ட பகுதியில் அம்மை நோயை அதிக அளவில் ஏற்படுத்தி மக்களைத் துன்புறுத்தினாள். டில்லி மன்னன் மாரிக்குரிய மரியாதையைச் செய்தான். மாரி அங்கிருந்து அகன்று தன் படைகளுடன் தென்னாட்டில் புகுந்தாள். இந்நிலையில் மாரியம்மனின் ஆரவார ஒலியைக் கேட்டறிந்த திருமால் மாரியம்மனிடம் வந்து அவள் புதுமாரியாக அவதரித்ததை அறிந்தார். உலக உயிர்கள் செய்த தீச்செயலுக்காக அவைகளைத் தண்டிப்பது நல்லதல்ல எனப் புதுமாரிக்கு எடுத்துரைத்தார். மாரியின் வேகத்தை அடக்க அவளுடன் புறப்பட்டார். அவர்கள் எல்லோரும் காவிரிக் கரையோரம் இருந்த கன்னனூர் என்ற தலத்தை அடைந்து உறைந்தனர். மாரியம்மன் அங்கிருந்து கொண்டு தீயவர்களின் குறும்பை அடக்கி மக்களுக்கு நன்மை செய்து, அவர்கள் தரும் பூசையை ஏற்று வருகிறாள்.

இவ்வாறு கயிலாயத்திலிருந்து வந்த மாரியின் கதையைத் தென்பகுதிகளில் வில்லுப்பாட்டாகவும் பாடிவருகின்றனர். இக்கதை முத்தாரம்மன் கதை போன்றும், காளி அம்மன் கதை போன்றும், பிரமசக்திஅம்மன் கதை போன்றும் கயிலாயத்தில் தொடங்கித் தென்பகுதிகளில் முடிவடைவதைக் காணலாம்.

இதைத் தவிர மாரியின் பிறவிபற்றி வேறு சில கதைகளையும் பாமரக் கலைஞர்கள் உருவாக்கியுள்ளனர். அவற்றில் ஒன்று மாரியம்மன் பாதாள லோகத்தில் பிறந்ததாக உள்ளது. பாதாளத்தில் பிறந்து கைலாயம் அடைந்து வரம்பெற்றதாக ஒரு கதை வழங்கிவருகிறது.

நாககன்னிக்கும் நாகராசனுக்கும் மாரி பிறந்தது

திருநெல்வேலிப் பகுதியில் வில்லுப்பாட்டில் பாடப்பெறும் மாரியம்மன் கதை பின்வருமாறு அமைகிறது:

பாதாள உலகில் நாகராசனுக்கும் நாககன்னிக்கும் ஏழு பெண்குழந்தைகள் பிறந்தன. அவர்களுள் தலைமையாக மாரியம்மன் விளங்கினாள். அவள் மகிடன் என்ற அரக்கனை அழித்தாள். அதற்காகச் சிவபெருமானிடம் அம்மை முத்துக்களை வரமாகக் கேட்டுப் பெற்றாள். அவ்வரத்தைச் சோதிக்க அவள், சிவன் மீதே முத்தினை எறிந்தாள். சிவபெருமான் அம்மை முத்துக்களால் ஏற்பட்ட வேதனையால் துன்புற்றார். உடல் முழுவதும் முத்துக்கள் போல் கொப்பளங்கள் ஏற்பட்டன. உடனே அவரை வாழையிலையில் படுக்கவைத்து, தன் அண்ணன் கண்ணன் அருளால் பார்பதி சிவபெருமானைக் காப்பாற்றினாள். பின் மாரியம்மனுக்குப் பல வரங்களை நல்கி, பூலோகத்தில் உள்ள தென்னாட்டிற்கு அவளை அனுப்பி வைத்தாள். தென்னாட்டின் தென்பகுதியில் மாரியம்மன் கோயில்கள் பல கொண்டு, பலி பெற்று வழிபடப்பெற்று வருகிறாள். இவ்வாறு இக்கதை பாடப்பெறுகிறது.

புற்றில் தோன்றிய மாரி கதை

மற்றொரு கதை வேறுபாடும் வில்லுப்பாட்டில் உள்ளது. மாரியம்மன் சிவனை நோக்கித் தவம் மேற்கொண்டபோது அவளைச் சுற்றிப் பெரிய மண்புற்று ஒன்று தோன்றி அவளை மூடி மறைத்தது. பிற்காலத்தில் மாரியுடனிருந்த வேம்பையும், பாம்பையும், புற்றையும் மக்கள் வழிபட்டனர். நாளாக நாளாக புற்றினுள் இருந்த மாரியின் உருவமே சுயம்புவாக வெளிப்பட்டது. அன்றிலிருந்து மாரியம்மன் பாம்பு, வேம்பு, புற்று சகிதமாகச் சில பகுதிகளில் வழிபடப்பெற்று வருகிறாள். தன் இருப்பிடத்தை மக்களுக்குக் கனவில் உணர்த்தி, தனக்குப் பூசை மேற்கொள்ளுமாறு அவர்களை வலியுறுத்தி, அதன்படி மக்கள் மாரியம்மனை வழிபடத் தொடங்கினர் என்றும் ஒரு கதை வழங்குகின்றது.

வள்ளலார் தொடர்புடைய தண்டுமாரி அம்மன் கதை

ஒரு பெண்ணைக் 'கற்பு நெறி' தவறியதாகக் கூறி ஊரார் அவளைத் தீயில் இட்டபோது அவள் அங்கிருந்து தப்பித்துக்

கருகிய உடலுடன் ஆடையற்று, ஓடிவந்து, துணியைத் தூய்மை செய்யும் வண்ணார் குலத்தைச் சேர்ந்த ஒரு வீட்டில் அடைக்கலம் புகுந்தாள். அவர்கள் அவளுக்குத் தூய்மை செய்த வெள்ளாடையை நல்கினர். உணவாகக் குளிர்ச்சி பொருந்திய 'கூழ்', 'கஞ்சி' இவற்றைக் கொடுத்து உதவினர். அவள் உடல் கருகியதால் 'கருமாரி' எனப் பெயர் பெற்றாள். அவளைத் துன்பப்படுத்தியவர்களைப் பின் பழிவாங்கித் 'தண்டுமாரி' எனப் பெயர் பெற்றாள். இவ்வாறு நாட்டுப்புறங்களில் கதைகள் வழங்கப்படுகின்றன. இதனாலேயே இன்றும் தமிழகத் தென்பகுதிகளில் தண்டுமாரியம்மனை வண்ணார் இனத்தவர் தங்களுக்குரிய தெய்வமாக வழிபடுவதாகக் கூறுவர்.

மாரியம்மன் கதை வேறுபாட்டு ஆய்வு

இதுவரை கூறப்பெற்ற செய்திகளிலிருந்து, மாரியம்மன் எனும் தெய்வத்தின் தோற்றம் நான்கு நிலைகளில் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. அவை வருமாறு :

1. சமுதாயத்தில், பெண்ணுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களில் சிறந்தோரைத் தெய்வமாக வழிபட்டு வந்த அடிப்படையில் மாரி என்ற பெண்தெய்வ வழிபாடு நம்மிடையே ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

2. நாட்டில் வெம்மை காரணமாக வறட்சியும், அதனால் அம்மை நோயும் பஞ்சமும் வெம்மையைத் தணிவிக்க மழையும், அம்மை நோயைப் போக்க வேப்பிலை, கூழ் போன்றனவும் பயன்பட்டன என்பதால் மழையையும் (மாரி), அம்மை நோயையும் (அம்மை) 'மாரியம்மை' எனக் குறிப்பிட்டு அவற்றை வழிபட்டனர். தலவிருட்ச மாக வேம்பைக் கருதி அதையும் வழிபட்டனர். மாரியம்மைக்குச் சிறிய பீடம் அமைத்துப் படையலை வைத்தனர். நாளாக நாளாக மரமும் பீடமும் சேர்ந்து வழிபடு கோயிலாயின. நாட்டுப்புற மக்களிடையே உருவமற்றுக் கல் அல்லது மண் பீட வழிபாடாக அமைந்தது.

3. பரசுராமர் தாயான ரேணுகா தேவியின் தலை, உடலில் ஏற்பட்ட தீக்கொப்பளங்கள், அவளுண்ட மாவு, கூழ், அணிந்த வேப்பிலை ஆடை என்பனவற்றின் அடிப்படையில் ரேணுகா தேவி வழிபாட்டுக் கோயில்கள் ஏற்பட்டு, 'உடல்மாறி அம்மன்' என்ற பெயர் அவளுக்கு இருந்ததால் பிற்காலத்தில் அப்பெயர் மாரியம்மனாகக் கொள்ளப் பெற்று இயற்கை வழிபாட்டு மாரியம்மனுடன் ஒருங்கிணைக்கப் பெற்று விட்டது எனத் தெரிகிறது.

4. இயற்கை மாரியம்மனையும் புராண ரேணுகா தேவியம்மனையும் நாட்டுப்புறக் கலைஞர்கள் ஒருங் கிணைத்து மாரியம்மன் கயிலாயத்தில் பிறந்ததாகவும் நாகலோகத்தில் அவதரித்ததாகவும் சித்திரித்துத் தென்னாட்டில் வந்து கோயில் கொண்டதாகக் கதைப் பாடல்களைப் புனைந்துள்ளதால் அவ்வாறே மாரியின் தோற்றம் அமைந்ததாக மக்கள் நம்புவதாகத் தெரிகிறது.

மாரித் தெய்வத்தின் தோற்றம் மேலே கூறிய நான்கு அடிப்படையில் ஏற்பட்டிருக்கலாம் என்றாலும் அவற்றுள் முதலிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக உள்ளன. ஆதலால் அவற்றைக் கீழுள்ளவாறு சுருக்கிக் காட்டலாம்.

மாரியம்மன் தோற்றம்
- இயற்கை, முதியோர் வழிபாட்டு அடிப்படையில் ஏற்பட்டது.
- புராண, புனைந்துரைக்கதைகள் அடிப்படையில் ஏற்பட்டது.

தமிழ்நாட்டிலும் தென்னாட்டின் சில பகுதிகளிலும், மாரியம்மன் கோயில்கள் வெறும் பீடமும் வேம்பும் பெற்று, சிறிய கொட்டகையிலோ வெட்ட வெளியிலோ இருந்து வருகின்றன. சில பகுதிகளில் உருவத்துடனும், மண்டபங்கள் அல்லது பெரிய பெரிய கட்டடங்கள் பெற்றும் உள்ளன. பெரும்பாலும் நாட்டுப்புறங்களில் சிறிய கோயில்களும்,

நகர்ப்புறங்களில் பெரிய கோயில்களும் அமைந்துள்ளன. தமிழ் நாட்டின் தென்பகுதிகளில் மாரியம்மன் பீட வழிபாட்டிடங் களும், தமிழ்நாட்டின் வடபகுதியில் தலைமட்டுமுள்ள ரேணுகா தேவியம்மன் வழிபாட்டுக் கோயில்களும் இருப்பதைக் காண லாம். மேலும், மாரியைக் கன்னிமார்களில் ஒருத்தியாகக் கருதி நாகம், வேம்பு போன்றவற்றுடன் நன்கு தொடர்பு படுத்தி முழுமையான திருமேனியுடன் வழிபட்டு வருகின்றனர். காமராசர் மாவட்டம் இருக்கங்குடி, பசும்பொன் மாவட்டம் சிவகங்கைக் கண்ணபுரம், மதுரையில் தெப்பக்குள மாரி, புதுக்கோட்டை மாரி, திருச்சியருகே சமயபுரம் அல்லது கன்னபுரமாரி, சேலம் கோட்டை மாரி, தஞ்சாவூர் மாரியம்மன் எனப் பெயர் பெற்ற ஏழு மாரியம்மன் கோயில்கள் தமிழ் நாட்டில் பிரபலமாக உள்ளன. இவற்றிற்கும் மேலாக, தற்காலத் தில் குடியேற்றத்தின் அடிப்படையிலும், அருள் கொடுப்பதின் அடிப்படையிலும் பல மாரியம்மன் கோயில்கள் புகழடைந்து வருகின்றன.

மாரியம்மன் கோயில்கள் தமிழ் நாட்டில் இடம் பெற்றிருக் கும் அளவிற்கு வேறு எந்தப் பெண் சிறு தெய்வத்திற்கும் கோயில்கள் இல்லையென்றே கூறலாம். இந்நிலையில் மாரியம்மன் வழிபாடே பெண்தெய்வ வழிபாட்டில் மிக்கோங்கியுள்ளது எனக் கூறுவது தவறாகாது.

மாரியம்மன் கோயில் அமைப்பு

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. இன்று ஒவ்வொரு ஊரிலும் கோயில்கள் அமைந்துள்ளன. குறிப்பாக 'மாரி இல்லா ஊர் மண்மேடு' என்ற பழமொழிக்கு ஏற்ப மாரியம்மன் கோயில்கள் பெரும்பாலான ஊர்களிலும், சில ஊர்களில் தெருக்கள் தோறும் அமைந்துள்ளன. மாரியம்மன் கோயில்கள் பெரும்பாலும் ஊரின் உட்புறத்தே அமையும். மக்களுடைய பண்பாட்டின் ஓர் அங்கமாக விளங்கும் மாரியம்மனுடைய கோயில்கள் பலவகையான அமைப்புக்களுடன் காணப்படுகின்றன. அவை,

1. திறந்தவெளிக் கோயில்கள்
2. குடிசைக் கோயில்கள்
3. சுற்றுச் சுவர்க் கோயில்கள்
4. சிறுமண்டபக் கோயில்கள்
5. பெருமண்டபக் கோயில்கள்
6. நவீன மண்டபக் கோயில்கள் என்பனவாகும்.

1. **திறந்தவெளிக் கோயில்கள்:** எந்தவிதக் கட்டட அமைப்பும் இன்றி வெட்டவெளியே கோயிலாக அமைவது. இக்கோயில்கள் பெரும்பாலும் ஊர்ப் பொது இடங்களான குளக்கரை, கிணற்றங்கரை, முச்சந்தி, மந்தைவெளி போன்ற இடங்களில் அமைந்துள்ளன. இக்கோயில்களில் வேம்பும், சிறு கல் அல்லது மண்பீடங்களும் பொதுவாகக் காணப்படும்.

2. **குடிசைக் கோயில்கள்:** திறந்தவெளிக் கோயில்களிலுள்ள மண் அல்லது கல் பீடங்களைப் பாதுகாக்கும் பொருட்டும், கோயிலின் தூய்மையைப் பேணும் பொருட்டும் குடிசைக் கோயில்கள் ஏற்பட்டன. மண்சுவர்களையும், ஓலைக் (பனை ஓலை) கூரையையும் கொண்டு இவை அமையும். பொருளாதாரம், வருமான அடிப்படையில் குடிசைக் கோயில்கள் ஏற்படுத்தப் பெறுகின்றன. குறிப்பாக, வருமானம் குறைந்த மக்கள் மாரியம்மனுக்குக் குடிசைக் கோயில்களை அமைக்கின்றனர். குடிசைக் கோயில்களில் அம்மன் திருமேனியாகப் பீடமோ, சிலையோ, சிறுகல்லோ, சூலமோ, விளக்கு மாடமோ இடம்பெறும்.

3. **சுற்றுச்சுவருடன் கூடிய கோயில்கள்:** திறந்தவெளிக் கோயில்கள் சில இடங்களில் சுற்றுச்சுவருடன் காணப்படும். அல்லது குடிசைக் கோயில்கள் மதில் சுவருடன் அமைந்திருக்கும். செங்கல் காரை, சிமெண்டு கொண்டு இச்சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கும். கோயிலுக்குரிய குடும்பங்களின் வசதிக்கேற்ப சுவர் எழுப்பி, தெய்வ

மிருக்குமிடத்தின் மேற்பகுதியைக் கூரையால் மூடாமல் திறந்த நிலையிலேயே விட்டுவிடுவர். இவற்றிற்குத் 'திறந்த கோயில்கள்' எனப் பெயர்.

4. கருவறை மட்டும் கொண்ட நாற்சதுர சுவர்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் அடுத்த நிலையில் உள்ளன. இவற்றின் மேற்பகுதி தளமாகவோ, கோபுர மாகவோ அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகைக் கோயில்கள் நடுத்தர வகுப்பு மக்களால் கட்டப்படுதல் இயல்பு. மேலும் சிறிய நகர்ப் பகுதிகளிலும் இவ்வகைக் கோயில்களைப் பார்க்கலாம். இவற்றினுள் தெய்வத் திருமேனியாக, கற்சிலை, மரச்சிலை, சித்திரம், விளக்கு, பிரம்பு, சூலம் இவற்றில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும்.

5. பெருமண்டபக் கோயில்கள்: இவை, கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், சுற்றுச் சுவர், முகப்பு மண்ட பம் ஆகிய அமைப்புகளைக் கொண்டிருக்கும். கருவறைக் கூரை கூம்பு வடிவில் அமைந்து, அதன் உச்சியில் ஒரு கலசம் அமைந்திருக்கும். இவ்வகை அமைப்பு அரசர்கள் – குறிப்பாக பல்லவ, சோழ அரசர்கள் காலத்துத் தோன்றியது எனக் கருதுவர். அவற்றைப் பின்பற்றி, தற்போதும் இவ்வகை அமைப்பில் மாரியம்மன் கோயில்கள் அமைக்கப்படுகின்றன. சமுதாயத்தில் ஒரளவு செல்வாக்குப் பெற்ற மக்களாலும் அரசு ஆதரவாலும் இவ்வகைக் கோயில்கள் அமைக்கப் பெறுகின்றன. இக்கோயில்களுக்கு நிரந்தர வருமானம் நல்கும் நிலங்கள் இருக்கும். இங்குத் தெய்வத் திருமேனி யாக, கற்சிலை, உலோகக் கவசங்கள் முதலியனவும் காணப்படும்.

6. நவீன மண்டபக் கோயில்கள்: இவ்வகைக் கோயில்கள் சமீப காலத்தில் உருவாக்கப்பட்டவை. இவை சிறுமண்டபம், பெருமண்டபம், இவை இரண்டிற் கும் இடைப்பட்ட மண்டபம் எனும் அமைப்புடையதாக இருக்கும். இதில் ஒரு நாற்சதுர கருவறையும், செவ்வக வடிவ மகாமண்டபமும் இருக்கும். கருவறைக்கு மேல்

அமைந்த கூரை கூம்பு வடிவில் அமைந்திருக்கும். அதன் உச்சியில் ஒரு கலசம் அமைந்திருக்கும். மேலும், மகா மண்டபத்தின் மேல்கூரை 'தளமாக' அமைந்திருக்கும். கூரையின் மேல் நான்கு மூலைகளிலும் நான்கு காவல் வீரர்களின் (ஆண் அல்லது பெண்) உருவம் அமைக்கப் பட்டிருக்கும். அவற்றுடனோ அல்லது தனியாகவோ மாரியம்மன் வாகனமான சிங்க உருவங்கள் நான்கு அமைக்கப்பட்டிருக்கும். கூரையின் முகப்பில் அல்லது சிங்கவாகனத்தில் அமர்ந்த சிலை சிமெண்டினால் உருவாக்கப்பட்டிருக்கும்.

மாரியம்மன் உருவ அமைப்பு

மண், மெழுகு, சாந்து, கருங்கல், மரம், உலோகம், தந்தம், கண்டசர்க்கரை முதலியவை கொண்டு பொதுவாகச் சிலைகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் நம் நாட்டுப்புறச் சிறு தெய்வங்களுக்கு உருவச் சிலைகள் வைத்து வழிபடுவது குறைவே. சூலம், விளக்கு, குத்துக்கல் வைத்து வழிபடுவதே மிகுதி. இந்நிலையே மாரியம்மனுக்கும் அமைந்துள்ளது. பெரும் பாலான ஊர்களிலுள்ள மாரியம்மனைப் பீடமாகவே வழிபடு கின்றனர். இப்பீடங்கள் அடிப்பாகம் அகன்றும், உச்சிப்பாகம் சற்றுச் சிறுத்தும், உச்சியில் குடம் வைப்பதற்கேற்ப குழிந்தும் காணப்படும். அடிப்பாகத்தில் படையல் வைப்பதற்கேற்ப நான்கு புறங்களிலும் சிறிய மேடை இருக்கும். சில ஊர்களில் வெறும் பலகைக் கல்லோ குத்துக்கல்லோ மாரியம்மனாக வழிபடப்பெறும்.

மாரியம்மன் சிலைகள் சில ஊர்களிலேயே உள்ளன. அவை மண், மரம், கல், உலோகம், சிமெண்டு, மணல் ஆகியவை கொண்டு உருவாக்கப்படுகின்றன. இவை காலந்தோறும் சமுதாய மாற்றத்திற்கு ஏற்பவும், பொருளாதார முன்னேற்றத்திற் கேற்பவும் மாற்றம் அடைகின்றன. மாரியம்மன் உருவ அமைப் பிலும் மாறுபடுகின்றாள்.

மாரியம்மன் வடிவமாக வேம்பு, கரகம், சூலம், செங்கல், கருங்கல், சுடுமண் படிமங்கள் போன்றவையும் மக்களால் ஏற்கப் பட்டு வழிபடப்பெறுகின்றன. எனவே, மாரியம்மன் உருவமற்ற பொருள்களாலும் உருவமாக வடிக்கப்பெற்றவைகளாலும் வழிபடப் பெறுகிறாள் என்பதை அறியலாம்.

இவ்வாறான அமைப்புகளைத் தமிழ்நாட்டின் தென்பகுதி களிலேயே பெரும்பாலும் காணமுடிகின்றது. தமிழகத்தின் வடக் குப் பகுதிகளில் ரேணுகாதேவியின் கழுத்துவரையுள்ள தலைப்பகுதி மட்டுமே உள்ள உருவம் உள்ளது. இவ்வடிவம் அரசாட்சிக்கு உரிய 'முடி' அணிந்த தலையாகக் கருதப்படு கிறது. இத் தலை உருவத்தின் காதிலும் கழுத்திலும் மூக்கிலும் அணிகலன்கள் அணிவிக்கப்பட்டிருக்கும். நெற்றியில் குங்குமப் பொட்டு காட்சி தரும். ரேணுகா தேவி சக்தியின் அம்சம் என்பதால், நெற்றியில் மூன்று திருநீற்றுக் கீற்றுகள் காணப் படும். நடுக்கோட்டின் மையத்தில் குங்குமம் இடப்பட்டிருக்கும். இயல்பான மனித வடிவிலும் மாரியம்மன் சிலைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. சான்றாக, சேலம் கோட்டை மாரியம்மன், திண்டுக்கல் கோட்டை மாரியம்மன், சமயபுரம் மாரியம்மன், கருமாரியம்மன் போன்ற பெரிய கோயில்களில் மாரியம்மன் சிலைகள் மாரியின் முழுப் பெண் உருவத்தில் அணிகலன்கள் அணிந்து அபய கரங்களோடும், அருள் பொழியும் திருமுகத் தோடும், பீடத்தின் மீது இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு வீற்றிருக்கும் கோலத்திலும், மகிடன் எனும் அரக்கனை வென்று அவனுடலைக் காலால் மிதித்துக் கொண்டிருப்பது போன்றும் அமைக்கப்பட்டுள்ளன. உற்சவ மாரியம்மன் சிலைகள் கலை அம்சத்துடன் முழு உருவத்துடன் அமைக்கப்பட்டிருக்கும்.

அம்மன் தலைக்கு மேல் நாகம் 'படம் எடுத்து'க் குடை பிடிக் கும் அமைப்பும் சில ஊர்களில் காணப்படும். அம்மனுக்குக் குடையாக அமையும் நாகங்களின் தலைகளின் எண்ணிக்கை 1 முதல் 10 வரை காணப்படும். பாம்பின் உடல் ஒன்றாகவும் தலைகளின் எண்ணிக்கை பலவாகவும் அமையும். அப்பாம்பு அம்மனுக்கு உரியது என்பதால் அதன் சக்தியை உயர்த்திக்

காட்டவே இவ்வாறு அமைக்கப்படுகின்றது. மேலும் மாரியம்மன் சிலைகள் மனிதனின் கற்பனைக்கேற்ப அமைக்கப் பட்டிருக்கும். இவ்வம்மன் கரங்கள் முறையே,

1. வலது மேற்கரம் – சூலம்
2. வலது கீழ்க்கரம் – கத்தி
3. இடது மேற்கரம் – உடுக்கையும் நாகமும்
4. இடது கீழ்க்கரம் – குங்குமச் சிமிழ்

என்ற நிலையில் அமைந்திருக்கும்.

இவ்வாறு நான்கு கரங்களுடன் கூடிய மாரியின் திருமேனி யும் கழுத்து வரை மட்டுமேயுள்ள உருவமும் மிகுதியாக பல மாவட்டங்களில் அமைக்கப்பட்டாலும் சில இடங்களில் எண் கரங்களுடன் கூடிய உருவச் சிலைகளும் உள்ளன. இந்த எட்டுக் கைகளிலும் முறையே கத்தி, கபாலம், சூலம், மணிமாலை, வில், அம்பு, உடுக்கை, பாசம் ஆகியவை அமைந்துள்ளன. தலையில் கிரீடம் உள்ளது. புன்னகை ததும்பும் முகத்துடன் அம்மன் காட்சி யளிக்கும் தோற்றம் காணப்படுகிறது. மாரி அம்மன் உருவங் களில் மூன்று முக்கிய அமைப்புகளைக் காணமுடிகின்றது.

1. உருவமற்ற, பீடத்துடன் கூடிய அமைப்பு
2. தலை மட்டுமே இடம்பெறும் அமைப்பு
3. முழு உருவத்துடன், பல கரங்களுடன், ஆயுதங்களுடன் வாகனமேறிய போர்க்கோலத் தோற்றம் மற்றும் போரில் வெற்றிக்குப்பின் சாந்தம் பெற்று அமர்ந்திருக் கும் தோற்றம்.

இவற்றில் முதல் அமைப்பு தென்மாவட்ட நாட்டுப்புறக் கோயில்களிலும், இரண்டாவது அமைப்பு வடமாவட்ட நாட்டுப்புறச் சிறுநகர்க் கோயில்களிலும், முழு உருவ அமைப்பு தமிழகம் முழுவதிலுமுள்ள பெரிய கோயில்களிலும், சிவன் கோயில்களிலும் காணப்படுவதாகக் கொள்ளலாம்.

உருவமற்ற நாட்டுப்புறக் கோயில்களுக்குரிய மாரி வரலாறு பாமரர் பாடல்களிலேயே சித்திரிக்கப்பட்டுள்ளது. இவ்வகைப் பாடல்களில் மாரியின் தோற்றம் கயிலை அல்லது நாகலோகம் எனக் கூறப்பெற்று, அவளை அம்மை நோயுடன் தொடர்புபடுத்தப்பெறும். இவ்வரலாறு குறித்த ஓலைச்சுவடிகள் மிகுந்த அளவில் கிடைத்து வருகின்றன.

தலை மட்டுமேயுள்ள கோயில்களுக்கு ரேணுகாதேவி தொடர்புடைய புராணக் கதைகளே தலவரலாறாக அமைந்துள்ளன. ரேணுகாதேவி குறித்த அச்சு நூல்கள் பல உள்ளன.

உருவமுள்ள மாரியம்மனுக்குரிய வரலாறு சைவ புராணங்களில் சக்திக்குரியதாகவோ, சக்தியின் அம்சமானதாகவோ புனைந்துரைக்கப் பெற்றுள்ளது. இதனால் இவ்வரலாறு குறித்த பல நூல்கள் இன்று தாராளமாகக் கிடைக்கின்றன.

மாரியம்மன் கோயில்கள் வரலாறு

மாரியம்மன் கோயில்கள் தமிழ்நாடெங்கும் பரவலாக உள்ளன. அவற்றில் சிறிய கோயில்களும் பெரிய கோயில்களும் அடங்கும். சிறிய மாரியம்மன் கோயில்களுக்குரிய சிறப்பான கட்டட வரலாறு எதுவும் வழங்கப்படவில்லை. இயற்கை வழிபாட்டிலிருந்து வந்த இவ்வகை மாரியம்மன் கோயில்கள் பெரும்பாலும் சிறிய ஊர்களிலேயே காணப்படுகின்றன. பிடிமண் எடுத்து வேறிடங்களில் மாரியம்மனைப் பிரதிட்டை செய்துவரும் வழக்கம் நாட்டுப்புறங்களில் இருப்பதால் இவ்வாறான சிறு கோயில்கள் எல்லாம் ஒரே மாதிரியான கோயில் வரலாற்றைக் கொண்டிருக்கின்றன. இக் கோயில்களில் நடைபெறும் கொடைவிழாவின்போது பாடப்பெறும் வில்லுப் பாடல்கள், கணியான் பாடல்கள், தெருக்கூத்துகள் போன்றவற்றில் மாரியம்மன் கதை வரலாறு பாமரக் கலைஞர்களின் பட்டறிவுக்கேற்றவாறு பாடப்பெறும்.

மாரியம்மனுக்குரிய பெரிய கோயில்களின் தோற்ற வரலாறு ஓரளவுக்குத் தெளிவாக வழங்குவதைக் காணலாம். பாண்டி நாட்டில் இருக்கங்குடி, புதுக்கோட்டை, கொல்லங்குடி,

கடம்பூர், மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களிலும், சோழ நாட்டில் தஞ்சாவூர், சமயபுரம் என்ற கன்னபுரம் போன்ற ஊர்களிலும் கொங்கு நாட்டில் சேலம், கோவை பெரியார் மாவட்டங்களிலும், தொண்டை நாட்டில் படைவேடு, திருவம்பட்டு, திருவேற்காடு, திண்டிவனம், விழுப்புரம் போன்ற தலங்களிலும் அமைந்துள்ள பெரிய மாரியம்மன் கோயில்களுக் கெனச் சிறப்பான வரலாறு உள்ளது. இவை ஏதாவதொரு மன்னன் ஆதரவாலோ அரசு அதிகாரிகளின் ஆதரவாலோ, செல்வந்தர்களின் உதவியாலோ கட்டப் பெற்றனவாக வரலாற் றுச் சான்றுகள் உள்ளன. தொடக்க காலத்தில் வெறும் 'கருவறை' மட்டுமே இருந்து பின் மண்டபங்களும், சுற்றுப் பிரகாரங்களும், பரிவார தெய்வங்களும் அமைக்கப் பட்டிருத்தலை அவ் வரலாற்றுச் சான்றுகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

சிறிய கோயில்களில் மாரியம்மன் பீடத்துடன், சுடலை, பைரவர், கருப்பண்ணன், பிற கன்னிமார் போன்ற பரிவார தெய்வங்களின் பீடங்களும் வைக்கப் பெற்றிருப்பதைக் காண லாம். கொடை விழாக்களின் போதும், சிறப்பு வழிபாடுகளின் போதும், எல்லாத் தெய்வங்களுக்கும் படையல் வைக்கப்பெறும். இவ்வகைக் கோயில்கள் சில குடும்பத்தார்க்குரிய குலதெய்வக் கோயில்களாக விளங்குகின்றன.

ஆனால் நகரங்களில் அமைந்துள்ள பெரிய மாரியம்மன் கோயில்களில் பலவகைச் சமூகத்தினரும் வந்து வழிபடுவ தாலும், தங்களின் இஷ்ட தெய்வங்களும் அம் மாரியம்மன் கோயிலில் இருக்க வேண்டும் என அச்சமூகத்தினர் விரும்புவ தாலும் அத் தெய்வங்களையும் பிரதிட்டை செய்து, சந்நிதிகள் ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். இதனால் மாரியம்மனுடன் பிள்ளையார், முருகன் கோயில்களும் அமைக்கப்பெற்று வருவ தைக் காணலாம்.

தமிழகத்தைத் தவிர மலையாள நாட்டிலும், தெலுங்கு நாட்டிலும், துலுக்கர்கள் ஆண்ட பிற பகுதிகளிலும் தமிழர்கள் குடியேறியுள்ள சிங்கப்பூரிலும் மாரியம்மன் சிறப்பாக வழிபடப் பெற்று வருவதால் ஆங்கெல்லாம் பெரிய பெரிய கோயில்கள்

அமைந்துள்ளதைக் காணலாம். இதன் காரணமாகவே மாரியம்மன் பற்றிய கதை வரலாறு மற்றும் பாடல்களில் இத் தலங்கள் பற்றியும் அக்கோயில்கள் கட்டிய மன்னர்கள், ஆட்சி யாளர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. மாரியம்மனின் சக்தியை உணர்ந்த துலுக்கர்கள், வெள்ளையர்களுங்கூட கோயில்கள் கட்டுவதற்கு உதவியுள்ளனர் என்பது பற்றியும், அவர்களும் மாரியம்மன் வழிபாட்டிலும் கலந்துள்ளனர் என்பது பற்றியும் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறு மாரியம்மன் கோயில்கள் தென்னாடு முழுவதும் காணப்படுவதால், தொன்று தொட்டே மாரியம்மன் வழிபாடு மேம்பட்டு வருகின்றது என அறிந்து கொள்ளலாம்.

சோழ நாட்டில் மாரியம்மன் கோயில்கள்

சோழநாட்டில் சிறிதும் பெரிதுமாகப் பல மாரியம்மன் கோயில்கள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறப்புடையன வருமாறு:

சமயபுரம் மாரியம்மன் கோயில் வரலாறு

தமிழ்நாடு முழுவதிலும், வேறு சில மாநிலங்களிலும் பல மாரியம்மன் கோயில்கள் உள்ளன. ஆயினும் அவற்றுக்கெல் லாம் தலைமையாக விளங்குவது சமயபுரம் மாரியம்மன் ஆகும். இது முன்பு கன்னனூர் என்று போற்றப்பட்டது. இவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே ஏழு மைல்கள் தொலைவில் உள்ளது.

கன்னபுரம் மாரி வரலாறு

சோழ மன்னன் ஒருவன் தன் தங்கையைக் கங்கநாட்டு மன்னன் ஒருவனுக்கு மணமுடித்து, சீதனமாக ஒரு கோட்டை யைக் கட்டி, நகரமும் அமைத்துக் கொடுத்த இடம் கன்னனூர் என்பர். கன்னன் என்பானது பெயரில் தோன்றியது இவ்வூர். பிற்காலத்துப் பாண்டியர் படையெடுப்பால் அக்கோட்டையும்

நகரமும் அழிக்கப்பட்டன. அந்த இடம் உருமாறி வேப்பமரக் காடு ஆயிற்று. திருவரங்கப் பகுதியில் உள்ள அரங்கநாதர் கோயிலில் இருந்த வைணவி என்ற மாரியம்மனை இசுலாமியப் படைகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக அங்கிருந்து எடுத்துச் சென்றனர். கங்கநாட்டு மன்னன் கோட்டை மேட்டில் வைத்து வழிபட்டனர். பின்பு அது வழிபாடொழிந்து பிரபலமற்றிருந்தது. அம்மேட்டில் வேப்பமரங்கள் அடர்ந்தன.

அத்தருணத்தில் திருச்சிராப்பள்ளி கோட்டையைக் கைப்பற்ற வடக்கே இருந்த விசயநகரப் பேரரசின் படைகள் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தன.

இவர்கள் இக் கன்னனூர் மேட்டில் முகாமிட்டனர். அரண்மனை மேட்டில் விளங்கிய அன்னை மாரியைத் தரிசித்தனர். தென்னாட்டில் தங்கள் படை வெற்றி பெற்று ஆட்சி நிறுவப்பெறில் மாரி அம்மைக்குத் திருக்கோயில் கட்டி வழிபடுவதாகப் படையினர் வேண்டுதல் செய்தனர். அன்னை யின் அருளால் அவர்கள் தென்னாட்டில் அரசு அமைத்தனர். தங்களின் வேண்டுதல்படியே திருக்கோயில் எழுப்பி, அன்னையின் பரிவார தெய்வங்களாக விநாயகரையும், கருப்பண்ண சுவாமியையும் பிரதிட்டை செய்து குடமுழுக்கு விழா நடத்தி, நாள்தோறும் பூசைக்கான ஏற்பாடுகளையும் செய்து வைத்தனர். சூரப்ப நாயக்கர் என்பவர் பழைய திருவுருவத்திற்குப் பதில் புதிய திருவுருவம் செய்து வைத்தார் என்பர். இவ்வாறு ஒரு வரலாறு வழங்கப்படுகிறது.

கன்னனூர் மாரி இருந்த இடமே இன்று சமயபுரம் எனச் சிறப்பிக்கப்பெற்று வருகிறது. இதன் காரணமாகவே கன்னனூர், சமயபுரம் மாரியம்னுடன், விசயநகரத்தின் ஆட்சி யினரும் அங்கிருந்து வந்ததாக வேம்பும் தொடர்புபடுத்தப் பெறு கின்றன. ஒரு காலகட்டத்தில் விசயநகரப் பேரரசின் தெய்வச் சின்னமாக அம்மனே விளங்கியுள்ளாள் என்பதை அரசு முத்திரைகளிலும் கல்வெட்டுகளிலும் காணமுடிகின்றது. மேலும் விசயநகரப் பேரரசின் குலதெய்வமான துர்க்கை மற்றும் எக்கலா தேவி, காஞ்சி காமாட்சி போன்ற அம்மன் தெய்வங் களுக்கு இணையாகவே மாரியம்மனும் கருதப்பட்டு வந்ததாக

மாரியம்மன் மேல் பாடப்பெற்ற பாடல்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

விசயநகரப் பேரரசின் கீழ் மதுரையிலிருந்து ஆட்சி செய்து, பின்பு சுதந்திரமாய் பாண்டி நாட்டை ஆண்ட நாயக்க மன்னர்களும் அவர்களின் கீழிருந்த பாளையக்காரர்களும், ஜமீன்தார்களும், பாண்டியநாட்டில் பல மாரியம்மன் கோயில்கள் எழக் காரணமாயிருந்தனர்.

சமயபுரம் மாரியம்மன் கோயிலில் முக்கிய நாள்களில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் சித்திரை மாதம் தொடர்ச்சியாக நடைபெறும் திருவிழா மிகவும் சிறப்பு ஆகும்.

தஞ்சாவூர் மாரியம்மன் கோயில் வரலாறு

சோழநாட்டின் தலைநகரான தஞ்சாவூரில் உள்ள மாரியம்மன் கோயில் மன்னர்களால் ஆதரிக்கப்பெற்றதால் மிகவும் பிரசித்தி பெற்றது. பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கிய விசயாலயன் நிதம்ப சூதனி என்ற பெண் தெய்வத் திற்குக் கோயிலமைத்துப் பெண் தெய்வ வழிபாட்டினை அந்நாட்டில் ஊக்கப்படுத்தினான் என முன்பே பார்த்தோம். வலங்கை மாலை போன்ற வலங்கையர் தொடர்பான கதைப் பாடல்களிலிருந்து காளி வழிபாடும் அந்நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. பிற்காலச் சோழர்களுக்குப்பின் தஞ்சாவூரில் சிறிது காலம் கோலோச்சிய நாயக்க மன்னர்களால் மாரியம்மன் கோயில் சிறப்புப் பெற்றது எனத் தெரிகிறது. பிற மன்னர்கள் காலத்தில் இம்மாரியம்மன் கோயிலில் பல கட்டடங்களும் வழிபாடுகளும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

தஞ்சாவூர் மாரியம்மன் ஆலயத்தில் திருவிழாவின் போது சிறப்புமிக்க வழிபாடுகளும் அலங்காரங்களும் வேடிக்கைகளும் நிகழ்த்தப் பெறுகின்றன. செடல் ஆட்டமும், பிற பக்தி நிகழ்ச்சிகளும் பரவசமூட்டும் வகையில் இத்திருக்கோயிலில் நடந்து வருகின்றன.

நத்தம் மாரியம்மன் கோயில் வரலாறு

நத்தம் நகரிலுள்ள மாரியம்மனுக்கு மாசி மாதத்தில் விழா சிறப்பாக நடைபெறுகிறது. முதல் நாள் பொங்கல் பெருவிழா வும், அடுத்த நாள் அம்மன் பவனியும் நடைபெறுகின்றன.

பாண்டி நாட்டிலுள்ள மாரியம்மன் கோயில்கள்

பாண்டி நாடு பாளையங்கள் நிறைந்த நாடாகையால் மாரியம்மன் வழிபாடு அப்பகுதியில் மிக்கோங்கியுள்ளது எனக் கூறலாம்.

இருக்கங்குடி மாரியம்மன் கோயில் வரலாறு

தென்பாண்டி நாட்டில் பாளையக்காரர்களாலும் ஜமீன்தார் களின் ஆதரவாலும் பல மாரியம்மன் கோயில்கள் ஏற்படுத்தப் பெற்றன என முன்பே பார்த்தோம். இவை சிறிதும் பெரிதுமாக உள்ளன. சாத்தூர்க்கு அருகிலுள்ள இருக்கங்குடி மாரியம்மன் கோயிலே குறிப்பிடத்தக்க வகையில் புகழ் பெற்றுள்ளது.

இக்கோயில் பாண்டியர்கள் காலத்திலேயே தோற்றம் பெற் றது எனக் கூறுகின்றனர். ஆயின் தென்னாட்டில் பாளையப் பட்டுகள் ஏற்பட்ட பின் பிரசித்தி பெற்றதாக இக்கோயிலைக் கூறலாம். இத்திருக்கோயில் பஞ்சநதிகள் சேருமிடத்திலிருப்பது இதன் சிறப்பாகும். செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பெருந்திரளான மக்கள் இங்கு வந்து வழிபட்டு மாரியம்மன் அருள் பெற்றுச் செல்கின்றனர். இருக்கங்குடி என்றாலே ஆண், பெண், சிறுவர் ஆகிய எல்லோரும் மாரியம்மனுக்கு விரதம் இருந்து, மொட்டை போட்டு வழிபடுதல் வழக்கமாக உள்ளது. இருக்கங்குடி மாரியம்மன் அருள் நிறைந்தவள் எனவும் போற்றப் படுகிறாள்.

புதுக்கோட்டை மாரியம்மன் கோயில் வரலாறு

கோட்டை மாரியம்மன் கோயில்கள் குறுநில மன்னர்களும் பாளையக்காரர்களும் இருந்து ஆண்ட இடங்களில் மட்டுமே அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். அதைப் போன்றே புதுக்கோட்டை மாரியம்மன் கோயில் விளங்குகின்றது. புதுக்கோட்டையை ஆண்ட அரசர்களின் ஆதரவு பெற்றது இக்கோயில். ஏழு கன்னிமாரியம்மன்களுள் புதுக்கோட்டையில் இருப்பது ஒரு கன்னி என அதன் வரலாற்றைக் கூறுகின்றனர். பிற மாரியம்மன் கோயில்களில் நடப்பது போன்று இங்கும் சிறப்பாக விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

சிவகங்கை கண்ணபுர மாரியம்மன் கோயில் வரலாறு

சிவகங்கைக்கருகில் உள்ள கண்ணபுரத்தில் ஏழு கன்னி மாரியர்களுள் ஒரு மாரி கோயில் கொண்டிருப்பதாக ஐதிகம். கண்ணபுரம் என்றாலே 'மாரி கண் ஒளிதரும்' அருள்தலமாகக் கருதப்படுகிறது. மாரியின் கண்பார்வையை வைத்தும் அவள் மக்களுக்குக் கண் வழங்குவது பற்றியுமே இப்பெயர் இவ்வூர்க்கு ஏற்பட்டது என்பர். எல்லாப் பகுதியிலிருந்தும் சாதி வேறுபாடின்றி மக்கள் இம்மாரியை வழிபடுகின்றனர்; கண் ஒளி பெறுகின்றனர்.

கொல்லங்குடி மாரியம்மன் கோயில் வரலாறு

சிவகங்கை – தொண்டி நெடுஞ்சாலையில் கொல்லங்குடி அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள மாரியம்மன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு நடைபெறும் திருவிழாக்களில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடத்தப்படுகின்றன.

கடம்பூர் அம்பிகை மாரியம்மன் கோயில் வரலாறு

பாண்டி நாட்டு ஜமீன்களுள் ஒன்று கடம்பூர். நெல்லை மாவட்டத்தின் வட எல்லையில் கயத்தாறு நகர்க்குக் கிழக்கே அமைந்துள்ள இவ்வூரில் அருள்மிகு அம்பிகை மாரியம்மன் கோயில் ஊரின் மத்தியில் உறவின்முறையினர்க்குப் பாத்தியப்

பட்டு, சில நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இங்குள்ள மாரியம்மன் ஆலயம் பலவித சிற்ப வேலைப்பாடுகளுடன் சதுர்வேத முறைப்படி அமைக்கப் பெற்றுள்ளது. சிங்கவாகனத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகை மாரியம்மனுக்குச் சிறப்பாகச் சித்திரை மாதம் பத்து நாள்கள் திருவிழா நடத்தப்பெறுகிறது. இத்திருவிழாவில் மாரியம்மனுக்குச் சிறப்பு அலங்காரங்களும், சந்தனக்காப்பும், மக்காப்பும், மாரியின் புகழ் பரப்பும் பக்திச் சொற்பொழிவுகளும் நடைபெறும். கும்பம், மேளதாளம், அம்மன் சப்பரத்தில் ஊர்வலம் வருதல், நாடகம், பாட்டுக் கச்சேரி, வாண வேடிக்கைகள், திரைப்படங்கள் போன்றவை இடம்பெறும். இவற்றுடன் அம்மன் வழிபாடாக, 108 சங்கு அபிஷேகம், பாற்குடம் எடுத்தல், திருவிளக்குப்பூசை, அக்கினிச் சட்டி எடுத்தல், மாவிளக்கு, ஆயிரங்கண் பானை எடுத்தல், கயிறு குத்துதல், உருண்டு கொடுத்தல், பல வேசங்களிடுதல் போன்ற நேமிதங்கள் நடைபெறும்.

மாரி அம்மன் திருவிழா நடைபெறும் பத்து நாள்களும் கடம்பூர் நகரம் விழாக்கோலம் பெற்று விளங்கும்.

வீரபாண்டி கௌமாரி அம்மன் கோயில் வரலாறு

தேனி நகர்க்கருகிலுள்ள வீரபாண்டி கௌமாரி அம்மன் கோயில் ஆற்றுக்கருகில் உள்ளது. இவ்வம்மனுக்குச் சித்திரை மாதம் 9 நாள்கள் விழா நடைபெறும். மாவிளக்கு எடுத்தல், சேறு பூசி ஆடுதல் (சேத்தாண்டிகள் எனப் பக்தர்கள் வழங்குவர்) தீர்த்தம் எடுத்துக் கொடிக்கம்பத்தில் ஊற்றுதல், சக்திக் காவடி எடுத்தல், பல்லாண்டு (அங்கப் பிரதட்சணம்), காணிக்கை செலுத்துதல், வேல்களைக் குத்தி மேளதாளத்துடன் தீச்சட்டி எடுத்தல் ஆகிய வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இந்த ஒன்பது நாள்களில் தேரோட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறும். அப்போது அம்மன் முத்துப்பல்லக்கிலும், புஷ்ப பல்லக்கிலும் பவனி வருவாள். மேலும் கொடை நாள்களில் பொருட்காட்சி, மின்சார ராட்டினம், மிருகக்காட்சி சாலைகள், துப்பாக்கி சுடுதல் போட்டி, மரணக்கிணற்றில் மோட்டார் சைக்கிள் விடுதல்,

மின்சாரப் பெண், திரைப்படப் பாடல், இன்னிசை நிகழ்ச்சி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

விழாவில் பிளாஸ்டிக் கடை, கண்ணாடிப் படக்கடை, பொரிகடலைக் கடை, தேங்காய் – பழக்கடை, காப்பிக்கடை ஆகியவை நூற்றுக் கணக்கில் காணப்படும்.

பல்லாயிரக்கணக்கான பக்த கோடிகள் அம்மனுக்கு நேர்த்திக் கடன் செலுத்தி மகிழ்வர். விழா கோலாகலமாக இருக்கும். வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை கூட்டம் கூடுதலாக வரும். இத்திருவிழாவில் சேத்தாண்டிகளின் காட்சி சிறப்பாக இருக்கும். மேலும் பொங்கல் திருவிழா நாள்களில் இவ்வம்மனுக்குப் பொங்கல் வைத்தல் சிறப்பாக நடைபெறும்.

சோழவந்தான் ஸ்ரீஜனக மாரியம்மன் கோயில்

மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தான் நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஜனக மாரியம்மன் ஆலயம் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளது. ஜனக மாரி என்ற பெயர்க்காரணம் குறிப்பிடத் தகுந்தது. இங்குள்ள அம்மனுக்கு ஆனி மாதம் உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும். முதல் நாளில் உற்சவ அம்மன் விருக்ஷபாரூட தரிசனக் காட்சி தருகிறாள். அடுத்து முத்துப்பல்லக்கில் உலா வருகின்றாள். இறுதி நாளில் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

மதுரை வண்டியூர்த் தெப்பக்குள மாரியம்மன் கோயில்

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அடுத்த நிலையில் அதிக அளவில் திருவிழாக் கூட்டம் சேருவது வண்டியூர்த் தெப்பக்குள மாரியம்மன் கோயிலில்தான் எனில் அது மிகையாகாது. இங்கு ஆண்டுதோறும் நடக்கும் தெப்பத் திருவிழாவைத் திரளான மக்கள் வந்து கண்டுகளிக்கின்றனர். மதுரையில் கிழக்குப் பகுதியில் தியாகராய கல்லூரிக்கு அருகில் உள்ளது இம்மாரியம்மன் கோயில்.

வழிவழியாக நாயக்க மன்னர்கள் மதுரையிலிருந்து ஆண்டு வந்த போதெல்லாம் மாரியம்மனும் சிறப்பாக வழிபடப்பெற்று வந்துள்ளதாக அறிய முடிகின்றது. விசயநகரப் பேரரசின் ஆதரவு பெற்ற தெய்வமாக மாரியம்மன் இருந்ததால் அப் பேரரசு ஏற்பட்ட மதுரையிலிருந்து தன்னாட்சி நடத்திய திருமலை நாயக்கரும் அவர் பரம்பரையினரும் மாரியம்மனுக்கு மதுரையில் பெரிய கோயிலும், தெப்பக் குளமும் அமைத்து வழிபட்டனர்.

வண்டியூர்த் தெப்பக்குள மாரியம்மன் கோயிலில் பங்குனி மாதம் முதல் தேதி பூச்சொரிதல் விழா நடைபெறும். மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து மாரியம்மனைப் பொம்மை போல் வைத்து நான்கு மாசி வீதிகளிலும் சப்பரம் சுற்றச் செய்வர். அப்போது பக்த கோடிகள் பூமாரி பொழிவர். 'பூ மலை' போல் குவியும். அப்பூக்களுடன் சப்பரம் மாரியம்மன் கோயில் வந்தடையும். அப்பூக்களைக் கோயில் கருவறையில் உள்ள மாரி அம்மன் பாதத்தில் சாற்றுவர். அப்போது கோயில் முழுவதும் பூக்காடாக இருக்கும்.

அதே மாதத்தில் 10 நாள் திருவிழா நடைபெறும். ஒவ்வொரு நாளும் அம்மன் ஒவ்வொரு வாகனங்களில் பவனி வருவாள். 6 ஆம் நாள் விழாவில் 108 திருவிளக்குப் பூசை நடைபெறும். அன்று அன்னதானம் மிகப் பெரிய அளவில் செய்யப்படும்.

இக்கோயிலில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தைப்பூச விழாவில் மீனாட்சி அம்மன் தெப்பத் திருவிழா நடைபெறும். அப்போது மாரியம்மன் கோயிலில் சிறப்புப் பூசைகள் நடைபெறும். பக்தகோடிகள் நீண்ட வரிசையில் நின்று வணங்குவர்.

திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் கோயில் வரலாறு

குடியேற்றத்தின் மூலமும் மாரியம்மன் கோயில்கள் அமைக்கப்பட்டன என்பதற்குத் தகுந்த சான்று திண்டுக்கல்

கோட்டை மாரியம்மன் ஆலயமாகும். இத்திருத்தலம் திண்டுக்கல் நகர்க்கு மேல் எல்லையில் கோட்டை அடிவாரத்தில் பரந்த நிலப்பரப்பில் உள்ளது. அம்மனிருக்கும் அறை மிகப் பழங்காலத்தது. பின்பு ஒவ்வொரு காலகட்டத்திலும் இக்கோயிலில் பல கட்டடப் பணிகள் நடந்து வந்துள்ளன. திண்டுக்கல் கோட்டை திப்புசுல்தான் வசம் சிறிது காலமிருந்தது.

பாண்டி நாட்டில் பல தலங்களிலும் மாரியம்மன் கோயில்கள் சிறிதும் பெரிதுமாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட கோயில்களே வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாகத் தோன்றுகின்றன.

கொங்கு நாட்டில் மாரியம்மன் கோயில்கள்

இப்போதைய கோவை, சேலம், பெரியார் மாவட்டங்களின் மொத்த நிலப்பரப்பைக் கொங்கு நாடு என்பர். இங்குத் தமிழ் மொழியுடன் தெலுங்கு, கன்னட மொழி பேசுவோரின் குடியேற்றமும், பல பாளையப்பட்டுகளும் இருந்ததால் மாரியம்மன் கோயில்களும் மிகுந்த அளவில் இந்நாட்டில் தோன்றியுள்ளன. குறிப்பாக, கோவை–மைசூர் சாலையிலுள்ள பண்ணாரி மாரியம்மன் கோயிலும், சேலம் கோட்டை மாரியம்மன் கோயிலும், கோவை தண்டுமாரியம்மன், ஈரோடு பெரிய மாரியம்மன் கோயிலும், கொளா நெல்லி மாரியம்மன் கோயிலும் குறிப்பிடத்தக்கவை.

சேலம் கோட்டை மாரியம்மன் கோயில் வரலாறு

ஏழு கன்னி மாரியம்மன் கோயில்களில் ஒன்று சேலத்திலிருக்கும் கோட்டை மாரியம்மன் கோயில் என்பர். ஆயினும் அந்நகரிலும், அதன் அருகிலும் பல மாரியம்மன்களின் சிறு கோயில்கள் உள்ளன. அவை செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன், குகை மாரியம்மன், மேட்டுத்தெரு மாரியம்மன், குமாரசுவாமிப்பட்டி மாரியம்மன், கிச்சிப் பாளையம் மாரியம்மன், அம்மாப்பேட்டை மாரியம்மன் என்பன. சேலம்

நகரில் சின்னக்கடை வீதி மாரியம்மன், பாவடித்தெரு மாரியம்மன், ஆற்றோரத்தெரு மாரியம்மன், புதுத்தெரு மாரியம்மன் என்று தெருவுக்குத்தெரு விளங்கும் மாரியம்மன் கோயில்களும் உள்ளன. இக்கோயில்களுக்குக் கோட்டை மாரியம்மன் தலைமையாக விளங்குவதாக நம்புகின்றனர். எனவேதான் கோட்டை மாரியம்மனைப் 'பெரிய மாரியம்மன்' என்றும், மற்ற மாரியம்மன்களைச் 'சின்ன மாரியம்மன்' என்றும் வழங்கி வருகின்றனர். அன்பர்களின் மனக்கோட்டைக்கு வழிவகுத்து அவர்களுக்கு மங்களவாழ்வை அருளும் பெரிய மாரியின் திருவருள் காரணமாக இத்தலத்திற்கு 'மங்களமாபுரி' என்ற பெயரும் உண்டு என்பர்.

கோட்டை மாரியின் கோயில் திருமணிமுத்தாறு எனும் நதியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. இதன் மேற்குக் கரையில் கோட்டை என்ற பகுதியின் நடுவே கோட்டைப் பெருமாள் கோயில் உண்டு. மணிமுத்தாற்றில் ஆதிநாளில் எப்போதும் நீர்ப்பெருக்கு இருந்ததாகவும், அதிலிருந்து முத்து எடுத்து அன்னைக்குச் சூட்டியதாகவும் கூறப்படுகிறது. அதனாலேயே மணிமுத்தாறு என்ற பெயர் நதிக்கு வழங்கியது என்பர்.

இக்கோயில் கிழக்கு நோக்கி, பேருந்து நிலையத்தை ஒட்டி அமைந்து விளங்குகின்றது. இத்திருத்தலம் 300 ஆண்டுகட்கும் முற்பட்டது. சோழநாட்டிலிருந்து சிலர் இத்தலத்திற்குக் குடியேறிய போது இத்தலம் சிறுகிராமமாக இருந்தது என்றும், சோழ நாட்டு மாரியை இங்கு எழுந்தருளச் செய்து வழிபட்டனர் என்றும் செவிவழியாக ஒரு வரலாறு கூறப்பட்டு வருகிறது.

மாரியம்மனுக்கு ஆதியில் எழுப்பிய கோயில் மிகச் சிறியது. இதனை இப்பொழுது விரிவுபடுத்தியுள்ளனர். சேலத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பெரிய – சிறிய மாரியம்மன் கோயில்களின் அமைப்பையும் வரலாற்றையும், தொகையையும் காணும்போது பாண்டிநாட்டில் மாரியம்மன் கோயில்கள் எழுந்துள்ள அமைப்புடன் தொடர்புள்ளதாகத் தெரிகின்றது. பாண்டி நாட்டைப் போல் சேலம் பகுதியிலும் பாளையப்பட்டு கள் இருந்துள்ளன. அவை மாரியம்மன் வழிபாட்டை ஊக்குவித்

தன. அதற்கு நாயக்க மன்னர்களும் அதிகாரிகளும் உறுதுணை புரிந்துள்ளனர் என்றும் தெரிகின்றது.

கொங்கு நாட்டுப் பாளையப்பட்டுகளில் மாரியம்மன் வழி பாடு பரவலாக இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின் றன. அவ்வாறாயின் பாண்டி நாட்டைப் போன்று மாரியம்மன் வழிபாடு கொங்கு நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்தது என்றும், ஆங்குள்ள பாளையங்கள் அதற்கு உதவின என்றும் அறிந்து கொள்ள முடிகின்றது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் கோயில்

சேலம் நகரிலமைந்துள்ள இம்மாரியம்மன் கோயிலில் ஆடி மாத இறுதியில் அம்மன் கொடை விழா நடைபெறுகின்றது. அம்மன் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் ஊர்வலம் வரும் காட்சி சிறப்பாக அமையும்.

கோவை உப்பிலிப்பாளையம் தண்டுமாரியம்மன் கோயில்

இத்திருக்கோயில் கோவை மாநகரின் ஒரு பகுதியாக விளங்கும் உப்பிலிப்பாளையத்தில் அமைந்துள்ளது. 'தண்டு' என்றாலே 'படை' அல்லது 'காவல்' என்று பொருள். காவல் மாரியாக விளங்கிய இம்மாரியம்மனை எல்லோரும் 'தண்டு மாரி' என அழைக்கின்றனர். காவல் அல்லது தண்டு என்பன படைகள் தொடர்புடைய பெயர்கள் ஆகும். எனவே தண்டு மாரியம்மன் கோயில் அரசர்கள் ஆதரவில் ஏற்பட்டன எனத் தெரிகிறது. வேண்டுவோர்க்கு வேண்டியதை அருளும் இத் தாய்த் தெய்வத்திற்குச் சித்திரை மாதம் திருவிழா விமரிசையாக நடைபெறும்.

ஈரோடு கொளாநல்லி கோட்டை மாரியம்மன் கோயில்

கொங்கு நாட்டில் ஒரு பகுதியான இன்றைய பெரியார் மாவட்டத் தலைநகர் ஈரோட்டிற்கு அருகில் உள்ள தலம் கொளாநல்லி. இங்குள்ள கோட்டை மாரியம்மன் ஆலயமும் பாளையப்பட்டுகளின் ஆதரவில் அமைக்கப்பெற்றது என்பர்.

இங்குள்ள மாரி அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தவள். இத் தெய்வத்திற்கு மாசி மாதத்தில் பத்து நாள்கள் திருவிழா நடைபெறும்.

ஈரோடு பெரிய மாரியம்மன் கோயில் வரலாறு

ஈரோட்டிலிருந்து கோவை செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 'பன்னீர் செல்வன் பூங்கா' என்ற பகுதியில், ஈரோடு அருங்காட்சியகம் எதிரில் பெரிய மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இங்கு இந்தப் பெரிய மாரியம்மன்தான் முதன்மை இடம் பெறுகின்றாள். என்றாலும் பத்து நாள்கள் நடைபெறும் திருவிழாவில் 'காரைவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள 'சின்ன மாரியம்மன்', பெரிய – சிறிய மாரியம்மன் கோயில்களுக்கிடையே அமைந்துள்ள 'நடு மாரியம்மன்' ஆகிய மூன்றையும் இணைத்து வழிபடுகின்றனர். இக்கோயில்களில் நடைபெறும் விழாக்களில் மிகவும் சிறப் பானது 'கம்பம் நடு விழா' ஆகும். இவ்விழாவில் பூச்சாற்றுதல், கம்பம் நாட்டுதல், கிராம சாந்தி, கொடியேற்றம், மாவிளக்கு, கரகம் எடுத்தல், அம்மன் ஊர்வலம் வருதல், சின்ன மாரியம்மன் கோயிலிலிருந்து தேர்வடம் பிடித்தல், ஒவ்வொரு கோயிலாக ஊர்வலம் நடைபெற்று மூன்றாவது நாள் மீண்டும் சின்ன மாரியம்மன் கோயில் அடைதல், அம்மன் வீதி உலா வருதல், இறுதியாக ஒன்பதாம் நாள் கம்பங்களைக் காரை வாய்க்காலில் விடுதல், பத்தாம் நாள் மறுபூசை செய்து அத்துடன் விழாவை முடிக்கின்றனர்.

கம்பத்தை மாரியம்மனின் கணவராகப் பாவித்து வழிபாடு நடைபெறுகிறது. இது ஒரு சிறப்பு ஆகும். இதன் வரலாறு வருமாறு : 'கம்பன்' என்பவன் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவன். மாரி உயர் குலத்தைச் சேர்ந்தவள். பிராமணப் பெண்ணான மாரியைத் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த கம்பன் ஏமாற்றி மணமுடித்துக் கொள்கிறான். உண்மை தெரிந்த மாரி அவனைக் கொன்றுவிட்டு விதவைக்கோலம் ஏற்றாள் என்பது பெரிய மாரியின் வரலாறாகக் கூறப்படுகிறது. எனவேதான் மூன்று கிளைகளாகப் பிரியும் வேப்பங்கிளையை விழா தொடக்கமாக

அம்மன் கோயில் வாசலில் நட்டு விழா நடைபெறும் ஒன்பது நாளும் அக்கம்புக்கு நீராட்டி மஞ்சள் குங்குமம் இட்டு வழிபடு கின்றனர். அக்காலங்களில் மாரியம்மனும் வண்ண வண்ண ஆடை அணிகலன்களுடன் வீதி உலா வருகிறாள். ஆனால் இறுதிநாள் மாரி தன் கணவனாகிய கம்பத்தைக் கொன்று விடுவாள். அக்கம்பத்தைப் பிடுங்கிக் காரைவாய்க்காலுக்கு எடுத்துச் சென்று அந்நீரில் விட்டு விடுகின்றனர். அவ்வாறு கம்பத்தைப் பிடுங்கி எடுத்துச் செல்லும் போது சாவுப்பறை அடித்தவாறு கம்பத்தைப் பிணமாகக் கருதி ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர். இந்த ஊர்வலத்திற்குப் பிறகு வரும் நிகழ்ச்சிகளில் மாரி விதவைக் கோலத்தில் காட்சி தருகிறாள்.

பண்ணாரி மாரியம்மன்

கோவை மாவட்டத்துச் சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் சாலையில் எட்டு மைல்கள் தொலைவில் உள்ளது பண்ணாரி மாரியம்மன் கோயில். இங்குள்ள பண்ணாரி வனத்தில் முன்காலத்தில் பசுக்கள் வந்து மேய்வது வழக்கமாம். அப்படி வந்த பசுக்களில் ஒன்று தனது பாலைக் குறிப்பிட்ட இடத்தில் பொழிந்து வந்தது. பால் பொழிந்ததால் புதர் மண்டியது. அங்குப் புற்கள் சூழ்ந்த புற்றையும் அதனருகில் ஒரு சுயம்புலிங்கத்தையும் ஊர் மக்கள் கண்டுபிடித்தார்கள். இந்த லிங்கமே பண்ணாரி மாரியம்மனாகப் பிரதிட்டை செய்யப் பட்டது. தொடக்கத்தில் பச்சிலைகளால் ஒரு பந்தலும், பிறகு கூரை அமைத்தும் வழிபட்டனர். விழாக்களும் நடத்தினர்.

முன்னொரு காலத்தில் மலையாளத்தில் வண்ணாரக்காடு என்ற ஊரிலிருந்து மைசூருக்குச் செல்ல இதன் வழியே சில வியாபாரிகள் வந்தபோது இரவு நேரத்தில் இவ்வனத்தில் தங்கினர். அப்போது இந்த மாரி அம்மன் அவர்கள் கனவில் தோன்றி தான் எப்பொழுதும் அவர்களுக்குத் துணையாக இருப்பதற்கு வசதியாக இங்கே தனக்குப் பண்ணாரியம்மன் என்ற பெயரில் கோயில் அமைக்கக் கூறினாள். அதன்படி பெரிய கோயில் கட்டப்பட்டது.

இம்மாரியம்மன் மிகவும் அருள்சக்தி வாய்ந்தவள். சாலையில் செல்லும் பஸ் – லாரி முதலிய அனைத்து வாகனங்களும் இந்த அம்மன் கோயில் முன் நிற்கும். அதில் செல்வோர் அம்மனை வழிபட்டுச் செல்வர். காட்டுப் பயணத்தில் எவ்வகை இன்னலும் நேராமல் காக்கும் அன்னையாக இவ்வம்மன் விளங்குகிறாள்.

பொங்கல் படைப்பது, மாவிளக்குப் போடுவது ஆகியவை அம்மன் வழிபாட்டில் குறிப்பிடத்தக்கவை. மேலும் பெண்கள், புதிதாகப் பிறந்த குழந்தைகள் ஆகியோர் மிகுதியாக வழிபடுகின்ற தலமாக இது விளங்குகிறது. இங்கு உயிர்ப்பலி இடுவதில்லை. தெண்டனிட்டு வழிபடுவர். கண், நரம்பு ஆகிய நோய்கள் தேவியின் தீர்த்தத்தால் நீங்குகின்றன. அழல் வழிபாடு, அக்கினிக் குண்டத்தில் இறங்குவது போன்றவையும் நடைபெறுகின்றன. தெப்பக் கிணற்றுக்கு அருகில் சென்று மாரியம்மனை அழைத்துக் கொண்டு குண்டத்தின் அருகே வரும்போது பக்தர்கள் கூடி நிற்பார்கள். முதலில் அம்மனை வழிபட்டு அக்கினிக் குண்டத்தில் பூசாரி இறங்க, பின் பக்தர்களும் அம்முறையைப் பின்பற்றுவர். இது மறுநாள் காலை 10 மணி வரை நடைபெறும். மறுநாள் அருந்ததி இனத்தார் அம்மனுக்குப் பொங்கலிட்டு, மாவிளக்குப் போடுவர். இரவில் அக்கினிக் கம்பத்தைப் பிடுங்கிக் கிணற்றில் விடுவர்.

பண்ணாரி மாரியைத் தரிசிக்க சத்தியமங்கலத்திலிருந்து பஸ் மூலம் செல்லலாம். அங்கே தங்குவதற்குச் சத்திரம் போன்ற வசதிகள் உள்ளன. காலை முதல் இரவு வரை எப்போதும் சந்நிதி திறந்திருக்கும்.

'புண் ஆறி வந்த மாரி' தான் காலப்போக்கில் 'புண்ணாறி', 'பண்ணாரி' என மருவி பெயர் பெற்றிருக்க வேண்டும் என இம்மாரியின் பெயர்க் காரணம் கூறப்படுகிறது. வனத்தில் இக்கோயிலிருப்பதால் பல வனவிலங்குகளின் சஞ்சாரம் இங்கு உண்டு. குறிப்பாக யானைகள் இக்கோயிலுக்கு இரவில் அடிக்கடி வருமென்று கூறுகின்றனர். மாரியம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களை விரட்ட மலைக் குறும்பன் ஒருவன் மந்திரத்தால் வன விலங்குகளை ஏவிவிட்டதாகவும் மாரியின்

அருளால் அவன் தண்டனை பெற்றான் என்றும் கதையொன்று கூறப்படுகிறது. இவ்வனத்தில் வந்து தங்கிய ஆங்கிலேய அதிகாரி ஒருவன் விழாவைத் தடை செய்ததாகவும், பின் மாரியின் அருளால் பாம்புக் கன்னியர் அவன் முன் தோன்றி நடனமாடிய போது அவன் பயந்து, தன் தவறை உணர்ந்து, திருந்தி, நின்றுபோன வழிபாட்டைத் தானே நேரில் நின்று நடத்தியதாகவும் செய்திகள் வழங்கப்படுகின்றன.

தொண்டை நாட்டில் மாரியம்மன் கோயில்கள்

பாண்டி நாட்டைப் போலவும், கொங்கு நாட்டைப் போலவும், சோழ நாட்டைப் போலவும் தொண்டை நாட்டில் பல மாரியம்மன் திருக்கோயில்கள் உள்ளன. தொண்டை நாட்டின் மகுடமாகக் காஞ்சிநகர் விளங்கியது. இத்திருத்தலத்திற்குக் கோயில்களின் நகரமென்பதே பெயர். காஞ்சி காமாட்சி இந்நகரிலிருந்து அருள்பாலித்து வருகிறாள். பெருந்தெய்வமான காமாட்சியம்மனும், நாட்டுப்புறத் தெய்வமான மாரியம்மனும், மாரியம்மன் அமிசமான ரேணுகாதேவியும் பல ஊர்களில் வழிபடப்பெற்று வருகின்றனர். திருவேற்காடு கருமாரியம்மன், படவேடு ரேணுகாதேவியம்மன், திருவம்பட்டு மாரியம்மன், திண்டிவனம் பெரியமாரியம்மன் போன்ற ஆலயங்கள் இப்பகுதிகளில் அமைந்துள்ளதைக் காணலாம். பெரிய பாளையத்துப் பவானி அம்மன், கோலியனூர் பிட்லாயம்மன் போன்ற தெய்வங்கள் மாரியம்மன் திருக்கோயில்களில் வழிபடப்பெறுவது போல் வேம்பு, பாம்பு என்பனவும் வழிபாடுகளைக் கொண்டுள்ளன. இங்குள்ள பெரும்பாலான மாரியம்மன் திருத்தலங்களில் தலை உருவமே மிக்கோங்கி இருக்கும்.

திருவேற்காடு கருமாரி அம்மன் கோயில் வரலாறு

சென்னையிலிருந்து 12 மைல்கள் தொலைவில் திருவேற்காடு உள்ளது. சென்னையிலிருந்து அடிக்கடி சென்றுவர

பேருந்து வசதி உள்ளது. கோடகச் சித்தர் என்பவர் கருமாரி யம்மன் அருள்மீது ஐயங்கொண்டு, குணநாத சித்தரால் ஐயம் தெளிந்து அம்மையிடம் தம்மை அபயம் கொள்ள வேண்டினார். கருமாரி அம்மனும் அருட்சாம்பல் அளித்து அதன் சிறப்பு உணர்த்தி திருவருள் புரிந்து மறைந்தாள். அதன் காரணமாக இங்கு இக்கோயில் சிறப்புப் பெற்றது.

இத்தலத்தில் பாடல் பெற்ற சிவாலயமும், பிறதெய்வக் கோயில்களும் இருந்தும் கருமாரியின் திருக்கோயில் அண்மைக் காலத்தில் பெரும்புகழ் கொண்டு விளங்குகின்றது. இதற்கு அம்மையின் அருட்சிறப்பே முதற்காரணமாகும். இங்குள்ள மாரி யம்மன் சக்தியின் சொரூபமாக உள்ளாள் என நம்பப்படுகிறது.

ஆணவத்தால் அடாதன செய்த அவுணன் சூரனைச் சங்காரம் செய்ய முருகப் பெருமானுக்குச் சக்தியால் வேல் வழங்கப்பெற்ற இடமாதல் பற்றி இத்தலத்திற்கு 'வேற்காடு' என்ற பெயர் அமைந்தது. அதனுடன் 'திரு' என்ற சிறப்பு அடைமொழி சேர்ந்து திருவேற்காடு என்று வழங்கி வருகின்றது என்பர்.

தொண்டை நாட்டில் தேவாரப் பதிகம் பெற்ற சிவதலங்கள் முப்பத்திரண்டில் திருவேற்காட்டுத் தலமும் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றின் சிறப்புமுடைய இத்தலத்தில், கருமாரி மூவரும் தேவரும் போற்ற அருளாட்சி புரிந்து வருகிறாள். முதல் யுகத்தில் குண்டலினியாகவும், இரண்டாம் யுகத்தில் வாலையாக வும், மூன்றாம் யுகத்தில் பார்வதியாகவும் விளங்கிய பராசக்தி தற்போது கலியுகத்தில் கருமாரி எனும் பெயர்பெற்று விளங்கு கிறாள் என நம்பப்படுகிறது. தேவி கருமாரியம்மன் மீது அண்மையில் பாடப்பெற்ற புராணம் இத்திருத்தலத்தின் மகிமையை எடுத்தியம்புகிறது.

திண்டிவனம் பெரிய மாரியம்மன்

திண்டிவனம் நகரில் அமைந்துள்ள பெரியமாரியம்மன் கோயிலில் நடைபெறும் திருவிழாவில் கூழ் ஊற்றுதல் அல்லது கஞ்சி ஊற்றுதல் மிகச் சிறப்பான நிகழ்ச்சியாகும். இந்நகரில்

இத்திருக்கோயில் அதிகம் பேணுதலின்றிக் காணப்படுகின்றது. ஊரின் நடுவிலுள்ள இத்திருக்கோயில் மிகவும் புராதனமானது. இங்குள்ள அம்மனுக்குச் சிறப்பான வரலாறு உண்டு. இப் பகுதியை ஆண்ட சம்புவராயர்கள் காலத்தில் இத்திருக்கோயில் சிறப்பாக இருந்துள்ளது.

விழுப்புரம் வீரவாழி மாரியம்மன்

திருவாமாத்தூர் அபிராமேஸ்வர பெருமான் ஆலயத்திற்குக் கிழக்கேயும், கிழக்குச் சமுத்திரத்திற்கு மேற்கேயும், தென் பெண்ணை ஆற்றுக்கு வடக்கேயும், பம்பை ஆற்றுக்குத் தெற்கேயும் உள்ள ஜனகாபுரி எனும் விழுப்புரம் நகரின் மத்தியில் நேரு சாலையில் வீரவாழி மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இது அரசு அறநிலையத் துறையின் மேற் பார்வையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கு ஆண்டு தோறும் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதில் சிற்சில மாற்றங்களையும் ஏற்படுத்தி, கும்பாபிஷேகமும், லட்சார்சனை யும், கூழ் ஊற்றுதல் விழாவும் நடைபெறுகின்றன. தவிர, புது வருடப் பிறப்பு, 108 பால் காவடிகள் போன்றவை சிறப்பாக நடைபெறுகின்றன.

விழுப்புரம் – செங்கமேடு முத்துமாரியம்மன்

திருவாமாத்தூர் தலத்திற்குக் கிழக்கேயும் பம்பை ஆற்றுக்கு வடபுறமாகவும் அமைந்துள்ள செங்கமேடு கிராமத்தில் முத்து மாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆண்டுதோறும் அல்லது சில ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கூழ் ஊற்றுதல் வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப்பெறுகிறது.

கோலியனூர் பிட்லாயம்மன் எனும் மாரியம்மன்

விழுப்புரம் – பாண்டி நெடுஞ்சாலையில் உள்ள கோலியனூரில் பிட்லாயம்மன் கோயில் உள்ளது. இவ்வம்மன் சமயபுரம் மகமாயி போன்று அருள்மிக்கவள். இக்கோயிலுள்

உயர்ந்த, பெரிய பாம்புப் புற்று ஒன்று உள்ளது. அதிலிருக்கும் நாகங்கள் கோயிலுக்கு வரும் பக்தர்கள் வைக்கும் பால், முட்டை ஆகியவற்றை உண்டு மக்களுக்கு அருள்பாலித்து வருகின்றன என நம்பப்படுகின்றது. ஆடி வெள்ளி, தை வெள்ளி ஆகிய வெள்ளிக்கிழமைகளில் இங்கு அன்பர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். இங்குள்ள புற்றுக்கோயில் 'புற்றம்மன்' என வழிபடத் தொடங்கி, பின் அது புட்லாயம்மன், பிட்லாயம்மன் என மருவியிருத்தல் வேண்டும் என்பது சிலர் கருத்து.

தாய மங்கலம் முத்துமாரியம்மன் கோயில்

தாயமங்கலத்தில் உள்ள முத்துமாரியம்மன் கோயில் பிரசித்தி பெற்றது. ஆண்டுதோறும் இத்திருக்கோயிலில் பங்குனி மாத இறுதியில் திருவிழா நடைபெறுகின்றது. உற்சவ அம்மன் பூதவாகனத்தில் உலாவருதலும், அம்மன் அலங்காரமும் மிகச் சிறப்பானவை. அவற்றைத் தொடர்ந்து இத்திருகோயிலில் முத்து மாரியம்மனுக்குப் பொங்கலிடுதல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

ஒழுகை மங்கலம் ஸ்ரீமாரியம்மன்

ஒழுகை மங்கலத்தில் எழுந்தருளியுள்ள மாரியம்மனுக்குப் பங்குனி மாதத்தில் திருவிழா நடைபெறுகின்றது. இத்திருத் தலத்தில் மாரியம்மனை வைத்து நடத்தப்பெறும் தேர்த்திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும்.

படவேடு மாரியம்மன் கோயில் வரலாறு

தொண்டை நாட்டிலுள்ள படவேடு (படை வீடு) என்ற ஊரில் ரேணுகாதேவி எனும் மாரியம்மன் கோயில் மிகப் பிரசித்தி பெற்றது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூர் வட்டத்திலுள்ளது படவேடு. ஆரணிக்கும் வேலூருக்கும் இடையிலுள்ள மலைகளின் நடுவே அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது. சம்புவராயர்களின் படைவீடு

இருந்த இடம் இது. இயற்கை அரண்களால் சூழப் பெற்ற இவ்வூர் சம்புவராயர்களால் விசய நகரப் பேரரசின்கீழ் ஆட்சி செய்யப் பெற்றதாகும்.

படவேடு (படை வீடு) என்றாலேயே முதலில் நினைவுக்கு வருவது இங்குள்ள ரேணுகாதேவி அம்மன் (மாரியம்மன்) கோயில் ஆகும். இத் திருக்கோயில் ஊரின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளது. இத் திருத்தலத்தில் இராமர், அனுமார், வேணுகோபாலர், சிவன், விநாயகர், முருகன் என்போர்க்கும் திருக்கோயில்கள் உள.

ரேணுகாதேவி அம்மனுக்குப் பிற மாரியம்மன் கோயில் களில் நடைபெறுவது போன்று ஆடிமாதம் விழா நடத்தப் பெறுகிறது. அவ்வமயம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து அன்னையின் திருவிழாவில் கலந்து செல்கின்றனர்.

திருவம்பட்டு மாரியம்மன் திருக்கோயில் வரலாறு

செஞ்சியிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் இக் கோயில் அமைந்துள்ளது. செஞ்சி வட்டத்தில் மிகவும் தலைமை சான்ற கோயிலாக இது விளங்குகின்றது.

செஞ்சி வட்டத்தில் உள்ள துடுப்பாக்கம் என்ற ஊரில் 'மாரி' என்ற பெயருடைய பெண் வறுமை காரணமாக நாள்தோறும் ஊர்ப்புறத்தேயுள்ள விளைநிலங்களுக்குச் சென்று அங்குள்ள 'புல்' விதைகளை அறுத்து வந்து அவற்றைச் சீர் செய்து உணவாகச் சமைத்து உண்பது வழக்கம். இப்படி, ஒருநாள் புல்விதை அறுக்கச் செல்கையில் துடுப்பாக்கம், தையூர் இவற்றிற்கிடையேயுள்ள எல்லைப் பகுதியில் 'மிரள்' வந்து அங்கிருந்த முக்கிளை வேப்பமரத்திலிருந்து வேப்பிலைகளை ஒடித்துக் கையில் ஏந்தியவாறு ஆடிக்கொண்டே தன் ஊராகிய துடுப்பாக்கம் வந்து, அங்கிருந்த ஒரு முச்சந்தியில் அமர்ந்தாள். அதன் பிறகு அங்கேயே அவளுக்கு வழிபாடு தொடங்கியது. சில காலங்கள் கழித்து மாரியம்மன் தான் பிறந்த ஊரான துடுப்பாக்கத்திலிருந்து அருகிலுள்ள 'திருவம்பட்டு' என்ற ஊருக்குச் சென்று அமர்ந்துவிட்டதாகவும் அதுமுதல் அவ்வம்ம

னுக்குத் துடுப்பாக்கம் கிராம மக்கள் தாய் வீடாகவும், திருவம் பட்டு கிராம மக்கள் 'மாமியார்' வீடாகவும் கருதி வழிபாடு மேற் கொண்டு வருகின்றனர். தற்போது அவ்வம்மன் சிலை, திருவம் பட்டில்தான் அமைந்துள்ளது. துடுப்பாக்கம் கிராம மக்கள் அங்கிருந்து ஆண்டு தோறும் அவ்வம்மன் சிலையை எடுத்து வந்து தங்கள் ஊரில் இருத்தி வழிபாடு மேற்கொள்கின்றனர்.

அண்டை மாநிலங்களிலும் அயல் நாடுகளிலுமுள்ள மாரியம்மன் கோயில்கள்

சோழநாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, தொண்டை நாடு எனத் தமிழகம் முழுவதிலும் சிறிய – பெரிய கோயில்கள் பெற்று, சிறப்பான வரலாற்றையும் வழிபாட்டையும் பெறுப வள் மாரியம்மன் மட்டுமே எனில் அது மிகையாகாது. மேலும் அண்டை மாநிலங்களான கேரளத்திலும், கருநாடக மாநிலத் திலும், ஆந்திர மாநிலத்திலும், சிங்கப்பூர், இலங்கை போன்ற அண்மை நாடுகளிலும் மாரியம்மன் கோயில்கள் அமைந்துள் ளன. அதனால் தென்னாட்டில் பரவலாக மாரியம்மன் வழிபடப் பெற்று வருகிறாள் என்பதும் அம்மாரியம்மனை அவள் பக்தர்கள் வெளிநாடுகளிலும் கோயில் கட்டி வழிபடுகின்றனர் என்பதும் சிறப்புடையதாகும்.

கேரளம்

கேரளத்தைப் பரசுராமர் உருவாக்கி ஆங்கெல்லாம் கோயில்கள் உருவாக்கினார் என்பது ஐதீகம். பரசுராமனின் தாய் ரேணுகா தேவியம்மையாரே மாரியம்மனாகச் சில பகுதி களில் வழிபடப் பெற்று வந்துள்ளாள். இதன் காரணமாகவே பழங்காலந்தொட்டு மலையாளநாட்டில் மாரியம்மன் கோயில்கள் பல ஏற்பட்டுள்ளன என அறியலாம். அம்மாநிலத் தில் பகவதியம்மனும், பார்வதியம்மனும் மிகச் சிறப்பாக வழிபடப்பெற்று வருகின்றனர்.

அண்மையில் தமிழகத்திலிருந்து கேரள மாநிலத்தில் குடியேறிய தமிழர்கள் முத்துமாரியம்மனுக்குக் கோயில் கட்டி வழிபடுவது குறிப்பிடத்தக்கது.

கருநாடகம்

கருநாடகத்திற்கும் சமயபுரம் எனும் கன்னனூர் மாரிக்கும் தொடர்புண்டு. கன்னட மன்னன் பெயரால் விளங்கும் கன்ன புரம் மாரியம்மன் கோயில் தமிழ் நாட்டில் மிகப் பழமையான தும் பிரசித்தி பெற்றதுமாகும். எனவே அத்தகு மாரியம்மன் கோயில்கள் கருநாடக மாநிலத்தில் பரந்து காணப்படுகின்றன என அறியலாம்.

தெலுங்கு நாடு

தெலுங்கு நாட்டினர்க்கும் மாரியம்மன் தெய்வத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. விசய நகரப் பேரரசினர் தமிழகத் திலும், தெலுங்கு நாட்டிலும் மாரியம்மனுக்குக் கோயில்களைக் கட்டி வழிபாட்டைச் சிறப்படையச் செய்தனர். இதன் காரண மாகவே மாரியம்மனை அப்பேரரசின் ஆதரவு பெற்ற தெய்வம் எனக் கதைப்பாடல்கள் விவரிக்கின்றன.

விசயநகரமும், வேம்பும் மாரியம்மன் தொடர்புடைய பிற பொருள்களும் விசயநகர அரசு தொடர்புடையதாகவே இக் கதைப்பாடல்கள் வழி அறிகின்றோம். அவ்வாறெனில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து மாரியம்மன் கோயில்கள் தமிழ் நாட்டிலும் பிற இடங்களிலும் பிரசித்தி பெற்றன என அறிந்து கொள்ளலாம்.

துருக்கியர் பகுதிகள்

தென்னாட்டிலும், தில்லியிலும், துருக்கியர்கள் போன்ற இசுலாமிய சமயத்தைச் சார்ந்தவர்கள் கோலோச்சிய காலத்தில் அம்மை நோய் அவர்கள் பகுதியில் மிகுந்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய காரணத்தால் அச்சமயத்தினரில் பலர் மாரியம்மன் வழிபாட்டில் நம்பிக்கை கொண்டு தம் பெயர்களில் 'மாரி',

'முத்து' போன்ற சொற்கள் வருவது போல் அமைத்துக்கொண்டு, மாரியம்மன் கோயில்கள் அமைய உதவியும் செய்துள்ளனர். இதனாலேயே 'துலுக்காணத்து மாரி' துருக்கியர்கள் தொடர்புள்ள மாரி என்பன போன்ற செய்திகளை மாரியம்மன் கதைப் பாடல்கள் கூறுகின்றன. எனவே இந்து சமயத்தினர் மட்டுமின்றி, இசுலாமியரும் நம்பி வழிபடக்கூடிய தெய்வமாக் மாரி இருந்து வருகின்றாள் எனத் தெரிகிறது.

இவ்வாறு, மாரிக்கும் பிற நாட்டினர்க்குமுள்ள தொடர்பு, மாரிக்கும் இசுலாமியர்க்குமுள்ள தொடர்பு, போன்றவற்றைச் சான்றுகளுடன் ஆராய்வோமானால் மாரியம்மன் வரலாறும், கோயில்கள் ஏற்பட்ட வரலாறும் நன்கு வெளிப்படும்.

சிங்கப்பூர் மாரியம்மன் கோயில் வரலாறு

ஸ்டாம் ஃபோர்டு ராஃபின்ஸ் 1819, ஜனவரியில் சிங்கப்பூரை ஒரு பிரிட்டிஷ் தளமாக நிறுவினார். சர் ராஃபின்ஸனுடன் பொருள் தேடுவதற்காகச் சிங்கப்பூர் வந்த தமிழ் வணிகர் நாராயண பிள்ளை என்பவர் தமக்கும் தம் போன்ற சக இந்துக்களுக்கும் அருள்வேண்டி 1821-இல் மாரியம்மன் கோயில் ஒன்றை அமைத்தார். இது பிரிட்டிஷ் ஆளுநர் அனுமதியுடன் ஸ்டாம் ஃபோர்டு கால்வாய் அருகே கட்டப்பட்டது. பிற்காலத்தில் சிங்கப்பூர் விரிவடைந்தபோது இப்போதைய சவுத் பிரிட்ஜ் ரோடு மனைக்கட்டில் கோயில் அமைக்கப்பட்டது. பின் 1862-63-இல் இவ்வாலயத்தின் இப்போதைய அமைப்பு கட்டப்பட்டது. அதன் பின் இக் கோயில் பலமுறை புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மாரியம்மன் கோயிலின் முன்புறம் இரு துவாரசக்தி சிலைகள், கோயிலுக்கு முன் ஸ்ரீராஜராஜேஸ்வரி சிலை, மண்டப வளைவில் இரு தீப கன்னிகள், சுற்றுப்பிரகாரத்தில் அரவான்கோயில் அருகில் திரௌபதி அம்மன் கோயில், சுற்றுப்பிரகாரத்தில் உள்ள அரச வேப்ப மரங்களைச் சுற்றி சுந்தர விநாயகருக்கான கற்பீடம், இதனை ஒட்டிய பல பயன் மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. மேலும் கோயில் முன் மண்டபத்தின் நடுவில் வண்ணக் கமலங்கள், தசாவதாரக் காட்சி, முருகனின் ஆறுபடை

வீடுகள், வளைவு மண்டபப்பகுதியில் அஷ்ட துர்க்கையின் சக்கரம், நவசக்தி சப்தமாதர் ஆகிய ஓவியங்கள் ஒப்பற்ற முறையில் தீட்டப்பட்டுள்ளன.

சிங்கப்பூரின் தேசிய சின்னமாக இந்த மாரியம்மன் கோயில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மாரியம்மன் ஆலயத்தில் திரௌபதியம்மன் கோவிலும் ஆதிகாலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. **1840–41** முதல் இங்குத் திரௌபதி அம்மனுக்குத் தீமிதி விழா கொண்டாடப் பட்டதாகக் குறிப்பேடுகள் உள்ளன.

மாரியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள மற்றொரு முக்கிய தெய்வம் கோதண்ட இராமசுவாமி. கடலூரைச் சேர்ந்த சேஷாசலம் என்பார் இக்கோயில் அமைக்க நன்கொடை அருளியதைக் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது.

ஒரு காலத்தில் கோயில் நிர்வாகம் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாகைப் பொய்கையூர் எனும் சிற்றூர் இந்துக்களிடம் இருந்துள் ளது. இன்று சிங்கப்பூர் இந்து அறக்கட்டளை வாரியத்தின் கீழ் பராமரிக்கப்பெற்று வருகின்றது.

சிங்கப்பூர் மாரியம்மன் கோயில் அமைந்துள்ள திரௌபதி அம்மனுக்குத் தீமிதி விழா சிறப்பாக நடத்தப்படுகின்றது. மாரியம்மன், திரௌபதியம்மன் எனும் இரு தெய்வங்களின் அருள் வேண்டியே இத்தீமிதி விழா நடத்தப்படுகின்றது. ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் இத் தீமிதி விழா கொண்டாடப்படுகிறது.

மாரியம்மன் வரலாற்றுடன் மகாபாரதத்தில் வரும் அரவான் வழிபாடும், திரௌபதி வழிபாடும் சிங்கப்பூர் மாரியம்மன் கோயிலில் மேற்கொள்ளப்படுகின்றன. சக்தியின் அமிசமாக அக்கினியில் தோன்றிய திரௌபதி அம்மனை நினைத்தும், அக்கினியாகிய வெம்மையைத் தருபவளான மாரி யம்மையை நினைத்தும் இத் தீமிதி வழிபாடு மேற்கொள்ளப் படுகின்றது. தமிழ்நாட்டின் தென்பகுதியிலிருந்து சென்றோர் ஏற்படுத்திய மாரியம்மன் வழிபாடும், வட தமிழ் நாட்டிலிருந்து

சென்றோர் ஏற்படுத்திய திரௌபதி வழிபாடும் சேர்ந்து கூட்டு வழிபாடு இங்கு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதுவரை சிறிதும் பெரிதுமான சில மாரியம்மன் கோயில்கள் தோன்றிய வரலாறு தெரிந்த அளவில் ஆராயப்பெற்றது. இவ்வரலாற்றிருந்து 'மாரி' எனும் தெய்வத்தின் தோற்றம் பழங் காலத்திலிருந்தே தமிழர் வாழ்வியலில் இருந்து வந்தாலும் தமிழ் நாட்டில் நாயக்கர்களின் ஆட்சியின் போதே (கி. பி. 16 ஆம் நூற்றாண்டு) அத் தெய்வம் பரவலாக வணங்கப்படத் தொடங்கியது என்றும், அதன் பின்னரே மாரியம்மன் கோயில் பல தோன்றின என்றும் தெரிந்து கொள்ளலாம். சிறிய ஊர்களில் 'சின்னமாரி' என்றும் பெரிய ஊர்களில் 'பெரியமாரி' என்றும் மாரி அழைக்கப் பெற்று வருதலையும் காண முடிகின்றது. மேலும் 'புதுமாரி' எனும் மற்றொரு வகையினையும் கதைப் பாட்டிலிருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது. படையுடன் தொடர்புடைய 'தண்டுமாரி' என்றும், சக்தியின் பிற பெயர்களுடன் கூடிய 'மாரி' என்றும், சக்தியின் பிற பெயர்களுடன் மாரி அழைக்கப்பெற்று வருதலைக் காணலாம். பெரிய மாரி, சின்னமாரி எனும் பெயர்கள் பெரிய அம்மை, சின்ன அம்மை நோய், தட்டம்மை போன்ற நோய்ப் பெயர்களால் அமைந்ததாகக் கூறலாம்.

நம் நாட்டில் அம்மைநோய் மிகத் தீவிரமாக இருந்த காலத்திலேயே மாரியம்மன் கோயில்கள் பல தோற்றம் பெற்றன என்பதும், ஆங்கெல்லாம் சிறப்பாக வழிபாடுகள் மேற்கொள்ளப்பெற்றன என்றும் தெரிகிறது. கி. பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் இந்த அம்மை நோய் தீவிரமாகத் தாக்கியுள்ளது. எனவே மாரியம்மன் கோயில்கள் அதிகமாக, கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றன எனக் கூறுவது தவறாகாது.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டிலும் கி.பி. 19 ஆம் நூற்றாண்டிலும் வெள்ளையர்கள் காரணமாக நம் நாட்டில் போர்களும், புதிய குடியேற்றங்களும் ஏற்பட்டன. வெளி நாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் வேலை வாய்ப்புக்களுக்காகச் சென்ற

தன் காரணமாகவும் மாரியம்மன் கோயில்கள் ஆங்காங்கே எழுப்பப் பெற்றன என்றும் அறிந்து கொள்ளலாம்.

சுதந்திர நாட்டில் சிற்றூர்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் மாவட்ட, மாநிலத் தலைநகர்களுக்கு வணிகம் தொடர்பாகக் குடியேறிய மக்கள் பின்பு தம்தம் ஊர்ப்பற்றால் ஒன்று கூடிப் பல மாரியம்மன் கோயில்களை எழுப்பி வழிபாடு மேற் கொண்டு வருதலையும் காண்கின்றோம்.

இவ்வாறு கி. பி. 16 ஆம் நூற்றாண்டு முதல் அண்மைக் காலம் வரை, ஏறத்தாழ 400 ஆண்டுகளில் தான் மாரியம்மன் கோயில்களின் தோற்றமும் வழிபாடும் மிக்கோங்கியிருந்து வருகின்றன. அம்மைநோய் அடியோடு அகற்றப் பெற்றாலும் கூட பக்தி எனும் நிலையில் பல மாரியம்மன் கோயில்கள் இப்போதும் தோன்றி வருகின்றன. மாரியம்மன் கோயில்களின் தோற்றத்திற்கு வழிபாடும், அம்மன் அருளும், அம்மனின் அற்புதங்களும் தற்காலத்தில் காரணங்களாக உள்ளன.

மாரியம்மன் கோயில்களில் வழிபாடும் சடங்குகளும்

மாரியம்மன் கோயில்களின் வரலாறும் வழிபாடும் ஒன்றுக் கொன்று பின்னிப் பிணைந்து உள்ளன. வழிபடுவதற்காகக் கோயில்களைக் கட்டுவதும், கோயில்களைக் கட்டி வழிபடுவது மான இரு நிலைகளைக் காண்கிறோம்.

'வழிபாடு' என்பதற்கு 'வழிபடுதல்', 'வழியிற் செல்லுதல்' எனும் பொருள்கள் உள. வணங்குதல் என்பதே வழிபடுதல் ஆகும். வணங்குதலில் பலவகை உண்டு. தெய்வத்தை மனத்தில் நினைத்துக் கொள்ளுதலும், தெய்வத்தின் முன்னே கை கூப்பி விழுந்து, பாடி, ஆடி, பேசி வணங்குதலும் இயல்பு.

முன்னோர் வழிபட்ட வழியிற் செல்லுதல் 'சடங்கு' எனப்படும். சடங்குகள், 'பூசைகள்', 'விழாக்கள்' எனப் பெயர் பெறுகின்றன. இவ்வாறு எல்லாத் தெய்வங்களுக்கும் பூசை

களும் விழாக்களும் நடந்து வருகின்றன. மாரியம்மனுக்கும் இவ்வாறே நடத்தப்பெறுகின்றது.

நாள்தோறும் நடைபெறும் பூசைகளும், வழிபாடுகளும் இயல்பானவை. ஆனால் மாரியம்மனுக்கு எடுப்பிக்கப்படும் கொடைவிழா அல்லது திருவிழா ஆண்டுக்கொருமுறை வருவதால் அவை முக்கியத்துவம் பெறுகின்றன.

விழா ஏற்பாடுகள்

மாரியம்மன் கோயில்கள் ஊருக்கொன்றோ, தெருவுக்கொன்றோ அமைந்திருத்தல் இயல்பு. ஊராரோ தெருவினரோ ஒன்றாகக் கூடி விழா நடக்கவேண்டிய மாதத்தில் நாள்களைக் குறிப்பிட்டு விழா ஏற்பாடுகளைப் பற்றிச் சிந்திப்பர். விழா நடத்த வேண்டும் எனும் எண்ணம் ஏற்பட்டவுடன் விழாக்குழுவினரோ ஊர்ப்பெரியவர்களோ விழாவினை மேற்கொள்ளும் முறையினையும், அதற்கான செலவுகளையும் முடிவு செய்வர். பின் அம்முடிவைத் தோட்டி மூலம் பறை அடிக்கச் செய்து ஊரார்க்குத் தெரியப்படுத்துவர். இதற்கு, 'தமுக்கு அடித்தல்' என்று பெயர். சில ஊர்களில் சிறிய காகிதங்களில் அச்சடித்து மக்களிடம் வழங்குவர். அடுத்து விழா தொடர்பான இசை, நாடகக் கலைஞர்களை அழைத்து அவர்களுடன் ஒப்பந்தம் செய்து, அவர்களுக்கு 'அச்சாரம்' அல்லது 'முன்பணம்' வழங்குவர். மேலும் கோயில் விழாவுக்குத் தேவையான பொருள்களுக்கும் பிற செலவுகளுக்கும் ஊர்க்காரர்களிடமிருந்து 'வரி' வைத்துப் பணம் சேகரித்து அப்பொருள்களை வாங்குவர். உரிய நாளில் உரிய பொருள்களை வாங்கி வைத்து, வீட்டு வேலைகள், விவசாய வேலைகள், வெளியூர் வேலைகள் எல்லாவற்றையும் முடித்து வைப்பர்.

பெரும்பாலும் கொடை அல்லது திருவிழா சிறு மாரியம்மன் கோயில்களில் செவ்வாய்க் கிழமையும் புதன் கிழமையும் நடைபெறும். ஆடி மாதத்தில்தான் இந்த அம்மனுக்குக் கொடை நடைபெறும். சில ஊர்களில் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் கூட இதை நடத்துவர். விவசாயத்தில் கிடைக்கும் வருமானத்தைப் பொறுத்துக் கொடைவிழா நடைபெறுவதுண்டு. ஆனால் நகரங்

களிலுள்ள பெரிய மாரியம்மன் கோயில்களில் குறிப்பிட்ட மாதங்களில், குறிப்பிட்ட நாள்களில் திருவிழா நடத்தப்பெறும். சித்திரை மாதத்திலும், பங்குனி மாதத்திலும் பெரும்பாலான பெரியமாரியம்மன் கோயில் திருவிழாக்கள் நடத்தப் பெறுகின்றன.

திருவிழாவை முன்னிட்டு வீடுகளுக்கு வெள்ளையடித்தல், விரதமிருந்து, நேமிதங்கள் நேருதல், வீடுகளைக் கழுவிச் சுத்தப் படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்படும். மேலும் ஊர்க் கோயில்களிலுள்ள மாரியம்மன் மற்றுமுள்ள தெய்வங்களின் பீடங்களைப் புதுப்பித்தல், கோயில் மதிற்சுவர்களைப் புதுப் பித்தல், நோன்புக்கால் நாட்டுதல், பந்தலிடுதல், மா, வேம்பு, வாழை இலைகளால் தோரணங்கட்டி அலங்கரித்தல் போன்றன செய்யப்படும். நேமிதப் பெண்கள் முளைப்பாரி இடுவர். 'காப்பு கட்டுதல்' எனும் நிகழ்ச்சியும் நடைபெறுவதுண்டு.

புனிதநீர் (அருவித்தண்ணீர்) கொணர்ந்து கொடை நடத்துதல்

சிறு கோயில்களில் நடைபெறும் கொடை விழாவுக்குப் புனித நீர் நிலைகளில் அல்லது அருவி, சுனைகளிலிருந்து தீர்த்தம் கொண்டுவருவர். ஊரின் எல்லையிலேயே இத்தீர்த்தம் கொண்டு வருபவரை வரவேற்று. மேள – தாள ஊர்வலத்துடன் அழைத்து வந்து மாரியம்மன் கோயிலில் உள்ள மாரியம்மன் பீடத்தின் மீது தீர்த்தக் குடத்தை இறக்கி வைப்பர். அதன் பிறகு கொடை விழா தொடங்கும். சாமி ஆடுதல், படையலிடுதல், வில்லுப்பாட்டு போன்ற கலைநிகழ்ச்சிகள், சாமிகளிடம் உத்தரவு கேட்டல், நேமிதக் காரியங்களை நிறைவேற்றுதல் போன்றவை நடைபெறும்.

மறுநாள் காலையிலும் இவ்வழிபாடு தொடரும். பின்பு முளைப்பாரி, மாவிளக்கு, ஆயிரங்கண் பானை போன்றவற்றை அவ்வவ்வீடுகளிலிருந்து கோயிலுக்கு எடுத்துக் கொண்டு வருவர். இறுதியில் மஞ்சள் நீர்க் குடத்தைக் கொதிக்க வைத்து, தம்மேல் தெளித்து, பின் நீராடி சாமியாடியோர் தம் ஆட்டங் களை நிறுத்திக் கொள்வர். கோழி, ஆடுகள் பலியிடுதலுடனும், பொங்கலிடுதலுடனும் இறுதி வழிபாடு முடிந்த பின்னர், 'படப்பு

எடுக்கப்படும்'. படையல் பொருள்களையும், பலியிட்டவற்றை யும் பங்கு வைத்து, விருந்து படைத்து உண்டு மகிழ்வர்.

வேறுசில இடங்களில் காப்பு கட்டுதல், கொடியேற்றுதல், கரகம் சோடித்தல், பொங்கலிடுதல், தீமிதி, மாவிளக்கு எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், படையலிடுதல், ஆ பிரங்கண் பானை எடுத்தல், கூழ் அல்லது கஞ்சி ஊற்றுதல், தேர் இழுத்தல் அல்லது சப்பரத் தில் அம்மன் பவனி வருதல், செடல் ஆட்டம், பேயாட்டம், கும்பம் படைத்தல் போன்றன பத்து நாள்களும் – ஒவ்வொன் றாகவோ சேர்ந்தோ நடைபெறும். இந்நாள்களில் அம்மனுக்குச் சிறப்பான அலங்காரங்கள் செய்யப்படும். மக்களுக்குப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், பண்டங்கள் விற்பனை, இராட்டினம் போன்ற விளையாட்டுகள் போன்றவையும் ஏற்படுத்தப்பெறும். பாட்டுக் கச்சேரி, நாடகம், சினிமா போன்றவை நடைபெறும்.

காப்பு கட்டுதல்

காப்பு கட்டுதல் என்பது உறுதி எடுத்தல் என்பதாகும். கோயில் விழா எந்தவிதத் தீங்கும் இன்றி, பக்தி உணர்வுடன் செயல்பட்டு இனிதாக நடைபெறுவதற்கு மக்கள் உறுதி எடுப்பதே காப்பு கட்டுதல் ஆகும். காப்பு கட்டுதலாவது, மஞ்சள் துண்டுகளை வெள்ளை நூலில் கட்டி அவற்றை அம்மன் முன் வைத்துப் படைத்து, அவற்றில் ஒன்றைக் கோயில் தர்மகர்த்தா அல்லது கோயில் பூசாரி எடுத்து அம்மன் கையில்கட்டுவார். பிறகு அம்மனின் காவல் தெய்வமான காத்தவராயன், முத்தால் ராயன், பைரவர் போன்ற தெய்வங்களுக்கும் கட்டுவர்; ஊர்ப் பொது மக்களில் முக்கியமான சிலரும் காப்பு கட்டிக் கொள்வர். காப்பு கட்டிய பிறகு அவ்வூர் மக்கள் வெளியூர் செல்ல மாட்டார்கள். வெளியூரிலுள்ள உறவினர்களை விழாவிற்கு அழைக்க, அவர்களும் வந்து கலந்து கொள்வர். காப்பு கட்டுதல் முடிந்தவுடன் இல்லங்களையும் கோயில்களையும் தூய்மைப் படுத்துதல், புதுப்பித்தல், வீட்டுக்கு வெள்ளை அடித்தல் போன் றவை மேற்கொள்ளப்படும். வேண்டுதல் செய்துகொண்ட மக்கள் காப்பு கட்டியவுடனேயே வேண்டுதலுக்குரிய பொருள்க

ளான சுடுமண் குதிரை, பொம்மைகள் போன்றவற்றைச் செய்வ தற்கு ஒப்பந்தம் பேசி விடுவர். முளைப்பாரி வைப்போர் அதற் கான தானியங்களை முளைக்க வைப்பர்.

கொடி ஏற்றுதல் அல்லது கொடி கட்டுதல்

கொடி ஏற்றுதல் அல்லது கொடி கட்டுதல் என்பது குறிப்பிட்ட ஊரில் திருவிழா நடைபெற உள்ளதை சுற்றுப்புற ஊர்மக்களுக்கு அறிவித்தல் ஆகும். 'கொடி'யானது மஞ்சள் துணியால் தயாரிக்கப்படும். ஒரு முழம் நீளமுள்ள மஞ்சள் துணியை 50 அல்லது 60 அடி உயரமுள்ள ஒரு கம்பத்தில் ஏற்று வர். கொடி ஏற்றும் நாள் அல்லது கொடிகட்டும் நாள் அன்று கொடிக்கம்பத்தைப் புதியதாக வெட்டிவந்து அதில் மஞ்சள், குங்குமம் இட்டு வேப்பிலையைக் கட்டி, பின் கோயில் வாயிலில் தோண்டப்பட்ட சிறுகுழியில் அக்கம்பத்தை நாட்டுவர். பின் கற்பூரம் ஏற்றிக் கொடிக்கம்பம் வழிபடப்படும். இன்னும் சில இடங்களில் கொடிக்கம்பத்தைத் தரையில் நாட்டுவதற்குப்பதில் கோயில் அருகிலுள்ள வேப்பமரக்கிளையுடன் இணைத்துக் கட்டுவர். சில இடங்களில் கோயில் கட்டடத்தின் உச்சியில் வைத் துக் கட்டுவர். சில கோயில்களில் நிலையான கொடிமரம் இருக்கும்.

மாரியம்மன் விழாவில் காப்பு கட்டுதல் சில ஊர்களிலும் கொடி ஏற்றுதல் அல்லது கொடி கட்டுதல் சில ஊர்களிலும் நடைமுறையில் உள்ளன. இரண்டு முறைகளையும் மேற் கொள்ளுதலும் உண்டு. காப்பு கட்டுதலும் கொடிகட்டுதலும் ஒரே நாளில் அடுத்தடுத்து நடைபெறவும் செய்யும். இவ்விரு நிகழ்ச்சிகளும் மாலை நேரத்தில் தொடங்கி இரவு 8 அல்லது 9 மணிக்குள் முடிந்துவிடும். காப்பு கட்டுதல் மற்றும் கொடி கட்டுதல் நடந்து ஏழு அல்லது ஒன்பதாம் நாள் மாரியம்மன் கோயிலில் கூழ் ஊற்றுதல் விழா நடைபெறும். அதுவரை ஒவ்வொரு விழாநாள் இரவும் அம்மன் ஊர்வலமும் பிற கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடைபெறும். மேலும். அந்நாட்களில் அம்மனுக்கு முப்பூசை அல்லது ஆறுகால பூசை நடைபெறும். காலை, மாலை, இரவு நேரங்களில் நடைபெறுவது முப்பூசை

யாகும். 'ஆறுகால பூசை' என்பது அதிகாலை, காலை, நண்பகல், மாலை, இரவு, நள்ளிரவு ஆகிய நேரங்களில் மேற்கொள்ளப் படுவது ஆகும்.

முளைப்பாரி

காப்பு கட்டுதல், கொடிகட்டுதல் ஆகியவை விழாவின் தொடக்கமாக அமைந்தாலும் இவ்விரு வழிபாட்டின்போதும் முளைப்பாரி எனும் சடங்கு சிறப்பிடம் பெறுகிறது. ஊரில் வீடு தோறும் 9 வகையான தானியங்களைச் சேகரித்து அவற்றைச் சிறுசிறு மண் கலசங்களில் விதைத்து, இருளில் வைத்து விழா நடைபெறும் 9 நாட்களும் அவற்றிற்கு நீர் இட்டுப் பாதுகாத்து வருவர். விழா முடிவில் அவற்றை நீர்நிலைகளில் விட்டுவிடுவர். இந்த நவதானியச் செழிப்பை வைத்து அந்த ஆண்டு ஊரின் செழிப்பைக் கணக்கிடுவர். இளம் பெண்கள் தாம் நினைத்த காரியங்கள் நடப்பதற்காகவும் இதை மேற்கொள்ளுவர்.

கரகம் சோடித்தல்

மாரியம்மனுக்குக் 'கூழ் ஊற்றுதல் விழா' நடைபெறுவதற்கு முதல் நாள் காலை அல்லது மாலை அல்லது கூழ் ஊற்றுதல் நாளில் கரகம் சோடித்தல் நடைபெறும். ஊர்மக்கள் அம்மன் கோயிலிலிருந்து மேளதாளத்துடன் புறப்பட்டு அருகிலுள்ள நீர்நிலைகளான குளம், கிணறு, ஏரி ஆகியவற்றுக்குச் சென்று, அங்கிருந்து கொண்டு கரகம் சோடிப்பர். ஒரு சுடுமண் புதுப் பானையை எடுத்து, அதனுள் பச்சரிசி, நீர் இட்டு அப்பானை யின் வெளிப்புறத்தில் மஞ்சள், குங்குமம் பூசி, அதன் வாய்ப்பகுதி யில் வேப்பிலைக் கொத்துகளை இட்டு, கும்பம்போல் பூவால் சுற்றி, அவற்றின் உச்சியில் எலுமிச்சம்பழம் ஒன்றை வைப்பர். மேலும் கரகத்தின் மீது (பானை மீது) பூச்சரங்களைச் சுற்றியோ, தொங்கவிட்டோ அழகுபடுத்துவர். பிறகு அக் கரகத்தை மாரியம்மன் உருவமாக எண்ணி அதற்குச் சூடம் ஏற்றி, வணங்கி, பின் காப்பு கட்டிய ஒருவர் அக் கரகத்தைத் தலையில் சுமந்து வந்து கோயில் கருவறையில் வைப்பார். அங்கும் சூடம் ஏற்றி வழிபாடு நடைபெறும்.

பொங்கலிடுதல்

ஒரு புதுப்பானையில் பச்சரிசியை எடுத்து அதைப் போன்று மும்மடங்கு நீர் ஊற்றி அடுப்பில் ஏற்றுவர். அப் பானை பொங்கிய பின் இறக்கி வைப்பர். இது வெண்பொங்கல் எனப்படும். இதைப் போன்ற பொங்கலுடன் சிறிது சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்துத் தயாரிப்பதை இனிப்புப் பொங்கல் என்பர். வெண்பொங்கல் அல்லது இனிப்புப் பொங்கலை இலையில் வைத்து அம்மன் முன் படையலாக இட்டு, சூடம் ஏற்றி வழிபடுவர். இது பொங்கலிடுதல் எனப்படும்.

படையிடுதல்

மாரியம்மன் விழாவில் ஆடு, கோழி ஆகியவை பலியாகக் கொடுக்கப்படுகின்றன. இப்பலி வழிபாடு, பொங்கல் மற்றும் கூழ் ஊற்றுதலுக்கு முன்பாக நடைபெறும் பலி கொடுக்க வேண்டிய ஆடு, கோழியைப் பலி நாள் அன்று நீர்முழுகச் செய்து மஞ்சள் நீர் தெளித்து, குங்குமம் இட்டு, பூச்சூட்டி பலியிடுகின்ற நேரத்தில் அம்மன் முன் நிறுத்தி, சூடம் ஏற்றி, அம்மனை வழிபட்டபிறகு இவ்வுயிர்களைப் பலி கொடுப்பர். இதில் கோழியை அறுத்துப் பலி கொடுப்பது வழக்கம். பலி கொடுப்பதில் பகல் பலி, இரவுப்பலி என இரு நேரங்களிலும் நடைபெறும். இரவு நேரங்களில் கொடுப்பது பெரும்பாலும் நள்ளிரவு 12 அல்லது 1 மணி அளவில் நடைபெறும்.

அக்கினிசட்டி அல்லது தீச்சட்டி எடுத்தல்

மாரியம்மன் கோயிலில் தீச்சட்டி எடுக்கும் வழக்கம் எல்லாப்பகுதிகளிலும் காணப்படுகிறது. திருவிழாவின் போதும் தனியாகவும் இது மேற்கொள்ளப்படுகிறது. கூழ் ஊற்றுதலுக்கு முன்பாகத் தீச்சட்டி வழிபாடு நடைபெறுகிறது. காலை 9 அல்லது 10 மணி அளவில் தீச்சட்டி எடுப்பதற்காக விரதமிருப் பவர் அம்மன் கோயில் அருகிலுள்ள நீர்நிலையிலோ அல்லது நீர் கொண்டு வந்தோ நீராடி, மஞ்சள் நிறத் துணியணிந்து அம்மன் கோயிலுக்கு வந்து அம்மனை வழிபட்டு அங்குத் தயா

ராக வைக்கப்பட்டுள்ள தீச்சட்டியைக் கையிலுள்ள வேப்பி லைக்கு மேல் வைப்பர். தீச்சட்டியானது பக்கவாட்டில் மூன்று துளைகளுள்ளதாக இருக்கும். அதனுள் சிறிது மணல் இட்டு, அதில் கற்பூரம் ஏற்றி, காய்ந்த மாமரத்துக் குச்சிகளை அடுக்கி, நெய்யிட்டுத் தீக்கனல் ஆக்கி, அதன் மீது காய்ந்த சாணியான வரட்டியை அடுக்குவர். தீச்சட்டியின் முக்கால் பகுதி அடுக்கித் தீக்கனல் ஏற்படுமாறு வைப்பர். இதுவே தீச்சட்டி எனப்படும். இத்தீச்சட்டியைக் கையில் ஏந்தியவாறு மேள, தாளத்துடன் கோயிலிலிருந்து ஊர்வலம் புறப்படும். இத்தீச்சட்டி ஏந்தியவர் அம்மன் பிரதிநிதியாகக் கருதப்படுவர். அவர் ஒவ்வொரு வீட்டின் முன் வாசலில் நின்று அவ்வீட்டார் தரும் கற்பூர வழி பாட்டை ஏற்றுக் கொள்வார். அவ்வீட்டினர் தீச்சட்டி ஏந்திய வரின் பாதங்களை நீரால் கழுவி, அப்பாதங்களில் மஞ்சள், குங்குமம் பூசி, மீண்டும் நீர்விட்டுக் கழுவிய பின்னர், சூடம் ஏற்றி அவரை வழிபடுவர். இவ்வாறு எல்லா வீட்டிலும் நடந்து முடிந்த பின் தீச்சட்டி எடுத்தவர் இறுதியில் கோயிலுக்கு வந்து தீச் சட்டியை அம்மன் முன் வைத்து வழிபட்டு திருநீறு பெற்றுக் கொண்டு வீடு திரும்புவார்.

தீச்சட்டி எடுத்தல் திருவிழாக் காலங்களிலன்றி வேறு நாட்க ளிலும் நடைபெறும். ஊராரிடமிருந்து தானம் பெறுவதற்காகத் தீச்சட்டி எடுத்துத் தெருக்கள் தோறும் வீடு வீடாகச் சென்று பாடி, ஆடி பொருள் பெறுவது வழக்கத்தில் உள்ளது. தீச்சட்டியை ஆண்களும் பெண்களும் மேற்கொள்வர்.

தீச்சட்டி எடுக்கும் வழக்கம் மாரியம்மன் விழாவில் மேற் கொள்ளுவதற்குக் காரணம் மாரியம்மன் மாசு அற்றவள் என்பதை வெளிப்படுத்துவதாக அமைகிறது. மாரியை தீயிலிட்ட போதும் அவளைத் தீ தாக்காதவாறு வருணன் காத்ததாகக் கதை வரலாறு கூறுகிறது. எனவே தீயிலிட்ட பிறகும் தீயும் அண்டாத அளவுக்கு மாசு அற்றவள் மாரி என்பதாக இத்தீச்சட்டி வழிபாடு அமைகிறது.

மாவிளக்கு எடுத்தல்

மாரியம்மனுக்கு மாவிளக்கு எடுத்தல் எனும் வழக்கம் எல்லாப் பகுதிகளிலும் உள்ளது. மாவிளக்கு எடுப்பதாக முதலில் நேர்ந்து கொள்வர். மாவிளக்கு எடுக்கும் நாளன்று நனைத்து வைத்த பச்சரிசியை மாவாக இடித்து அதனுடன் சிறிது சர்க்கரை அல்லது வெல்லம் கலந்து சிறிது நீர் இட்டுப் பிசைந்து அதனை உருண்டை செய்து அதன் நடுவில் குழித்துப் பள்ளமாக்கி அதை ஒரு விளக்கு வடிவம் செய்து பின் வேகவைத்துக் கட்டியாக்குவர். வெந்த பின் அதை வெளியே எடுத்து ஆறவைத்து அக்குழியில் சிறிது எண்ணெய் ஊற்றித் திரியிட்டு, அத்திரியில் தீபம் ஏற்றுவர். திரிகள் ஒன்றுக்கு மேலாகவும் ஏற்றப்படும். ஒரு வீட்டில் ஒரு மாவிளக்கோ, பலவோ செய்யப்படும். இவை சிறிதாகவும், பெரிதாகவும் செய்யப்படும். மாவிளக்கை ஒரு தாம்பாளத்திலோ அல்லது விளக்கு அணையாதவாறு ஒரு சல்லடையிலோ, மரக்காலிலோ வைத்து வேண்டுதல்காரர்களும் சிறுவர் சிறுமியரும் அவற்றைக் கையிலோ, தலையிலோ சுமந்தவாறு அம்மன் கோயிலுக்கு வருவர். வீடுகளிலிருந்து மேளதாளத்துடன் வந்து மாவிளக்குகளை அம்மன் முன் வைத்து வழிபடுவர். இதைத் தவிர ஒவ்வொரு வீட்டிலும் விழாவின் போது மாவிளக்கு ஏற்றி வைத்து வழிபடுவது வழக்கம். மேலும் அம்மன் ஊர்வலத்தின்போதும் அவரவர் வீட்டின் முன்பாக அம்மன் வரும்போதும் முதலாவது முறையைப் பின்பற்றி இவ் வழிபாடு நடைபெறும்.

ஆயிரங்கண் பானை எடுத்தல்

மாரியம்மன் விழாவில் ஆயிரங்கண் பானை எடுக்கும் வழிபாடும் வழக்கமாக நடைபெறுகிறது. இதற்கெனத் தனிப் பட்ட முறையில் ஆயிரங்கண் பானையை உருவாக்குதல் உண்டு. இது பல துளைகளுள்ளதாய் இருக்கும்; வர்ணம் தீட்டப்பட்டிருக் கும். அப்பானையை வாங்கி, அதை அலங்கரித்து அதனுள் மாவிளக்கையோ, திரி விளக்கையோ வைத்துக் கையாலோ, தலையிலோ சுமந்து மேளதாள ஊர்வலத்துடன் கோயிலுக்கு

வந்து அம்மனை மும்முறை சுற்றி வந்து அம்மன் சிலைக்கு அருகில் இறக்கி வைப்பர். இது ஒருமுறை.

மற்றொரு முறையான வழிபாடு மாரியம்மன் ஊர்வலத்தில் நடைபெறுகிறது. பலதுளைகள் உள்ள புதுப்பானையை - ஆயிரங்கண் பானையை வாங்கி அதில் நீர் ஊற்றி முன்பே வேண்டுதல் செய்து 3 நாட்கள் விரதம் கொண்டவர் தலையில் அல்லது தோளில் அல்லது கைகளில் சுமந்தவாறு அம்மனை மும்முறைச் சுற்றிவருவர். அப்போது பானையிலுள்ள நீரானது கீழே சிந்திக்கொண்டே இருக்க, மேலும் அந்த ஆயிரங்கண் பானையில் நீர் ஊற்றியவாறு ஒருவர் அவர்பின் தொடர்வார்; மூன்று சுற்று முடிந்தபின் சூடம் ஏற்றி அம்மனை வழிபட்டு வேண்டுதலை முடிப்பர். இங்கு ஆயிரங்கண் பானை மனித உடம்பிலுள்ள அம்மை முத்துக்களுக்கு ஒப்புமையாக அமை கிறது. இவ்வழிபாடு மற்றும் மாரியம்மன் திருவிழா முடிந்தபின் இப்பானைகள் ஏலம் விடப்படும். உரியவர்களாலும் எடுத்துச் செல்லப்படும்.

கூழ் ஊற்றுதல்

பல மாரியம்மன் கோயில்களில் கூழ் ஊற்றுதல் அல்லது கஞ்சி ஊற்றுதல் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்றாக நடைபெறுகிறது. கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய தானியங்களை மாவாக அரைத்து, நீரிட்டுக் கலக்கி அதில் சற்றுப் புளிப்பு ஏறிய பின் கொதிக்க வைத்த நீரிலிட்டுக் கூழாக்குவர்; பின் ஆறவைப்பர். இதில் மீண்டும் தண்ணீர் விட்டுக் கலந்து கூழ் நிலைக்கு வரச்செய்வர். தானியங்களின் அரிசியைத் தண்ணீர் இட்டு நன்கு வேகவைத்துக் 'கஞ்சி' செய்வர். இந்தக் கூழையும் கஞ்சியையும் மக்களுக்கு வழங்குவது வழக்கம். இவ்விரண்டில் அவரவர் வசதிக்கேற்ப ஏதாவது ஒன்று அல்லது இரண்டுமே மேற்கொள்ளப்படும்.

'காப்பு' அல்லது 'கொடி' கட்டிய ஏழாவது அல்லது ஒன்பதாவது நாள் கூழ் ஊற்றுதல் நடைபெறும். கூழ் ஊற்றுத லின் முதல்நாள் காலை கேழ்வரகு, கம்பு, சோளம் இவற்றி லொன்றை இடித்து மாவாக்கி அதை ஒரு புதுப்பானையில் இட்டு

நீர் கலந்து சூரிய ஒளியில் வைப்பர். அது மாலைக்குள் புளிப்புச் சுவை அடைந்துவிடும். அன்று மாலை நேரத்திலேயே மற்றொரு புதுப்பானையை அடுப்பில் ஏற்றி அதில் முக்கால் அளவு தண்ணீர் இட்டு, நீர் கொதிக்கும்போது அக்கொதி நீருடன் புளிப் புச்சுவை ஏறிய மாவுக்கலவையை ஊற்றுவர். பின் அதைக் கூழ் நிலை அடையும் வரை நன்கு கலக்குவர். அந்த மாவு நன்கு வெந்தபின் அடுப்பிலிருந்து பானையை இறக்கிக் கீழே வைத்து ஆறவிடுவர். அன்று இரவு முழுவதும் ஆறவிடுவர். மறுநாள் காலை (கூழ் ஊற்றுதல் நாளன்று) வீடு, வாசல் மெழுகி, கழுவி தூய்மை செய்து, மஞ்சள், குங்குமம் இட்டு, வேப்பிலைத் தோரணங்கள் கட்டி, பின் 8 அல்லது 9 மணி அளவில் ஏற்கனவே ஆறிய – கட்டியான கூழினை நீர்விட்டுக் கலந்து கூழ் நிலைக்குச் செய்வர். பின் புதிய குடம் அல்லது தோண்டியினைக் கழுவி, அதன் மீது மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, அதன் கழுத்துப் பகுதியில் வேப்பிலைக் கொத்துகளை இணைத்து, அதில் கரைத்த கூழினை ஊற்றி, அதனுள் பொடி செய்யப்பட்ட வெங்காயத்தினை இட்டு, அதை அம்மன் முன் வைத்துப் பூசை செய்து, வழிபட்டு, அவற்றை அவ்வீட்டிலுள்ள அனைவரும் உண்டு மகிழ்வர். இது ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

கூழ் ஊற்றும் நாளில், நண்பகலில் மாரியம்மன் கோயிலிலி ருந்து மேளக்காரர்கள் ஒவ்வொரு வீடாகச் செல்வர். அவரவர் தம் வீட்டிலிருந்து ஒவ்வொரு கூழ்க்குடங்களையும் எடுத்துவர, எல்லோரும் ஒன்று சேர்ந்து மாரியம்மன் கோயிலுக்கு வந்து வழிபடுவர். பின் அக்கூழ்க்குடங்களில் சிலவற்றை ஊர்த் தொழிலாளிகளான வண்ணார், அம்பட்டர், குயவர், பறையர், கருமார், தச்சர் போன்றோருக்கு அளித்துவிட்டு, பின் அவ்வூர் ஏழை எளிய மக்களுடன் அவ்வூரிலுள்ள அனைத்து மக்களும் அமர்ந்து 'சமபந்தி போசனம்' செய்வர். இவ்விடத்தில் ஏழை பணக்காரர் என்ற கருத்து வேறுபாடு இல்லை. கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற மனநிலை இவ்வாறு சேர்ந்து உண்பதில் நிலவுகிறது. அக்கூழினை உண்டபிறகு மக்கள் தத்தம் வீடு திரும்புவர். அத்துடன் கூழ்ஊற்றுதல் வழிபாடு முடிகிறது.

கூழ் ஊற்றுதல் விழாவில் காலத்திற்கு ஏற்ப சில மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இன்று கூழுக்குப் பதிலாகக் கஞ்சி ஊற்றுதல் வழக்கில் உள்ளது. மேலும் புதிய மட்பாண்டங்களில் படையல் பொருட்களைப் படைக்கின்ற நிலைமாறி வெண்கலம் அல்லது செப்புக் குடங்களிலும், தற்காலத்தில் சில்வர் பாத்திரங்களிலும் பூசைப் பொருட்களை வைத்துப் படைக்கின்ற நிலையையும் காணமுடிகின்றது.

சப்பரம் தூக்குதல் – தேர் இழுத்தல் – முதலியன

மாரியம்மன் திருவிழாவின்போது அம்மனை ஊர்வலமாக எடுத்துச் செல்வது மரபு. அவ்வாறு எடுத்துச் செல்ல சிறிய சப்பரமும், சிறிய அல்லது பெரிய தேர்களும் உள்ளன. சிறிய சப்பரம் தூக்கிச் செல்லப் பயன்படுத்தப்படும். சிறிய அல்லது பெரிய தேர்களை வடம் பிடித்து இழுத்துச் செல்வர்.

பொதுவாகச் சப்பரம் தூக்கிச் செல்லுதல் இரவில் நடைபெறும். தேர் இழுத்தல் காலையிலும், மாலையிலும் நடைபெறும். ஓரிரு நாட்கள் நடைபெறும் திருவிழாக்களில், திருவிழா தொடங்கிய மறுநாளோ அல்லது முடிவதற்கு முந்திய நாளோ மாலையில் சப்பரத்தை நன்கு அலங்கரித்து அதில் உற்சவ அம்மனை வைத்து வழிபட்டு, ஒவ்வொரு தெருக்கள் தோறும், வீடுகளுக்கு முன் நிறுத்தி வைத்து அவ்வவ்வீட்டார் தரும் பூசையையும் பொருள்களையும் பெற்று அவர்களுக்கு அருள்பாலித்து அம்மனுடைய சப்பரம் செல்வது வழக்கம், திருவிழாவின் இறுதி நாளின் காலையில் சிறிய, பெரிய தேர்களை அலங்கரித்து, கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் மட்டும் வலம் வருமாறு இழுத்து வந்து இறுதியில் கோயிலுக்கு முன்பாக நிறுத்தி எல்லோரும் அம்மனைத் தரிசிக்குமாறு செய்வர்.

வேறு சில கோயில்களில் கூழ் ஊற்றுதல் அன்றே மாலை இந்தத் தேர்த்திருவிழா நடைபெறும். நண்பகல் கூழ் ஊற்றி முடித்த பின்பு, அன்று மாலை 3 மணி அளவில் தேர் இழுத்தல் நடைபெறுகிறது. தேர் 50 அல்லது 60 அடி உயரமும் 20/30 அடி சுற்றளவும் கொண்டு பெரிதாக அமைக்கப்பட்ட நிலையை

ஆங்காங்கே காணலாம். இது ஆண்டுக்கு ஒருமுறை மாரி அம்மன் விழாவில் மட்டும் வெளியே கொண்டுவரப்பட்டு பாதுகாக்கப்படும். அப்படி மாரியம்மன் விழாநாள் குறித்து, காப்பு கட்டியவுடனேயே அத்தேரிலுள்ள குறைகளைச் செப்ப னிட்டுப் புதுப்பிப்பர். தேர்த்திருவிழாவுக்கு முதல் நாள் தொடங்கி இத்தேரினைக் கழுவி, தூய்மை செய்து, வண்ணங் கள் பூசி, மஞ்சள் குங்குமம் இட்டு, பூச்சரங்களைத் தொங்கவிட்டுத் தேரினை அழகுபடுத்துவர். அவ்வாறு அழகு செய்யப்பட்ட தேரில் அலங்கரிக்கப்பெற்ற அம்மன் சிலையைச் சிங்க வாகனத் தில் அமர்த்தி, பூசை செய்து, வழிபட்டு, மக்கள் அனைவரும் ஒன்று கூடி, தேருடன் இணைக்கப்பட்டுள்ள இரும்புச் சங்கிலி அல்லது வடத்தைப் பிடித்து இழுத்து அம்மன் ஊர்வலம் நடை பெறச் செய்வர். இதற்கு 'வடம் பிடித்தல்' என்றும் கூறப்படு கிறது. இவ்வாறு தேர்த்திருவிழா நடைபெறும்போது மக்களின் வேண்டுதல்களின் பேரில் தத்தம் நிலங்களில் விளைந்த தானியங்களை மற்றும் பிற பொருட்களையும், பணத்தினையும் கொல்லை (வாரி இறைத்தல்) விடுவர். ஊர்வலம் முடிந்த பின்னர் இறுதியில் கோயிலுக்கு வந்து அங்குப் பூசைகளை ஏற்று, மீண்டும் அம்மன் சிலையை எடுத்துக் கோயிலுக்குள் கொண்டு வைப்பர்.

செடல் இழுத்தல், செடலாட்டம் முதலியன

பெரிய தேர் இழுக்கப்படும் அதே நேரத்தில் 10 அல்லது 15 அடி உயரமும் 5 அடி சுற்றளவும் உள்ள சிறிய மரத்தேர்களை வண்ணக் காகிதங்களால் ஒப்பனை செய்து அவற்றை வேண்டுதல்காரர் தான் ஒருவரே இழுத்து, தேர்த்திருவிழாவன்று பெரிய தேருடன் ஊர்வலமாக நடத்துவார். இங்குக் கையால் இழுப்பதற்குப் பதில் இரும்புச் சங்கிலியால் இணைக்கப்பட்ட இரு இரும்புக் கொக்கிகளை முதுகில் குத்தி, தேரினை இழுத்துச் செல்வர். இதற்குச் 'செடல் ஊர்வலம்' அல்லது 'செடல் இழுத்தல்' என்பது பெயர்.

மேலும் சில இடங்களில் தேர் இழுக்கத் தொடங்குவதற்கு முன்பு, 'செடலாட்டம்' என்பது நடைபெறும். செடலாட்டம்

என்பது 20 அடி உயரமுள்ள தடித்த ஒரு கம்பம் செங்குத்தாகப் பூமியில் நடப்பட்டு, அதன் உச்சியில் 20 அடி நீளமுள்ள கம்பை மையப்படுத்தி, படுக்கை நிலையில் பெரிய இரும்பு ஆணி கொண்டு இணைப்பர். அவ்வாறு படுக்கை நிலையில் அமைந்த கம்பத்தின் இரு முனைகளிலும் இரு இரும்புச் சங்கிலி இணைக் கப்பட்டிருக்கும். இந்த இரும்புச் சங்கிலியின் மறுமுனையில் இரு இரும்புக் கொக்கிகள் அமைக்கப்பட்டிருக்கும். விரதம் மேற் கொண்ட ஒருவரை கவிழ்த்துப் படுக்க வைத்து, இந்தக் கொக்கி யினை அவர் முதுகின் தோலில் குத்தி மாட்டுவர். கம்பின் மறு முனையில் ஒரு தடித்த பெரிய கயிற்றை இணைப்பர். இப்படி அமைந்த செடலின் தடித்த கயிற்றைச் சில ஆடவர்கள் பிடித்து இழுத்தவாறு மையத்திலுள்ள கம்பத்தைச் சுற்றிவர கயிறு இணைந்த கம்பத்தின் மறுமுனையில் கொக்கி மாட்டி பிணைக் கப்பட்ட மாரியம்மனின் அருள்பெற்ற அப் பக்தரும் சுற்றி வருவார். அவ்வாறு சுற்றும்போது அவரின் கரங்களில் குழந்தை களை ஒவ்வொன்றாகக் கொடுத்துச் சுற்றிவரச் செய்து மீண்டும் பெற்றுக்கொள்வர். இதனால் அக்குழந்தைகள் நலம்பெறும் என நம்பப்படுகிறது. இம்முறையே 'செடலாட்டம்' எனப்படுகிறது. தற்காலத்தில் மனிதர்களைச் செடல் கம்பத்தில் இணைப்பதற்குப் பதிலாகக் கால்நடைகளை இணைக்கும் வழக்கமும் உள்ளது. இம் முறை அண்மைக் காலத்தில் தோன்றியது.

செடல் ஆட்டம் சில பகுதிகளிலுள்ள மாரியம்மன் கோயில் களிலேயே நடைபெறுகின்றது. தஞ்சாவூர், தென்னார்க்காடு மாவட்டங்களில் இந்த ஆட்டம் நடக்கிறது.

சாமியாட்டம் அல்லது பேயாட்டம்

மாரியம்மன் கூழ் ஊற்றுதல் வழிபாட்டில் இந்நிகழ்ச்சி நடைபெறும். அம்மனுக்குக் குடங்களில் கூழ், வெங்காயம், மோர் இவற்றை இட்டு, அம்மன் முன் படையலாக வைத்து, சூடம் ஏற்றி, அம்மனை வழிபட்டு, மேலும் அவளிடம் அருள்வாக்குப் பெறுவதற்காக அவளுக்கு விருப்பமான உருமி மேளம் இசைத்து, வேண்டி அழைப்பர். அப்போது மாரியம்மன் பக்தர்கள் மீது மாரியம்மன் தோன்றி அருள்வாக்குத் தருவாள்.

சில நேரங்களில் அந்த உருமி இசைக்கு மயங்கிப் பேய்களும் அங்குள்ள சிலர்மீது வந்து ஆடும். அப்போது மாரியம்மன் பிரதி நிதியாக உள்ளவர் அப்பேய்களைப் பிரம்பாலோ, வேப்பிலை யாலோ அடித்து, பேய்பிடித்தவரைக் குணப்படுத்த விபூதியை நோய் நீக்கும் மருந்தாகக் கொடுப்பார். இதனால் அப்பேய் அது பிடித்துள்ள ஆளைவிட்டு நீங்கிவிடும். இந்நிகழ்ச்சியின் போது 'சாமி' வந்தவர் வேப்பிலையை உண்ணுதல், கற்பூரம் விழுங்கு தல் ஆகிய செயல்களை மேற்கொள்வார். பேய் பிடித்தவர் தலை யின் கூந்தலை விரித்தவாறும் பற்களைக் கடித்தவாறும் விகார மாக ஆடுவார். பெரும்பாலும் பெண்களுக்குப் பேய்பிடித்தலே அதிகமாகக் காணப்படுகிறது. சில கோயில்களில் சுடுகாடு வரை சென்று பேய்களை விரட்டி வருவர். சாமியாட்டம் ஊருக்கு ஊர் வேறுபடும்; இசைக்கு ஏற்றவாறும் அமையும்.

தீமிதி வழிபாடு

மாரியம்மன் 'கூழ் ஊற்றுதல்' வழிபாட்டு நாளன்று தீமிதி விழாவும் நடைபெறும். தீமிதி நடக்கும் தினத்தில் காலையி லேயே பெரிய பெரிய கட்டைகளை மாரியம்மன் கோயில் முன் உள்ள நெருப்புக் குழிக்குள் அடுக்கி எரிப்பதற்குத் தயார் நிலை யில் வைப்பர். தீமிதி வழிபாடு பெரும்பாலும் மாலை வேளை யில்தான் நடைபெறும். எனவே தீமிதியின்போது ராகுகாலம், யமகண்டம் ஆகிய நேரங்களைத் தவிர்த்து நல்ல நேரத்தில் தீமிதிச் சடங்கை மேற்கொள்வர்

இச்சடங்கு தொடங்குவதற்கு 2 அல்லது 3 மணி நேரத்திற்கு முன் ஏற்கனவே எரிப்பதற்குத் தயாராக அடுக்கப்பட்டுள்ள கட்டைகளைத் தீமூட்டி எரியச் செய்வர். கட்டையானது முழுமை யாக எரிந்துவிடாமல் சிறுசிறு கட்டி நெருப்புகளாக இருக்கும் போது அந்நெருப்பு மீது ' வைக்கோல்' தூவி சாம்பலை ஏற் படுத்தி, பின் அந்நெருப்பைத் தீக்குழியில் பரவலாக்கி விடுவர். இதே நேரம் தீக்குழிக்கு அருகில் அதே அளவுள்ள நீர்த்தொட்டி யைக் களிமண்கொண்டு உருவாக்குவர்.

இதற்கிடையில் தீமிதிக்க நோன்பு மேற்கொண்ட பக்தர்கள் கோயில் முன்வந்து ஒன்றுகூடி அங்குள்ள குளத்தில் அல்லது

கிணற்றில் முழுகி, காப்புகட்டி, பூமாலையைக் கழுத்திலும் கையிலும் அணிந்துகொண்டு, தீயில் இறங்குவதற்குத் தயாராக மஞ்சள் ஈரத்துணியுடன் தீக்குழிக்கு முன் நிற்பர். இப்பொழுது அம்மனுக்காகச் சோடிக்கப்பட்ட கரகத்தைக் கோயிலிலிருந்து எடுத்து வந்து, தீக்குழிக்கு முன் வைத்துவிட்டு, அந்த அம்மன் கரகத்தைத் தலையில் ஏந்தியவாறு ஒருவர் முன்னால் தீயில் இறங்கி நீரின் வழியாக வெளியே வர, பிற பக்தர்களும் அவ்வாறே தீயில் இறங்குவர். பின் அங்கிருந்து நேரே கோயிலுக்குள் சென்று அம்மனை வழிபட்டு, இனிமம் பெற்று வீடு திரும்புவர். இதுவே 'தீமிதி வழிபாடு' அல்லது 'பூக்குழி இறங்குதல்' எனப்படும்.

தீமிதித்தல் பல கோயில்களில் இக்காலத்தில் நடைபெறுகிறது. மாரியம்மனுக்கும் திரௌபதி அம்மனுக்குமுரிய இவ்வழிபாடு பிற தெய்வங்களுள்ள இடங்களிலும், மேற்கொள்ளப் படுகிறது.

கும்பம் படைத்தல்

கும்பம் படைத்தலாவது, ஊரிலுள்ள அனைத்து வீடுகளிலிருந்தும் கோயிலுக்குச் சோறு கொண்டுவந்து, அம்மன் முன் குவியலாகக் கொட்டி, அவற்றின் மீது வேகவைத்த மாவிளக்கு ஏற்றி வைத்து வழிபடுவது ஆகும். இவ்வழிபாடு 'கூழ் ஊற்றுதல்' வழிபாடு நடைபெறும் அன்று இரவே நடைபெறும். இது பெரும்பாலும் நள்ளிரவு வழிபாடாக இரவு 12 அல்லது 1 மணிக்கு நடைபெறுகிறது. அவ்வாறு கும்பம் படைத்த சோற்றைக் 'கூழ் ஊற்றுதல்' வழிபாட்டில் கூழைப் பகிர்ந்து அளித்தது போல் இச்சோற்றையும் அளித்து, அனைவரும் உண்டு மகிழ்ந்து வீடு திரும்புவர், இதுவும் கூழ் ஊற்றுதல் போன்று மேளக்காரர்கள் வீடுவீடாகச் சென்று பக்தர்களை அழைத்துக் கோயிலுக்கு வருவர்.

ஒப்பனைக் காட்சியும், அம்மன் ஊர்வலமும்

காப்பு அல்லது கொடி கட்டுகிற நாள் தொடங்கி மஞ்சள் நீராட்டு விழா முடிய நாள்தோறும் இரவு வேளையில் அம்மன்

அலங்காரமும் அம்மனுக்கு வழிபாடும், அம்மன் ஊர்வலமும் நடைபெறும். சில நாட்களில் காலை இரவு வேளைகளிலும் அம்மன் ஊர்வலம் நடைபெறும். ஆனால் இரவு வேளைகளில் மேற்கொள்ளப்படும் அம்மன் ஊர்வலத்தில்தான் அம்மன் ஒப்பனை செய்யப்பட்டு, கலை நிகழ்ச்சிகளிடையே ஊர்வல மாக வருவாள். மாரி அம்மனுக்கு உரிய வாகனம் 'சிங்கம்' என்றாலும், ஊர்வலத்தின் போது அழகு மிளிர்வதாக அன்ன வாகனம், மயில் வாகனம், கலை வாகனம் எனப் பல வாகனங் களில் பவனி வரக்கூடியவாறு பல்லக்கு அமைக்கப்படும். மேலும், 'முத்துப் பல்லக்கு' மிகவும் சிறப்பிடம் பெறக்கூடியதாக அமைகிறது. மாரிக்கும் அம்மை முத்துக்கும் தொடர்பிருப்பதால் முத்துக்கள் பலவற்றை அமைத்து அழகுபடுத்துவதில் மக்கள் மிகவும் விருப்பங்கொள்கின்றனர். அம்முத்துப் பல்லக்கில் ஒப்பனை செய்யப்பட்ட அம்மன் சிலையை அமரச் செய்வர். ஒப்பனை செய்யப்பட்ட அம்மன் வடிவம் வண்ண வண்ண ஆடைகளையும், முத்து, வைர அணிகலன்களையும், வண்ண வண்ணப் பூக்களையும், பூக்களாலான சரங்கள், மாலைகளையும் கொண்டு காட்சி தரும். மேலும் வண்ண வண்ண ஒளி விளக்கு களால் சப்பரம் அழகுபடுத்தப்படும். இவ்வாறு பல்லக்கும், அம்மன் வடிவ சிலைகளும் ஒப்பனையுடன் ஊர்வலம் வரும் போது ஒவ்வொரு வீடாக நின்று பூசையை ஏற்று இறுதியில் கோயில் வந்து சேரும். அம்மனுக்குரிய காணிக்கைகளும் கோயிலுக்கு எடுத்துவரப்பெறும்.

அம்மன் ஊர்வலத்தில் கலைநிகழ்ச்சிகள், கரகாட்டம்

மாரியம்மன் விழாவில் அம்மன் ஊர்வலம் வரும்போது இயல்பாக, சிலம்பாட்டம், கோயில் மேளக்கச்சேரி, கரகாட்டம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். யானை ஊர்வலமும் இருக்கும். சிலம்பாட்டம் என்பது பம்பை என்ற இசைக்கருவியை ஒருவர் இசைக்க, அடுத்தவர் இரு கைகளிலும் இரு சிலம்பங்களை ஏந்தி, பம்பை இசைக்கு ஏற்ப சிலம்பை ஆட்டியவாறு தானும் ஆடுவார். இந்நிகழ்ச்சியின்போது கதை வரலாறு சொல்லப் படும்.

'கரகாட்டம்' என்பது ஒப்பனை செய்யப்பட்ட கரகத்தைத் தலையில் ஏந்தி ஆடுவது ஆகும். நேரடியாகப் பெண்களே பங்கு கொள்வது பெருவழக்கமாக உள்ளது. சில இடங்களில் ஆண் களே பெண்வேடமிட்டு ஆடுவர். இக்கரகத்தைப் பூக்களால் ஒப்பனை செய்வது குறைவு. காகிதப் பூக்கள் கொண்டே இவை புனையப்படும். மேலும் இக்கரகத்தின் உச்சியில் துணி அல்லது காகிதம் அல்லது பிளாஸ்டிக் இவற்றில் ஒன்றால் அமைக்கப் பட்ட கிளி ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். கரகம் ஆடும் போதெல்லாம் கிளியும் குதித்துக் குதித்து ஆடும்.

கோயில் மேளக் கச்சேரி என்பது தாளம், நாதஸ்வரம், ஒத்து, தஞ்சாவூர் தவில், ஆர்மோனியம் ஆகியவை கொண்ட அமைப்பாகும். இவை மாரியம்மன் விழாவில் அவசியம் இடம்பெறும். தவிர 'பறை மேளம்' என்கிற இசைக்கருவியும் இவ்விழாவில் இடம்பெறும் இவற்றில் 'பலவை மேளம்', 'சட்டி மேளம்' என இருவகை உண்டு. இவை இரண்டுமே விழாவில் இடம்பெறுகின்றன.

தற்காலத்தில் கரகாட்டக்குழுவினர் தமக்குள் போட்டி ஆட்டங்களும், வாய்ச்சவடால்கள் பேசி மக்களை மகிழ்விப்பது மான ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

தற்காலத்தில், பொருளாதார நிலைக்கு ஏற்பவும், நேமிதங்க ளுக்கு ஏற்பவும், கலைநிகழ்ச்சிகள் அமைந்துவருகின்றன. இரவு முழுவதும் கண்விழித்து, அம்மன் ஊர்வலத்தையும், கரகாட்டம் முதலியவற்றையும் மக்கள் பார்ப்பர். இதைப் போன்றே கோயில் மண்டபங்களிலும், மைதானங்களிலும் பாட்டுக் கச்சேரி, சொற்பொழிவு, நாடகம், பட்டிமன்றம், மேடை ஆட்டம், பலகுரல் நிகழ்ச்சி, சினிமா போன்றவை ஏற்பாடு செய்யப் படுகின்றன.

மாரியம்மன் கோயில்களில் வில்லுப்பாட்டு

'வில்லுப்பாட்டு' என்பது கோயில் கொடைவிழாக்களில் நடத்தப்பெறும் ஒருவகை இசைப்பாட்டு ஆகும். மணிகள் கோர்த்த இரும்புக் கம்பியுடன் இணைந்த வில் நாணில் கோல் களால் அடித்தும், குடம், கோணங்கி (அல்லது உடுக்கு), சிங்கி, ஒத்து எனும் இசைக் கருவிகளைப் பயன்படுத்தியும், வாய்ப் பாட்டு எனும் பக்கப் பாட்டுடனும் கதைகளைப் பாட்டாகவும் இடையிடையே வசனமாகவும் மக்களுக்கு வழங்கும் ஓர் அரிய கலை வடிவமே வில்லுப்பாட்டு ஆகும். இக் கலை நிகழ்ச்சி ஆயிரத்துக்கு மேலான ஆண்டுகள் தென்தமிழ் நாட்டில் வழங்கப்பட்ட நாட்டுப்புற வாய்மொழி இலக்கியமாகும்.

வில்லுப்பாட்டுக் கச்சேரி பெரும்பாலும் இரவு முழுவதும் நடத்தப்பெறுவதாகும். கதை முடியாமலிருந்தாலோ, மறுநாள் காலையிலும் பாடவேண்டுமென்று மக்கள் விரும்பினாலோ கச்சேரி தொடர்ந்து நடைபெறும்.

வில்லுப்பாட்டுகள் பெரும்பாலும் அம்மன் கதை களாகவோ, இதிகாச – புராண நிகழ்ச்சிகளாகவோ அமையும். பராசக்தி புது அவதாரமெடுத்துக் காளியாகவோ, முத்தாரம்ம னாகவோ, மாரியம்மனாகவோ, பிரமசத்தியாகவோ பிறவி எடுத்துப் படையல் பெறுவதாக அம்மன் கதைகள் அமையும். நீலிகதை, பார்வதி அம்மன் கதை போன்றவை அதிகமாக வில்லுப்பாட்டில் பாடப்பெறுகின்றன.

மாரியம்மன் கோயில்களே அம்மன் கோயில்களில் அதிகமாக உள்ளன. ஆண்டுதோறும் அங்குக் கொடைவிழா நடைபெறும். வில்லுப்பாட்டுக் கச்சேரியை மாரியம்மன் கோயில் விழாவில் ஏற்பாடுசெய்தால், அவ்வில்லுப் பாட்டாளிகள் மாரியம்மன் கதையைத்தான் பாடவேண்டும். ஆனால் எல்லாப் பாட்டாளிகளுக்கும் மாரியம்மன் கதை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே மாரியம்மன் கதைக்கு

மாறாகப் பராசக்தியின் ஏதாவதொரு அவதாரக் கதையைப் பாடுகின்றனர். முத்தாரம்மன் கதையையோ, இசக்கி அம்மன், பத்திரகாளி, பிரமசத்தி, பார்வதி அம்மன் போன்ற கதை களையோ பாடுவது வழக்கமாக உள்ளது. அப்படியே மாரி அம்மன் கதை தெரிந்திருந்தாலும், மாரியின் பிறப்பையும், தவத்தையும் கூறி முடித்துவிடுவர். பிறப்பைக் கூறும்போது பெரும்பாலும் நாககன்னிக்கு மாரியம்மன் பிறந்து, அரக்கனை அழித்தபின், அரனிடம் கைலாயத்தில் வரம் வாங்கித் தென் னாட்டு ஊர்களில் கோயில்கொண்டு படையல் பெறுவதாகப் பாடுவர்.

மாரியம்மன் கதை பலவாறாக வழங்கப் பெறுவதால் தமக்குத் தெரிந்த அளவிலேயே வில்லில் பாடுவது பாட்டாளி களின் வழக்கம். மாரியம்மன் கதையைச் சித்திரிக்கும் ஓலைச் சுவடிகளோ, வாய்மொழிப்பாடல்களோ அதிகம் இல்லா மையே இதற்குக் காரணமாகும். மாரியம்மன் கோயில்கள் நாட்டில் பல இடத்தில் இருப்பதாலும், பல்வேறு மாரி அம்மன் கதைகள் ஆங்காங்கே வழங்கப்படுவதாலும் எந்தக் கதை வேறு பாடு உண்மையானதாக, முழுமையானதாக உள்ளது என்பது யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏதாவது ஒரு கதை வேறுபாட்டைக் கேட்டால் போதும் என மக்களும் நினைக் கின்றனர். மக்களின் இம்மனநிலையை உணர்ந்துகொள்ளும் வில்லுப்பாட்டாளிகளும் கொஞ்ச நேரம் மாரியம்மன் கதையைப் பாடி முடித்துவிட்டுப் பின்பு ஏதாவதொரு அம்மன் வில்லுப்பாட்டுக் கதையைப் பாடுகின்றனர். இதன் காரண மாகவே மாரியம்மன் கதை அதிகமாக மக்களிடம் வழங் காமலும், ஓலைச் சுவடிகளில் ஏறாமலும் இருந்து வந்துள்ளது.

மாரியம்மன் கோயில்களில் கணியான் கூத்து, கோணங்கி முதலியன

வில்லுப்பாட்டுக் கச்சேரி இடம்பெறாதபோது சில மாரி யம்மன் கோயில்களில் கணியான் கூத்து அல்லது கணியான் பாட்டு இடம்பெறும். கணியான் எனும் இனத்தவர்களே

கணியான் கூத்தை நிகழ்த்துவர். கணியான்களில் ஒருவர் பறையடித்துப் பாட, இருவர் பெண்வேடமிட்டு ஓடி ஓடிப் பாடி ஆடுவர். ஏதாவதொரு அம்மன் கதையையோ அல்லது இதிகாச – புராணக் கிளைக்கதையையோ கணியான்கள் பாடுவர். பெரும்பாலும், 'நீலி கதை'யையே இவர்கள் பாடுவதுண்டு. மாரியம்மன் கதையை அறிந்த கணியான்கள் மிகக் குறைவு. அதனால் மாரியம்மன் கோயிலில்கூட பிற அம்மன் கதைகளையே கணியான்கள் பாடுவர்.

தற்காலத்தில் கோயில் கொடை விழாக்களில் வேறுவேறு புதிய கலை நிகழ்ச்சிகள் அமைவதால் கணியான் ஆட்டத்திற்கு அதிக வாய்ப்புகள் கிட்டுவதில்லை. அதனால் கணியான்கள் பிழைப்புக்காக வேறு வேலைகளைச் செய்யவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

கோணங்கி அல்லது கோடங்கி என்பது உடுக்கைப் பாட்டுப்போன்றது. ஒருவரே இசையை எழுப்பிப் பாடுவது வழக்கம். கணியான்கள் போலவே கோணங்கிப் பாடகரும் கதைக்கருக்களை இதிகாச புராணங்களிலிருந்து தேர்வு செய்து பாடுவர்.

கோணங்கிப் பாடகர்களைக் கூப்பிட்டுக் கோயில்களில் பாடவைப்பதைவிடக் குறிகேட்பதே இக்காலத்தில் வழக்கமாக உள்ளது. சாமி அருள்பெற்ற அப்பாடகர் நடந்தது, நடக்கப் போவதைப் பற்றிக் குறிசொல்லுவார்.

மாரியம்மன் கோயில்களில் தெருக்கூத்து

'தெருக்கூத்து' என்பது விழாக்களின்போது இரவில் நாடகம் போன்று நடத்தப்பெறும் ஓர் அரிய கலை வடிவம் ஆகும். விழா நடைபெறும் கோயிலருகில், தெருச்சந்திப்புகளில் பொதுமக்கள் கூடியிருந்து பார்க்கும் நிலையில், பெரியமேடை எதுவுமின்றி, கதாபாத்திரங்கள் வேடமிட்டுக்கொண்டு, பாடியும், வசனம் பேசியும், ஆடி, ஓடி நடித்துக் காட்டுவது இக்

கூத்தின் இயல்பாகும். பொதுவாகத் தெருக்கூத்துகள் வடதமிழ் நாட்டிலேயே நடத்தப்படுவதுண்டு. பெரும்பாலும் கோயில் கொடைவிழாக்கள் அல்லது நிகழ்வுகளின்போது தெருக்கூத்து நடைபெறும். தெருக்கூத்துகளில் இதிகாச – புராணக்கதைகள் நடித்துக்காட்டப்பெறும்.

சில மாரியம்மன் கோயில் விழாக்களில் ஓரிரு நாள்கள் தெருக்கூத்து நடைபெறும். இது பெரும்பாலும் மாரியம்மன் கோயிலில் கூழ் ஊற்றும் தினத்து இரவில் நடைபெறும். அத் தினத்தில், அம்மன் ஊர்வலம், இரவில் 10 மணிக்கு முடிவுற்ற பின்போ அல்லது அம்மன் ஊர்வலம் நடந்து கொண்டிருக்கும் போதோ தெருக்கூத்து நடைபெறும். விடிய விடிய நடக்கும் இந்நிகழ்ச்சியின்போது 'ரேணுகாதேவி' எனும் மாரியம்மன் வரலாறு பாடி நடித்துக் காட்டப்பெறுகிறது. சில தெருக் கூத்துகளில் 'பத்திரகாளி அம்மன் கதை' கூத்தாக அமையும்.

தெருக்கூத்துக் கலைஞர்கள் கூத்தில் வரும் பாட்டுகளையும் வசனங்களையும் மூச்சுவிடாமல் சொல்லுவதும், அவற்றி னிடையே ஓடி, ஆடி, மக்களிடம் நகைச்சுவையுடன் பேசி மகிழ்விப்பதும், இவ்வாறான அரிய திறமைகளைப் பெற்றி ருப்பர். தெருக்கூத்துகள் ஏற்பாடு செய்யப்படாவிட்டால் திரைப்படங்கள் காட்டுவது தற்காலத்தில் நடைபெற்று வருகிறது.

மாரியம்மன் கோயில்களில் மஞ்சள் நீராட்டுவிழா

மாரியம்மனுக்கும் மஞ்சளுக்கும் அதிகத் தொடர்பு உள்ளது. மாரியம்மன் பக்தர்கள் மஞ்சள் ஆடையை உடுத்து வதும் மஞ்சணையைப் பூசுவதும், மஞ்சள் அரைத்து நீரில் கலக்கி மாரியம்மன் சாமி ஆடுவோர் கால்களைக் கழுவுவதும் வழக்கம். மஞ்சள் நீராட்டு என்பது ஒரு சடங்காகவே நடத்தப் படுகிறது.

மாரியம்மன் கோயில் விழாக்களில் இறுதிச் சடங்காக மஞ்சள் நீராட்டுவிழா நடைபெறுகிறது. கூழ் ஊற்றி முடிந்த மறுநாள் காலை மாரியம்மன் தெய்வம் கோயிலிலிருந்து மேள தாளத்துடன் புறப்பட்டு, ஊரை வலஞ்சுற்றிவருட அப்போது ஒவ்வொரு வீடாகக் கற்பூர பூசை, மஞ்சள் நீர் ஆராதனையை ஏற்றுப்பின் கோயிலில் வந்து தெய்வம் இறங்கும். இத்துடன் கொடைவிழா முடிவதுமுண்டு. தமிழ்நாட்டின் பெரும்பாலான மாரியம்மன் கோயில்களில் இவ்வாறே நடைபெறுகின்றது.

தென்பாண்டி நாட்டு மாரியம்மன் கோயில்களில் மாரியம்மன் சாமியாடியோ, பிற பரிவார தெய்வங்களின் சாமியாடிகளோ, வீட்டுக்கு வீடு சென்று பாதபூசை பெற்று, கோயிலில் வந்து சாமியாடிய பின்னர், பலிகள் பெற்று இறுதியில் மஞ்சள் நீராடுவர். புது மண்பானைகளில் நீரூற்றி, மஞ்சணையை அதில் கரைத்துக் கொதிக்கவைப்பர். நீர் கொதித்துப் பொங்கிக் கவிழும்போது, குரவைகள் ஒலிக்க அம்மஞ்சள் நீரை வேப்பிலைக் கொத்துகளால் தொட்டுத் தம் உடம்பில் தெளிப்பர். அதன்பின் குளிர்ந்த நீரில் நீராடுவர். புதுத்துணிகள் அணிவர். அத்துடன் கோயில் கொடைவிழா முடிவுக்கு வரும்.

படைப்பெடுத்தல் அல்லது படையல் எடுத்தல்

படைப்பு அல்லது படையல் என்பது தெய்வங்களுக்கு வைக்கப் பெறும் பொருட்கள் ஆகும். சிலைகளுக்கு முன்போ, பீடங்களுக்கு முன்போ தலைவாழை இலை விரித்து, அதில் வெற்றிலை பாக்கு, பழம், பொங்கல், பூ, பத்தி, பலிப் பொருள்கள், இளநீர், தேங்காய், இனிப்புவகைகள், மாவிளக்கு போன்றவற்றை வைத்துக் கும்பிடுவர். விழா முடிந்ததும் இப் பொருள்களைச் சேகரித்து, வீடுவீடாக, வரி கொடுக்கும் குடும்

பங்களுக்கும், கோயில் வேலை செய்வோருக்கும் பங்கிட்டுக் கொடுப்பர்.

மாரியம்மன் கோயில்களிலும் இம்முறையே கடைப் பிடிக்கப்படுகிறது. விழா முடிந்த பின்னர் இப்படைப்புப் பொருள்களைச் சேகரிப்பதையே படையல் எடுத்தல் என்கின் றனர். படைப்புக்களை எடுத்த பின்புதான், அந்தந்த வீடுகளில் விருந்து படைத்து உண்ணத் தொடங்குவது வழக்கம். விழா தொடங்கியது முதல் படைப்பெடுத்தல் வரை தூய்மையாகவும், சைவ உணவையும், விரதத்தையும் கொண்டிருந்த ஊரார், படைப்பு எடுத்த பின்னர்தான் அசைவ உணவுகளை உட் கொள்வர். விருந்தினர்க்கு விருந்து படைப்பதும், ஏழைகளுக்கு உணவு அளிப்பதுமாகத் தம் மகிழ்ச்சியைக் கலந்துகொள்வர்.

நகரங்களிலுள்ள மாரியம்மன் கோயில்களில் அவரவர் வந்து அர்ச்சனை செய்து வழிபட்டுச் செல்வதால் படையல் எடுக்கும் வழக்கம் அரிதாகவே உள்ளது. அதிகாரிகளோ கோயில் பணியாளர்களோ படையல் பொருள்களைச் சேகரித்து ஏலம்விட்டு அதில் வரும் தொகையைக் கோயில் கணக்கில் சேர்த்துவிடுவர்.

பந்தல் பிரித்தலும் பிற சடங்குகளும்

கொடை விழாவின் தொடக்கத்தில் இடப்பட்ட பந்தல், அலங்காரங்கள், தோரணங்கள், மாலைகள், வாழைகள், தேர் அல்லது சப்பர அலங்காரங்கள், நோன்புக்கால் போன்றவை விழா நடந்துமுடிந்த சில தினங்களில் அகற்றப்படும். இதற் கெனக் குறிப்பிட்ட நாள்கள் உண்டு. எட்டு நாள் கழித்து அகற்றுவதும், மூன்றாம் நாள் அகற்றுவதும், அல்லது மறு நாளே அகற்றுவதுமாக இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

விருந்துக்கு வந்த வெளியூர்க்காரர்கள், விருந்து முடிந்த பின்போ, மறுநாளோ, ஒரிரு நாள்கள் கழித்தோ தம் ஊர் களுக்குத் திரும்பிச் செல்வர். கோயிலிலுள்ள பொருள்கள் குறிப்பிட்ட நாள்களுக்குப் பின் அகற்றப்பட்டவுடன், அவை யவை இருக்கவேண்டிய இடங்களில் வைக்கப் பெறும். தேர்களும் சப்பரங்களும் தம் தம் இடங்களில் நிறுத்தப்படும் இத்துடன் கோயில் விழா முடிந்து விடுகிறது.

மாரியம்மன் கோயிலிலும் இவை போன்ற நிகழ்ச்சிகள் விதிவிலக்கல்ல. சில கோயில்களில் தென்னந்தட்டிகள் அல்லது பனை ஓலைகளால் பந்தல் இடுவதற்குப் பதிலாகத் தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு விடுகின்றன. இதனால் தோரணங்கள் மட்டுமே கட்டுவது உள்ளது. காலத்துக்கு ஏற்பக் கொடைவிழாக்களில் அவ்வப்போது மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. இப்பொழுது சேமியானா எனும் கட்டித் துணியால் திரைகளும், மேல் மறைப்புகளும் அமைக்கின்றனர்.

மாரியம்மன் பேரில் நம்பிக்கைகளும் நேர்த்திக் கடன்களும்

மக்கள் வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையில்தான் அமைகிறது. அம்மக்கள் மேற்கொள்ளும் மாரியம்மன் வழி பாட்டிலும் அந்நம்பிக்கைகளைக் காணலாம். மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் செய்தால் பயன்கிடைக்கும் என அவர்கள் நம்புகின்றனர். இதனால், நேர்ந்துகொண்டு வேண்டுதல் க்ளாகிய நேர்த்திக் கடன்களைச் செய்கின்றனர்.

தொட்டில் கட்டுதல்

குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியர் அப்பாக்கியத்தை மாரியம்மன் அருளால் பெறவேண்டிக்கொள்வர். அதன் காரணமாகத் தொட்டில் கட்டும் பழக்கத்தை மேற்கொள்வர். ஒரு மஞ்சள் கயிறு, மஞ்சள் துணி, குங்குமம், மஞ்சள் துண்டு,

சிவந்த பூக்கள், காசு ஆகியவற்றை எடுத்துக்கொள்வர். காசையும், சிவந்த பூக்களையும், குங்குமத்தையும் காணிக்கை யாக வைத்து, பின் அவற்றை மஞ்சள் துணியில் முடிந்து, அம் முடிப்பை மஞ்சள் கயிற்றில் கட்டி அதை மாரியம்மன் கோயில் அருகிலுள்ள வேம்பிலோ வேறு மரங்களிலோ கட்டித் தொங்கவிடுவர். அதற்குக் கற்பூரம் ஏற்றி வழிபட்டு வீடுதிரும்புவர். மாரியம்மன் திருவிழாவன்று இவ்வாறு கட்டி விட்டு அடுத்த விழாவரை காத்திருப்பர். இதற்குள் மாரியம்மன் அருளால் அத்தம்பதியருக்குக் குழந்தைப் பாக்கியம் ஏற்பட்டு விடும். சிலர் தொட்டில் போலச் செய்து தொங்கவிடுவர். சிலர் வளையல்களைக் கட்டித் தொங்கவிடுவர்.

மொட்டையடித்தல்

மாரியம்மனுக்கு 'முடிகாணிக்கை' செய்வது ஒரு வழக்க மாகவுள்ளது. முடிகாணிக்கை செய்வோர் சிலநாள்களுக்கு முன்பாகவே நேர்ந்து கொள்வர். அதன்காரணமாக மழித்தல் செய்யாமல் விரதமேற்கொள்வர். குறிப்பிட்ட நாளில் மாரி யம்மன் கோயிலுக்குச் சென்று மொட்டை போட்டுக் கொள்வர். இருக்கங்குடி மாரியம்மன் கோயிலுக்கு ஏராள மானபேர் மொட்டை போட்டுக்கொள்ளச் செல்கின்றனர். இதைப் போன்ற சில கோயில்களில் மொட்டை போட, ஆண்களும், பெண்களும், முன்வருகின்றனர். தாம் நினைந்த காரியம் நடந்தேறுவதற்காக இவ்வாறு மொட்டையடித்துக் கொள்கின்றனர்.

மஞ்சள் ஆடை, வேப்பிலை ஆடை அணிதல்

மாரியம்மனுக்கு விரதம் இருப்போர், மாரியம்மன் சாமி யாடுவோர், மாரியம்மன் பக்தர்கள் போன்றோர், மஞ்சள் நிற ஆடைகளை எப்போதும் அணிந்து கொள்வதும், அல்லது

விழாவின்போதோ அணிந்து கொள்வதுமுண்டு. இதைப் போன்றே மாரியம்மன் கோயில் விழா நாள்களிலோ, சில விசேசதினங்களிலோ வேப்பிலை ஆடையணிவதும் பழக்க மாக உள்ளது. இவையெல்லாம் வேண்டுதல்களின் அடிப் படையில் அமைகின்றன. மாரியம்மன் கோயிலுக்குச் செல்வோர் மஞ்சள் உடையுடனும், வேப்பிலையுடனும் பொருள்பெற்று அவற்றில் ஒரு பங்கைத் தம் செலவுக்கு வைத்துக் கொண்டு, ஒரு பங்கைக்கோயிலுக்குக் காணிக்கை யாக நல்குவதையும் காணலாம்.

கண்ணாடகம் பொருத்துதல்

மக்கள் தம் கண்களை அல்லது இழந்துவிட்ட உடலுறுப்பு களைத் திரும்பவும் பெறுவதற்கு மாரியம்மனிடம் வேண்டுதல் செய்துகொள்வர், அதற்குக் காணிக்கையாக, இரும்பு, எவர் சில்வர், வெள்ளி, தங்கம், பித்தளை இவற்றாலான கண்களை வாங்கி, சூடகம் ஏற்றி வழிபட்டு, பின் அக்கண்களை மாரியம்மன் சிலையில் கண்ணிருக்கும் இடத்தில் பொருத்துவர்.

இப்படிச் செய்வதால் தாம் இழந்த கண்களை மாரியம்மன் அளிப்பாள் என நம்புகின்றனர். இதைப் போல, இழந்துபட்ட உறுப்புகள், செயல்படாத உடல் உறுப்புகள் போன்றவை சீராகும் என்றும் மக்கள் நம்பி இவ்வாறு உறுப்புத் தானம் செய்கின்றனர்.

பயிரில் நல்ல விளைச்சல் வேண்டுதல்

மாரியம்ன் வளமைக்குமுரிய தெய்மாதலால் தம்தம் வயல்களில் விளையும் பொருள்களை எடுத்து வந்து மாரியம்மன் கோயில்களில் கட்டித் தொங்கவிட்டோ காணிக்கையாகச் செலுத்தியோ மேலும் வளமைதர வேண்டிக்கொள்வர். சான்றாக, வயல்களில் விளைந்த

கொத்து நெற்கதிர்களைக் கொண்டு வந்து கோயிலில் கட்டித் தொங்கவிடுவர். கதிர்கள் நன்றாக முற்றவேண்டுமென்றோ, காய்கறிகள் நோயின்றிச் செழிக்க வேண்டுமென்றோ நம்பியே இவ்வாறு செய்கின்றனர்.

பட்டு, பாத்திரங்கள், சிலை, ஆடு, மாடுகள், நேர்தல்

சில குடும்பத்தார் தாம் நினைத்த காரியங்கள் நடைபெறுவதற்கு வேண்டிக் கொள்வர். அம்மனுக்கு அழகான பட்டுத்துணி எடுத்து வைப்பதாகவோ, பாத்திரங்கள் வாங்கி வைப்பதாகவோ, அன்னதான மிடுவதாகவோ, அணி கலன்கள் வாங்கி வைப்பதாகவோ கோயில் கட்டித் தருவதாகவோ, கொடை கொடுப்பதாகவோ, கும்பாபிசேகம் செய்வ தாகவோ, மாரியம்மன் சிலை செய்து வைப்பதாகவோ நேர்ந்து கொள்வர். அவ்வாறே செய்வர். நேர்த்திக் கடன்களை நிறைவேற்றாமல் விட்டுவிட்டால் ஏதாவது தீங்கு நேரும் என்று பயந்து எல்லாவற்றையும் செய்துவிடுதல் உண்டு. மக்கள் தாம் நினைத்தகாரியம் நடந்து விடுகிறது என அறிந்து கொண்டால் அதிகமான வேண்டுதல்கள் ஏற்படுகின்றன.

மாரியம்மன் அற்புதங்கள்

அற்புதம் அல்லது அதிசயம் என்பது எக்காலத்திலும், எங்கும் நடைபெறுவதுண்டு, இவ்வாறு நடப்பதையே தெய்வச் செயல் என மக்கள் நம்புகின்றனர்.

ஊமை பேசுவது, முடவன் எழுந்து நடப்பது, நோயுற்றவர் பிழைப்பது போன்றவையும், மரத்திலிருந்து பாலோ குருதியோ வழிவது, சிலைகளிலிருந்து நீரோ, பாலோ, இரத்தமோ வழிவது, காணாமற்போன பொருள்கள் மீண்டும் கிடைப்பது போன்றவை அற்புதங்கள் அல்லது அதிசயங்களில் சேரும்.

மாரியம்மன் கோயில்களில் நடைபெற்ற சில அற்புதங்கள் வருமாறு:

சமயபுரம் மாரியம்மன் சக்தி வாய்ந்தவள் ஒரு சமயம், கண்ணொளி மங்கியிருந்தபோது சிவந்திலிங்கசுவாமி என்பவர் சமயபுரமாரி அம்மன் மீது அகக்கண்களால் அருட் பாக்கள் பாடிப் புறக்கண் பெற்றார் என்று அறியப்படுகிறது.

திருவேற்காடு மாரியம்மனின் திருநீற்று மகிமை திக்கெல்லாம் அறிந்த ஒன்று. இக்கருமாரியின் திருச்சாம்பல் பக்தர்களின் எத்தகைய வினையையும் தீர்க்க வல்லது. கிரக தோசங்களை நீக்கவல்லது. மகப்பேறு இல்லாதவர்களுக்கு மதலைச் செல்வங்களை நல்க வல்லது. இங்குள்ள திருநீற்றைத் தினமும் காலை, மாலை வேளைகளில் குளிர்ந்த நீரில் இட்டுப் பக்தியுடன் பருகிவந்தாலோ, உடம்பில் பூசி வந்தாலோ தீராத வினைகள் தீரும்; நினைத்த காரியங்கள் நடக்கும்.

சேலம் கோட்டை மாரியம்மன் தன்னை அன்புடனும் உண்மையுடனும் வழிபடும் அன்பர்களிடம் அற்புதங்களை நாள்தோறும் நிகழ்த்துகிறாள். மங்கலமான காரியங்கள் நிகழ்த்துவதால் அத்தலத்திற்கு 'மங்களமாபுரி' என்ற பெயரும் உண்டு. பண்ணாரி மாரியம்மன் பெண்களுக்கு மிகுந்த அற்ப ,தங்களை நிகழ்த்துகிறாள். குழந்தை வேண்டிவரும் மகளிர்க்குக் குழந்தைப் பாக்கியத்தை அளிக்கிறாள். அப்பெண்கள் அக் குழந்தைகளை அம்மன் கோயிலுக்குக் கொண்டுவந்து அம்மன் முன் கிடத்திப் பெயரிடுகிறார்கள். மேலும் திருமணம் ஆகாத மங்கையர் இங்கு வேண்டிக் கொண்டால் அம்மன் அவர் களுக்குத் திருமணங்களை நடத்தி வைக்கிறாள்; தேவியின் தீர்த்தத்தால் கண்நோய்கள் நீங்குகின்றன; நரம்பு வியாதிகளும் நீங்குகின்றன; மேலும் ஒரு திரு விழாவின் போது முள்ளுக் குறும்பன் என்ற மலைவாசி மந்திர சக்தியால் ஒரு புலியையும் கரடியையும் உருவாக்கிப் பக்தர்கள் மீது ஏவினான். இதனால் விழாவில் குழப்பம் ஏற்பட்டது; பக்தர்கள் பயந்து நாலாபுரமும்

ஓடினர். இக்காட்சியைக்கண்ட அம்மன் மந்திரத்தால் உருவான மிருகங்களைக் கல்லாக மாற்றிவிட்டாள்; முள்ளுக் குறும் பனின் விடும் பற்றி எரிந்தது. பின் அவன் தேவியிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அக்கினிக் குண்டத்தில் இறங் கினான். இதைத் தொடர்ந்து இன்றும் பக்தர்கள் அக்கினிக் குண்டத்தில் இறங்கி, அம்மனை வணங்கும் வழக்கம் உள்ளது.

ஈரோட்டிலிருந்து, கோவை செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பெரிய மாரியம்மன் பிள்ளை இல்லாக் குறையைத் தீர்த்து வைக்கிறாள். தீராத நோய்களையும் தீர்த்து வைக்கிறாள். இதற்காக 45 வெள்ளிக் கிழமைகள் அம்மனை மக்கள் வழிபடுகின்றனர்.

செஞ்சி வட்டம், திருவம்பட்டுவிலுள்ள மாரியம்மன் கோயிலில் நோயுற்றவர் மாதக் கணக்கில் தங்கி நாள்தோறும் அம்மனுக்குப் பூசைசெய்து நோய் நீங்கிச் செல்கின்றனர். இந் நிலையில் கண் பார்வை இழந்தவர் கண் பெற்றும், குழந்தைப் பேறு இல்லாதவர்கள் குழந்தைச் செல்வங்களைப்பெற்றும் செல்வதைக் காணமுடிகிறது.

இவ்வாறு மாதக்கணக்கில் மாரியம்மன் கோயிலில் தங்கி வழிபாடு செய்தவர்களைக் கேலிசெய்த ஒருவரை அம்மன் எச்சரித்த நிகழ்ச்சியும் நடந்துள்ளது. அந்நபர் உறங்கும் போது பாம்பொன்று அவர் மார்பில் ஏறி நின்றுள்ளது. அவர் தன் தவறை உணர்ந்து மாரியம்மனை வேண்டவும் பாம்பு அகன்றுவிட்டது. அந்நிகழ்ச்சிக்குப்பின் அவர் ஆண்டுதோறும் அக்கோயிலில் சிறப்பான நோன்புகளுடன் வழிபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

சினிமாக்களில் மாரியம்மன் அற்புதங்கள்

மக்களிடையே மிகப் பிரபலமான தகவல் தொடர்பு சாதனமாகத் தொலைக்காட்சியும், திரைப்படங்களும் விளங்கு கின்றன. மாரியம்மன் செய்த அற்புதங்களை மக்களுக்கு

எளிதில் சேரும் வண்ணம் சினிமாக்களில் பல அற்புதச் செயல்களைக் காட்டுகின்றனர். மாரியம்மன் பற்றிய பாட்டு களும், சுவையான நிகழ்ச்சிகளும் பக்தர்களுக்குப் பக்திப் பரவசமூட்டுகின்றன.

வெள்ளைக்காரர்களும் மாரியம்மனும்

கோவை மாவட்டத்தில் பண்ணாரி வனத்தில் பண்ணாரி மாரியம்மன் கோயில் உள்ளது. இப்பகுதிக்கு வந்த ஆங்கிலேயே அதிகாரி பயணியர் விடுதியில் தங்கியிருந்த போது பண்ணாரியம்மன் விழாவிற்காக கோயிலில் மேள, தாள, ஆடல், பாடல் இசைகள் ஒலிக்கப்பட்டன. இவ் வோசையினால் எரிச்சலுற்ற அந்த அதிகாரி அந்த விழாவை நிறுத்தக் கட்டளையிட்டார். அதன்படி விழா ஆரவாரத்தை சிறிது நேரம் நிறுத்தியதும் பாம்பு மங்கையர் இருவர் மகுடியுடன் அதிகாரி முன் தோன்றினார்களாம். அதனால் பயந்துபோன அதிகாரி தனது கட்டளை தவறு என்பதை உணர்ந்து விழா தொடர்ந்து நடைபெற உத்தர விட்டதும் தெய்வமங்கையர் மறைந்துவிட்டனராம். பின் அந்த அதிகாரியே விழாவிற்கு வந்து கலந்து கொண்டாராம்.

மேலும், பண்ணாரி அம்மன் கோயில் யாககுண்டத்திற்கு இடுவதற்காகக் கட்டுமரங்களைக் கோயில்காரர்கள் வெட்டிக் கொண்டுவரும்போது அவர்கள் அதை 'கரும்பு' என்றும் தீயைப் 'பூ' என்றும் கூறியதைக் கேட்டுப் பரிகசித்து ஓர் ஆங்கிலேயே வனத்துறை அதிகாரி சிரித்ததுடன் மரங்கள் வெட்டுவதையும் தடுத்தாராம். இதனால் அவருக்கு வாந்தி, பேதி உண்டாகி அவதியுற்றுப் பிறகு அம்மன் கோயிலுக்கு வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம் அம்மன் தீர்த்தமும் விபூதியும் பெற்று நோய் நீங்கினார் என்று கதையாகக் கூறப்படுகிறது.

இசுலாமியரும் மாரியம்மனும்

மாரியம்மனுக்குக் காவல் தெய்வங்களாக விளங்கு பவைகளில் 'முத்தால் ராவுத்தன்' என்பதுவும் ஒன்று. 'ராவுத்தன்' என்பதற்குக் குதிரை வீரன் என்பது பொருள். எனவே 'முத்தால் ராவுத்தன்' எனும் தெய்வமும் ஒரு குதிரை மீது அமர்ந்துள்ள காட்சியில் அமைக்கப் பட்டுள்ளது. இது கற்படிவமாகவோ சுடுமண் படிவமாகவோ அமைக்கப்பட்டு மாரியம்மன் கோயில் முன் நிறுத்தப் பட்டிருக்கும். குதிரை ஓடும் நிலையிலோ அல்லது நிற்கும் நிலையிலோ அமைக்கப் படும். கற்படிவங்கள் பல்லவர்கால புடைப்புச் சிற்பங்களாக அமைந்துள்ளன. சென்னைப் பட்டணம் முன்மிகவும் சிறப்புப் பெற்றிருந்த செஞ்சிப் பட்டணத்தில் முகலாயர் ஆட்சி நிலவியதோடு மாரியம்மன் போற்றப் பட்டுள்ளதை அங்கு அக்காலத்து உருவான 'துலுக்காண மாரியம்மன்' கோயில்கள் சில சான்று பகர்கின்றன. இத் துலுக்காண மாணயம்மன் சிலை பொதுவான மாரியமம்மன் சிலையை ஒத்து உருவ அமைப்புப் பெற்றிருந்தாலும் அதன் மேலுள்ள ஆடை ஆபரணங்கள் முகலாயரின் பண்பாட்டை வெளிப்படுத்தும் நிலையில் அவர்கள் அணியக் கூடிய ஆடை, ஆபரணங் களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் முகலாயருக்கும் மாரியம்மனுக்கும் உள்ள தொடர்பினை அறியமுடிகிறது. தவிர மேலே கூறிய முத்தால் ராவுத்தன் என்ற காவல் தெய்வமே முகமதியர் மாரியம்மன் தெய்வத்தைத் தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டதற்குச் சான்று ஆகும். 'குதிரை'களோடு தொடர்புடையவர்கள் முகமதியர் ஆதலால் அக்குதிரைகளின் உருவங்களும் மாரியம்மன் கோயில்களில் இடம் பெறுகின்றன.

மாரியம்மனுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட யாரேனும் ஒருவர் இறந்தவுடன் அவரை அவ்வம்மனுக்குக் காவல் தெய்வமாக்கியதால் முகமதியர்களையும் மாரியம்ம னுடன் தொடர்புபடுத்துகின்றனர். இன்றும் முகலாயர் சிலர் இந்த "முத்தால் ராவுத்தனை" வழிபட்டுவருவதுடன் 'ராவுத்தன்' என்ற பெயரைத் தங்கள் பெயருடன் இணைத்து வைத்துக் கொள்கின்றனர்.

மாரி அம்மன் தரும் அம்மை நோயும் பிற அம்மன் தெய்வங்கள் தரும் நோய்களும்

நம் நாட்டில் சக்தி கோயில்கள் அல்லது அம்மன் கோயில் களே மிகுதி என முன்பு கூறப்பெற்றது. துர்க்கை, காளி, பார்வதி, காமாட்சி, மீனாட்சி, முத்தாரம்மன், முப்புராதி அம்மன், மாரியம்மன், பிரமசத்தி அம்மன், திரௌபதி, கங்கை யம்மன், பச்சை அம்மன் போன்ற அம்மன் தெய்வங்கள், ஆதிபராசக்தியான அன்னையின் அவதாரமாகவோ, அவள் உறுப்புக்களிலிருந்தோ பிறவி எடுத்துள்ளன என்பர். கொடிய அசுரர்களைக் கொல்வதற்காகவே அம்மன் தெய்வங்கள் பிறவி எடுத்ததாகப் புராணங்களிலும், நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் போன்றவற்றிலும் சித்திரிக்கப் பெற்றுள்ளனர். சான்றாக, பத்திரகாளி தாருகாசுரனைக் கொல்வதற்காகப் பிறவி எடுத்ததாகக் கதைகள் வழங்குகின்றன. சண்டமுண்டன் என்பவனைக் கொல்லவே பிரமசத்தி அவதாரம் ஏற்பட்ட தாகக் கூறப்படுகிறது. இவ்வாறே மாரியம்மனும், அசுரன் ஒரு வனைக் கொல்லப் பிறந்ததாகவும் கூறுவர்.

அசுரர்களை வதம் செய்த அம்மன் தெய்வங்கள் ஆங்காங்கேயுள்ள ஊர்களில் கோயில்பெற்று நிலைத்து விடுகின்றன. மாரியம்மன் மட்டுமே, தன் வேலை முடிந்த

பின்பும் கைலாயம் சென்று கடுந்தவம் புரிந்தாள் என்றும், தவத்தின் பயனாகச் சிவனிடம் அம்மை முத்துக்களைப் பெற்றாள் என்றும், அவற்றைச் சிவன் மேலேயே விதைத்து, பின் அவற்றை நீக்கும் வழிகளையும் அவரிடமிருந்தே அறிந்து கொண்டாள் என்றும், பின்பு கைலாயத்திலிருந்து புறப்பட்டு நாட்டின் பல இடங்களில் அம்மை நோயை ஏற்படுத்தி, அரசர்களாலும், மக்களாலும் படையல் பெற்றுக் கோயிலும் பெற்றாள் என்றும் கூறுவர். கைலாயத்தில் மாரியம்மன் மேற்கொண்ட தவத்திற்குப் பின்தான் 'புதுமாரி' எனும் அவதாரப் பெயரில் அழைக்கப் பெற்றாள். இவ்வாறு இரட்டைப் பிறவிகளைக் கொள்ளும் ஒரே அம்மனாக மாரியம்மன் அமைந்துள்ளாள். மேலும், வெம்மையையும், அதனைத் தொடர்ந்து அம்மை நோயையும் இவற்றிற்கு மாறாக மழையைப் பெய்வித்துக் குளுமை ஏற்படுத்தி அம்மைநோயை நீக்கவும் செய்கின்றாள். முரண்பட்ட இருவேறு செயல்களைச் செய்பவளாக மாரியம்மன் விளங்குவது பிற அம்மன் தெய்வங்களிலிருந்து வேறுபடுவதாகும். பிற அம்மன் தெய்வங்கள் காவல் தெய்வங்களாக இருக்க, மாரியம்மன் மட்டுமே கருணைத் தெய்வமாக இருந்து அம்மை நோய்க் காரர்களுக்கு அருள்பாலிப்பவளாகிறாள். இதன் காரண மாகவே மாரியம்மனை 'மக்கள் தெய்வம்' என்கின்றனர். ஊருக்குள்ளேயே அவளுக்குக் கோயிலமைத்து வழிபடுகின்றனர்.

ஆண்டுதோறும், மாரியம்மனுக்குச் சிறப்பாகக் கொடை விழாக்களையும் செய்கின்றனர். வறட்சியான ஆண்டில் எளிமையாகவும், செழிப்பான ஆண்டில் சிறப்பாகவும் விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால் பிற அம்மன் தெய்வங்களுக்குச் செழுமையான காலத்தில் மட்டுமே சிறப்பான விழா உண்டு. வறட்சி இருந்தால் கோயில் கொடை பெரும்பாலும் இருக்காது.

மாரியம்மனை அம்மை நோயுடன் தொடர்பு படுத்துவது போல் காளி அம்மனைக் 'காலரா' நோயுடன் தொடர்பு படுத்தும் நிலையும் உள்ளது. ஆனால் அம்மை நோயை ஏற் படுத்தி அதை நீக்குபவள் மாரியம்மன். ஆனால் காளி யம்மனோ 'காலரா' நோயை உண்டாக்குவதுடன் நின்று விடுகிறாள். அதை நீக்க வல்லவள் அல்லள் என நம்பப் படுகிறது.

அம்மன் தெய்வங்களில் சீற்றம் உள்ள தெய்வங்கள் சாந்த குணமுள்ளவர்கள் என இருநிலைகள் உள்ளன. சீற்றம் அல்லது கொடுமை நிறைந்த தெய்வங்களை ஊருக்கு வெளியே வைத்துக் கும்பிடுவது மரபு. சான்றாக இசக்கி அம்மனைக் குறிப்பிடலாம். சாந்த குணமுள்ள தெய்வங்கள் ஊருக் குள்ளேயே வைத்து வழிபடப்பெறுகின்றன. மாரியம்மன் சாந்த தெய்வம் ஆதலால் ஊருக்குள்ளேயே கோயில் கொண்டுள்ளாள்.

அம்மன் கதைகளைக் கலைஞர்கள் பலவாறாக மக்களிடம் பரப்புகின்றனர். வில்லிசைப் பாட்டிலும், தெருக்கூத்து வாயி லாகவும், இன்னும் பலவாறாகவும் பரப்புகின்றனர். அவற்றின் கதைகளையும் புனைந்துரைத்து வைத்துள்ளனர். பிற அம்மன் தெய்வங்களின் வீரதீரச் செயல்கள் நீண்ட நெடும் கதைப்பாட்டாக அமைந்துள்ளன. ஆனால் மாரியம்மன் கதை மட்டும் மிகச் சுருக்கமாக உள்ளது. மாரியம்மன் தவத்துடன் அவள் வெம்மை நோயை உண்டாக்கிய சில தலங்கள் பற்றியும், அம்மை நோயைத் தணிவிக்கும் பொருட்டு அவளைத் தங்கள் இடத்திற்கு வருகை தர வேண்டியுமே இக் கதைப் பாட்டு அமைந்துள்ளது. அதன் காரணமாகவே அதை 'வர்ணிப்பு' எனக் கூறுகின்றனர். மாரியம்மனைப் பற்றிய துதிப்பாடல்கள் பல இருப்பினும் 'மாரியம்மன் வர்ணிப்பு' மட்டுமே நீண்ட பாடலாக உள்ளது.

மாரியம்மன் அம்மை நோயுடன் தொடர்பு கொள்வது போல், குமரி மாவட்டத்தில் சில கோயில்களில் முத்தாரம்மனும் அம்மை முத்துக்களை விதைத்து அம்மைநோயை ஏற்படுத்துவதாக அப்பகுதியிலுள்ள கதைப்பாடல்கள் கூறுகின்றன. மாரியம்மனையும் முத்தாரம்மனையும் சிறப்பு நிலையில் ஒப்பிடலாம். அவ்வாறே பிற அம்மன் தெய்வங்களை மாரியம்மனுடன் ஒப்பிடமுடியும்.

மாரியம்மனும் அம்மைநோயும்

மாரியம்மனுடன் மட்டுமே தொடர்புபடுத்தப் பெறும் அம்மைநோய் அல்லது வைசூரி பலவகைப்படும். அவை:

1. பெரியம்மை (Small-pox)
2. சின்னம்மை (Chicken-pox)
3. தட்டம்மை (Measals)
4. அம்மைக்கட்டு (Mumps)
5. மணல்வாரி அம்மை

போன்றன. இவை மனிதர்களுக்கு மட்டுமே ஏற்படுவன. விலங்குகளுக்கும், பறவைகளுக்குங்கூட அம்மை நோய்கள் ஏற்படுவதுண்டு. சான்றாக, 'கோழி அம்மை' என்பதைச் சுட்டுவர். மாடுகளுக்கு 'மாட்டம்மை' ஏற்படும்.

பெரியம்மை எனப்படும் அம்மைநோய் மிகக் கொடுமையானது. விரைவில் மரணம் ஏற்படுத்த வல்லது. ஆயினும் அது தற்காலத்தில் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

சின்னம்மை என்பதுவே சாதாரணமாக எல்லோருக்கும் வரும் நோய் ஆகும். அதிலும் குழந்தைகளுக்கு அதிகமாக ஏற்படுவதுண்டு.

அம்மை நோய் ஏற்படும் காரணம்

அம்மை நோய் நான்கு காரணங்களால் ஏற்படுவதாக மக்கள் நம்புகின்றனர்.

1. மாரியம்மனும் அவள் தோழியரும் இரவில் வந்து அம்மை முத்துக்களை விதைப்பதால் அம்மை நோய் ஏற்படுகிறது எனப் பாமர மக்களிடையே நம்பப் படுவதாகக் கதைகள் வழங்குகின்றன.

2. உடம்பில் ஏற்படும் வெம்மை காரணமாக அம்மைக் கொப்பளங்கள் தோன்றுகின்றன என நம்பப்படுகிறது.

3. நாட்டில் மழையின்றி வறட்சி ஏற்பட்டு அதனால் வெப்பநிலை கூடி அதனாலும் மக்களுக்கு அம்மை நோய் ஏற்படுகிறது என நம்பப்படுகிறது.

4. அறிவியல் அடிப்படையில் அம்மை நோயை ஒருவகை வைரஸ் கிருமிகள் தோற்றுவிக்கின்றன என அறியப் பட்டுள்ளது.

அம்மை முத்துக்களை விதைத்தல்

இந்நான்கு காரணங்களுள், முதலாவதாகக் கூறப்பெறும். 'நம்பிக்கை' முழுக்க முழுக்க தெய்வ வழிபாட்டுடன் தொடர்பு படுத்தப்படுவதாகும். மக்களிடம் ஒரு பயத்தை ஏற்படுத்தி, மாரியம்மனுக்குக் கொடைகொடுத்து வழிபடாவிட்டால், அவளுக்குக் கோபம் வந்து, இரவில் அம்மை முத்துக்களை விதைப்பாள் எனப் பரப்பப்படும் செய்தியாகும்.

இதன் அடிப்படையிலேயே பெரும்பாலான மாரியம்மன் கதைகள் புனையப் பெற்றுள்ளன. மாரியம்மன் மகிடா சுரனை வதம் செய்வதற்காகப் பெற்ற அவதாரப் பிறவி முடிந்த பின்னர், கைலாயம் சென்று தவமிருந்து, 'புதுமாரி' யாக மறு அவதாரம் எடுத்ததாகவும், அப் 'புதுமாரி'யின்

அவதாரத்தின்போது, அம்மை முத்துக்களை அக்கிரமக் காரர்கள்மேல் விதைத்து அவர்களைத் தண்டிக்க வரம்பெற்று, பின்பு நாட்டின் பல பாகங்களில் அம்மை நோயை ஏற்படுத்தி, அழிவுகளைச் செய்து, இறுதியில் அமைதி பெற்றதாகவும் அக் கதைகள் அமைகின்றன. நாட்டுப்புற மக்களிடையே இன்றும் இக்கதையின் சிதறல்கள் நினைவிலிருந்து வருகின்றன. கோயில்களில் இக்கதைகளைப் பாட்டின்போதும் கூத்தின் போதும் எடுத்துக் கூறும்போது அவை மக்களிடையே நன்றாகவே பதிந்து அழியாமலிருந்து வருகின்றன. மாரியம்மன் சீற்றத்தைத் தவிர்க்க வழிபாடு நடத்தப் பெறுகின்றது.

உடம்பில் வெம்மை ஏற்படுதல்

மனித உடம்பே அம்மை நோய் ஏற்படுவதற்குக் காரணமாகும் எனும் கொள்கை முழுக்க முழுக்க உணவு, உடை, உறைவிடம், தட்ப-வெட்ப சூழ்நிலைகள் அடிப் படையில் ஏற்பட்டதாகும். நாம் உண்ணும் உணவு மற்றும் உடம்பில் ஏற்படும் பாதிப்புகளால் உடம்பிலுள்ள இரத்தம், தசை நரம்புகள் போன்றவை பாதிப்படைகின்றன. அதனால் வெம்மை ஏற்பட்டுச் சருமத்தில் கொப்பளங்கள் உண்டா கின்றன. இக்கொப்பளங்களே அம்மைக் கொப்பளங்கள் எனப்படுகின்றன. இக்கொப்பளங்கள் குமிழ்கள் போல அரும்பி, பெரிதாகி, புடைத்து வீங்கும்போது தோலில் வலி ஏற்படுகிறது. கொப்பளத்தில் சீழ் உண்டாகி, வெடித்து, அச்சீழ் வெளியே சிதறும்போது புண் ஏற்படுகிறது. சில வேளைகளில் புண் ஏற்படாமல் கொப்பளங்கள் அமுங்கி விடுவதுமுண்டு. புண் ஏற்பட்டால் தழும்புகள் நிலைத்துவிடுகின்றன. புண்ணில் வெள்ளையாக 'ஆணி' இருக்கும். அதைக்கிள்ளி எடுத்தால் தழும்பு ஏற்பட்டுவிடும். ஒருமுறை அம்மை கண்டால் மறுமுறை வராது என்பர். உடம்பில் ஏற்படும் வெம்மைத் தன்மையைக் குறைக்கவே குளிர்ச்சியான பானங்களையும், உணவுகளையும்

உட்கொள்கின்றனர். அம்மை நோய் கண்டவர்களை வேப்பிலையால் வருடியும், விபூதியளித்தும், விழுங்குவதற்கு எளிதான கஞ்சி, கூழ், மாவு இவற்றை அளித்தும் உடம்பிலுள்ள வெம்மைத் தன்மையைக் குறைக்கின்றனர். மேலும், அம்மை நோய் கண்ட பிறகு சுற்றுப்புறச் சூழல்களைத் தூய்மையாக வைத்தும், அழுக்கடைந்த ஆடைகளை நீக்கியும், வேப்பிலைத் தோரணங்கள் கட்டியும், மஞ்சள் ஆடை அணிந்தும், விரதம் மேற்கொண்டும் நடந்துகொள்கின்றனர்.

வறட்சி காரணமாக அம்மைநோய் ஏற்படுதல்

மூன்றாவதாக அம்மை நோய் ஏற்படுவதற்கு மழையின்மையே காரணமாகும் எனும் நம்பிக்கை மக்களிடையே ஏற்படுவதால் அம்மழை பெய்வதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்கின்றனர். இவற்றுள் அம்மன்கொடை கொடுத்தாலோ, பலிகொடுத்தாலோ, வழிபாடு செய்தாலோ, பூசை செய்தாலோ மழைபெய்யும் என நம்பி அவ்வாறான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். அவ்வாறான வேளைகளில் மழை பெய்தால் மாரியம்மன் மனம் குளிர்ந்து மழை பெய்வித்தாள் எனப் போற்றுகின்றனர்.

பொதுவாக, நம் நாட்டில் சித்திரை வைகாசி மாதங்களில் வெயில் அதிகமாக இருக்கும். ஆனி, ஆடி மாதங்களில் வெயில் கொடுமையுமிருந்து காற்றடிக்கத் தொடங்கும். அதன் காரணமாக மேகங்கள் சூழ்ந்து மழைபெய்யும். அதனாலேயே மாரியம்மன் கோயில்களில் ஆடிமாதம் பெரும்பாலும் அம்மன் கொடைகள் நடப்பதுண்டு. சில இடங்களில் புரட்டாசி–ஐப்பசி மாதங்களில் அக்கொடைகளைக் கொடுப்பதுண்டு. மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாகவும், வெயில்காலம் முடிவதற்கு முன்பாகவும் இக்கொடைவிழாக்கள் நடக்கின்றன. பயிர்த்தொழில் செய்வோர், அப்பயிர்களிலிருந்து வருமானம் வரத்தொடங்கியவுடன் கொடைவிழாக்களுக்கு ஏற்பாடு

செய்வர். இவற்றால், மாரியம்மன் கோயில்களில் கொடை கொடுப்பதற்கு வெப்பம், மழை, வருமானம் போன்றவை காரணமாக அமைந்துள்ளன. அம்மை நோயையும் இச்சூழ் நிலைகளுடன் தொடர்புகொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.

வைரஸ் கிருமிகளால் அம்மைநோய் ஏற்படுதல்

இறுதியாக அம்மைநோய் ஒருவகை வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது என அறிவியல் அடிப்படையில் கண்டறியப் பட்டுள்ளது. இக்கிருமிகள் உள்ள மனித உடம்பில் ஒரு குறிப் பிட்ட அளவு வெப்பம் இருந்தால்தான் அவை வேகமாகப் பெருகுகின்றன எனக் கூறப்படுகிறது. ஒரு உடம்பில் அம்மை வைரஸ் கிருமிகள் நுழைந்து பலகாலம் சரியான வெப்பநிலை வரும்வரை காத்திருக்கும் என்றும், அவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டவுடன் அம்மை நோயை ஏற்படுத்தும் என்றும், சருமத்தைப் புடைத்துக் கொப்பளங்களையும், வீக்கங்களையும் உண்டாக்கும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. நோயின் வீரியத்திற்கு ஏற்ப, கைகால் முடக்கம், கண்பார்வை நீக்கம் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. வைரஸ் கிருமிகளால் ஏற்படும் நோயை **'வைசூரி'** என்றனர் போலும்.

அம்மைநோய்க் கட்டுப்பாடு

அம்மைநோய் ஏற்பட்ட பிறகு அதைப் போக்குவதற்கும், அந்நோய் வராமல் தடுப்பதற்கும் விஞ்ஞானிகள் மருந்துகளைக் கண்டறிந்திருக்கின்றனர். நாட்டு மருத்துவம் மூலமாகவே இது வரை தீர்க்கப்பட்டு வந்த அம்மை நோய் இப்போது ஊசி மருந்துகள் வாயிலாகப் போக்கப்படுகிறது. ஊசி மருந்துகளை உடலில் செலுத்தி, நோயாளிகளைக் குணப்படுத்துகின்றனர். அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் குழந்தைப் பருவமுதலே அம்மை மருந்துகளை உடம்பில் செலுத்துகின்றனர். நாட்டில் பரவலாக அம்மை நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுவதை அறிகிறோம்.

அம்மை நோய் கதைப்பாடல் வரலாறு

அம்மை நோயைக் கட்டுப் படுத்தத் தீவிரமாக விஞ்ஞானிகள் முற்பட்டதற்கு அந்நோய் ஏற்படுத்திய அழிவுகளே காரணமாகும். காலங்காலமாக அவ்வப்போது அழிவுகளை ஏற்படுத்திய அம்மை நோய், ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தில்லியிலும், பிற பகுதிகளிலும் ஏற்படுத்திய நாசம் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளது.

கி. பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அம்மை நோய் தில்லி பாதுசா ஒருவர் காலத்தில் தில்லியைத் தாக்கிற்று என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் குறித்துவைத்துள்ளனர். அதுபோன்று வெள்ளையர் ஆட்சியின்போது நம் நாட்டின் பல பகுதிகளில் அம்மைநோய் பலரைப் பீடித்து அழித்தது. வெள்ளையர்களுக்கு இக்கொள்ளை நோயைக் கண்டால் அதிக பயம் எனக் கூறப்படும் அளவிற்கு அதன் கொடுமை இருந்துள்ளது. திருநெல்வேலிப் பகுதியில் அம்மைநோய் 18 ஆம் நூற்றாண்டில் மிகக்கடுமையாக இருந்தது என்பதை பாதிரியார்களின் குறிப்புக்களிலிருந்து (Side Lights and South Indian History from Letters and Records of Contemporary Jesuit Missionary - A.D. 1542-1750) மூலம் அறியலாம்.

தில்லியிலும், நாட்டின் பல பாகங்களிலும் நெல்லைப் பகுதியிலும் ஏற்பட்ட இந்த அம்மை நோய் பற்றி வரலாற்றா சிரியர்களுக்கும் வெளிநாட்டு மத போதகர்களுக்கும் தாக்கம் இருந்ததுபோல் தென்பாண்டி நாட்டுப் பாமரக் கலைஞனுக்கும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே அப்பாமரக் கவிஞன் மாரியம்மன் கதையைப்பாடி அதில் அம்மை தொடர்பான செய்திகளைப் புகுத்தியுள்ளான். இதிலிருந்து நம்மிடையே புழங்கும் மாரியம்மன் கதைப்பிரதிகளின் மூல பாடம் ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. விசய நகர ஆட்சியின் போது மிகவும் பிரசித்திபெறத் தொடங்கிய மாரியம்மன்

வரலாறும் வழிபாடும், இசுலாமியர், வெள்ளையர் ஆட்சியின் போது மக்களிடையே பரவி, அதன் காரணமாகப் பல கோயில்கள் ஏற்பட்டன. இன்றைய நாளில் நாடெங்கும் மாரியம்மன் கோயில்கள் அமைந்து ஒரு பெருந்தெய்வ நிலைக்கு வளர்ந்துள்ளதைக் காணும்போது மாரியம்மன் மக்கள் தெய்வம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மாரியம்மன் கதையில் ஊர்ப்பெயர்கள் பிறதெய்வங்களின் வரலாறு, பலவகைச்சொல் வழக்குகள், புதிய இசைக் கருவிகளின் பெயர்கள் போன்ற அரியசெய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. இவை இக்கதைப்பாடல் பாடப்பெற்ற கால கட்டத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

மாரியம்மன் கதைப்பாடல்

துதி

பொன்மருவும் கொன்றையணி பூங்காவனம் வாழ்க
பூசுரர் வணங்கும் பரமேசுரனும் வாழ்க
நன்மைபுரி பால்கடலில் நாரணனு[ம்] வாழ்க
நான்முகற்கு மூத்த வினாயகனும் வாழ்க

அருள்வேண்டல்

சந்தன சலமருவி செந்தில் வளர்பதியே
சண்முக சிகாமணியே தமிழ்க்குதவி செய்வாய்
சுந்தரம்சேர் தாமரையில் வந்த லெட்சுமியே
சொல்முறை தவறாமல் சற்றிரங்க வேணும்

---

1. பொன்மருவும் கொன்றையணி பூங்காவனம் – பொன்விளங்கும் கொன்றை மலர்களுடைய கைலாய மலை; பூசுரர் – பூமியில் வாழும் மக்கள்.

2. நன்மைபுரி பால்கடலில் நாரணன் – உயிர்களுக்குத் தேவையான பொருட்களைப் பாற்கடல் தருவதாலும், அவ்வுயிர்களுக்கு நன்மையை நாராயணனான திருமால் செய்வதாலும் இவ்வாறு கூறப்பட்டது.

   நான்முகற்கு மூத்த வினாயகன் – விநாயகர் முழுமுதற் கடவுள். ஓம் எனும் பிரணவ வடிவானவர். எனவேதான் பிறப்புத் தொழிலுக் குரிய கடவுளாகிய நான்முகனுக்கும் மூத்தவர் விநாயகர் எனக் கூறப்படுகிறது. விநாயகர் செந்தாமரை மலரில் பதுமாசனராய், நான்கு திருக்கரங்களிலும் யானைக் கொம்பு, பாசம், அங்குசம், மாம் பழம் உடையவர். பிரம மகா சிருஷ்டியால் சிவமூர்த்தியின் திருகண் டத்து உதித்தவர். தேவர் முதலியவர்க்குத் தலைவராக முடிசூட்டப் பட்டவர். இவருக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

3. சந்தன சலமருவி – சந்தனம் + அசலம், சந்தனமலை. திருச்செந்தூர் முருகன் சந்தன மலை அடிவாரத்தில் கோயில் கொண்டுள்ளார். இம்மலை சந்தன நிறம் போன்றுள்ளதால் இப்பெயர் ஏற்பட்டது.

   செந்தில் வளர்பதியே – (முருகக் கடவுள் தலம்) திருச்செந்தூரில் கோயில் கொண்டுள்ள இறைவனே – முருகனே. சண்முகன் – ஆறுமுகன், முருகக்கடவுள். சிகாமணியே [illegible] தன்மையானவரே.

4. சுந்தரம்சேர் . . . லெட்சுமியே – அழகு [illegible] செந்தாமரையில் தோன்றிய இலக்குமியே; சற்றிரங்க [illegible] என்மீது இரக்கம் கொள்ளவேண்டும்.

நீதி தவறாத சரஸ்வதி யெனும் தாயே
நீடு கவிபாட உஷைநீ யருள்செய்யாயே
வேதாந்தப் புலமை வைத்த குருநாதர்
வேதி அடியேனை யினியாள வரம்வேண்டும்

அவையடக்கம்

கன்னனூரு மாரியெனும் புண்ணியவதி தாயே
கல்வியோடு பாடுகிற செவ்வி யறியேனே
தனமருவும் மறையோர்கள் திருநீற்றுக் கெதிரே
சுப்பிசுட்ட சுண்ணாம்புக் குப்பையதுக் கொப்பாம்
வானரிசி பாடுந்தமிழ் வீணைக் கெதிரா
வாலக்குழந்தைகள் பனையோலை தனக்கொப்பாம்
பூணும் தமிழ்பாடும் புலவர்கள் முன்னே
புல்லுடன் சொல்லதனை நல்லவராம் நீர் பொறுப்பீர்

---

5. நீடு–நீண்ட; உஷை–சரஸ்வதியின் வேறு பெயர். செய்யாய் – செய்வாய்.

6. வேதாந்தம் – பரமான்மாவும், சீவான்மாவும் ஒன்று என்னும் அத்துவைதக் கொள்கையுடையது; புலமை–கல்வி; குருநாதர்–கதைப் பாடலாசிரியனின் ஆசான்; வேதி அடியேன் – கடவுளுக்குத் தொண்டு செய்பவன்; யினியாளவரம்–இனி அருளவேண்டும்.

7. கன்னனூரு–கண்ணனூர் என்றும் வழங்கும். திருச்சியிலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையில், எட்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கண்ணனூர். இது தற்போது சமயபுரம் எனவும் அழைக்கப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலங்களுள் ஒன்றாகக் கண்ணனூர் விளங்குகிறது. கொள்ளிட நதியில் பிரிந்து பெருவள வாய்க்கால் கண்ணனூர் மாரிகோயில் அருகே செல்கிறது; செவ்வி–பக்குவம், செம்மை.

8. தனமருவும்–வரம் விளங்கக் கூடிய; மறையோர்கள்–அந்தணர்; வழிபாடு செய்வோர்; திருநீறு – வெண்ணீறு; சுப்பி – சிப்பி – கிளிஞ்சல்; சுண்ணாம்புக் குப்பை–சிப்பியைக் காளவாயில் வைத்து நீற்றினால் வெண்பொடி கிடைக்கும்; ஒப்பாம் – சமமாகும்.

9. வானரிசி – தேவர், வானவர், கந்தருவர்; வாலக்குழந்தைகள் – இளம் பருவக் குழந்தைகள்; எழுதும் பனையோலைச்சுவடிக்கு, அரிச்சுவடிக்கு ஒப்பாகும்.

10. பூணும் தமிழ்பாடும் – தமிழ் யாப்புகளில் பாடும், புல்லுடன் சொல்லதனை – இழிவான சொல்லை.

கைலாயத்தில் சிவன் காட்சி தருதல்

வேறு

வெள்ளிக் கைலாய மலைதனிலே
மிக்க ஒலக்கால் மண்டபத்தில்
வள்ளல் சிவனார்தான் வலமிருக்க
மங்கை பார்வதி இடமிருக்க
பிள்ளை குபகர கணபதிதான்
பெரிய கணங்களும் போற்றி நிற்க
சாரும் அக்கினி தானெழும்பிச்
சந்திர மண்டலம் தானுருக
ஊரும் அமுர்தத்தைக் கீழிறக்கி
உள்ளே திருக்கோயில் சுத்திபண்ணி
மாரி பார்க்கின்ற விசயங்களை
மாணிக்க விளக்காக்கி வைத்தார்

மாரியம்மன் தவநிலை

பரம குருநாதர் செந்தாமரை
பாதம் தலைமேலே தானிருத்தி
நிறைந்த விளையாட்டைக் குறிபார்க்க
நெட்டக்குறியிலே பார்த்திருந்தாள்

---

11. வெள்ளிக் கைலாய மலை – எண்குல பர்வதங்களுள் ஒன்றும், சிவ பிரான் உறைவிடமுமான கயிலை மலை; ஒலக்கால் மண்டபம் – அத்தாணி மண்டபம், சங்க மண்டபம், சபா மண்டபம்.

13. குபகர – யானைக்கை கணபதி; கணங்கள் – சிவகணங்கள்.

14. சாரும் அக்கினி – தவத்தால் சுடர்விட்டு எரியும் நெருப்பு.

15. ஊரும் – பெருகுதல்; சுத்திபண்ணி – தூய்மை செய்து; இவை யோக நெறிகள்.

16. மாரி – அம்மன் தெய்வம்; விசயங்கள் – செய்திகள்; மாணிக்க விளக்கு – ஒளி தருகின்ற விளக்குகள்.

17. பரமகுருநாதர் – சிவபெருமான்; செந்தாமரை பாதம் தலை மேலே தானிருத்தி – சிவனுடைய திருப்பாதங்களைத் தலைமேல் கொண்டு வணங்கி; நிறைந்தவிளையாட்டை – மாரி தான் நடத்தவிருக்கின்ற திருவிளையாடல்களான அம்மை நோய் தருதல் போன்றவற்றை; குறிபார்த்தல் – பலாபலன்களை ஞானதிருட்டியில் கண்டறிதல்.

18. நெட்டக்குறி – நீண்ட நோக்கு, கண்ணோட்டம்

மாரியம்மன் சிறப்புகள்

மலைக ளெட்டு அசைந்தாலும்
மாரி திருமேனி அசையாது
சந்திரன் சூரியன் மறைந்தாலும்
கன்னனூர் மாரிக்கு இருட்டாது
மழைகள் வெகுகோடி பெய்தாலும்
மாரி திருமேனி நனையாது
குழையும் வடவாசல் சுட்டாலும்
மங்கை திருமேனி வேகாது
ஊழி[க்] கடல்பொங்கி வந்தாலும்
உடுத்த துகிலாடை நனையாது
தோளில் பெசல் காற்று வீசினாலும்
மங்கை கூந்தலது உலையாது
புதிய திருமேனி யண்டுகின்ற
புனுகுப் போது அறியாது

---

19. மலைகளெட்டு – எண்வகைப் பர்வதங்கள்; திருமேனி – உருவம்

20. மாரிக்கு இருட்டாது. – இந்நிலவுலகம் இருக்கும் வரை சூரிய சந்திரர் இருப்பர் என்பது வழக்கு. அவ்வாறு அவர்கள் ஏதாவதொரு காரணத்தால் ஒளிதராது உலகம் இருண்டுவிட்டாலும் மாரி அம்மன் இயற்கையிலேயே நெருப்பாக, கனலாக, வெப்பமாக, தீயாக இருப்பதால் அவள் உடலிலிருந்து ஒளி எப்போதும் வந்துகொண்டிருப்பதால் 'இருட்டாது' என்றார்.

21. வெகுகோடி – மிகுந்த அளவு; நனையாது – வெப்பமிகுதியில் மாரியின் திருமேனியில் மழைநீர் பட்டவுடன் அது ஆவியாகிவிடும். ஆதலால் இவ்வாறு கூறினார்.

22. குழையும் வடவாசல் – மிகுதியான வெப்பமுடைய வடவாக்கினி; வேகாது – சுடாது; ஏனெனில் வடவாக்கினியும் மாரி மேனியும் வெப்பமானவையாதலால் 'வேகாது' என்றார்.

23. ஊழிக் கடல் பொங்குதல் – யுக முடிவில் கடல் பெருகி உலகம் அழியும் எனக் கூறப்படுகிறது.

24. பெசல் காற்று – (புயல் – புசல் – பெசல்) – புயல்காற்று, சூறாவளி. உலைதல் – கலைதல்.

25. புதிய திருமேனி – இறைமை என்றும் அழியாத் தன்மையுடையது; கன்னித் தன்மையோடிருப்பதால் 'புதிய திருமேனி' உடையவள் என்று கூறப்படுகிறது; அண்டுகின்ற – பொருந்துகின்ற, சேருகின்ற; புனுகுப்போது – நறுமணப் பொருள்; புனுகுப் பூனையிலிருந்து கிடைப்பது. அழியாது – மணம் என்றும் நீங்காது.

வேம்பின் சிறப்பு

மாரிஇடுப்பிலே முளைத்த வேம்பு
மரமுங் கற்பக மரமாமே
முளைத்த வேம்புதான் வளர்ந்து
முக்காதவழி சுத்திக் கோட்டையிட
தளுத்த இலையை விழுங்கிவிட்டால்
சாகா திருக்கலாம் வெகுகாலம்
யீரேழு உலகம் அழிந்தாலும்
யிலையில் ஒருவாளி உதிராது

---

26. மாரி இடுப்பிலே முளைத்த வேம்பு – மாரியம்மன் தவமிருப்பதால், அவள் உடம்பில் முளைத்த வேம்பு கிளைவிட்டு அவள் உடலைத் துளைத்து அது வளர்ந்துள்ளது; மரமுங்கற்பக மரமாமே – வேம்பின் சிறப்புக் கருதி அதைக் கற்பக மரமாகக் கூறப்படுகிறது; கற்பகம் – தேவருலகத்து ஐந்து தருக்களுள் ஒன்று. வேண்டியதை எல்லாம் தரும் மரம். தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்தில் தோன்றியது. இது விருக்ஷ உருப்போன்றது. எட்டுக் கிளைகளையுடையது. இதில் படருங்கொடி காமவல்லி. அதைப் போன்று வேம்பும் உள்ளது. வேப்பம்பட்டை, தடி, இலை, காய், கனி, கொட்டை என்பன பல வகை மருந்துகளாகின்றன. எனவே இவ்வாறு கூறப் பெற்றது.

27. முக்காதவழி – மூன்று காதவழி; ஏழரை நாழிகை வழித்தொலைவு ஒரு காதம் ஆகும் ; இது பத்துக் கல் தொலைவுள்ளது, சுத்தி – சுற்றி, கோட்டையிட – கோட்டை போல் படர்ந்து காட்சி அளித்தல்; பொதுவாக வேம்பின் கீழே மாரி அம்மன் கோவிலிருப்பதால் அம் மரம் படர்ந்த இடம் முழுவதும் கோயிலுக்குரிய நிலம் ஆகும்.

28. தளுத்த – தளிர்த்த, கொழுந்துவிட்ட; விழுங்கிவிட்டால் – உட் கொள்ளுதல். வேம்பு இலை கசப்புத்தன்மை உடையது என்பதால் அதைச் சுவைத்து உண்ணமுடியாது. எனவே அவ்விலையை அரைத்து, நுனி நாக்கில் படாது, உள்நாக்கில் இட்டு விழுங்கி விடுவர். அவ்வாறு வேப்ப இலைச்சாறு வயிற்றினுள் சென்றால் சாகா திருக்கலாம். அதிலுள்ள மருந்துத்தன்மை கிருமிகளைக் கொன்று உடலுக்கு நன்மை பயக்கும்.

29. ஈரேழு உலகம் – சுவர்க்கம், மத்திபம், பாதாளம், பூலோகம், புவர் லோகம், சுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் இவை மேலுலகங்கள், அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன கீழ் உலகங்கள். இப்படி 2X7=14 உலகங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஒருவாளி உதிராது – இலைக்கொத்தில் ஒரு சிறு பகுதியும் உதிராது; இலை காம்பை விட்டு நீங்காது என்க.

மாரி திருமேனிதனைப் பொதிந்து
    வந்த பேருக்கெல்லாம் வாய்பேசும்
அம்மை கன்னனூர் மாரியென்று
    விண்ணில் தேவர்கள் கும்பிடுவார்
காம்பில் பிடிக்கின்ற கனியைத் தின்றால்
    காட்டுப் பறவையும் தேவராவார்
கன்னனூர் மாரி வேம்புதனில்
    கதலி வருக்கை பழம்பழுக்கும்
தன்னம் தாமரை அலரி பிச்சி
    சகல பூக்களும் பூத்திடுமாம்
விரைந்த சந்தனமலர்[க்] காவும்
    வேம்புபோல் மணம் வீசா

---

30. மாரி திருமேனிதனைப் பொதிந்து வந்தபேர் – மாரியம்மன் வடிவம் தாங்கியோர்; வேப்பிலை ஆடை அல்லது மஞ்சள் ஆடை உடுத்தி, வேப்பிலையைக் கையில் ஏந்தி; மாரியின் பிரதிநிதியாகவே காட்சியளிக்கும் பக்தர்கள்; மாரியின் வேடமிட்டுவருவோர் என்க; வாய்பேசும் – மாரி வேடமிட்டு வருவோர் அருள் வாக்கு தருவர். மாரித்தெய்வம் மழையுடன் தொடர்புபடுத்தப்படுதலின் அனைவரும் 'எப்போது மழைபெய்யும்' எனக் கேட்பர். அவர்களுக்கு அருள்வாக்கு கிடைக்கும் என்பதைக் குறிப்பிடுகிறார்.

31. விண்ணில் தேவர் – அமரர்கள்: கும்பிடுவார் – வணங்குவார்; மதுரை, திருநெல்வேலி, தென்னார்க்காடு போன்ற தமிழகப் பகுதிகளில் தெய்வங்களை வழிபடுவதைக் 'கும்பிடுதல்' என்று வழங்குவர். இதன் அடிப்படையிலேயே அம்மன் வழிபாட்டைச் 'சாமி கும்பிடுதல்' என்றும் வழங்குவர். இதில் அம்மன் கொடை விழாவைப் 'பெரிய கும்பிடு' என்றும், நாள் வழிபாட்டைச் 'சிறிய கும்பிடு' என்றும் வழங்குவர்; 'கொடை கொடுத்தல்' என்றும் 'சாமி கும்பிடுதல்' என்றும் வழங்குதலுமுண்டு.

32. காம்பில் பிடிக்கின்ற கனி – வேம்பின் கனி, இக்கனியின் மருத்துவச் சிறப்புக் கருதி இதை உண்ணும் பறவைகூட அமரர் இயல்பைத் தரக்கூடிய பிறவியடையும் என்று நம்பப்படுகிறது.

33. கதலி – கதலி வாழை; வருக்கை – பலா; கன்னனூர் மாரி வேம்புதனில் பழுக்கும் கசந்த வேப்பங்கனியானது கதலிவாழை, பலாப் பழங்களின் இனிய சுவையை ஒத்து விளங்கும்.

34. தன்னம் – தண்ணம், குளிர்ச்சி; அலரி – ஒரு பூச்செடி; பிச்சி – ஒரு வகை நறுமண மலர்: சகலபூக்களும் – எல்லாப்பூக்களும் வேப்பம் பூவிற்கு இவ்வியல்பு உள்ளது.

35. விரைந்த – மணங்கமழ்கின்ற; வேம்புபோல் மணம் வீசாது – இந்த உவமையால் வேம்பிற்கு உயர்வு சேர்க்கப்படுகிறது; சந்தனமரக் காடுகளில் ஏற்படும் மணத்தைக்காட்டிலும் வேப்பம்பூமணம் நல்லது என்கிறார்.

மாரியம்மன் காட்சி

அரக்க ராச்சதர் அணுகாமல்
அநேகபூதம் காத்து நிற்க
கையில் பிரம்பது கொடுவீசி
காதவழி சுத்திக் கோட்டையிட
தோளில் சாத்திய சூலமது
துவளு மரிக்காக வாய்பிளக்கும்

---

36. அரக்க ராச்சதர் – ஒரு பொருள் இருசொல்; ராச்சதர் 'இராக்கதர்' என்பதன் திரிபு; இராக்கதர் – பிரமன் அரக்கர்களையும். அமரர் களையும் சிருட்டித்தான். அரக்கர்கள் பிரமனை நோக்கிப் பசியால் மற்றவர் இரக்ஷிக்க வேண்டுமென்றனர். இப்படிப்பட்ட வரை பிர மன் இராக்கதராகவும், பிறரை வேண்டுமென்றவரை அமரராக வும் படைத்தான் என்று புராணம் கூறும். அநேக பூதம் – எண்ணிக் கையில் கூடுதலான பூதங்கள். மந்திர சாத்திரத்தில் கூறியபடி பூதம் 18 வகைப்படும். அவை தேவ, அசுர, காந்தருவ, யக்ஷ, சர்ப்ப, ராக்ஷஸ, கூக்ஷ்மாண்ட, காம, கிரகண, வேதாள, பிரமராக்ஷஸ, யதாகாரிக்ஷ, அர்த்தபித்ர, பைசாச, குரு, விருத்த, சித்த, முனி முதலி யன. இந்தப் பூதகணங்கள் மனிதரிடத்தில் பிரவேசிக்கும் இடத்தில் ஒளியுடன் திகழும். ஊழ்வினை, கிரகணசந்தி, பக்ஷங்களின் சந்தி, மாலைமயக்கம் சையோகம், விரத அநுஷ்டானக்கேடு, பாழ்சாவடி யில் நித்திரை, பெரியோர்களை நிந்தித்தல் ஆகிய இக் காலங்களில் பூதம் தொடரும் எனக் கூறப்படும்.

37. பிரம்பு – மூங்கில் குச்சி; கொடுவீசி – கொண்டு சுழற்றி; மாரி அம் மன் கோயிலில் பிரம்புகள் வைக்கப் பெற்றிருத்தல் உண்டு. அம் மன் சாமி ஆடுவோர் அப்பிரம்பைக் கையில் கொண்டிருப்பர். அதை வீசும் போது விஸ்தீரணமான இடம் கிடைக்கும். அதனால் இவ்வாறு கூறினார்.

38. சாத்திய – சாற்றிய, வைத்த; சூலம் – மூன்று கூரிய முனைகளுடைய ஆயுதம்; இதற்குத் 'திரிசூலம்' என்றும் பெயர் உண்டு. 'திரிசூலம்' என்பதை 'முத்தலைச் சூலம்' என்றும் கூறுவர். சூலம் அம்மன் தெய்வங்களுக்குரிய ஆயுதமாகக் கொள்ளப்படுகிறது. எனவேதான் கொற்றவைக்குரிய வேறு பெயராகத் திரிசூலி கூறப்பட்டுள்ளது. (நிகண்டு சொற்பொருள் அகராதி). துவளுமரி – துடிக்கின்ற ஆடு. 'துள்ளுமரி' என்பது கொழுத்த இளம் ஆடு என்பது பொருள். அம் மன் வேண்டுதல் செய்யும் பக்தர்கள் துள்ளுமரியைத்தான் பலி கொடுப்பார்கள். வயது முதிர்ந்த ஆட்டைப் பலி கொடுப்பது இல் லை. எனவேதான் 'துள்ளுமரி' கொடுத்தல் என்பது இளம் ஆட்டை அம்மனுக்குப் பலி கொடுக்கும்போது துடித்து இறந்துபடுகின்ற ஆட் டைக் குறிக்கும். இங்கு ஆடு என்பது ஆண் (கிடா) இனத்தைக் குறிக்கும்.

கழுத்தில் பூசிய மஞ்சணைதான்
கட்டித் தங்கமாக விளைந்திடுமாம்
விளங்கு திருநீற்றுக் கப்பறைதான்
வேலைக் காரருக்குப் படியளக்க
துலங்குசடை மேலே முளைத்த மூங்கில்
சூரிய மண்டலம் தொட்டுநிற்க
கொண்டை சுருக்கிலே முட்டையிட்டுக்
குருவி அன்னங்கள் அடைகாக்கும்

---

39. மஞ்சணை – தெய்வத் திருமேனிகளில் பூசப்படும் மஞ்சள் குங்குமச் சாந்து; கழுத்தில் விழுந்திடுமாம் – மாரியின் கழுத்தில் பூசப்படும் குங்குமக் குழம்பு கட்டித் தங்கத்திற்கு உவமை; வெப்பமான மேனியில் பட்டு, தங்கமாகப் பிரகாசிக்கிறது என்க.

40. கப்பறை – பாத்திரம். திருநீறு இட்டு வைக்கும் உலோகக் கிண்ணம்; மரத்தால் செய்யப் பெற்ற திருநீற்றுக் கப்பறையும் உண்டு. வேலைக்காரருக்குப் படியளக்க – திருநீற்றுச்சோழன் கதையில், 'கோயில் வேலை' செய்தவருக்குத் திருநீற்றை அள்ளி வழங்கியதன் மூலம் அவரவர்களுக்கு அத்திருநீற்றில் கூலியாகப் பொற்காசுகள் கிடைக்குமாறு அரசன் செய்தான். இவ்வாறு சோழன் வழங்கியதால் அவனுக்குத் திருநீற்றுச் சோழன் என்ற பெயர் ஏற்பட்டது. இதைப் பின்வரும் வரிகளாலும் தெரிந்து கொள்ளலாம், "திருநீற்றுச் சோழன் பிறந்ததுவும், திருமதில் மண்டபம் கண்டதுவும்" (ஸ்ரீ பார்ப்பநாத சுவாமிக்கதைப்பாடல்) திரு ஆனைக்கா கோயில் திருமதிலின் திருப்பணி செய்யும்போது சோழனுக்குப் பொருளில்லா திருந்த நிலையில், இறுதியான ஒரு மதிலையும் முடிக்கும் தறுவாயில், சிவமூர்த்தி ஒரு சித்தர் உருக்கொண்டு தோன்றி விபூதியைக் கூலியாகக் கொடுத்துத் திருமதிலை முடிப்பித்தார், என்றும் கதைகள் வழங்குகின்றன. இந்த அடிப்படையிலேயே இங்கும் மாரியம்மன் கதையில், மாரியம்மன் கோயில் திருப்பணியின்போது, வேலைக்காரர்களுக்கு விபூதி கூலியாகக் கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது.

41. துலங்கு சடை – முடிகள் ஒன்று சேர்ந்து கட்டியான கற்றையாகி விடும். இதைச் சடாமுடி என்பர்; முளைத்த மூங்கில் – அவ்வாறான சடாமுடியில் மூங்கில் முளைத்து வளர்ந்துள்ளது.

42. கொண்டை சுருக்கு – கொண்டை (முடி) சுருக்கு, தலைமுடியை ஒன்றாகச் சேர்த்து முடித்த அலங்காரம். கொண்டை அலங்காரம் பல வகைத் தோற்றத்துடனிருக்கும்; அடை கிடக்கும் – அடைகாக்கும், முட்டைகள் மேல் படுத்திருத்தல் 'அடைகாத்தல்' ஆகும்.

தண்டை[க்]கால் மட்டும் சடைவளர்ந்து
தாரணி தன்னிலே விழுதூன்ற
அம்மை உடுத்ததோர் கொய்வதிலே
அய்ந்து த்லைநாகம் அடைகாக்கும்
செம்மை கிளிப்பிள்ளை உடன்பிடித்த
செண்டு வாடாமல் அசைந்துநிற்க
அழகுத் திருமேனி தெரியாமல்
அனேக புலிகள் சொரிராவும்

---

43. தண்டைக்கால் – கரண்டை அல்லது கெண்டைக் கால் என்பது தண்டைக்கால் என வந்துள்ளது. தண்டை எனும் காலணி அணிவதாலும் இப்பெயர் ஏற்பட்டது; மட்டும் – வரை; சடை வளர்ந்து – சில சந்நியாசிகளுக்கும் சந்நியாசினியர்க்கும் சடாமுடி கால்வரை – தொங்குவதுமுண்டு. அதைவிடவும் மாரிக்கு அதிகமாக வளர்ந்துள்ளது. தாரணி தன்னில் – நிலத்தில்; விழுதூன்ற – ஆலமரத்தில் கிளையிலிருந்து தோன்றும் வேர் நிலத்தில் படிந்து. வேரடித்து அம்மரத்தையே தாங்கும் அடி மரமாக மாறும். அதைப் போன்று மாரியின் சடையும் நிலத்தில் வேரூன்றியுள்ளது.

44. அம்மை – மாரியம்மன்; உடுத்த – ஆடையாகச் சுற்றியுள்ள; கொய்வம் – புடவை மடிப்பு; சேலையைப் பெண்கள் கட்டும் போது முந்தா னையை இடுப்பில் (வயிற்றுக்குக்கீழ் பல அடுக்குகளாக மடித்து (கொய்து) உள் ஆடைக்குள் செருகுவர். இதை நாட்டுப்புற வழக்கில் 'கொசுவம்' என்பர். இவ்வாறே மாரியம்மனுக்கும் கொய்வம் வைத்துச் சேலை கட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

45. செம்மை கிளிப்பிள்ளை – சிவந்த வாயினையுடைய பச்சைக்கிளி: உடன்பிடித்த செண்டு – கிளி ஒரு கையிலும், பூச்செண்டு மற்றொரு கையிலும் மாரி அம்மன் பிடித்துக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான தோற்றமுடைய திருவுருவங்கள் மாரி அம்மன் கோயில்களில் சித்திரமாகவும், படிவமாகவும் உள்ளன.

46. அழகுத்திருமேனி சொரிராவும் – புலிகள் மாரியம்மன் தவமிருக்கும் கோலத்தை அறியாது. சூழந்து நின்று தம் தினவெடுத்த உடலை அம்மன் திருமேனி மீது தேய்க்கும்; அவ்வாறு அசையாத மரக் குத்தியாயிருந்து அம்மன் தவமியற்றுகிறாள் என்க. மார்க்கண்டேயனின் தந்தை தவம் செய்தபோது.

அன்னா ளதனிலே (ஆ)ன வனந்தனிலே
சின்னமரக் காவில் சிறந்துவந்து தான்கூடி
பாங்காக வாழும் பாரமிருக மெல்லாம்
வேத முனிதன் முதுகில் விஷ்த்தாரமா யுரைசும்

என வந்துள்ளது (பார்க்க: மார்க்கண்டேயன் கதைப்பாடல்: 67)

செவியில் முளைத்த மணியறுகு
    சென்று முக்கோட்டை யூன்றிநிற்க
பக்கப்பழுத்திடும் மஞ்சணையும்
    பாக்குச் சிவந்திடும் கனிவாயும்
செக்கச் சிவந்த திருமேனி
    செந்தா மரைமுகத் தழகும்
தன்னந் தனியாக[ப்] பன்னிரண்டு
    சகல பூக்களும் பூத்திடுமாம்
இன்னும் திருமனம் இரங்காமல்
    ஈசன் மலைமேலே இருந்துகொண்டார்
வந்து திருமுகம் காட்டாமல்
    வாணாள் மருந்தல்ல சிவனேயென்றாள்

---

47. செவியில் . . . யூன்றிநிற்க – மாரியம்மன் தவம் செய்யும்போது அவளைச் சுற்றி வளர்ந்த வேப்பமரங்கள் 'முக்கோட்டை' போல் தழைத்து நிற்பதாக முன்பு கூறப்பட்டது. இங்குச் செவியிலிருந்து முளைத்த அறுகம் புல்லுகள் அந்த வேம்பைச் சார்ந்து நின்றன எனக் கூறப்பட்டுள்ளது. சிலர் காதுகளில் முடி வளர்ந்துள்ளதைக் கண்ணுற்ற இக்கதைப் பாட்டுக்கவிஞன் இந்த வருணனையை மாரியம்மன் செவியைப் பற்றிக் கூறும்போது பயன்படுத்தி யுள்ளதை உணரமுடிகின்றது.

48. பக்கப்பழுத்திடும் – 'செக்கச் சிவந்த' என்பது போல் பக்கப்பழுத் திடும் என வந்துள்ளது. மஞ்சணை – அரைக்கப் பெற்ற மஞ்சள் சாந்து. பாக்குச்சிவந்திடும் கனிவாய் – வெற்றிலை + பாக்கு + சுண் ணாம்பு, இவற்றை வாயிலிட்டு நன்கு மென்று தின்பதால் வாய் சிவக்கும். அப்படிச் சிவந்த வாய் 'கனி போன்று சிவந்தவாய்' என உவமிக்கப்படுகிறது.

49. செக்கச்சிவந்த திருமேனி – மிகச்சிவந்த நிறமுடைய அழகிய உடம்பு; செந்தாமரை முகத்தழகும் – செந்தாமரை மலர் போன்ற சிவந்த முகத்தின் அழகும்.

50. தன்னந் தனியாக[ப்] பன்னிரண்டு சகல பூக்களும் – வெவ் வேறுபட்ட பன்னிரண்டு பூக்கள். மாரியம்மனுக்குக் கூறப்படும் அனைத்துப் பூக்களும் இதில் அடங்கும் என்பதால் 'சகல' பூக்கள் எனப்பட்டன.

51. திருமனம் இரங்காமல் – சிவபெருமான் இரக்கம் கொண்டு அருள் புரியாமை இங்குக் கூறப்படுகிறது; ஈசன் – சிவன்; மலை – கைலா யம்; திருமுகம் காட்டாமல் – தவமிருக்கு மாரிக்குக் காட்சி கொடுக்காது.

52. வாணாள் – வாழ்நாள், ஆயுள்; வாணாள் மருந்தல்ல – சிரஞ்சீவி மருந்து. எப்போதுமிருப்பதுபோல் அல்லது வாழ்நாள் (உடல்) விரைவில் முடிந்துவிடும் என்பது கருத்து.

மாரியம்மன் சிவனிடம் வரம்பெறுதல்

ரிசபம் தன்னில் உமையுடனே
னின்ற வடவா முகமதிலே
வடவாமுகம் போன்ற திருமேனியை
வந்து வணங்கினாள் மாரியம்மை
சின்னஞ்சிறு பிள்ளையா இருந்தும்
செய்த தவசு பெரிதுயென்றார்
உன்னை ஒருதட்டில் வைத்தாலும்
உலகம் ஒருதட்டு தூங்காது
இந்தப்படி நின்று சாதிப்போர்க்கு
யேது அதிகாரம் வேண்டுமென்றார்
அந்தத் திருவாக்கு செவியில் உற்று
அம்மை ஒருவார்த்தை யேதுசொல்வாள்

---

53. ரிசபம் – சிவபெருமானின் வாகனமான நந்தி. இவர் சர்வ சம்மார காலத்தில் சிவமூர்த்தியை அடைக்கலம் புகுந்து வாகனமானார். கருடனைக் கர்வபங்கஞ் செய்ததால் பூமியில் பசவேசராகப் பிறந்து சிவபூசை செய்து கைலையடைந்தார். சிவன் ஆணையால் தக்கன் யாகசாலைக்குச் சென்று, சிவநிந்தை செய்த தேவர் சூரனால் வாதையடையச் சாபமிட்டுத் திருக்கைலையடைந்தார். சிவமூர்த்தி பார்வதி பிராட்டிக்கு ஞானோபதேசஞ் செய்த காலத்தில் குமரக்கடவுளை அவர்களிடம் கட்டளையின்றி விட்டு, அதனால் சுறா மீனாகச் சாபமடைந்து, வலையராய் வந்த சிவமூர்த்தியால் பிடியுண்டு, சாபம் நீங்கப்பெற்றார். இவர் தவமியற்றிப் பருவதவடிவம் பெற்று, ஸ்ரீபர்வதமாய்ச் சிவமூர்த்தியைத் தாங்கினார். விஷ்ணு மூர்த்திக்குச் சிவமான்மியங் கூறினார். இராவணனைக் குரங்கால் உன் பட்டணமழிக வெனச் சபித்தார். முப்புராதியரான திரிபுராதியர்களை வளர்த்துச் சிவ உபதேசம் செய்தார். இவ்வாறு இவர் வரலாறு விளங்குகிறது.

54. வடவாமுகம் – வடந்தைத்தீ, பெண்குதிரை முகத்தின் வடிவோடு கடலுக்குள் தங்கியிருந்து ஊழி முடிவில் மேலே கிளம்பி உலகத்தை எரித்து விடுவதாகக் கருதப்படுந் தீ ;இங்கு வடவாமுகத்தீக்குச் சிவன் முகம் உவமிக்கப்படுகிறது; வடவாமுகம் . . . . . மாரியம்மை – தீப் பிழம்பு போன்ற சோதியான சிவன் திருமேனியை மாரியம்மன் வணங்கினாள்.

55. சின்னஞ்சிறு . . . . . தூங்காது – மாரியம்மன் சிவனை நோக்கித்தவம் செய்ததால் அவள் தவத்தை உயர்வாகப் பாராட்டுகிறார்.

56. மாரியம்மனையும் உலகத்தையும் இருவேறு தட்டுகளில் வைத்து நிறுத்தால் உலகமே மாரியம்மனுக்கு ஈடாகாது. அத்தகைய தவ வலிமை பெற்றவள் மாரியம்மன்.

57. சாதிப்போர் – நிறை வேற்றுபவர்;

58. திருவாக்கு – சிவனின் வாய்மொழியால் வந்த பாராட்டு.

முன்னே ஒருதரம் வரம் வாங்கி
முத்தா ரம்மன் தன்னாட்டில்
பண்ணும் வயிரவன் வீரபத்திரன்
பக்க[த்] துணையாக விளையாடினேன்
பின்னும் ஒருதரம் வரம்வாங்கி [ப்]
பெரிய சந்தன மாரியானேன்
கொன்று சினம்தீர்த்து முடிந்தபின்பு
கும்பிட்டு யெல்லோரும் குடியானார்

---

59. ஒருதரம் – ஒருமுறை, ஒருதடவை.
'முன்னே ஒருதரம் வரம் வாங்கி முத்தாரம்மன் தன்நாட்டில். . . . விளையாடினேன். ஏழு கடலுக்கு அப்பாலுள்ள சம்புத்தீவு என்ற சொர்ண பூமியில் ஆதிமுனி மந்திரத்தால் மூன்று அரக்கியர் பிறந்து, அவர்கள் சத்தி முனிவர் தந்த பரல் வழி நீலன், குமுதன் ஆதித்தன் (திரிபுராதியர்) எனும் மூன்று புதல்வர்களைப் பெற்றெடுத்தனர். அக்குழந்தைகளின் மூர்க்கக் குணத்தைக்கண்டு அவர்களைக் காட்டிலேயே விட்டு மறைந்தனர். அக்குழந்தைகளை நந்திதேவர் எடுத்து வளர்த்து வந்தார். சத்தி முனிவர் வளர்த்த வேள்விப் புகையை அவிக்க, சிவன் பார்வதியை அனுப்பிய போது, பார்வதி தன் வேர்வையை வேள்வியில் வீசவே மூன்று முகத்துடன் முத்தாரம்மன் தோன்றினாள். முத்தாரம்மனைத் திரிபுராதியருக்குத் துணையாக விளங்க அனுப்புவதற்குச் சிவனிடம் வரம் வேண்டினாள் பார்வதி. அதன்படி முத்தாரம்மன் முப்புரத்தில் தங்கியிருந்த முப்புராதியருக்குத் துணையாகச் சென்றமர்ந்தார். எனவே முத்தாரம்மன் நாடு, திருபுராதியரின் நாடு என்க. மாரி அம்மன் பார்வதியின் அமிசமாதலாலும், பார்வதி முத்தாரம்மனைப் பிறவி செய்ததாலும் மாரியின் முன்அவதாரம் முத்தாரம்மன் அவதாரம் என இணைக்கப் பெற்றது.'

60. வயிரவன் – ஒரு காவல் தெய்வம்; பைரவர் என்றும் கூறுவர். சிவ கணங்களுள் ஒருவர் பைரவர். வீரபத்திரன் – சிவன் ஏவல் செய்து வந்த வீரபத்திரன். முத்தாரம்மன் திரிபுரம் செல்லும் போது பக்கத் துணையாகச் சென்றான், என முத்தாரம்மன் கதைப்பாடல் கூறுகிறது.

61. பின்னும் ஒருதரம் ... மாரியானேன் – மாரி அம்மன் அவதாரங்களில் ஒன்று சந்தனமாரி. சந்தன நிறமுடையவளாதலால் இப் பெயர் பெற்றாள். மாரி அம்மன் திருமேனியில் சந்தனத்தைப் பூசி அவள் உருவம் வெள்ளியும் மஞ்சளும் கலந்த தோற்றத்துடன் விளங்குமாறு செய்ததால் சந்தனமாரி எனப்பட்டாள். சந்தனமாரியாகப் பிறவி எடுத்தது 'கன்னனூரில்' என்க. இதன் வரலாறு முன்பு காண்க. சந்தனமாரியைப் போன்றே நிறத்தால் 'கருமாரி' என்றும் வழங்கப் படுதல் காண்க.

62. கொன்று சினம் தீர்த்து முடிந்தபின்பு – இக்கதை மகிடன் எனும் அசுரனை கொன்று ஒழித்த கதை. கும்பிட்டு – வணங்கி; குடியானார் – அம்மனை வழிபடும் குடிமக்களானார்.

இன்றைக்கு அன்றையப்போல் வணங்காமல்
இடும்பு பெருத்துதே உலகதிலே
நாட்டுக்கொரு கோவில் கட்டிக்கொண்டு
நம்மனை[க்] கும்பிட்டார் முக்காலம்
இப்போவீட்டுக் கொருகோவில் கட்டிக்கொண்டு
பேய்களைக் கும்பிட்டார் இக்காலம் 65
யென்னை வணங்காமல் இருந்தபேர்கள்
ஈசனே உன்னை வணங்குவாரோ
துன்னங் குடிகளைச் சோதியாமல்
சும்மா இருப்பாரோ ராசாக்கள்
புதுமை நடத்தாமல் பழமையிலே
புரையாட்டம் கெட்ட பெண்கள்

---

63. அன்றையப்போல் – அன்றுபோல்; இடும்பு பெருத்துதே உலக திலே – அம்மனை வணங்காத காரணத்தால் உலகத்தில் திமிர், துஷ்டச் செயல்கள் பெருகின.

64. நாட்டுக்கொருகோவில் – மாரியம்மன் மழைக்கடவுள் என்பதால் எல்லா நாடுகளிலும், ஊர்களிலும் கோவில் கட்டி வழிபடும் நிலை உருவாயிற்று. "மழையின்றி மக்களில்லை". எனவே மாரியின்றியும், மாரியம்மன் இன்றியும் மக்கள், நாடுகள் இருக்க முடியாது.
நம்மனை – நம்மை; முக்காலம் – முற்காலம்; 'முன்பு' என்க. முக்காலம் என்பதைக் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகள் எனவும் கூறலாம். இவ்வேளைகளில் தெய்வங்களுக்கு வழிபாடு நடைபெறுவது இயல்பு. இது ஓரளவு செல்வாக்குப் பெற்ற கிராமக் கோயில்களிலும் நடைபெறும். இவை தவிர நகர்ப்புறங்களில் இந்த ஆறுகாலப் பூசை மேற்கொள்ளப் படுவதுண்டு. அதிகாலை, காலை, நண்பகல், மாலை, இரவு, நள்ளிரவு என்பன. தவிர ஒரு வேளை மட்டும் பூசை செய்யப்படுகின்ற கோவில்களும் உண்டு.

65. வீட்டுக்கொரு கோவில் – நாள் செல்லச் செல்ல பொதுக்கோவில்களில் சென்று வழிபடாது. இறந்த தம் மூதாதையருக்குத் தம் வீட்டருகில் கோவில் கட்டி, அவர்களை இக்காலத்தில் வணங்கி வருவது இங்குக் குறிக்கப்படுகிறது.
பேய்களைக் கும்பிட்டார் – இறந்தவர்களை வழிபடல்.

66. என்னை வணங்காமல் . . . . . வணங்குவாரோ – சிவன் இல்லையேல் சக்தி இல்லை. சக்தி இல்லையேல் சிவன் இல்லை என்ற கொள்கையுள்ளது. இங்கு ஊர்த்தெய்வமான பெருந்தெய்வத்தை வணங்குவதில்லை எனக் கருதப்படுகிறது.

67. துன்னங்குடிகள் – உழவர்களைச் சார்ந்திருக்கும் தோல்களைத் தைப்பவர். சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் இருந்தவர்கள் ராசாக்களால் அடிமைப்படுத்தப்பட்டதை இது கூறுகிறது.

68. புரையாட்டம் – புண்ணிலிருந்து வழியும் 'சீழ்'. 'புரையோடியுள்ளது' என்பது மரபு. கெட்டபெண்கள் – வழுக்கி விழுந்தவர்கள்.

மரியாதிக் கேடு வாராமல்
வார்த்தை தாருங்கா ணீஸ்பரனே

பரமன் வரம்

உள்ளபடி சொன்னாள் புதுமாரி
உலகுக் கதிகாரம் தந்தேனென்றார்
கள்ளப் பேய்களைக் குறும்படக்கி[க்]
காப்பது உன்கடனே யென்றார்
குறும்பதை அடக்கிக் குடியாக்க[க்]
கோடி வரந்தந்தேன் புதுமாரி
பெரு[ம்]பேறு யெல்லாம் வாங்கிக்கொண்டு
பின்னு[ம்] ஒருவரம்தான் கேட்டாளாம்

மாரியம்மன் வேறுவரம் கேட்டல்

குருவின் வார்த்தையைக் கொள்ளாத பேர்களும்
கோவில் பூசை குறைக்கின்ற பேர்களும்
இவர்க ளிடும்பை யகற்றிட
ரெண்டு லட்சம் சிவபூதம் வேணுமே

---

69. மரியாதி – மரியாதை என்பதன் திரிபு (வழக்குச்சொல்); கேடு – பங்கம். வார்த்தை – வரம்; தாருங்காண் – தருக.

70. புதுமாரி – தெய்வப் பிறவியான மாரி. உலகில் மறுபிறவி எடுத்துப் புதுத்தொழிலை மேற்கொள்ள வருவதால் புதுமாரி எனப்பட்டாள்.

71. பேய்களைக்குறும்படக்கி – கெட்ட சக்தியை நல்ல சக்தியால் கட்டுப் படுத்தி; 'தாங்களே தெய்வம்' எனக் கூறி மக்களைத் திசைதிருப்பும் பேய்களின் துஷ்டச்செயல்களை நீக்கி, காப்பது–உலகைக் காப்பது.

72. குடியாக்க – பேய்களை வணங்குவதை ஒழித்து மக்கள் நல்ல குடிகளாக ஆகுதல்.

73. பெரு[ம்] பேறு – பெற்ற பெரிய வரங்கள்.

74. குருவின் வார்த்தையை . . . பேர்கள் – ஆசிரியரின் உபதேசம் ஏற்காத மாணவர்கள்.
கோவில் பூசை. . . . . பேர்கள் – கோவிலில் வழிபாடு செய்யாது அங்குள்ள பொருள்களை எடுப்போர். பார்க்க: **சோழன் பசுக் கதைப்பாடல்**

75. ரெண்டு – இரண்டு என்பதன் திரிபு.
சிவபூதம் – சிவன் கட்டளையை ஏற்றுப் பணிபுரியும் பூதகணங்கள்; வேணுமே என்பதன் திரிபு.

குவலயத்தில் பருவதம் போலவே
    கூட நாலுபூதம் வரவேணுமே
காசி கன்னிவரைக்கு[க்] கைனீட்டியே
    கலகம் பண்ண வெகுபூதம் வேணுமே
மாசில் ஏழுகடல் முழக்கம் போலவே
    மட்டில்லாத வெகுபூதம் வேணுமே
பணக்காரர் இடும்பைக் குறைத்திட
    பத்துக் கோடி படைசூழ வேணுமே
மணத்த பூப்படைகொண்டு விளையாட
    மலையில் வாழ்கன்னி மார்கூட வேணுமே

76. குவலயம் – பூமி; பருவதம் – மலை; மிகப்பெரிய பூதம் என்பது கருத்து.

77. காசி கன்னிவரைக்கு – காசி முதல் கன்னியாகுமரி வரையில், கலகம் பண்ண – குழப்பம் ஏற்படுத்த; காசி முதல் கன்னியாகுமரி வரையிலும், அதாவது நாடு எங்கிலும் ஒரே சமயத்தில் ஒரே தன்மையான கலகம் ஏற்படுத்த வேண்டும் என்பது கருத்து; வெகு பூதம் – மிகுந்த பூதகணங்கள்.

78. மாசில் – (மாசு + இல்) குற்றமில்லாத; ஏழு கடல்கள் – உவர், கரும்பு இனிப்பு, நெய், தயிர், பால், தண்ணீர்க்கடல் என ஏழு கடல்கள் உள்ளதாக முத்தாரம்மன் கதைப்பாடல் கூறுகிறது. மட்டில்லாத – அளவில்லாத;

79. பணக்காரர் – செல்வந்தர்;

80. மணத்த பூப்படை–மணம் வீசுகின்ற பூக்களைச் சொரிய; மலைவாழ் கன்னிமார் – சப்தகன்னியர். மலையில் வைத்து வழிபடும் தெய்வம், மணம் வீசும் பூக்களைக் கொண்டு விளையாடுபவர் கன்னிகள் ஏழு பேர். அவர்கள் மோகனக் கன்னி, விராடகன்னி, இராவுக்கன்னி, சரவடிகன்னி, ஆகாசக்கன்னி, பூக்கன்னி, ஈரடிக்கன்னி என்று ஏழு வகையாக இன்று கிராமங்களில் வழிபடப்படுகின்றனர்.
நீண்ட ஓர் கல்லில் ஏழு பெண் வடிவங்கள் பொறிக்கப் பெற்றிருப் பதே சப்தகன்னியர் என்றும், இவ்வழிபாடு கி. பி. 5 ஆம் நூற் றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை பெருவழக்ககாக இருந் தது என்றும் குறிப்பிடுவர். சப்தகன்னியரான தேவகுலத்து மகளிர் நிலவுலகிற்கு நீராட வந்தார்களாம். அப்போது திருமால் சிவனை நினைத்துத் தவம் செய்ததைக் கண்டு அவரது தவத்தை நீராடும் ஓசையினால் கலைத்து விட்டார்களாம், தவம் செய்த திருமால் தவம் கலைந்து கண் விழித்து நோக்க அவர்களின் அழகில் மயங்கி அவர் களோடு நயனத்தால் கூட, அவர்கள் கருவுற்று ஏழு ஆண் குழந்தை களை ஈன்றெடுத்தார்களாம். திருமால் அக்குழந்தைகளைப் பத்திர காளியிடம் கொடுத்து வளர்க்கச் சொல்லி, சப்த கன்னியரையும் தேவருலகுக்கு அனுப்பி விட்டாராம். சப்த கன்னியர் மேலுலகம் சென்றாலும் தங்கள் மக்களைக் காப்பதற்காக நிலவுலகிலும் தெய்வமாக நிற்கிறார்களாம். இது திருநெல்வேலிப்பகுதி சப்த கன்னியர்க்கு வழங்கும் கதை. மேலும் தென்னார்க்காடு பகுதியில்

மூப்புக் காரரை[த்] தட்டி[க்] காட்டுதற்கு
மும்முகில் தாடகை வரவேணுமே
தேட்ட பேரை விடாமல் பிடிக்கவே
தூண்டில் பாசவலைகயர் வேணுமே
காச்சல் பீச்சல் கழிச்சல் மத்திப்பும்
மட்டக்குத்தும் கனமும் மயக்கமும்
வீச்சி மூசிட்ட சளியும் இப்படி
வெறிதடுப்பு சொரிச்சல் தோலெல்லாம்
பார்த்த பார்வை பலியாத படியாக
பரம யீஸ்பரன் பாக்கியம் வந்திட்டால் 85

இத்தெய்வத்தை இருளர் தங்கள் இனதெய்வமாக வழிபடுகின்றனர். மேலும் வித்தியாதரமுனிவர் ஏழு அந்தரக் கன்னியருடன் கூடிய தால் அவர்கள் ஆளுக்கொரு பிள்ளைகளை ஈன்றெடுத்து அவரிடம் கொடுத்துச் சென்றுவிட, அவர் காளியிடம் கொடுத்து வளர்த்தார். பின்பு அப்பாலகர்கள் வளர்ந்து சோழனிடமும், பாண்டியனிடமும் பணி செய்ததாக வலங்கை நூல்கள் கூறுகின்றன. பார்க்க: **வலங்கை மாலை.** ஆண் எவராலும் கொல்லப்படாத தாருகனை வெல்ல சப்த கன்னியரைச் சிவன் அனுப்பினார். ஆனால் அவர் கள் தாருகனிடம் தோற்று ஏழு வெவ்வேறு ஊர்களில் உறைந்தார் கள் என **வலங்கை மாகாளியம்மன் கதைப் பாடல்** கூறுகிறது.

81. மூப்புக்காரரை - பிடிவாதக்காரர்களைத் தட்டிக் கண்டிப்பதற்கு; மும்முகில் தாடகை - மூன்று மேகங்களையுடைய தாடகை வேண்டு மென்கிறார் அம்மை; தாடகை - அகத்திய முனிவரால் சாபம் பெற்றவள். முனிவர்களின் வேள்விகளை அழித்து அவர்களுக்குத் துன்பம் செய்தவள். இராமபிரானால் கொல்லப்பட்டவள்.

82. தேட்டபேரை. . .பாசவலை கயர் - மீன் பிடி கோல் (தூண்டில்) போட்டு மீன் பிடிப்பது போல் கொடிய எண்ணம் கொண்ட தீயவரைப் பிடிக்கப் பாசக்கயிறும் தூண்டிலும் வேண்டும். பாசக் கயிறு இட்டுப் பிடிப்பது எமனுடைய வழக்கம்.

83. காச்சல் - காய்ச்சல் என்பதன் திரிபு; பீச்சல் - வயிற்றுக்கழிச்சல்; கழிச்சல் - வயிற்றுப்போக்கு; மத்திப்பு - செவிடு, காது கேளாமை; மட்டக்குத்து - மண்டைக்குத்து, தலைக்குத்து; கனம் - தலைகனத்தல், தலை சுமையாக இருத்தல்; மயக்கம் - மூர்ச்சை.

84. வீச்சி - இழுப்பு நோய்வகை; மூசிட்டசளி - மூச்சை அல்லது மூக்கை அடைக்கும் சளி; வெறிதடுப்பு - தடிப்பு நோய், தோல் வீங்குதல்; சொரிச்சல் - அரிப்பு நோய்.

85. பார்த்த பார்வை - வைத்தியம், மருத்துவம் பார்த்தல்,'பார்வை பார்த்தல்' என்ற மந்திரித்தலுமாகும்; பலியாத படியாக - பயன் தராதபடியால்; பாக்கியம் வந்திட்டால் - சிவனருள் கிடைத்து விட்டால்.

வரம்பெற்ற புதுமாரியின் மகிழ்ச்சி ஊர்வலம்

ஏத்தபுத்தி படிக்கு நடத்ததான்
    எனத்தம்பிரான் பாக்கியம் தந்திட்டார்
வாங்கிக் கொண்டு கையிலை மலையிலே
    வட்ட மிட்டாளே கன்னனூர் மாரிதான்
தா[ங்]கினாள் பச்சை[ப்] பல்லாக்கு தண்டிகை
    சப்பர[த்]தேர்கள் தெற்காக ஏகினாள்
பந்தமும் பகல்வெற்றிக் களஞ்சியம்
    பதினாயிரம் கோடி பரந்திட
சிந்தை சந்தோசமாய்ப் புதுமாரிதான்
    தெற்கே நோக்கிச்செழுங்குரவை விட்டாள்
வாழ்துலா வாயிரம் முப்பத்தி ரெண்டிலே
    மங்கள மானதோர் மாதம் ஐந்திலே
தாழ்வில்லா புதுமாரி அம்மைதான்
    தம்பட்டம் கொட்டி சங்கு தொனிக்கிறாள்

---

86. ஏத்தபுத்தி...... நடத்ததான் – தம் அறிவுக்கு எட்டியபடி நடத்தல்; ஏத்த – ஏற்ற; நடத்ததான் – நடத்திக்கொள்ள; பாக்கியம் தந்திட்டார் – அருள், வரம், கொடுத்துவிட்டார்.

87. வாங்கிக்கொண்டு – வரம் பெற்றுக்கொண்டு; வட்டமிடல் – சுற்றி வலம் வருதல்.

88. பச்சைப் பல்லாக்கு – பச்சை நிறச் சப்பரம்; தண்டிகை – ஒரு பல்லக்கு வகை; தெற்காக ஏகினாள் – கையிலாயத்திலிருந்து தெற்கு பூமி நோக்கி (தக்காண பூமி), தென்னாட்டை நோக்கி என்க. பொதுவாகக் கையிலாயத்தில் வரம் வாங்கும் தெய்வங்கள் தென் னாட்டிற்கு, அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டின் தென்பகுதிக்கு வருவதாகப் பெரும்பாலான தெய்வக் கதைப்பாடல்களில் காணப் படுகிறது.

89. பந்தம் – தீவட்டி; பகல் வெற்றிக் களஞ்சியம் – வெற்றிமுழக்கம்; பரந்திட – நெருங்கிவர.

90. சிந்தை சந்தோசமாய் – மனமகிழ்ச்சியாய்; செழுங்குரவை விட்டாள் – நாவால் மகிழ்ச்சி ஒலி செய்தல், குலவையிடுதல். இவ்வாறு மாரியம்மனுக்காய் சாமியாடுவோர் குரவையிடுதலைக் காணலாம்.

91. வாழ்துலாவாயிரம் முப்பத்திரண்டு – இந்த வருடத்தில் மாரி தென் னாட்டிற்கு வந்திருக்கலாம். இதன் வரலாற்றை முன்னுரையில் காண்க; மாதம் ஐந்து – ஆவணி மாதம்.

92. தம்பட்டம் – ஒரு வகைப் பறை (இசைக்கருவி); சங்கு தொனித்தல் – சங்கொலி செய்தல் (சங்கு ஒரு முழவுக்கருவி).

கொம்புதாளம் எக்காளம் தொனிக்கவே
கோடிப் பெண்கள் குரவை விட்டாடினார்
பம்பை பூதம் பருவதம் போலவே
பல்லாக்கு தன்னை தெற்கே நோக்கினாள்
ஆனைமீதில் இடகயம் ஆடவே
ஆதி வெள்ளவட்டமிட் டாடினாள் 95
சேனை மாவுத்தன் ராவுத்தர் சூழவே
தேச பாசை பேசத் துடங்கினாள்

---

93. கொம்பு – ஊதுகொம்பு; தாளம் – கைத்தாளக்கருவி; எக்காளம் – ஓசை எழுப்பும் ஓர் ஊதுகுழல்; தொனிக்கவே – ஒலிக்கவே; குரவை – பெண்கள் வாயொலி எழுப்புதல்; இது பெரும்பாலும் திருவிழாக்காலங்களிலும் மங்கலநாள்களிலும் மக்கள் தம் ஈடுபாட்டை உணர்த்த வெளிபடுத்துவது.

94. பம்பை – இது ஓர் இசைக்கருவி. உடுக்கை என்ற இசைக்கருவியின் அமைப்பை ஒத்தது. இது அளவில் சற்றுப் பெரியதாக இருக்கும். அம்மன் கொடை விழாக்களில் பம்பை இசைக்கருவி அவசியம் இடம்பெறும். அது பெரிதாக இருப்பதால் பூதம் மற்றும் மலை அளவுக்கு உவமிக்கப்படுகிறது. பல்லாக்கு – பல்லக்கு, மூடுபல்லக்கு, மூடாய்பல்லக்கு எனப் பல வகை உண்டு. மூடாப் பல்லக்கு ஒரு வளைந்த கணை மேலிருக்க, பலகை சேர்த்துப் பெட்டியாக்கி கணைகளில் தோள்களை வைத்து ஆட்கள் சுமந்து செல்வர். மற்றவை பெட்டி போல் உள்ளே ஆள் இருக்கக் கணை தாங்கிச் செல்வது. இவை பலவிதமாகச் செய்யப்படும். தண்டிகையும் இதன் பாற்படும். இங்கு அம்மனைப் பல்லக்கில் வைத்து ஆட்கள் சுமந்து செல்லும் ஊர்தி வகை என்று கூறப்படுகிறது. கொடை விழாக்களின் போது அம்மன் ஊர்வலம் வருவாள். உற்சவ அம்மனைச் சப்பரத்தில் வைத்துத் தூக்கிச் செல்வர். அல்லது பெரிய தேர்களில் வைத்து இழுத்துச்செல்வர் தற்காலத்தில் மாட்டுவண்டிகளிலோ மின்சார இயந்திரங்கள் பொருத்தப் பெற்ற வண்டிகளிலோ ஊர்வலம் வருகின்றது. சப்பரம் சக்கர வண்டிகளில் பொருத்தப் பெற்று இழுத்துச் செல்லப்படுகிறது.

95. ஆனை – யானை என்பதன் திரிபு. இடகயம் – இடக்கியம், செண்டா போன்ற கொடி; ஆதி – ஆதிபராசக்தி யின் அமிசமான மாரி அம்மன். மாரி என்பதற்கு மூத்தவள் என்ற பொருளும் உள்ளது. மாரியம்மன் முதலில் தோன்றியவள் என்பதால் இங்கு 'ஆதி' எனக் கூறப்படுகிறது; வெள்ள வட்டமிட்டு ஆடுதல் – வெள்ள வட்டக் குடை பிடித்து அதனுள் நின்று ஆடுதல்; சந்திர வட்டக் குடை என்றும் கூறுவர்.

96. சேனை மாவுத்தன் – யானைப்பாகன்; ராவுத்தர் – குதிரை வீரர்; இசுலாமிய இனத்தவர், அரேபியர்; தேசபாசை – மொழிகள், மாரியம்மன் சாமி ஆடுவோர் தமக்குத் தெரியா மொழிகளைக்கூட சாமி ஆடும் போது பேசுவதைக் காணலாம். துடங்கினாள் – தொடங்கினாள் என்பதன் திரிபு.

வானி லோடிய தீப்புகை யானது
மழை மேகத்தை யோடி மறைத்திட
தீர்க்க மாகவே கன்னனூர் மாரிக்கு
தேனும் மாவுடன் பக்கத்திலேவர
மஞ்சணை காட்டச் சந்தனக் கிண்ணியும்
ஆறு கூடையும் வண்டியி லேவர
நாலு பூதமு கட்டியம் கூறவே
நாலு குரவைகள் நடையில் முழக்கினாள்
நீல வர்ணக் கடலது போலவே
நிறைந்து தெற்கே பார்த்துதே பூதங்கள்
பூண்ட அகில் அங்கு தூவியே
. . . .

---

97. வானிலோடிய தீப்புகை – வானத்தில் பரவிய புகை.

98. தீர்க்கமாக – முடிவாக; தேனும் மாவுடன் பக்கத்திலே வர– அம்மனுக்கு இவற்றைப் பிசைந்து மாவிளக்கு ஏற்றுவர். பின் அதைப் பிரசாதமாகக் கொள்வர். அதே போன்று குறிஞ்சி நிலமக்கள் உணவாகப் படையல் போட்டு இருத்தல் வேண்டும். இன்றும் ஊரார் படையலின் போது இம்முறையைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் பெரும்பான்மை மக்களின் உணவாக 'அரிசி' அமைவதால் அதையே படையலுக்குப் பயன்படுத்துகின்றனர். அதே போல் தேன் மிக அரிதாகவும், வெல்லம் கூடுதலாகவும் உள்ளதால் தேனுக்குப் பதில் வெல்லம் படையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மாவும் தேனும் படைக்கும் பழக்கம் ரேணுகாதேவி கதையிலிருந்து தொடங்கப் பெற்றிருக்கலாம் என்பது கருத்து.

99. மஞ்சணை காட்ட – மஞ்சள் குழம்பு பூசி மஞ்சள் நீரால் குளிப்பாட்ட. மஞ்சள் நீர் வைத்து. சூடம் ஏற்றிப் பின் மஞ்சள் நீரைச் சிறிது தரையிலிட்டு வழிபடுவது வழக்கம். இதை மஞ்சள் நீராட்டு என்பர்; சந்தனக் கிண்ணி – சந்தனம் அரைதது வைக்க உதவும் சிறுபாத்திரம்; ஆறுகூடை – மாரி அம்மனுக்குரிய பொருள்களை வைக்க உதவும் அறுவகை ஓலைக்கூடைகள் என்க.

100. நாலு பூதம் – நால்வகைப் பூதங்கள்; கட்டியம் – விருதுகளைப் புகழ்ந்து கூறுதல்; நடை – வாசலுக்கு வெளியே; அம்மன் ஊர்வலம் வரும்போது ஒவ்வொரு வீட்டு வாசலிலும் குரவை எழுப்புதல் வழக்கம்.

101. நீலவர்ண . . . . பூதங்கள் – கடலில் எப்படி நீர் நிறைந்துள்ளதோ, அதுபோன்று எண்ணிக்கையில் கூடுதலான பூதங்கள். தெற்கே பார்த் தல் – தென் திசை நோக்கிப் புறப்பட விருப்பதால் அத்திசையை நோக்கின என்க.

102. பூண்ட – சூழ்ந்த; அகில் – சாம்பிராணி; பூண்ட . . . . தூவியே – மக்கள் அம்மனைச் சூழ்ந்து அகில் வாசம் நிலைத்திருக்கும்படி தூபம் காட்டி அம்மனை வணங்குவர்.

சேவித்து . . . . .மக்கள்
திண்ணமாகவே எங்கும் கொண்டாடவே
வங்காள தேசத்துச் சிங்காதனக்காரர்
மாட தேசத்தோர் ஆடத் துடங்கினார்
பொங்கல் யிட்டுப் புலி[க்]குட்டி வெட்டியே
புதுமாரிக்குப் பூசைவைத் தேத்தினார் 105
கொங்கு தேசத்துக் குதிரை வியாளியில்
குரவை சத்தங்கள் கூடவே கேள்குதாம்
பொன்னாலே பூசை செய்து
புதுமாரிதன் பாதத்தில் போற்றுவார்
துன்னும் மஞ்சள் துருத்தியில் நீர்கொண்டு
தூவினார் சில மோகினி மாதர்கள்

புதுமாரியின் தோற்றப் பொலிவு

சப்பரத்தில் சங்கிலி ஊஞ்சல்கள்
தாயார் கன்னனூர் மாரி இருக்கிறாள்

---

103. சேவித்து – வணங்கி; திண்ணமாக – நன்றாக.

104. வங்காள தேசம் – வங்காள இராஜ்யம். இத்தேசத்தவர் வங்காள மொழி பேசுவர்; சிங்காதனக்காரர் – அலங்காரக்காரர்கள்; மாட தேசத்தோர் – 56 தேசங்களுள் ஒன்று. இது லாடதேசம், மராட தேசம் என்பவற்றின் திரிபாக இருக்கலாம்.

105. பொங்கல் – அம்மனுக்கு வைக்கப்படும் படையல். பச்சரிசி கொண்டு செய்வது. பச்சரிசி சோறு சற்றுக் குழைந்து இருப்பது பொங்கல். இது வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் என இரு வகைப்படும். புலிக்குட்டி வெட்டுதல் – பொதுவாக மாரியம்மன் உயிர்ப்பலி ஏற்கும் தெய்வமாதலால் விலங்குகளையும் சேவலையும் பலியிடுதல் இயல்பு. இங்குப் 'புலிக்குட்டி' என்ற தொடர் மோனைக் காக வந்துள்ளது; புதுமாரி – புதுப் பொலிவை, வளமையை ஏற்படுத்தவிருப்பவளாதலால் 'புதுமாரி என்றார்.

106. கொங்குதேசம் – கொங்குநாடு. இக்காலத்தில் இது கோயம்புத்தூர் மாவட்டத்தை உள்ளடக்கியுள்ளது; வியாளி < வியாளம் – யானை. குதிரை வியாளியில் – குதிரைகளும், யானைகளும் ஊர்வலம் வரும் போது மங்கல ஒலி கேட்டுக்கொண்டிருக்கும்.

107. பாதத்தில் போற்றுதல் – புதுமாரியின் காலடியில் படைத்தல்.

108. துன்னும் மஞ்சள் . . . . . . தூவினார் – மஞ்சள் நீரைத் தைக்கப்பட்ட தோல் பைகளில் அடைத்துத் தெளிப்பர்; மோகினி மாதர்கள் – மோகினிப் பெண்கள்.

109. சப்பரம்–உற்சவ அம்மன் ஊர்வலம் வருவதற்காகப் பயன்படும் ஒரு வகைச் சிறுதேர்; சங்கிலி ஊஞ்சல்கள்–இரும்பு வளையங்களில் தொங்கும் மரப்பலகை. இதில் மாரியின் திருவுருவை வைத்திருப்பர், இருக்கிறாள் – அமர்ந்துள்ளாள் அல்லது எழுந்தருளியுள்ளாள் என்க.

கொப்பு தூக்கு குழல்காது குண்டலம்
கொங்கையில் தலைமேலே புரளுதாம்
பொற்சருகை சகலாத்து சேலையும்
பொன்னரைங்காணி விழுந்து புரளுதாம்
குச்சி தூக்கிய கொண்டை [க்] கருகிலே
கொன்றை மாமலர்த் துடர்கள் அசையுதாம்
கொவ்வையின் கனி[யெ]ன்று இதழ்களைக்
கொத்திப் பார்க்குதே கிளிப்பிள்ளைகள்
கவ்வை இல்லை கலிஇல்லை என்றுமே
கன்னனூர் மாரி பாக்கிய மென்ம்பார்

புதுமாரி நீராடச் செல்லுதல்

நடுக்கேடு வராது இனிமேல்
ஞாயமுண்டு சாள்சி யாரவர் என்பார்

---

110. கொப்பு – மாதர் காதணி வகையில் ஒன்று; தூக்கு – இதுவும் ஒரு காதணி வகையாகும்; குழல்காது – துளையுடைய செவி; குண்டலம் – தொங்கும் காதணி.

111. பொற்சருகை – பொற்சரிகை என்பதன் திரிபு. வழக்குச்சொல். பட்டுத் துணிகளில் இழைக்கப்பட்ட நூலிழை; சகலாத்து – ஒரு துணிவகை; பொன்னரைங்காணி – பொன் அரைஞாண், இடுப் பிலணியும் கொடி.

112. குச்சி தூக்கிய கொண்டை – தலை முடியைச் சேர்த்து முடிச்சு இட்டு, அம்முடிச்சு அவிழாது இறுக்கச் செருகும் குச்சி. 'கொண்டை ஊசி' இதற்குப் பயன்படுத்தப்படுகிறது; துடர்கள் – சரம், கொன்றை மலர் களால் கோர்க்கப்பட்ட கொத்து.

113. கொவ்வை – சிவந்த நிறமுள்ள கனி. இக்கனியைக் குயிலினங்கள் விரும்பி உண்ணும்; கிளிப்பிள்ளைகள் – இளங்கிளிகள், பச்சைக் கிளிகள்.

114. கவ்வை < கௌவை – துன்பம்; கலி – கலி காலத்து இன்னல்கள்; கன்னனூர் மாரி பாக்கியம் – கன்னனூர் மாரி அம்மன் வந்த பின்பு ஊரார்க்கு வறுமையும், ஏழ்மையும் இல்லை; எல்லாம் செழிப் பாகவே அமைந்தன.

115. நடுக்கேடு – சமநிலை தவறாது, நீதி தவறாது, நீதிக்குக்கேடு வராது. ஞாயம் – நியாயம் என்பதன் திரிபு; சாள்சி – சாட்சி; யாரவர் என்பார் – சாட்சியுரைப்பது யார் எனக் கூறுவர்.

பொடை புதுப்பலி[ப்] பூதத்தைக் கூப்பிட்டு
போக கோவிலில் தீக்குழி வெட்டென்பார்
வந்தாளே அந்த[த்] துந்துமி கோட்டையில்
. . . .
அண்ட கூட முடியாது என்றுமே
. . . .
கயிலை மாமலை சாரத்திலே நின்றாள்
காட்ட பூ [த] ப்படை கோட்டைவேர
பயில்முகில் தாடகை கையாலே
பத்தி மேக படலத்திலே வர
நாமகூட இமயகிரி மேலே
லச்சங் கோடி பெரும் படையேகினாள்
சாம வேதத்தை வீணையிலே பாடியே
சரவணப் பொய்கையில் தீர்த்தங்கள் ஆடினாள்

---

116. பொடை – புடை, புடைத்த, பெருத்த; புது [ப்] பலிப் பூதம் – புதிதாகப் பலி கொள்ளும் பூதம்; போக கோவிலில் – கோவிலுக்குப்போக; தீக்குழி – தீமிதி குழி, நெருப்புக்குழி; தீமிதிசடங்கு கோவில் கொடை விழா காலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. பத்துக்குப் பத்து அளவுள்ள குழியில் தீக்கங்குகளைப் பரப்பி அதன் மீது வேண்டுதல் செய்து கொண்ட பக்தர்கள் நடப்பார்கள். இதைத் தீக்குழி இறங்குதல் அல்லது தீமிதித்தல் என்பர். இதனைப் 'பூக்குழி' இறங்குதல் என்றும் கூறுவர். வந்தாளே – மாரி அம்மன் அந்நெருப்புக்குழி அருகில் வந்தாள்.

117. துந்துமி கோட்டை – நெருப்புக் கோட்டை; அண்ட கூட – நெருங்கக்கூட.

118. சாரத்தில் – மலைச்சாரலில், அடிவாரப்பகுதியில்; காட்ட பூ[த]ப் படை – மிகுதியான வேகமுள்ள பூதப்படை.

119. பயில் முகில் தாடகை – பார்க்க வரி 81 ன் விளக்கம்.

120. நாமகூட இமயகிரி – அச்சம் இல்லாத இமயமலை; லச்சங் கோடி – இலட்சம், கோடி.

121. சாமவேதம் – நால்வகை வேதங்களுள் மூன்றாவது வேதம். இது பாப நிவாரணமாகிய பலத்தைத் தருவது. இது வீணையில் மீட்டிப் பாடவல்லது; சரவணப் பொய்கை – ஆறுமுகனான கார்த்திகேயனை, ஆறு கார்த்திகைப் பெண்கள் கண்டு எடுத்து ஒன்று சேர்த்த பொய்கை சரவணப் பொய்கை என வழங்கப்படுகிறது. சிவனின் நெற்றிக்கண் தீப்பொறிகள் இப்பொய்கையில் விழுந்து ஆறு குழந்தைகளாயின; தீர்த்தங்கள் ஆடினாள் – நீராடினாள்.

ஆடிகும்மி அடித்து விளையாடி
ஆயிரம் வண்டி தெற்கே நடத்தினாள்
பாடிப் பூதம் படித்த விருதோசை
பால்கடலில் பள்ளிகொண்டோன் செவியில் கேட்குதாம்

திருமால் மாரியைச் சந்தித்தல்

வேறு

பால்கடலில் பள்ளி கொண்ட
பச்சைமாலு மெழுந்திருந்து
தீர்க்கமுள்ள விருதோசை
திசைக ளெல்லாம் முழங்குவது 125
ஆருக்கோ ஈஸ்பரனார்
அதிக வரமது கொடுத்துவிட்டார்
ஊருக்குள்ளே இனி ஒருவரையும்
உயிரோடு இருக்க வொட்டார்
பாட்டொலியும் ஆட்டொலியும்
பலவித்மா முழங்கு தல்லோ

---

122. கும்மி அடித்தல் – கை கொட்டிச் சுற்றி வந்து ஆடும் ஒரு வகை விளையாட்டு. இவ்வாட்டம் பெரும்பாலும் பெண்களால் ஆடப் படுவது. கும்மியாட்டத்தோடு பாட்டும் கலந்திருக்கும்.

123. விருதோசை – விருது அல்லது பட்டங்கள் கூறும் ஒலி; மாரியம் மன் பேரில் கூறியது. பால்கடலில் பள்ளி கொண்டோன் செவி யில் கேட்குதாம் – பாற்கடலில் அறிதுயில் கொண்டுள்ள திருமா லின் காதுகளில் மாரி தென்னாட்டிற்கு ஏகும்போது பிறர் கூறும் விருது ஓசை கேட்டது.

124. பால்கடலில் பள்ளி கொண்ட பச்சைமாலும் – திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட திருமால்; எழுந்திருந்து – பாம்பணையிலிருந்து எழுந்து.

125. தீர்க்கமுள்ள – உறுதியான; திசைகள் – எண் திசைகள்; முழங் குவது; ஒலிப்பது.

126. ஆருக்கோ < யாருக்கோ; ஈஸ்பரனார் அதிக வரமது கொடுத்து விட்டார் – வரம் கொடுப்பது சிவனார் இயல்பு. அவ்வரத்தை அழிப்பது திருமால் வேலை.

127. இருக்க வொட்டார் – வாழவிடமாட்டார்; சிவனளித்த வரத்தைப் பெற்றுக்கொண்ட பல அசுரர்கள் அவ் வரபலத்தால் பல இன்னல் களை விளைத்துள்ளனர்.

128. பாட்டொலி – பாட்டின் ஒசை; ஆட்டொலி – ஆ! லின் ஒசை; அல்லோ – ஒசைக்குறிப்பு.

கேட்டி ருந்தா லாகாது
    கிட்டச் சென்று அறிய வேண்டும்
பாம்பணைய விட்டிறங்கிப்
    பசிங்கெருட[ன்] மீதேறி
உண்பாத சந்திரவட்டக் குடையி
    னுட் குறிப்பைக் கண்டார்
யேழை புதுமாரி யென்று
    யெழுதிவைத்த குறியைக் கண்டார்
காளைமுகில் போலும் வண்ணன்
    கையமத்தினார் படையை
கெருடன் மீது நாரணர்தான்
    மாரியவள் தன்னை[க்] கண்டார்
அருமையுடன் வழி மருவி
    அண்ணாவே நீர்வாரு மென்றாள்

---

129. கிட்டச்சென்று – அருகில் சென்று.

130. பாம்பணையை விட்டிறங்கி – திருமால் ஆதிசேடன் என்ற பாம்பின் மீது பள்ளி கொண்டுள்ளார். அதிலிருந்து எழுந்து வந்தார் என்க. பசிங்கெருடன் மீதேறி – பசுங்கருடன் மீது ஏறி; பொன்னிறமுடைய தம் வாகனமான அழகிய கருடன் மீது ஏறினார்.

131. உண்பாத – உள்பாத, உள்ளே கவிந்த, சந்திரவட்டக் குடை – இறைமை அல்லது அரச சின்னங்களுள் ஒன்றாகிய வெண்கொற்றக் குடை; பார்க்க வரி விளக்கம் 95. உட்குறிப்பு – உட்பொருள்; அக்குடை பிடித்து வருதலின் காரணம் என்ன என அறிதல்.

132. யேழை புதுமாரி – இரக்கப் பொருளில் திருமால் கூறுவது; புதுப்பிறவி எடுத்துள்ள மாரி அம்மன் தெய்வம் என்று அறிந்தார்.

133. காளை முகில் போலும் வண்ணன் – திரண்ட கார் மேகத்தை ஒத்த வண்ணம் உடைய பெருமாள்; காள முகில் – நவ மேகங்களுள் ஒன்று; காளமேகம் என்றும் கூறுவர்; படையைக் கையமத்தினார் – கையமர்த்தினார், பூதப்படைகள் எல்லாவற்றையும், அவர்தம் பாட்டையும், ஆட்டத்தையும் சற்று நிறுத்துமாறு செய்தார்.

134. கெருடன் மீது நாரணர் – பெருமாளுடைய வாகனம் கருடன்; அவர் அதில் அமர்ந்திருந்த தோற்றம் கூறப்படுகிறது.

135. வழி மருவி – எதிர்கொண்டு அழைத்து; அண்ணாவே – அண்ணரே என விளித்தல்; நீர் வாரும் – தென்பாண்டி நாட்டு வழக்குச் சொல். திருமால் மாரிக்கு அண்ணன் முறை ஆன காரணம் வருமாறு; மாரி அம்மன் பார்வதி அமிசமானவள். பார்வதி திருமாலின் தங்கை. அதனால்தான் மாரி அம்மன் திருமாலைக் கண்டபோது 'அண்ணா' என அழைத்தாள்.

வேறு

அண்ணாவி யென்றென்னைச் சொன்னாளே முன்னொருகாலம்
 அறிய உரைத்திட்டேன் தங்கச்சி யென்றுமே அம்மா
கண்ணர் சிவனோடு வாதாடி முன்னொரு காலம்
 காளி கூடப் புகுந்து ஆடுதல் நன்றுதான் அம்மா

மாரி நாராயணருடன் பேசுதல்

முன்னொரு காலத்தில் முத்தாரம்மன் தன்னாட்டில்
 பேரிட்டிக் கொண்டு ஊருதோறும் சாமபொலிதான்
யென்னையே சந்தனமாரி மக்களென்று மெய்யா
 யெல்லோரும் சொல்லி இதுவரைக்கும் பூசையிட்டார்
பூமி உலகம் கலியால் குழந்தைகள் மிஞ்சி
 பொல்லாப்பு[ச்] செய்யாவிட்டால் வந்திடுமே நல்லபுத்தி

---

136. அண்ணாவி – அண்ணன்; தென்பாண்டி நாட்டு வழக்குச்சொல். (இச்சொல் வில்லுப்பாட்டுக் குழுத் தலைவரையும் குறிக்கும். அண்ணாவி என்பதற்கு ஆசான் என்ற பொருளும் உண்டு.) தங்கச்சி – தங்கை.

137. கண்ணர் சிவனோடு...... ஆடுதல் – முக்கண்ணரான சிவனுக்கும் சக்தியின் அமிசமான காளிக்கும் ஆட்டத்தில் யார் வல்லவர் எனும் போட்டி ஏற்பட்டது. சிவன் சண்டதாண்டவமாடி வென்றார். முன் னொரு காலம் – திருமாலுக்குச் சக்தி, தங்கை உறவுள்ளதாலும், அச் சக்தியின் அமிசமே மாரியம்மன் ஆதலாலும் இவ்வாறு கூறப் பட்டது; கூடப்புகுந்து ஆடுதல் – போட்டியிடுதல்.

138. முத்தாரம்மன் கதையைப் பார்க்க: ஊரு – ஊர்; சாமபொலி – சாமபலி, நடுஇரவுப்பலி. வரி 59. பேரிட்டுக் கொண்டு – பெயர் சூட்டிக் கொண்டு.

139. சந்தன மாரி – பார்க்க வரி 61.

140. கலியால் – கலி காலத்தில், துவாபரயுகம் முடிந்தபின் கலிகாலம் தோன்றியது என்பர். இக்கலிகாலத்தில் அதர்மம் நிலைத்துத் தர்மம் கெடும் எனக் கணித்துள்ளனர். அதன்படி இங்கே நடப்பதாகக் கூறப்படுகிறது; குழந்தைகள் – மக்கள்; மிஞ்சி – அதிகமாக; பொல்லாப்பு – இடர்கள்.

நாராயணர் மாரியைத் தேற்றி அவளுடன் புறப்படுதல்

ஈமத்துப் பேய்களை நம்பிக் கொண்டென்னை இகழ்ந்து
யென்திரு நீறோடு பஞ்சாசரம் இல்லையென்றால்
பேரிடும் தாயார் பொசிக்க[க்] கொடுத்தாளே யென்று
பிள்ளைகள் மேல் கோபம்கொண்டு புறப்பட்டாய்
நாரணனா ரதைக் கேட்டவர் மெத்த சடைத்து
நம்முட காலுக்குள்ளாக நடந்தா ரென்னாளும்
கோரணி கோட்டிகள் கொள்ளத் தொடங்கி நகைத்து
கொஞ்ச சுத்திசெய்து கோவிலும் பூசைக்குறைகள்
யேழைப் பிராணிகள் யெண்ணாமல் செய்த இடும்பு
ஈட்டுக்கீடு செய்தால் நாட்டுக் கொதுக்கிடமில்லை
தோளில் சுமக்கின்ற சேடன் கயத்தையும் தாங்கி
தொலைக்கப்படாது கன்னனூர்மாரி சந்தோசம்

---

141. ஈமத்துப் பேய்களை – சுடுகாட்டுப் பேய்களை; பிணங்களை வழி படுதல் குறிக்கப்படுகிறது. பார்க்க வரி: 65; என் திருநீறு – மாரியம் மன் பிரசாதமான திருநீறு ; பஞ்சாசரம் – பஞ்சாட்சரம்; 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரம். சிவனுக்குரியது; சிவனிடம் மாரி வரம் வாங்கி வந்ததால் சிவனுக்குரிய பஞ்சாட்சரமும் மாரிக்குரிய தாயிற்று. சிவபக்தர்களும் மாரி அம்மன் பக்தர்களும் ஒரு வகை யினரே; சைவர்கள் என்க.

142. பேரிடும் தாயார் – பெயர் சூட்டும் தாய்; பொசிக்க – புசிக்க, உண்ண.

143. சடைத்து – சடைத்தல், தளர்தல், வருத்தப்படுதல்; நம்முட – நம்முடைய; காலுக்குள்ளாக நடத்தல் – கீழ்ப்படிந்து நடத்தல்.

144. கோரணி கோட்டிகள் – கோமாளித்தனம், பைத்தியக்காரத்தனம். கொஞ்ச சுத்தி செய்து – குறைவாகச் சுத்தம் செய்தல்; பூசைக் குறைகள் – வழிபாட்டுக் குறைகள்.

145. ஏழைப் பிராணிகள் – அப்பாவி மக்கள்; எண்ணாமல் செய்த – தெரியாமல் செய்த; ஈட்டுக்கீடு செய்தல் – பதிலுக்குப் பதில், பழிக்குப்பழி செய்தல்; நாட்டுக்கு ஒதுக்கிடமில்லை – நிலத்தில் போகக்கூடிய இடம் இல்லை.

146. தோளில் சுமக்கின்ற சேடன் – ஆதிசேடன் தன் தோளில் திருமாலைச் சுமந்திருப்பதை இது குறிப்பிடுகிறது; கயத்தையும் – கயறு, வடம்; தொலைக்கப்படாது – நாட்டுப்புற[ப்] பேச்சு நடை.

புண்ணியம் தப்பாமல் செய்த வினையைப் பொறுத்துப்
பூமியில் மட்டும் போகாதே உன்தன் புகழ்தான்
மண்ணில் உள்ளோரும் நானும் துணையாக வாறேன்
மாரிமகமாயி யென்று உரைத்தாரே மாயன்

மாரியும் மாயனும் புறப்பட்டு டில்லிப் பகுதிக்கு வருதல்

வேட்டையிலே சரிகாட்டுவாய் தன்னையும்விட்டு
மேலுற்ற கேதார பூமியில் தேரையும் விட்டார்
கோட்டையோடு தில்லை பாரிசா பூமியைக் கண்டு
கொட்டாவி கொண்டு சேனைகளோடு குதித்தாராம்

தில்லியில் மாரியம்மன் செயல்கள்

வேறு

நாச்ஜிமார் சிலர்காச்ஜலை யேவினார்
நாடி பூதங்களைக் கோட்டையில் யேவினாள்
வீச்சுடன் பெருமூச்சை யேவினாள்
விம்மி வயிறுகள் பம்பிக் கிழியவே

---

147. பூமியில் மட்டும். . . . . . புகழ்தானே – விண்ணுலகிலும் புகழ் பரவும் என்பது கருத்து.

149. வேட்டையிலே – வேட்டையாடுதலிலே; சரிகாட்டுவாய் தன்னையும் விட்டு – மாரிகடந்துசென்ற ஓரிடம் காட்டுநாடு அல்லது களவேள்வி நாடு எனத் திருவிளையாடற்புராணம் குறிப்பிடுகிறது. கேதார பூமி – இமயமலையில் உள்ள ஒரு சிவதலம்.

150. தில்லை பாரிசாபூமி – தில்லி பாதுஷா, இசுலாமியர். தில்லியைத் தலைநகராக வைத்து ஆண்ட பாதுஷா ஒருகாலத்தில் தில்லியில் மாரியம்மன் தன் திருவினையாடல்களைச் செய்ததாகத் தெரிகிறது. முத்தாரம்மன் கதைப்பாடலுக்கும் மாரியம்மன் கதைப் பாடலுக்குமுள்ள வேற்றுமைக் கருத்துக்களை முன்னுரையில் காண்க. கொட்டாவி– வாயைத் திறந்து வெளியிடும் நெட்டுயிர்ப்பு; இங்கு 'ஆ' எனும் ஒலி எழுப்பி, வாயைத் திறந்து ஊரில் இறங்கினர் எனப் பொருள் கூறலாம்.

151. நாச்ஜிமார் – நாச்சிமார், மாரியம்மனுடன் கூடவந்த கன்னியர்; காச்ஜலை – காச்சலை – காய்ச்சல், சுரம்; நாடி பூதங்கள் – நாடியுள்ள பூதங்கள்.

152. வீச்சு – வேகமாக;பெருமூச்சி – நெட்டுயிர்ப்பு; விம்மி – வயிறுகள் பருத்து வெடிக்க.

வீட்டுப் பிள்ளைகள் காட்டுக்கு நோக்கென்பார்
. . . .
சாவுக் காகுமோ நோவுக் காகுமோ
    தாலிப் பெண்கள்தன் சோலி போச்சுதே
காட்டில்போய்க் குழிவெட்டப்போ வென்பார்
    கழுத்து நோகவே இழுக்கிறார் சிலர்
பொட்டலில் குழிவெட்டப் போமுன்னே
    புழுத்துப்போ முன்னே இழுத்துப் போடென்பார்
இருக்கிற பேருக்கு உறக்கம் போச்சுது
. . . .
உரங்கிச் சொல்லுதே எறப்புப் பல்லிகள்
    ஒண்டிக் கள்ளர் போல் அண்டித் திரிகிறார்
சாட்டைக்காரரும் ஈட்டிக்காரரும்
    தள்ளிவாசலில் உள்ளே போகுறார்

---

153. வீட்டுப் பிள்ளைகள் காட்டுக்கு நோக்கென்பார் – நாட்டில் சுரமும் வெப்பமும் ஏற்பட்டதால் திருமணம் ஆன ஆண் பிள்ளைகள் ஊரில் வாழ வேண்டிய நிலை மாறிக் காட்டுக்குச் சென்றனர் என்க.

154. தாலிப்பெண்கள் தன் சோலி போச்சுதே – திருமணமான பெண்களின் கணவன்மார்கள் இறந்ததால் தாலி நீங்கி அவர்களுக்குரிய இல்வாழ்வுக்குரிய வேலை போய்விட்டது.

155. காட்டில் போய் . . . . மிகுந்த சாவுகள் காரணமாகப் புதைகுழிகளை வெட்டுமாறு பணிக்கின்றனர். கழுத்து நோகவே – சுரவேகத்தால் ஏற்படும் இழுப்பு வலியைக் குறிக்கிறது.

156. பொட்டலில் குழி வெட்டுதல் – பல பிணங்களைப் புதைக்க வெட்ட வெளியில் புதைகுழி வெட்டுதல்; வெட்டு முன்பே பலர் இறந்தனர். புழுத்துப் போமுன்னே – உயிரற்ற உடல் மிக விரைவில் அழுகிப் புழு தோன்றிவிடும் என்பதால் அவ்வுடலைப் புதைகுழியில் வைத்து மண்ணால் மறைத்து இழுத்து வைக்கின்றனர்.

157. இருக்கிற. . . . . போச்சிது – இறந்தவர்களைத் தவிர்த்த மற்றவர்களுக்கும் உறக்கம் போய்விட்டது; போச்சுது – பேச்சுவழக்கு;

158. உரங்கி – உரத்து, அதிக ஒலியுடன். 'ஒங்கி' என்றும் கூறப்படும்; எறப்பு – இறப்பு; தாழ்வாரத்துக் கூரை; ஒண்டிக் கள்ளர் – பதுங்கி வாழ்கின்ற திருடர்; ஒண்டி – ஒருவன் என்ற பொருளும் உண்டு; அண்டித் திரிகிறார் – ஒதுங்கி அலைகின்றனர்.

159. சாட்டைக்காரர் – சவுக்கு வைத்துள்ள குதிரைவீரர்கள்; ஈட்டிக்காரர் – ஈட்டி வைத்துள்ள வீரர்கள்; தள்ளி வாசல் உள்ளே போகுதல் – பயந்து செல்லுதல்.

கோட்டைக்காரர்கள் காட்டைப் பாருங்கோ
கூந்தல் வீசுது பூதம் வருகுது
மருந்து போலவே விருந்து வந்தவர்
வாயில் சோறுடன் பாயில் சாயவே
பத்துப் பேய்ப்படை இருந்து திரியுது
பள்ளி வீட்டிலே கொள்ளி நீட்டுது
அந்திப் பொழுதிலே சந்தித் தெருவிலே
அலுக்குத் தடிகளைக் கிலுக்கிக் காட்டுது
மந்திப் பாச்சலில் கிந்திக் காட்டுது
வண்டுருக்கியே வந்த பேர்களை
மண்டை மீதிலே கல்லைப் போடுது
. . . .
போடு போடெனப் புரட்டி அடிக்குது
பொங்கல் செங்கிடா அங்கே கேள்குது

---

160. கோட்டைக்காரர்கள்; – கோட்டையிலுள்ளவர்கள்; காட்டைப் பாருங்கோ – நாட்டில் இரவில் வேலை இல்லாததால் காட்டிற்குப் போங்கள். கூந்தல் வீசுது – கூதல் வீசுதல், குளிர்காற்று அடித்தல், திடீரென குளிர்காற்று வீசுதல். பூதங்களும், பேய்களும் வருவதற்குரிய அடையாளங்களாகச் சொல்லப்படுகின்றன.

161. மருந்து போலவே விருந்து வந்தவர் – விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. இவை இரண்டுமே மூன்று நாளுக்கு மேல் கூடினால் கசப்பான விளைவுகள் ஏற்படும். எனவேதான் 'மருந்து போல விருந்து' என இங்குக் கூறப்பட்டுள்ளது. பாயில் சாய – நோய் கண்டு படுக்கையில் விழ.

162. பள்ளிவீடு – படுக்கை அறை; கொள்ளி – கொள்ளிக்கட்டை, தீக்கங்கு – நீட்டுது – பேச்சுவழக்கு.

163. அந்திநேரம் – கருக்கல் நேரம். இந்நேரத்தில் வெளியில் குழந்தைகள் போகக்கூடாது என்பர்; சந்தித் தெருவிலே – நாலு தெருக்கள் கூடுமிடம்; அலுக்குத்தடி – அலகுத்தடி; வருத்துகின்ற கூர்மையான கட்டைகள்; கிலுக்குதல் – ஒலிக்கச் செய்தல்; காட்டுது – பேச்சு வழக்கு.

164. மந்திப் பாச்சலில் கிந்திக் காட்டுது – குரங்கு தாவுவதுபோல் முன்னங்கால்களால், நொண்டி நடக்கிறது; சாய்ந்து நடக்கிறது; வண்டுருக்கியே – குற்றம் சொல்லியே;

165. மண்டை – தலை

166. பொங்கல் செங்கிடா அங்கே கேள்குது – நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பொங்கலும், செங்கிடாயும் வெட்டிப் பலிகொடுத்து

காணத்தின் சுவை வேணு மென்குது
கடினமாகவே பல்லைக் கடிக்குது
வளைய மாகவே குளையம் போடுது
வம்பு பேசியே வந்த பேர்க ளை
. . . .
மண்டை மீதிலே கல்லைப் போடுது
பேச்சி கோஷ்டியின் காச்ஜி கூட்டுது
பிடாரியெரு மைக்கிடாவுங் கேட்குது
நாச்சி மாருக்கு வழியிலே நின்று
நாலு பூதங்கள் சூல மேந்துது
ஆளடுமை யில்லாத சீலமுடன் பெண்கள்
அம்மை மாரிக்குக் கொள்ளை போகிறார்

பூசை செய்வது வழக்கம். இவ்வாறு செய்வதால் தெய்வத்தின் கோபம் தணிந்து அது மகிழ்ந்து நன்மை செய்யும் என்பது நம்பிக்கை. அம்முறை இங்குக் கூறப்பட்டுள்ளது. கேள்குது – கேட்கிறது; பேச்சுவழக்கு.

167. காணம் ஒருவகைப் பயறு; கறுப்பு நிறம் கொண்டது. குதிரைக்குக் கொள்ளு ஆகப்பயன்படுவது. அம்மன் தெய்வங்களுக்குக் காணத்தை அவித்து, பச்சரிசி மாவுடன் கொடுப்பர். மாரி அம்மனுடன் வந்தோர் காணம் கேட்பதாகக் கூறப்படுகிறது.; என்குது – என்கிறது. பேச்சுவழக்கு; பல்லைக் கடித்தல் – கோபத்தில் 'நறநற' வென்று பல்லைக் கடிப்பது இயல்பு.

168. வளையமாக – வட்டமாக; குளையம் போடுதல் – தலையை ஆட்டுதல்; வம்பு – வீண்பேச்சு.

170. பேச்சி – பேய்ச்சி ஒரு சிறுநிலைத் தெய்வம், பேச்சியம்மன் திருநெல்வேலிப் பகுதியில் வணங்கப்பெறும் தாய்த் தெய்வங்களுள் ஒன்று. வாயில் குழந்தையோடு நின்ற கோலத்தில் இத்தெய்வம் காட்சி அளிக்கும். பேச்சி என்ற பெயருக்கேற்ப பிணம் தின்னும் தெய்வமாகக் கருதப்படுகிறது. கோஷ்டி – குழுவினர்; காச்ஜி – காட்சி, தோற்றம்; பிடாரி – பிடரி, தோள்பகுதி. எருமைக்கிடா – ஆண் எருமை. பிடாரி என்பதற்கு அடங்காத் தன்மை என்ற பொருள் உண்டு. சிறுதெய்வங்களுக்கு ஆடு, பன்றி, எருமை, கோழி என்பவற்றைப் பலி கொடுப்பது வழக்கம். இந்நிலையில் எருமையைப் பலி கொடுப்பது பற்றி இங்குப் பேசப்படுகிறது.

171. ஆளடுமையில்லாத – ஆள் அடிமை இல்லாத. அடுமை – அடிமை, ஆண்களுக்கு அடிமையாகாத பெண்கள். சீலமுடன் பெண்கள் – ஒழுக்கத்துடன் பெண்கள். கொள்ளை போதல் – கொள்ளை நோயில் மடிந்துபோதல்.

மாரியின் செயல்களை மாற்ற மந்திரவாதிகள் முனைதல்

வேறு

நாய்ப்படையும் பூப்படையும் பேய்ப்படைகளோடு
நாச்சியமார் பூச்சியத்தை நாங்களுமே அறிவோம்
வேப்பி[லை]யும் பூக்குடமும் பூசுமையுங்கொண்டு
யேப்பமிட்டு வீடுதோறும் சாப்பிட வந்திரோ
வடக்கிருந்து கொண்டு வந்தசடத்தம் இதுதானோ
வட்டமிடும் யெங்களுக்கு நட்டுவனுமில்லை 175
பேய்ப்பிள்ளைக ளீதோடு போய்ப்பிழைக்க வேண்டும்
பிடித்து விட்ட நாய்களைக் கடித்திடவும் சொல்வார்
கோப்பழிய வாய்மறந்து சொன்னதெல்லாம் கேட்டு
கோபங் கொண்டு பேய்ப்படையை வேகமுடனழைத்தாள்

---

173. நாய்ப்படை – வேட்டை நாய்கள்; பூப்படை – பூதப்படை பேய்ப் படை – பேய்களான படை; நாச்சியமார் – நாச்சிமார், கன்னித்தெய்வங்கள், பூச்சியத்தை – நன்மதிப்பை; நாங்களுமே – மந்திரவாதிக ளாகிய நாங்கள்.

174. வேப்பிலை – மாரியம்மனுக்குகந்த இலை; பூக்குடம் – மாரியம்மனுக்குரிய பூக்குடம்; பூசுமை – கறுத்த மை. இவை மூன்றும் மந்திரப் பொருள்கள் இவற்றைப் பயன்படுத்தினால் பேய் வராது என்பது நம்பிக்கை. ஏப்பமிடுதல் – உண்டபின் உணவு வயிற்றுக்குள் இறங்கிவிட்டதையும், நிறைவையும் குறிக்க வாயிலிருந்து ஏற்படும் சத்தம்; வீடுதோறும் சாப்பிட வருதல் – நோய்களை உருவாக்கி உயிர்கள் இறந்தபின் அவர்கள் ஆவிகளைப் பருகவருதல்.

175. வடக்கு – கயிலாயம்; கொண்டு வந்த – கூட்டி வந்த, வரம் பெற்று வந்த; சடத்தம் – சடுத்தம், தொந்தரவு; நட்டுவன் – நாட்டியம் பயிற்று விக்கும் ஆசிரியன்; குரு, மந்திரவாதி.

176. பேய்ப்பிள்ளைகள் – குட்டிப் பேய்கள்; ஈதோடு – இத்துடன் நாய்களைக் கடித்திடச் சொல்லுதல் – நாய்களுக்கு இரவில் பேய்கள் தெரியும் என்பது நம்பிக்கை. எனவே நாய்களை ஏவிப் பேய்களைக் கடித்திடச் சொல்லுதல் கூறப்படுகிறது.

177. கோப்பழிய – சீரழிய, கெட்டுப் போக; மந்திரவாதிகள் தாம் அழிந்து போவதற்கு இவ்வாறு கூறினர் என்று கூறப்படுகிறது. அழைத்தாள் – மாரி அம்மன் தன் படைகளை மீண்டும் ஏவினாள்.

மாரி மீண்டும் அழித்தல்

கன்னனூருமாரி புதுமாரி பத்திரகாளி
கங்காளி மூன்றுமுகங் கொண்டவளும் சென்றாள்
வெண்ணனூரு மாரியுடன் யேந்திளைமார்கூடி
வீச்சி வலைக்காரர்சுத்தி காச்சலிலே போட்டார்
ஒழித்தொழித்து வீட்டுக்குள் இருந்திடவும்செய்வார்
வீட்டுக்குள் அடைத்துவைத்துத் தொண்டைகளை நெரிப்பார்
கழிச்சல் ஒழிக்க வந்த பண்டி[த]ர்கள் தன்னைக்
கல்லுப்போலே வயிறுவிம்மிப் பல்லுபூண்டு சாக

---

178. பத்திரகாளி – அம்மன் தெய்வம்; பத்திரம் என்பதற்கு 'அம்பு' 'சிறுவாள்' என்ற பொருகள் உண்டு. காளி என்பதற்கு வெம்மை, கருமை என்ற பொருள்களும் உண்டு. எனவே கரிய நிறம் கொண்ட வெம்மைத்தன்மை கொண்ட அம்பு, கத்தி ஆகிய ஆயுதங்களைத் தாங்கிய தெய்வம் பத்திரகாளி எனப் பொருள் கொள்ளலாம். பத்திரகாளி பற்றிய கதைப்பாடல்கள் பல உள.
"இறைவன் ஆடல் கொண்ட அணங்கு" என்ற சிலப்பதிகாரத் தொடருக்கு உரையாசிரியர்கள் 'பத்திரகாளி' என்று எழுதுகின்றனர். தக்கயாகப்பரணி பத்திரகாளியைப் போற்றுகிறது. பள்ளு, உலா, மடல், குறம் போன்ற சிறு பிரபந்தங்கள் பத்திரகாளிக்கு வணக்கம் கூறுகின்றன. இன்றும் தமிழகத் தென்பகுதி நாட்டுப்புறங்களில் பத்திரகாளி வழிபாடு உள்ளது. வலங்கையர் எழுவரைப் பத்திரகாளியே வளர்த்ததாகவும், அவர்களுடன் சென்று தாருகன் என்பவனை வதம் செய்ததாகவும் சில கதைப்பாடல்கள் கூறுகின்றன. பத்திரகாளி பற்றிய கதைப் பாடலும் நூலாக வெளிவந்துள்ளது.
கங்காளி – காளிக்கு மற்றொரு பெயர்; கங்கு + காளி = கங்காளி, கங்கு என்பதற்கு, 'தீப்பொறி' என்று பொருள் உள்ளது. வெம்மைத் தன்மை மிகுதி கொண்ட, சீற்றம் நிரம்பிய காளி அல்லது பார்வதி என்று கங்காளிக்குப் பொருள் கொள்ளலாம்.
மூன்றுமுகம் கொண்டவள் – முப்பிடாரி அம்மன், இவளை முப்புராதி என்றும் முப்புடாதி என்றும் கூறுவர். பார்க்க: முப்புராதி அம்மன் கதைப்பாடல்.

179. வெண்ணனூரு மாரி – வெண்ணனூர் என்ற ஊரிலுள்ள மாரியம்மன்; ஏந்திழைமார் – கன்னிமார்; வீச்சி வலைக்காரர் – வலை வீசுவோர்.

180. ஒழித்தொழித்து – மறைந்து; விம்மி – புடைத்து.

181. கழிச்சல் ஒழிக்க வந்த பண்டிதர்கள் – மாரி அம்மன் செயல்களை மாற்ற வந்த மந்திரவாதிகள். பல்லுபூண்டு – பல் உதிர்ந்து, உடைந்து.

சாகப்போகிறவர் தம் விருப்பம் கூறல்

திவ்வியமாக வந்து நின்ற மாப்பிள்ளைமார் தானும்
செத்துப்போகப் போறோம் இனிவைத்த இடம் சொல்வோம்
கூப்பிடும் குரல் சிறிது கேட்கலையோ என்பார்
குடுக்கலயும் வாங்கலயும் இடித்திடித்துச் சொல்வார்
முத்துப் பதித்த கடுக்கன் மெத்தக்கன மென்று
முறித்தெறிந்தான் பெருநோவு வறட்டிருமக்காரன்
அத்தமகள் முத்தமிட்டா[ல்] சத்திப் பெடுக்கின்ற
ஆம்பிளையைப் பெண்பிள்ளைகள் பாம்பெனவே பார்த்தார்
புத்திதெரியாத பிள்ளை பெற்றோமென்று சொல்வாள்
பொந்து தடிக்காரர் வந்தால் நிந்திக்கவும் போமோ

---

182. திவ்வியம் – அழகு; திவ்வியமாக வந்து . . . . . இடித்திடித்துச் சொல்வார் – நல்ல நிலையில் உள்ள புது மாப்பிள்ளைகள் தாங்கள் இறக்கப் போவதை உறுதிப்படுத்தி, அதனால் தாங்கள் பிறரிடம் கொடுத்த, வாங்கிய கணக்குகளை வேண்டியவரிடம் மீண்டும் மீண்டும் கூவிச் சொல்வர்.

183. கூப்பிடும் குரல் – செத்துப் போகிற நிலையில் அவர்கள் பிறரைக் கூப்பிடும் மெல்லிய குரல்; குடுக்கலயும் வாங்கலயும் – குடுக்கலையும் வாங்கலையும்; கொடுக்கல், வாங்கல் ; பணம் அல்லது ஏதேனும் பொருள்களைக் கைமாற்றுக்குக் கொடுத்து வாங்குவது இயல்பு. இடித்திடித்துச் சொல்லுதல் – கேட்போருக்குப் பதியுமாறு மீண்டும் மீண்டும் கூறுதல்.

184. கடுக்கன் – ஆண்கள் அணியும் காதணி; மெத்தக்கனம் – அதிக சுமை; முறித்தெறிதல் – ஒடித்து எறிதல்; பெருநோவு – தொழு நோய்; கடந்த கால சமுதாயத்தில் தொழு நோய் ஒரு தீர்க்க முடியாத நோயாக இருந்தது. எனவே மற்ற நோய்களைவிட இந்நோய் பெரிய நோயாகக் கருதப்பட்டதால் பெருநோய் என அழைக்கப்பட்டது, ஆனால் இன்று இந்நோய் தீர எளிய மருத்துவ முறைகள் வந்து விட்டன; வறட்டிருமக்காரன் – தொண்டையை வறளச் செய்யும் இருமல் வகை; காச நோயாளி.

185. அத்தமகள் – அத்தை மகள்; சத்திப்பெடுத்தல் – வாந்தி எடுத்தல்; ஆம்பிளை – ஆண்பிள்ளை; பெண்பிள்ளைகள் – பெண்கள்,

186. பொந்து தடிக்காரர் – பொத்தைத்தடிக்காரர்; பெரிய கைத்தடிகளை வைத்திருப்போர்; நிந்திக்கவும் போமோ – இகழவும் முடியுமோ; எள்ளி நகையாடவும் முடியுமோ.

தில்லி பாதுஷா மன்னரின் பரிகாரம்

வேறு

நவிக்கிணங்கிய தில்லை பாரிசா மன்னனும்
நாலுதிக்கும் படையலைப் போட்டனன்
குவித்து நல்லமதுக் குடம்தனை வைத்தனன்
கோடி தோரணம் கட்டிவிளக் கேத்தினன்
உண்டு களித்தன பூத கனங்கள்தாம்
உடையவளைப் போற்றி ஒலித்ததாம்
வண்டுமொய் குழலாள் மாரி அம்மனும்
வரிசைப் பல்லக்கேறி கெங்கை யாடினாள் 190
தீர்த்தமாடி விசுவநாதரையும் சேவித்து[த்]
சிறந்த நல்லவிசய நகரமு மடைந்தனள்
ஆர்த்த நல்ல ஆயிரம் யோசனை
ஆகிய தெற்கான பூமியை நோக்கினாள்

---

187. நவிக்கிணங்கிய – நவுதலுக்கு இணங்கிய, தளர்ச்சியுற்ற; பாரிசா மன்னன் – அம்மன் படைகள் தில்லியைத் தாக்கியதைக் கட்டுப் படுத்த இயலாத பாதுஷா என்க; நாலுதிக்கும் – தன்நாட்டின் எல் லாப் பகுதிகளிலும்; படையல் – அம்மன் படைகளுக்குப் பிடித்த மான பொங்கல் போன்றவை.

188. குவித்து நல்ல மதுக்குடம் மதுவை மிகுதியாகப் படைத்தான். மாரியம்மன் கோவில்களில் கள் அல்லது மது வைத்து வணங்குவது இயல்பு. கோடி தோரணம் – வேப்பிலைக் கட்டுகளைக் கயிற்றில் சேர்த்துக் கட்டிய தோரணங்களை வீட்டிலும் வீதியிலும் மற்றும் பலவிடத்தும் கட்டுவது இயல்பு. பாதுகாக்கப்பட்ட அவ்வெல்லைக் குள் நோயை வரவிடாது தடுக்கவே இந்த ஏற்பாடு; விளக்கேற்று தல் – இரவு நேரத்தில் ஏதாவது பயம் ஏற்படக் கூடாது என்பதற்காக வெளிச்சம் உண்டாக்குதல் அல்லது விளக்கு வழிபாடு செய்தல்; உடையவள் – மாரி அம்மன்; ஒலித்தல் – ஆரவாரம் செய்து மகிழ்தல்.

190. வண்டுமொய் குழலாள் – அம்மனின் கூந்தலிலுள்ள நறுமணத்தை வண்டுகள் மொய்க்கும்; வரிசைப் பல்லக்கு – சிவபெருமானால் பரிசாகக் கொடுக்கப்பெற்ற சப்பரம்; கெங்கை – கங்கை; தில்லி விட்டுப் புறப்பட்டு அதன் தெற்கேயுள்ல கங்கையில் நீராடினாள் என்க.

191. விசுவநாதரைச் சேவித்து – காசி விசுவநாதரை வணங்கி; விசய நகரம் அடைந்து – வடநாடு விட்டுத் தென்னாட்டில் அப்போதிருந்த விசநகரப் பேரரசின் எல்லைக்குள் வந்து.

192. ஆர்த்த நல்ல ஆயிரம் யோசனை – ஆயிரம் யோசனை தூரத்தி லுள்ள தென்னாடாகிய தமிழ்நாட்டில் வர எண்ணினாள் என்க. ஒரு யோசனை என்பது சில நாழிகை நேரத்தில் கடக்கக் கூடிய தூரம் ஆகும்; தெற்கான பூமி விசயநகர நாயக்கர்களின் கீழ் விளங்கிய தமிழகத்தின் பகுதிகள்.

மாரியம்மனைத் தெற்கே அழைத்தல்

மாயிமகமாயி மணிமந்திர சேகரியே
    ஆயிவுமை யானவளே ஆதிசிவன் தேவியரே
மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
    ஆயன் சகோதரியே ஆஸ்தான முத்துமாரி
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
    திக்கெல்லாம் போற்றும் எக்காள தேவியரே 195
கன்னபுரத்தாளே காரண சவுந்தரியே
    காரண சவுந்தரியே நாரணர் தங்கையம்மா
நாரணர் தங்கையம்மா நல்லமுத்து மாரியரே
    நல்லமுத்து மாரியரே நாக(க்)கன்னி தாயாரே

---

193. மாயி – துர்க்கை; மகமாயி – பெரியவள், மூத்தவள், ஆதிசக்தி; மணிமந்திர சேகரியே – மணிமந்திரத்தையுடையவள்; ஆயி – தாய், ஒரு சக்தி; உமை – பார்வதி ஆதிசிவன் தேவி – பார்வதி.

194. மாயன் சகோதரி – மாயனாகிய, திருமாலின் தங்கை; மாரிமுத்து – அம்மைக் கொப்பளங்கள், முத்துக்களைப் போன்றிருப்பதால் இப்பெயர் வந்தது; ஆயன் சகோதரி – இடையர் குலத்தில் வளர்ந்தவன் கண்ணன், திருமால் அவதாரங்களில் ஒருவராதலால் பார்வதி தேவியார் இவ்வாறு அழைக்கப்படுவார். ஆஸ்தானம் – முத்துமாரி – அரசபைத் தெய்வம்; விசயநகரப் பேரரசின் 'ஆஸ்தான தெய்வம்' மாரி அம்மன் என்பது வரலாறு. இதன் விளக்கத்தை முன்னுரையில் காண்க.

195. துரந்தரி – உலக உயிர்களைக் காக்கும் பொறுப்பு ஏற்றவள்; சங்கரி – பார்வதி, சங்கரன் தேவியார் அல்லது சங்கரிப்பவள்; வாருமம்மா என்பதிலிருந்து இது மாரியம்மன் வருகையைக் கூறுவதாகிறது திக்கு – திசை; எக்காளம் – மகிழ்ச்சி ஆரவாரம் பொருந்திய தேவி 'எக்கலாதேவி' விசயநகரத் தெய்வங்களுள் ஒன்று. 'எக்கலாதேவி' என்பது மாரியம்மன் வர்ணிப்பில் உள்ள பாடம்.

196. காரண சவுந்தரி – எல்லாவற்றுக்கும் மூலமாக விளங்குபவள், அழகு பொருந்தியவள்; நாரணர் தங்கை – திருமாலான நாராயணன் தங்கை; மாரியர் – மதிப்பு விகுதி 'அர்' பெற்று வருகிறது.

197. நாக(க்) கன்னி – பாதாள உலகத்திலுள்ள நாககன்னிக்கும் நாகராசனுக்கும் பிறந்தவள் என மாரியம்மனைக் குறிப்பிடுவதற்கான கதை ஆதாரங்கள் வில்லுப்பாட்டுகளில் உள்ளன.

மாரியின் கரகம், வேம்பு, பிரம்பு, சூலம்

வேறு

உன்கரகம் பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே
உன்வேம்பு பிறந்ததம்மா விசயநகர் பட்டணமாம்
உன்சூலம் பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில் 200
உன் அலகு பிறந்ததம்மா அயோத்திநகர் பட்டணமாம்
உன்பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டி சந்நிதியாம்
உன்உடுக்கை பிறந்ததம்மா உத்திராட்ச பூமியிலே

---

198. உன்கரகம் . . . . . மேடையிலே; அம்மன் தெய்வங்களோடு கரகம் தொடர்புபடுத்தப் படுவது வழக்கமாக உள்ளது. அம்மனைக் கரக வடிவில் பார்க்கின்ற நிலை உள்ளது. அதாவது அம்மன் தெய்வச் சிலை உள்ள இடங்களில் கரகத்தையும் சோடித்து வைத்து வழிபடுகின்றனர். அம்மன் சிலை இல்லாத இடங்களில் கரகத்தை மட்டும் சோடித்து அதையே அம்மன் வடிவாக நினைத்து வழிபடுவர். இந்நிலையில் கன்னனூர் மாரி மிகப் பழமையானவள் என்பதால் அங்கு மாரியின் கரகம் முதலில் வழிபடப்பட்டு, பின்பு மாரி அம்மன் உருவ வழிபாடு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. கரகம் - கலசம், பானை, குடம்.

199. உன்வேம்பு . . . . . பட்டணமாம் - 'விசயநகரம்' என்பது விசயநகரப் பேரரசின் தலைநகரம். ஆந்திர தேசத்தில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் இருந்தது. நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டபோது மாரியும் தமிழகத்தில் வழிபடப்பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது. மாரியம்மன் தொடர்புடையது வேம்பு மரம். விசயநகரத்திலிருந்து தமிழகத்தில் வந்து மாரியம்மன் கோயில்களில் தலவிருட்சமாக ஏற்படுத்தப் பெற்றிருக்கலாமெனத் தெரியவருகிறது. இவ்வாறு முதன்முதலில் கன்னனூர் என்ற சமயபுரத்தில் வழிபாடு ஏற்பட்டிருக்கலாம்.

200. சூலம் - மூன்று நுனிகளையுடைய சூலாயுதம். சிலம்பு என மாரியம்மன் வர்ணிப்பில் கூறப்பட்டுள்ளது; துலங்கு மணிமண்டபம் - சூலாயுதம் பெரும்பாலும் பார்வதியான சக்தி தேவியாரின் கையிலிருப்பதால் துலங்குமணிமண்டபத்தைக் கைலாயம் எனக் கூறலாம்.

201. அலகு - ஒருவகை ஆயுதம் அல்லது அதன் கூரிய நுனி; அயோத்தி நகர் பட்டணம் - சூரிய வம்சத்து அரசர்களின் தலைநகர். இராமபிரானின் முன்னோர்களும் சந்ததியினரும் இருந்து ஆண்ட இடம்.

202. பிரம்பு - மாரியம்மனுக்கும் மூங்கில் பிரம்புக்கும் தொடர்புண்டு; பிச்சாண்டி சந்நிதி - சிவபெருமான் உறைவிடமான கைலாயம்.

203. உடுக்கை - கையில் வைத்து விரலால் அடித்து ஒலி எழும்பும் கருவி; உத்திராட்ச பூமி - வடநாடு.

உன்பம்பை பிறந்ததம்மா பளிங்குமா மண்டபத்தில்
உன்கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரி யிந்திரபுரம்

உன்மதளைகள் தழைக்கயம்மா வையகங்க ளீடேற
உன்குமாரரவர் சந்தானந் தழைக்க கொம்பனையே மாரிமுத்தே

உனக்கு மூன்றுகரகமம்மா முத்தான நற்கரகம்
உனக்கு ஐந்துகரகமம்மா அசைந்தாடும் பொற்கரகம்

உனக்கு ஏழு கரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
உனக்கு[ப்]பத்து[க்] கரகமம்மா பதித்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும் பொற்கரகம் வீதிவிளை யாடிவர
ஆயிரங் கண்ணுடையாள் அலங்காரி வாருமம்மா

---

204. பம்பை – உடுக்கை போன்றது. இதைக் கழுத்தோடு துணி நாடாமூலம் இணைத்து இடுப்பின் அருகில் தொங்கவிட்டவாறு கையால் அடித்து ஒலி எழுப்புவர்; பளிங்குமா மண்டபம் – இதுவும் கைலாயமே.

205. கருத்து – உருவம்; கஞ்சகிரி – பனி மலைகளுடன் கூடிய பொன் நிறமுடைய கைலாயம்.

206. மதளை – மதலை என்பதன் திரிபுச்சொல் ; மகன் என்றும், பிள்ளை என்றும், குழந்தை என்றும் பொருள்படும்; உன்மதலைகளாகிய உலக மக்களும் உலகமும் தழைக்க அருள்புரிவாயாக.

207. உன்குமாரரவர். . . மாரிமுத்தே மாரியே வணங்கும் பக்தர்களின் சந்ததி (வமிசம்) தழைக்க மாரியம்மனாகிய தெய்வம் அருள் வேண்டப்படுகிறது; கொம்பனையே – கொப்பைப் போன்றவள்.

208–210. உனக்கு மூன்று கரகம் . . . . . பதிந்தாடும் பொற்கரகம். சக்தியின் வடிவமாகக் கருதப்படுவது 'கரகம்'. வழிபாட்டில் கரகம் இடம் பெறும். பக்தர்களின் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப இக்கரகங்களின் எண்ணிக்கை அமையும். அவை பெரும்பாலும் 3, 5, 7, 9 என ஒற்றை எண்ணிக்கையில் அமையும். மூன்று என்ற எண் மங்கல எண்ணானதால் அந்த எண்ணில் தொடங்கப்பெற்றது.

211. மாரியம்மன் வர்ணிப்பு என்ற சுவடியில் 5–ல் தொடங்கி 6,7, 10 வரை கூறப்பெற்றுள்ளது.

212. வேப்பிலையும். . . . . . விளையாடிவர – மாரியம்மன் விழாவின் போது மாரியம்மன் ஊர்வலம் நடைபெறும். அப்பொழுது அம்மன் சிலையைச் சப்பரத்தில் அமர்த்தி ஊர்வலம் வர, அவற்றுடன் மாரியம்மன் பிரதிநிதியாக ஓர் ஆண் அல்லது பெண் மஞ்சள் ஆடை உடுத்தி வேப்பிலையைக் கரங்களில் ஏந்தி வீடுதோறும் கற்பூர ஆராதனையை ஏற்று வீதியில் ஆடிவருவார். இதனை 'வீதிவிளையாட்டு' அல்லது 'ஊர்வலம்' என்பர்.

213. ஆயிரங் கண்ணுடையாள் – 1000 ஞானக் கண்ணுடையவள் என்பது குறிக்கப்படுகிறது. அலங்காரி – அழகு செய்யப்பெற்றவள்.

பதினாயிரங் கண்ணுடையாள் பராசக்தி வாருமம்மா
துலுக்காணத் தெல்லையெல்லாம் குலுக்காடப் பெண்பிறந்தாய்
துலுக்காணத் தெல்லைவிட்டு[த்] துரந்தரியே வாருமம்மா
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா

பல ஊர்களிலுள்ள மாரி அம்மனை அழைத்தல்

மலையாள தேசமெல்லாம் விளையாடப் பெண்பிறந்தாய்
மலையாள தேசம்விட்டு வாருமம்மா யிந்தமுகம்
சமைந்தாய் சமையபுரம் சாதித்தாய் கன்னபுரம்
இருந்தாய் விலாடபுரம் இனிதிருந்தாய் கன்னபுரம்
சமையபுரத்தாளே சாம்பிராணி வாசகியே

---

214. பதினாயிரங்கண் . . . . வாருமம்மா – 10 ஆயிரம் ஞானக் கண்களையுடைய ஞானமயமான சிவசக்தி;

215. துலுக்காணத்து எல்லை – 'துலுக்காணம்' என்பது துருக்கியர் களிருந்த இடம். 'துலுக்காணத்து எல்லை' எனக் கூறப்படுவதால் நம் நாட்டில் துருக்கியர்கள் ஆட்சி செய்த பகுதி என்க.

216. குலுக்காட – அம்மை நோயால் குலுங்கச் செய்த டெல்லி பாதுஷா பட்டணத்தில் அம்மைநோய் கண்டு, அவர் அம்மனுக்கு விழா எடுத்தபின் அங்கிருந்து அந்நோய் அகன்று எனக் கூறுவர். அதனால் இவ்வாறு கூறப்பெற்றது. இதன் வரலாறு முன்பும் வந்துள்ளது. மாரியம்மன் வர்ணிப்பில் 'துலுக்காண மாரியரே துண்டரிக முன்ன சத்தி' என உள்ளது.

217. துரந்தரி, சங்கரி என்பன அம்மனுக்குரிய பெயர்கள்.

218– மலையாள . . . யிந்த முகம் – மாரி என்பது வெயிலைத் தணிக்க

219. மழையைக் கொண்டுவரும் தெய்வம். மழை எல்லா உயிர்களுக்கும் உயிர்வாழ அவசியம் என்பதால் மாரித்தெய்வம் எல்லா மக்க ளாலும் வழிபடப்படுகிறாள். தமிழகம் முழுதும் 'மாரி அம்மன் வழி பாடு' உள்ளது. மலையாள நாட்டில் உள்ள மாரியம்மனைத் தமிழகத் திற்கு வருமாறு அழைக்கிறார். அல்லது மலையாள நாட்டி லுள்ள மழையைத் தமிழகத்திற்கு வருமாறு அழைக்கிறார் என்றா லும் பொருந்தும் பரசுராமன் மலையாள நாட்டை நிர்மாணித்து அங்குக் கோயில்களை அமைத்ததாகக் கூறப்படுகிறது. அங்ஙனமா யின் மலையாள நாட்டிலும் மாரியம்மன் கோயில் கொண்டிருந் திருக் கலாம் எனத் தெரிகிறது; இந்த முகம் – இந்தப் பகுதியை நோக்கி வருக.

220. சமைந்தாய் சமையபுரம். . . கன்னபுரம் – சமயபுரத்தில்தான் கன்ன புரம் உள்ளது. முன்பு கன்னபுரம் என அழைக்கப்பட்டது. தற்போது சமயபுரம் எனப்படுகிறது.

221. விலாடபுரம் – இது மாரி உள்ள ஊராகலாம்.

222. சாம்பிராணி வாசகி அகில் என்ற சாம்பிராணியை ஒத்த மணமுடையவள்.

சமயபுரத் தெல்லைவிட்டுத் தாயாரே வாருமம்மா
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
கன்னபுரத் தெல்லைவிட்டுக் காரணியே வந்தமரும் 225
கடும்பாடி யெல்லையெல்லாங் காவல்கொண்ட மாரிமுத்தே
ஊத்துக் காட்டமர்ந்தவளே உதிரபலி கொண்டவளே
படவேட் டமர்ந்தவளே பரசுராமனைப் பெற்றவளே
படவேட்டை விட்டுமெல்ல பத்தினியே வாருமம்மா

---

223. சமயபுரத்தெல்லை. . . . வாருமம்மா – மாரியம்மன் சமயபுரத்தில் முதலில் கோயில் கொண்டாள் என்ற கருத்தில் அங்கிருந்து தாங்கள் விரும்பும் பகுதிக்கு அவளை அழைத்தல்.

225. கன்னபுரத்தெல்லை – சமயபுரத்தெல்லை. பாண்டி நாட்டின் வட எல்லை. திருச்சி அருகே என்க.

226. கடும்பாடி யெல்லை – செஞ்சி வட்டத்திலுள்ள வல்லம் ஒன்றியத்தில் கடம்பாடி என்ற ஊர் உள்ளது. பாண்டி நாட்டுக்குள் வருவதற்கு மாரியம்மனை அழைத்தல் கூறப்படுகிறது. கடம்பாடியில் பழைய மாரியம்மன் கோயில் உள்ளது.

227. ஊத்துக்காடு. இது காஞ்சீபுரம் அருகிலுள்ள ஊர். அங்குள்ல மாரி யம்மன் சிறப்புப் பெற்றவள். எனவே அங்கிருந்து பிடிமண் எடுத்து வந்து தமிழகத்தின் பல ஊர்களிலும் கோயில்கள் எழுப்பப்பட்டு அதற்கு இடப்பெயர் அடிப்படையில் ஊத்துக்காட்டம்மன் எனப் பெயர்வைத்து வழிபடுகின்றனர்;

228–229 படவேட்டை . . .வாருமம்மா – 'படைவீடு' என்பது படவேடு என மருவியுள்ளது. இந்த இடம் காட்பாடி – வேலூர் பாதையில் சந்த வாசல் அருகில் உள்ளது. கமண்டலநதி இந்த ஆலயத்திற்கு அருகில் ஓடுகிறது. இராவணனுக்கு உதவியாக இந்த அம்மன் இருந்ததால் அனுமன் இராவணனை வெற்றி பெற முடியவில்லை. எனவே இந்த ரேணுகா அம்மனை வழிபட்டு அவள் அருளால் இராவ ணனை வென்றான். இந்தப் படவேட்டில் அமர்ந்த மாரியம்மன் ஊர்ப்பெயர் அடிப்படையில் படவேட்டம்மன் என அழைக்கப்படு கிறாள்.

பரசுராமனைப் பெற்றவள் ஜமதக்கினி முனிவர் மனைவி யான ரேணுகாதேவி, இவள் ஒரு கற்புக்கரசி. ஆற்றுமணலில் தன் கற்பாற்றலால் பானை செய்து நீர் எடுத்து வரும் வழக்கமுள்ளவள். வானத்தில் சென்ற கந்தருவன் நிழலை ஆற்று நீரில் பார்த்துச் சற் றுப் பேதலித்ததால் ஆற்றுமணல் பானையாக ஆகாமல் போனது. வெறுங்கையுடன் திரும்பிய ரேணுகாதேவியின் பேதலித்த சிந்த னையை அறிந்த ஜமதக்கினி முனிவர் தன் மனைவியான அவளைக் கொல்லுமாறு தன் புத்திரர்களுக்கு உத்தரவிட்டார். இறுதியில் பரசுராமன் தன் தாயான ரேணுகாதேவியைக் கொன்று பின் தன் தந்தையிடம் வரம் வாங்கி அவளை உயிர் மீட்டார் என்றும், அன்று முதல் மாரிஅம்மனாக ரேணுகா தேவியார் வழிபடப் பெற்றார் என்றும் கதைகள் வழங்குகின்றன. பார்க்க வரிவிளக்கம் பக். 727

மாரியம்மன் தேரோட்டமும் செடலாட்டமும்

அந்தரத்திற் தேரோட அருகே செடிலசைய
உச்சியிற் தேரோட உயரச் செடிலசைய
மச்சியிற் தேரோட மகிழச் செடிலசைய
பக்கங் கயிறோட பார[ச்] செடிலசைய
ஆண்ட குருதேசிகரை அறியாத மானிடரை
தூண்டிலிட் டாட்டிவைக்கத் தோன்றினாய் நீயொருத்தி
கோலியனூ ரெல்லையிலே குடிகொண்ட மாரிமுத்தே

---

230. கோலியனூர் – ஓர் ஊர். இங்குள்ள எல்லைமாரி மிகப்பிரசித்தி பெற்றவர், இவ்வூர் விழுப்புரம் – பாண்டி வழித்தடத்தில் உள்ளது.

231. அந்தரத்திற் தேரோட – ஆகாய அளவுள்ள மாரியம்மன் தேரைச் சங்கிலி அல்லது வடம் கொண்டு பலர் சேர்ந்து இழுப்பர்; அருகே செடிலசைய – உயர்ந்த பெரிய தேர் அருகில் பக்தர்களின் செடல் (சிறுதேர்) இழுக்கப்படுகிறது. 'செடல்' அல்லது 'செடில்' என்பது பக்தன் நோன்பு மேற்கொண்டு முதுகில் கொக்கி மாட்டி, சிறுதேர் இழுத்தல் ஆகும். இது ஒரு வகை நேர்த்திக் கடன் ஆகும்.

232. உச்சியிற் தேரோட – வான் உச்சி அளவிற்குப் பெரிய தேர்; இழுத்தல்; உயரச் செடிலசைய – விரதமிருந்த பக்தனைப் படுக்கை நிலையில் வைத்து. அவன் முதுகில் இரு பெரிய கொக்கிகளை மாட்டி அக்கொக்கியுடன் கயிறு பிணைத்து அவன் அப்படியே படுக்கை நிலையிலேயே உயரே தூக்கிக் கயிறால் சடல் கம்பத்தில் கட்டுவர். இவ்வாறு ஒரே கம்பத்தில் – சுழல் கம்பத்தில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது எனக் கொக்கி மாட்டப்பட்ட மனிதரை இணைத்து அக்கம்பத்தைச் சுற்றுவது ஒருவகையான சடல்–செடல் இயக்குதல் முறையாகும்.

233. மச்சியிற் தேரோட – மேல்மாடம் வரை தேரின் மேல் பகுதி செல்ல; அதன் அளவு உயர சிறுதேர் செடல் மகிழ்ச்சியுடன் இழுக்கப்படுகிறது.

234. பக்கங் கயிறாட – ஒரு மனிதரை நிற்க வைத்து அவர் முதுகின் இருபக்கத்திலும் இரு கொக்கிகளை மாட்டி அவற்றுடன் இரு கயிறுகளைப் பிணைத்து அக்கயிறின் மற்றொரு முனை தேர் சட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்; பார(ச்) செடில் – கனமுள்ள செடல்.

235. ஆண்டகுரு தேசிகர் – ஆட்சியாளர்கள், குருக்களாக விளங்குவோர்,

236. தேசிகர்களாக விளங்குவோர் 'குருசிவனே' என்கிறது மாரியம்மன் வர்ணிப்பு. அறியாத மானிடர் – தெரியாத பேர்கள்; துண்டியிட் டாட்டி – கொக்கியிட்டுப் பிடித்து அவர்களைத் தண்டித்துத் துன்பப்படுத்தத் தோன்றினாய்.

எல்லா அம்மன்களும் மாரியின் அமிசமாதல்

பெரியபாளையத் தமர்ந்த பேச்சியெனும் மாரியரே
பெரியபாளையத்தை விட்டுப் பேரரசி வாருமம்மா
ஆரணி பெரியபாளையமம்மா அதிலிருக்கு மாற்றங்கரை
ஆற்றங்கரை மேடைவிட்டு ஆச்சியரே வாருமம்மா
வெத்திவீராம் பட்டண மமர்ந்த மாரிமுத்தே
சத்தியாய் நீயமர்ந்தாய் தனிக்குட்டி காவுகொண்டாய்
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் பிள்ளைகள் தாளெங்குமுண்டு வையகத்தில்
கோர்த்தமுத்து வடமசைய கொங்கைரெண்டும் பாலொழுக

237-- பெரியபாளையத்தமர்ந்த .... ஆச்சியரே வாருமம்மா – 'பாளையம்'
240. என்பது படைவீடு என்று பொருள், தென்னாட்டை ஆட்சி செய்யும் பவானியம்மன் தங்கியிருக்கும் 'ஆரணி' ஆற்றங்கரையிலுள்ள 'பாளையம்' உலகத்திலேயே பெரிய பாளையம் ஆகும். ஏனெனில் ஊழ்வினையால் உருக்குலையும் ஒரு கோடி மக்களுக்கும் இந்த பவானிதான் காவலாக இருக்கிறாள். எனவே அத்தகைய சிறப்புப் பொருந்தி மாரியின் அம்சமாகிய பவானியம்மனைத் தானிருக்கும் இடத்திற்கு வருமாறு வேண்டுகிறாள்.
பேச்சி – ஒரு சிறு தெய்வம் பார்க்க: வரிவிளக்கம் 170. பேரரசி – விசயநகரப் பேரரின் ஆட்சியில் தெய்வமாக இருந்து ஆட்சி செய்பவள்; ஆரணி – ஓர் ஊர்; ஆற்றங்கரை – பவானி இருக்கும் ஆரணியாற்றின் கரை.

241. வெத்தி – வெற்றி வீராம்பட்டணம் – இது திருச்சி மாவட்டத்தில் உள்ள ஊர். இங்குள்ள மாரியம்மன் சிறப்புப் பொருந்தியவள்.

242. சக்தியாய் – பராசக்தியான பார்வதியின் அம்சமாய்; தனிக்குட்டி காவுகொண்டாய் – மறி ஆட்டுக்குட்டி, மாரியம்மனுக்குச் சில இடங்களில் உயிர்ப்பலி கொடுப்பதும், சில இடங்களில் உயிர்ப்பலி அற்ற சைவ வழிபாடு மேற்கொள்வதும் இயல்பு. இந்நிலையில் மாரியம்மனுக்கு உயிர்ப்பலியாகக் கோழி, ஆடு கொடுப்பது வழக்கம். அந்நிலையில் மாரிதனக்கென விடப்பெற்ற பலியாட்டை இங்குக் காவு கொள்கிறாள் எனக் கூறப்படுகிறது.

243-- உன்னைப் போல் ..... வையகத்தில் .... கண்டதில்லை – 'மாரி
244. இல்லையேல் மக்கள் இல்லை' என்ற பழமொழிக்கு இணங்க இங்கு மாரி முதன்மைப் படுத்தப்படுகிறாள். இக்கதைப் பாட்டைப் பாடும் பக்தனைப் போல் உலகில் பலருண்டு.

245. கோர்த்தமுத்து .... பாலொழுக முத்துக்களால் கோர்க்கப்பட்ட (அணிகலன்) வடமானது (மாலையானது) மாரியம்மன் மார்பில் புரண்டு அசைவதாகவும் அவள் கொங்கை இரண்டும் அருட்பால் சுரப்பதாகவும் கூறப்படுகிறது.

ஏற்றவர்க்கு வரந்தருவாய் எக்கால தேவியரே
எக்கால தேவியரே திக்கெல்லா மாண்டவளே
திக்கெல்லாம் ஆண்டவளே திகம்பரியே வாருமம்மா
முக்கோண சக்கரத்தில் முதன்மையாய் நின்றசக்தி
அக்கோணந் தன்னில் வந்து ஆச்சியரே அமருமம்மா
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா

மாரி நாராயணர்க்கும் சிவனார்க்கும் உறவாதல்

மாயமருளியரே மணிமந்திர சேகரியே
வல்லாண்மைக் காரியரே வழக்காடும் மாரிமுத்தே
வல்லவரைக் கொன்றாய் வலியவரை மார்பிளந்தாய்
நீலிகபாலி யம்மா நிறைந்ததிருச் சூலியரே

---

246. எக்கால தேவியர் – எக்காலதேவி அம்மன். விசயநகரப் பேரரசின் தெய்வம்.

247. திக்கெல்லாம் ஆண்டவள் – எல்லா நாட்டிலும் மாரி வழிபடப்படுகிறாள்.

248. திகம்பரி – திகம்பரனின் (சிவன்) மனைவியான பார்வதியின் அம்சமான மாரி.

249. முக்கோண சக்கரத்தில் . . . . வந்து அமரும் –'சக்தி' என்ற மூன்றெழுத்து மந்திரத்தை உள்ளடக்கிய சக்கரம் ஆகும். இந்த 'முக்கோண சக்கரத்திற்குள் சக்தி இருப்பாள். இங்குச் சக்தியின் மந்திரம் மாரியம்மனுக்கு ஏற்றிக் கூறப்படுகிறது. இதைத் திரி கோணச் சக்கரம் என்றும் கூறுவர்; முதன்மையாய் – தலைமையாய் ஆதியாய்.

250. அக்கோணம் தன்னில் – அந்த முக்கோணத்தில் ஆச்சியரே – வழக்குச் சொல்; வயது முதிர்ந்தவர்களை 'ஆச்சி' என்று கூறுவது வழக்கம். 'பாட்டி' என்பதற்கு மாற்றாகச் சில வட்டாரங்களில் இச்சொல் பயன்படுகிறது. மேலும் திருமாலவதாரமான ஆயனின் தங்கை பார்வதியாதலால் அவள் அம்சமான மாரியை 'ஆச்சி' என்று கூறுவதும் வழக்கு; வந்து அமர்தல் – சக்கரத்தில் வந்திருந்து சக்தி தருக.

252. மாயமருளியரே – மாயைகள் செய்து மயக்கத்தை ஏற்படுத்தக் கூடியவள்.

253. வல்லாண்மைக்காரியர் – பேராற்றல் உடையமாரி; 'வல்லமைக் காரி' என மாரியம்மன் வர்ணிப்புக் கூறும்; வழக்காடும் மாரிமுத்து – சிவனுடன் வாதாடி வென்ற சக்தியின் அம்சமாதலால் மாரிக்கு அச் செயல் ஏற்றிக் கூறப்பட்டது. சிவனோடு முத்தாரம்மன்தான் (சக்தி) வழக்காடினாள் என்றும் கூறுவர். அதை மாரியம்மனுக்கு ஏற்றிச் சொல்லப்படுகிறது.

254. வல்லவரை. ... மார்பிளந்தாய் – அரக்கரை மார்பிளந்து கொன்றாய்.

255. நீலி – கருநிறத்துத் துர்க்கை, பார்வதி; கபாலியம்மா – கபாலத்தைக் கையிலே ஏந்தியவள்; நிறைந்த திருச்சூலி – சூலப்படை உடைய துர்க்கை. திருச்சூலி என்பது திரிசூலியிலிருந்து வந்தது.

நாலுமூலை யோமகுண்டம் நடுவே கனகசபை
கனகசபை வீற்றிருக்கும் காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே நாரணனார் தங்கையரே
நாரணனார் தங்கையரே நல்லமுத்து மாரியரே
நடலைச் சுடலையம்மா நடுச்சுடலை தில்லைவனம்
தில்லைவனத் தொல்லைவிட்டுத் திரும்புமம்மா யிந்தமுகம்

செடலும் வேப்பிலையும்

வார்ப்புச் சிலையாளே வச்சிரமணித் தேராளே
தூண்டில் துடைப்பெருமன் தூண்டிமுள்ளு கைப்பெருமன்
மண்டையிலே தைத்தமுள்ளு மார்புருகிப் போகுதம்மா

256– 257. நாலு மூலை . . . . . சவுந்தரியே – நாலு மூலையிலும் ஓமகுண்டம் எரிய, நடுவில் இருப்பதான பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் மூலமே. சவுந்தரி – சௌந்தரி, அழகானவள்.

260. நடலைச் சுடலை . . . . யிந்தமுகம் – சிவன் நடனமிடும் இடம் சுடலை எனப்படும் சுடுகாடு. இச்சுடலையின் நடுவே சிவன் ஆடும் தோற்றம் தில்லைச் சிதம்பரத்திலுள்ள நடராசன் தோற்றத்துடன் ஒப்பிடப்படுகிறது. சிவன் இருப்பிடமே பார்வதிக்கு இருப்பிடம் ஆதலால், பார்வதியின் அம்சமாகிய மாரியை அவ்விடம் விட்டுத் தங்கள் இருக்கும் இடத்திற்கு வரச் சொல்லப்படுகிறது;

261. தில்லைவனம் – சிதம்பரத்திற்கு மற்றொரு பெயர்; திரும்புமம்மா இந்தமுகம் – மாரியம்மனைத் தன்பகுதிக்கு எழுந்தருளுமாறு இக்கதைப்பாடலாசிரியர் வேண்டுகின்றார்.

262. வார்ப்புச் சிலையாளே – வார்த்தெடுத்த உலோகச் சிலை போன்று மாறாத அழகிய தோற்றமுடையவள்; வச்சிரமணித் தேராளே – வைரக்கல் பொருத்தப்பட்ட தேரையுடையவள்.

263. தூண்டில் துடைப்பெருமன் – மீன்கள் போன்றவற்றைப் பிடிக்கக் கூடிய வளைந்த இரும்பு முள் (கொக்கி). இதன் பிடியானது 'தொடை' அளவுப் பருமனாக உள்ளது. அதன் கூரிய முள் கை அளவுப் பருமனாக உள்ளது. மாரியம்மன் வர்ணிப்பு என்ற சுவடியில் 'பொருமன்' என்றுள்ளது' பொருமன், பருமன் என, வரும்.

264. மண்டையிலே. . . . போகுதம்மா மண்டையில் பற்றுவதற்காக இட்ட தூண்டில் முள் அங்குத் தைத்து மார்பு வழியாக ஊடுருவி வெளியேறுகிறது. இதனால் தூண்டில் முள்ளை வீசிய திறன் வியந்து கூறப்படுகிறது. மாரியம்மன் தூண்டில் முள்ளால் துட்டர்களைப் பற்றிப் பிடிப்பாள் எனப் பொருள். செடல் ஆட்டத்தின்போது தூண்டிமுள்ளால் தோலில் குத்தித் தூக்குவதையும் குறிப்பிடலாம்.

கத்திபோல் வேப்பிலையைக் கதறவிட்டாய் லோகமெல்லாம்
ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பிக் கொண்டவளே
பத்திரிக் குள்ளிருக்கும் பாவனையை யாரறிவார்
வேப்பிலைக் குள்ளிருக்கும் வித்தைகளை யாரறிவார்
செடிலோ துடைப்பெருமன் தூண்டிமுள்ளு கைப்பெருமன்
தூண்டிமுள்ளைத் தூக்கித் துடுக்கடக்கும் மாரிமுத்தே
ஒற்றைச் செடிலாட ஊரனைத்தும் பொங்கலிட
இரட்டைச் செடிலாட யிரண்டணியும் பொங்கலிட

---

265. கத்திபோல் வேப்பிலையைக் கதறவிட்டாய் – அம்மை நோயுடையோரை வேப்பிலையால் வருடுதல் இயல்பு. முற்றிய வேப்பிலையானால் அது அவர்கள் உடம்பைக் குத்தும். கதறவிட்டாய் – ஓலமிடவைத்தாய். வேப்பிலை கூரிய நுனிகளையுடையதால் 'கத்தி' யுடன் ஒப்பிடப்படுகிறது; லோகமெல்லாம் – உலகம் முழுவதும்.

266. ஈட்டிபோல் வேப்பிலை – கத்திக்கு ஒப்பிட்டதுபோல் வேப்பிலையை ஈட்டிக்கும் ஒப்பிட்டார். மனித உடலில் வேம்பானது ஈட்டிபோல் பாய்ந்து அவ்வுடலிலுள்ள நோய்களை நீக்கவல்லது.

267. பத்திரிக்குள்ளிருக்கும் – வேப்பிலைக்குள்ளே காணப்படும் பாவனை – சக்தி; வேப்பிலைக்குள் இருக்கும் சக்தி முழுவதையும் அறிந்தவர் யாரும் இல்லை. அத்தகு சிறப்புப் பொருந்திய மருந்தாக அது விளங்குகிறது.

268. வேப்பிலைக்குள் . . . . யாரறிவார் – வேப்பிலைக்குள் இருக்கும்; வித்தையை, கல்வியை அறிவார் இல்லை.

269. செடிலோ . . . . கைப்பெருமன் – செடிலில் குத்தும் தூண்டிமுள் தொடை அளவும் கை அளவும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

270. தூண்டி . . . . . மாரிமுத்தே – தூண்டிமுள் கொண்டு துட்டர்களின் துடுக்கு அடக்குபவள் மாரியம்மன்.

271. ஒற்றைச் செடில் – ஒரு தேர் பக்தர் முதுகில் மாட்டப்பட்ட கொக்கியுடன் கயிறுமூலம் இணைத்து இழுத்துச் செல்லப்படுவது; ஊரனைத்தும் பொங்கலிட – மாரி அம்மன் விழாக்களில் ஊர்மக்கள் அனைவரும் பொங்கலிடுவது இயல்பு.

272. இரட்டைச் செடிலாட – பக்தர் முதுகில் கொக்கி மாட்டி இரு தேர்களை, ஒன்றன்பின் ஒன்றாக இணைந்து இழுப்பது; இரண்டணியும் பொங்கலிட – ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து பொங்கலிடுதல் வழக்கமாதலால் அது இங்குக் குறிப்பிடப்படுகிறது.

வடக்கும் தெற்கும் மாரிஅம்மன் விளங்குதல்

பக்கச் செடிலாட படைமன்னர் கொக்கரிக்க
பரமசிவன் வாசலிலே பால்பசுவு காவுகொண்டாய்
எமனிட வாசலிலே எருமைக்கிடா காவுகொண்டாய்
எருமைக்கிடா காவுகொண்டாய் எக்கால தேவியரே
எக்கால தேவியரே திக்கெல்லா [ம்] ஆண்டசக்தி
காசிவள நாட்டாளே கன்னியா குமரியரே
காசிவள நாட்டைவிட்டு [க்] கட்டழகி வாருமம்மா
ஊசிவள நாடு உத்தியா குமரிதேசம்

---

273. பக்கச் செடிலாட – மையத்தில் செடல்கம்பமும் அதைச் சுற்றிப் பக்கவாட்டில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது எனப் பக்தர்களைக் கயிற்றுக் கொக்கியால் சுழல் கம்பத்தில் பிணைத்துக் கம்பத்தைச் சுழற்றுவர்; படைமன்னர் கொக்கரிக்க – இதைக் கண்ணுறுவோர் பேரொலி எழுப்புகின்றனர்.

274. பரமசிவன் வாசலிலே . . . . காவுகொண்டாய் – கைலாய மலைச் சாரலில் மாரியம்மன் சிவன் பசுக்களைப் பலியாக ஏற்றதாகக் கூறப்படுகிறது. இது நாட்டின் வடக்குப் பகுதியில் மாரி காவு கொண்டதைக் கூறுகிறது.

275. எமனிட வாசலிலே . . . காவுகொண்டாய் – எமனுடைய திசை தெற்கு. ஆதலால், அத்திசையிலும் மாரி அம்மன் எருமைப்பலி கொண்டதாகக் கூறப்படுகிறது. பரமசிவன் பகுதியில் பசுவும், எமன் பகுதியில் எருமையும் பலி கொண்டதாகக் கூறப்படுவதால் அங்கங்குப் பலியிடும் விலங்குகளின் சிறப்புக் கூறப்படுகிறது என அறிந்து கொள்ளலாம். மேலும் விலங்குகளும் அம்மை நோ.க்குப் பலியாகும் என்றும் தெரிகிறது.

276. எக்கால தேவி – மாரியின் அம்சமான யக்ஷகான தெய்வம் எனலாம், இது விசயநகரப் பேரரசினர் வணங்கிய தெய்வம்.

277–279. திக்கெல்லா[ம்] ஆண்டசக்தி . . . வாருமம்மா – வடக்கேயுள்ள காசியில் விசாலாட்சி அம்மனாகவும், கன்னியாகுமரியில் குமரி அம்மனாகவும் மாரி அம்மன் எழுந்தருளியுள்ளதாகக் கூறப்படு கிறது கட்டழகி – பொருத்தமான அழகி, 'காரணியே' என்கிறது. 'மாரியம்மன் வர்ணிப்பு' என்ற சுவடி.

280. ஊசிவளநாடு உத்தியாகுமரி தேசம் வடக்கும் தெற்கும் உள்ள வளநாடுகள் இங்குப் பேசப்படுகின்றன.

அம்மை நோயால் வருந்தும் ஒரு குழந்தையைக் காக்க அழைத்தல்

குழந்தை வருத்துறது உன்கோவிலுக்கு[க்] கேள்க்கிலையோ
மைந்தன் வருந்துறது உன் மாளிகைக்குக் கேள்க்கிலையோ
பாலன் வருந்துறது பார்வதியே கேட்கலையோ
கோயிற் கடுமையம்மா கொண்டாடும் பாலகன்டி
மாளிகையை விட்டு மாதாவும் வாருமம்மா
சந்நிதியை விட்டு[த்] தாயாரும் வாருமம்மா
அரண்மனையை விட்டு ஆத்தாளே வாருமம்மா
கோயிற் கடிமையம்மா கொண்டாடும் பாலகன்டி
சந்நிதி மைந்தனம்மா சங்கரியே பெற்றவளே
வருந்தி யழைக்கின்றேன்நான் வண்ணமுகங் காணாமல்
தேடி யழைக்கின்றேனே தேவிமுகங் காணாமல்
ஏழைக் குழந்தையம்மா எடுத்தோர்க்குப் பாலகன்டி.

281– குழந்தை . . . மைந்தன் . . . கேள்க்கிலையோ – பேய்கூட குழந்தைக்
282. காக இரங்கும் என்பது மக்கள் நம்பிக்கை; அம்மை நோயால் பாலன் வருந்திப் புலம்புவது மாரிக்குக் கேட்கவில்லையா எனக் கூறப்படுகிறது. வருந்துறது – வருந்துவது, மாளிகை – கோயில்;

283. பார்வதி – சக்தி, மாரியைப் பார்வதியின் அம்சம் என்கிறார்.

284. கோயிற் கடுமையம்மா – கோயிலுக்கு அடிமை என்பதன் திரிபு. கொண்டாடும் பாலகன் – மாரியைத் துதிக்கும் இயல்புள்ளவன், பாலகன்டி – பாலகனடி, சிறுவன்,அடி. 'அடி' என்பது மாரியம்மனை 'விளிக்கும்' சொல்.

285. மாளிகை – கோயில்; மாதா – அன்னை, மாரியம்மன்

286. சந்நிதி – கோயில்

287. அரண்மனை – கோயில்; ஆத்தா – அம்மா.

289. சந்நிதி மைந்தனம்மா – கோயில் பணி செய்வதற்கென்றே நியமிக்கப்படுகின்ற பிள்ளை நான்; சங்கரியே பெற்றவளே – போர்த்தன்மை வாய்ந்தவளே, என்னைப் பெற்ற தாயே.

290. வண்ணமுகம் – உன் அழகானமுகம்

291. தேவி – பார்வதியம்மன் பெயர் இங்குப் பார்வதியின் அம்சமாக மாரியம்மன் கருதப்படுவதால் மாரியம்மனுக்கும் இப்பெயர் கூறப்படுகிறது.

292. ஏழைக் குழவி – 'ஏழையின்' முகத்தில் இறைவனைக் காணலாம் என்பது பழம்வாக்கு. ஏழைக் குழந்தைக்கு இறையாகிய (மாரி) நீ இரங்கவில்லையோ எனக் கேட்கப்படுகிறது; எடுத்தோர்க்குப் பாலகன் – 'எடுப்பார் கைப்பிள்ளை' என்பது போல் நோயுற்றவன் சிறுகுழந்தையாதலால் இவ்வாறு கூறுகிறார்;

பாலன் குழந்தையம்மா பார்த்தோர்க்குப் பாலகன்டி
மைந்தன் குழந்தையம்மா மகராசி காருமம்மா
கல்லோடி யுன்மனது கரையிலையோ எள்ளவும்
இரும்பு முருகிடு[ம்] உன் இருதயமுருகா தென்னவிதம்
முன்செய்த தீவினையோ முற்காலத்துப் பயனோ
பெரியோர்கள் செய்ததீவினையோ பெற்றவளே சொல்லுமம்மா
ஏதுமறியே னம்மா யீஸ்வரியே சொல்லுமம்மா
கடும்பாடி யெல்லையிலே கட்டழகி வீற்றிருப்பாய்
கடும்பாடி யெல்லைவிட்டுக் கட்டழகி வாருமம்மா

மாரியும் கும்பமும்

கரகத் தழகியே கட்டழகி மாரிமுத்தே
கரகத்து மீதிருந்து கட்டழகி கொஞ்சுமம்மா
கும்பத் தழகியம்மா கோபாலன் தங்கையரே
கும்பத்து மீதிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே

---

294. காருமம்மா – காப்பாற்றுவீர்; நெல்லை வழக்கு.

295. கல்லோடி உன் மனது – கல்போன்ற இறுகிய மனமோ; கரையிலையோ – இரக்கப்பட்டு உருகவில்லையோ.

297. முன் செய்த – முற்பிறவியில் தீங்கு செய்து விட்டேனோ?

298. அதனால் ஏற்பட்ட பிற்கால விளைவா இது? அல்லது என் முன்னோர்கள் ஏதாவது தீங்கு செய்துவிட்டனரோ என மாரியம்மனிடம் கேட்டல்.

299. ஏதுமறியேனம்மா – என்ன தீவினை செய்தேன் என்பது எனக்குத் தெரியவில்லை.

300. கடும்பாடி – கடம்பாடி என்பதன் திரிபு; இது தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில் உள்ள ஊராக இருக்கலாம். அங்குள்ள 'கடம்பாடி' என்ற ஊரில் ஒரு பழமையான மாரியம்மன் கோயில் உள்ளது.

302– கரக.... கட்டழகி கொஞ்சுமம்மா – மாரியம்மனுக்குரிய ஒப்பனைக்
303. கரகமானது மிகவும் அழகாக இருக்கும். அப்படிச் சோடிக்கப்பட்ட அக்கரகத்தையே மாரியம்மன் வடிவமாகக் கருதும் வழக்கு மக்களிடையே உள்ளது. எனவேதான் அழகான கரகவடிவாய் இருக்கும் கட்டழகி மாரிமுத்து எனக் கூறப்படுகிறது. கரகத்தின் மீது அம்மன் தோற்றத்துடன் 'பொம்மை' ஒன்றும் வைக்கப்பெற்றிருக்கும். எனவேதான் கரகத்தின் மேலிருந்து கொஞ்சுமம்மா என்கிறார்.

304– கும்பத்தழகி . . . பெற்றவளே – மாரியம்மன் விழாவில் 'கும்பம்
305. படைத்தல்' ஒரு வழிபாடாக அமைகிறது. கும்பம் படைத்தலாவது: சோறு காய்கறி, குழம்பு இவற்றை ஊரில் ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் அம்மன் கோயிலுக்குக் கொண்டு வந்து அம்மன் முன்பாக எல்லாவற்றையும் ஒன்றாகக் கொட்டி அதன்மீது மாவிளக்கு (அவித்

உனக்குப் பட்டு பளபளன்ன பாடகக்கால் சேராட
உனக்கு முத்து மொளமொளன்ன மோதிரங்கால் சேராட
உலகமெல்லாம் முத்தெடுக்க உள்ளபடிதான் வந்தாய்
தேசமெல்லாம் முத்தெடுப்பாய் தேவிகன்ன னூராளே
முத்தெடுக்கத் தான்புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு ஈச்சங்குறக் கூடை யிருக்கட்டும் பொன்னாலே
உனக்குத் தாழங்குறக் கூடை தனிக்கட்டுப் பொன்னாலே

தது) ஏற்றி வைத்து வழிபடுவர். எனவே அந்தக் கும்பத்தின் மீது அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு கூறப்படுகிறது. மேலும் 'கும்பம்' என்பது கரகத்திற்கு மற்றொரு பெயர். எனவே கரகம் போன்றே கும்பத்தையும் இவ்வரியில் கூறினார்.

306. பட்டு பளபளன்ன – மாரியம்மனுக்குச் சாத்தியிருக்கும் மஞ்சள் அல்லது சிவந்த பட்டு 'மினு மினு'வென ஒளி வீசுகின்றது; பாடகம் – ஒருவகைக் காலணி; கால்சேராட – காலை ஆட்டும்போது பாடகமும் காலுடன் சேர்ந்து ஆடுகிறது.

307. முத்து மொளமொளன்ன – தாராளமாக முத்துக்களால் கோர்த்த மாலை மாரியம்மனுக்கு அணி செய்கின்றது; மோதிரம் திருமணமான பெண்களின் கால் விரல்களில் மோதிரம் அணிவது வழக்கம். மாரியம்மன் பார்வதியின் அம்சமாகக் கருதப்படுவதால் அவள் கால்களில் மோதிரம் அணிந்துள்ளதாகக் கூறுகின்றார்; கால் சேராட – காலை ஆட்டும்போது மெட்டி மோதிரமும் சேர்ந்து ஆடுகின்றது.

308–310. உலகமெல்லாம் . . . மாரிமுத்தே – வெப்பம் காரணமாகத் தோன்றும் அம்மை நோயை நீக்கும் தன்மை மாரிக்கு (மழைக்கு) உள்ளதால் மழைக் கடவுளான மாரியம்மனே அந்த அம்மை நோயை நீக்கக்கூடியவள் எனக் கூறப்படுகிறது. உலகத்தினர்க்கு மாரி அம்மன்தான் அம்மை முத்துக்களை விதைப்பவள். அவளிட்ட முத்துக்களை அவளே வந்து எடுத்துச் செல்ல வேண்டுகிறார்.

311. ஈச்சங் குறக்கூடை. . . பொன்னாலே – குறவர்கள் ஈச்சமர இலைக் குச்சிகளை வைத்துக் கூடை அல்லது சிறு பெட்டி முடைவர். அப்படிப் பின்னப்பட்ட கூடையில் அல்லது பெட்டியில் அம்மை முத்துக்களை இட்டு இரைத்து மக்களிடையே அவற்றை விதைப்பாள் என நம்பப்படுகிறது. இதைத் தென்பாண்டி நாட்டில் கின்னுப் பெட்டி என்பர். இது பொன்னால் ஆகிஇருக்கட்டும் என்கிறார். குற < குறை, குறைந்த அளவு எனவும் கூறலாம்.

312. தாழங் குறக்கூடை. . . பொன்னாலே தாழைஇலைகளைக் கொண்டு செய்யப்படும் அக்கூடையில் அம்மன் முத்தெடுத்துச் செல்வதால், அது பொன்னால் அமைய வேண்டும் என ஆசைப்படுகின்றார். ஈச்ச மரங்களும் தாழைகளும் இல்லாத பகுதியில் தென்னை ஓலைகளால் செய்யப்பெற்ற கூடையைப் பயன்படுத்துவர். மேலும் பனைகள் மிகுந்துள்ள பகுதிகளில் அம்மனுக்குரிய பெட்டிகள் எல்லாம் பனைநார்களால் செய்யப்பெற்றவையாக இருக்கும்.

குறக்கூடை முத்தெடுத்து[க்] கொம்பனையே நீ புகுந்தாய்

சந்தடியிருந்தாலும் அதை நீக்கி மாரி வருமாறு கோருதல்

கோயிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேளாதோ
அரண்மனைச் சந்தடியில் அழைத்தாலும் கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவே கேட்கிலையோ
மக்களிட சந்தடியோ மருமக்கள் சந்தடியோ
பிள்ளைகளின் சந்தடியோ பேரன்மார் சந்தடியோ
அனந்தல் பெருமையோ ஆசாரச் சந்தடியோ
சந்தடியை நீக்கியம்மா தாயாரு மிங்கேவா

---

313. குறக்கூடை முத்து எடுத்து – கூடைகளில் அம்மை முத்துக்களை எடுத்து; கொம்பனையே நீ புகுந்தாய் – பூங்கொம்பு போன்ற உடல் அமைப்புக் கொண்ட மாரி அம்மன் ஊருக்குள் புகுந்துள்ளாள் என்கிறார். நாட்டுப்புறங்களில் கிண்ணுப் பெட்டியில் முத்தெடுத்து விதைப்பது மாரியின் வழக்கம் எனக் கூறுவது இயல்பு. 'கிண்ணுப்பெட்டி' என்பது பனைநாரால் செய்யப்பெற்ற சிறிய பெட்டி. குறைந்த அளவு தானியங்களை வைக்க அப்பெட்டி உதவும். சிறுவர்களுக்கு வறுத்த கடலை, பொரி போன்றவற்றைக் கொடுத்து அனுப்புவதற்கும் ஏற்றது.

314–315. கோயிலின் சந்தடியில். . . கேட்கிலையோ – மக்கள் நெருக்கம் மிகுந்த இடம் கோயில். அக்கோயிலே மாரியின் அரண்மனை யாகும். அக்கோயில் எப்பொழுதும் ஒலி மிகுந்து இருக்கும். அதனால் மாரித்தாயை அழைப்பது கேட்காது என்கிறார்.

317. மக்களிட – ஆண் மக்களுடைய, மகன்கள்; மருமக்கள் – மருமகன்கள்

318. பிள்ளைகள் – பெண் மக்கள்; பேரன்மார் – மகனுடைய, மகளுடைய பிள்ளைகள்.

319. அனந்தல் பெருமை – எண்ணற்றவர்களிடையெ கூப்பிடுதல். ஆசாரச் சந்தடி – அனுஷ்டானத்தின் போது ஏற்படும் ஓசை.

320. சந்தடியை நீத்தி . . . இங்கேவா – இவ்வளவு ஓசைகள் மிகுந்திருப்பினும், அழைக்கும்போது வந்து அருள் கொடுக்க வேண்டுமென்கிறார்.

காத்தவராயனை அழைத்துவர வேண்டல்

கொல்லிமலை யாண்டவனைக் குமர குருபரனை[க்]
காத்தவ ராயனைத்தான் கட்டழகி தானழையும்

321– கொல்லிமலை. . . காத்தவராயனை. . . தானழையும் –
322. இவ்வரிகளைப்போல் 'மாரியம்மன் வர்ணிப்பு' என்ற சுவடியிலும் அமைந்துள்ளன. அவை வருமாறு:

"காத்தனைப் பெத்தவளே கட்டழகி மாரியம்மா"
தொட்டியத்துச் சின்னானைத் தொழுதுவரப் பண்ணதக்தி
ஆரியமாலைக்காக ஆண்டவனைக் கழுவில் வைத்தாய்
பெண்ணரசிக் காகப் பிள்ளையைக் கழுவில் வைத்தாய்
ஆணழகிக்காக அரும்பாலகனைக் கழுவில் வைத்தாய்
கட்டழகிக்காகக் காவலனைக் கழுவில் வைத்தாய்
அடங்காத பிள்ளையென்று ஆண்டவனைக் கழுவில் வைத்தாய்
கழுவுக்கு மோர்வார்க்க கட்டழகியுண்டு பண்ணாய்
கழுவுக்கு மோர்வார்க்க நல்லதங்காளை யுண்டுபண்ணாய்
உறியில் தயிர்வார்க்க உத்தமியை உண்டுபண்ணாய்
அப்படிக் காத்தாப் போல்உன் அடிமையைக் காருமம்மா"

இங்குக் 'காத்தவராய சுவாமியின் கதை' குறிப்பிடப்பெற்றுள்ளது. அதன் வரலாறு வருமாறு: சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் படியளக்கிறாரா? இல்லாயா? என அறிய, பார்வதி தேவியார் ஒரு சிற்றெறும்பைச் சிமிழ் ஒன்றில் அடைத்து வைத்தார். பின்பு திறந்து பார்த்தபோது அதற்கும் சிறு அரிசி கிடைத்திருந்தது. இதை அறிந்த சிவன் பார்வதியை நந்தவனம் அமைத்து அவள் எறும்பிற்குச் செய்த பாவத்தைப் போக்குமாறு கூறினார். அந்த நந்தவனத்தைக் காக்க 'காத்தவராயன்' என்பவன் பார்வதியால் நியமிக்கப் பெற்றான். அவன் அங்கு வந்து குளித்த இளைய கன்னியொருத்தியின் ஆடைகளை மறைத்து வைத்த காரணத்திற்காகச் சிவனால், மண்ணில் பல பிறவி எடுத்து இறுதியில் கழுவேறுமாறு சாபமடைந்தான். அவனுக்கு உதவிய பார்வதியைக் காமாட்சியாகத் தவமியற்றிக் காத்தவராயன் கழுவேறிய பின் சாபவிமோசனமடைந்து கயிலாயம் வருக எனவும் சிவன் சபித்தார்.

காத்தவராயன் பல பிறவி எடுத்து இறுதிப் பிறவியில் காமாட்சியம்மனுக்கு மகனாகக் காஞ்சிபுரத்தருகில் பிறந்து, மலையாள நாட்டிற்குச் சென்று 'தொட்டியம்' என்ற இடத்திலிருந்த, சின்னான் எனும் மந்திரவாதியை வென்று தன் துணைவனாக்கினான். இறுதியில் அரசகுல மங்கையான ஆரியமாலையினைக் காதலித்து, அவளை அடைவதற்காகக் கழுவேறினான். அவர்கள் திருமணத்திற்குப்பின் தெய்வமானார்கள். காமாட்சியும் தன் சாபம் தீர்ந்து கயிலாயம் சென்றாள்.

காமாட்சி சக்தியின் சொரூபமானவள். மாரியும் சக்தியின் அமிசமாவதால் காத்தவராயனைத் துணைக்கு அழைத்து வருமாறு பாடலாசிரியர் கூறுகிறார். கொல்லிமலை ஆண்டவன், குமரகுருபரன், காத்தவராயன் என்க. அவன் ஒரு பிறவியில் கொல்லிமலைக்கன்னியரிடத்தில் வளர்ந்ததால் அவ்வாறு கூறப்படுகிறான்.

மதுரை வீரனையும் கருப்பண்ணனையும் அழைக்கக் கோருதல்

தொட்டியத்து[ச்] சின்னானை [த்] துரைமகனைத் தானழையும்

மதுரை வீரப்பனையென் மாதாவே தானழையும்

பாவாடை ராயனைத்தான் பத்தினியே தானழையும் 325

---

323. தொட்டியத்துச் சின்னான். . . துரைமகன் – இவன் காத்தவராய சுவாமிக் கதைப்பாடலில் வருபவன். காத்தவராயன் காமாட்சியிடம் இறுதிப் பிறவியில் வளர்ந்தபோது, அம்மையிடம் விடைபெற்று மலையாள நாட்டில் தொட்டியத்துச் சின்னான் எனும் மந்திரவாதி வைத்த 'மோடி'யில் வென்று அவனைத் தனக்கடிமைப்படுத்தி, பின்பு தோழனாக்கிக் கொண்டான். சின்னானும் காத்தவராயனுக்காகப் பல மாயச் செயல்கள் புரிந்து, ஆரியமாலையைக் காத்தவராயன் அடைவதற்குத் துணை செய்தான். இதனால்தான் தொட்டியத்துச் சின்னானைத் துணைக்கழையுமெனக் கூறினார்.

324. மதுரை வீரப்பன் – மதுரை வீரன், வீரய்யன், மதுரை வீர சுவாமி எனவும் அழைக்கப்பெறும் காவல் தெய்வம். மதுரை அரசன் காசிராஜன் என்பானுக்கு மகனாகப் பிறந்து சோதிடர் சொற்படி காட்டில் விடப்பட்டான். அக்குழந்தையான வீரனை ஒரு சக்கிலி எடுத்து வளர்த்தான். வீரன் பின்னால் நாகராசனால் பல சித்திகள் பெற்றான். பின் பொம்மன் நாயக்கன் மகள் பொம்மியை மணந்தான். விசயரங்கனிடம் சேவகத்திற்கமர்ந்தபோது திருமலைநாயக்கனிருந்த மதுரையில் கள்வரைப் பிடித்து, அவரை வேரறுத்து, வெள்ளச்சி என்பவளை மணந்தான். அரசனால் தவறாகத் தண்டிக்கப்பெற்றுக் கைகால் வெட்டப்பட்டு மனைவியர் தீக்குளித்திறக்கத் தான் மீனாட்சி கோயிலில் உயிர் போக்கிக்கொண்டு தெய்வமாக அமர்ந்தான் என்பர். இவன் வீரனாகையால் வீரர்க்குக் கல்நாட்டுவது போல் இவனையும் கல்லில் பதித்திருக்கின்றனர். இவனைப் பற்றிப் பல கதைப்பாடல்கள் உள்ளன. இவனையும் துணைக்கு அழைத்து வரவேண்டுகிறார்.

325. பாவாடை ராயன் – அங்காளம்மையின் காவல் சேவகன். இவன் பிறப்பால் கீழ்க்குலத்தவன் என்பர். அங்காளம்மா மயானத்தில் (சுடுகாடு) இருக்கையில், அவளிடம் சென்று உடுக்க ஆடை கேட்டு, அவள் கொடுத்த பாவாடையை உடுத்து, குழந்தையுருக்கொண்டு அவளிட்ட பணிசெய்து கொண்டிருந்து, தவத்தால் சக்தி பூசகனாகித் தெய்வமானவன். இவனையும் மாரியம்மனுக்குக் காவல் தெய்வமாக வருமாறு அழைப்பு விடுக்கிறார்.

கருப்பண்ண சுவாமியையும் கட்டழகி தானழையும்
சங்கிலிக் கருப்பனைத்தான் சடுதியிற் றானழையும்

மாரிக்கும் முகம்மதியர்க்குமுள்ள தொடர்பு

முத்தா[லு] ராவுத்தன் முறையுள்ள சேவகரை
பெரிய பாளையத்தமர்ந்த பேச்சியரே மாதாவே
பாளையக் காரியம்மா பழிகாரி மாரிமுத்தே 330

---

326. கருப்பண்ண சுவாமி–கருப்பண்ணசாமி அம்மன் கோயில்களிலும் அய்யனார் கோயில்களிலும் துணைசாமியாக வைக்கப்பட்டு வழிபடப்படுகின்றவர். தமிழ்நாட்டின் தென்பகுதிகளில்தான் மிகுதியாக வழிபடப்படுகின்றார். கருப்பு, கறுப்பணன், கறுப்பண்ண சாமி, கருப்பசாமி, உத்தண்டசாமி ஆகிய பெயர்களில் வழிபடப்படுகின்றார். கறுப்பசாமிக் கோயில் ஊருக்கு வெளியேதான் இருக்கும். ஊர்த்தெய்வமாக இருக்கும் கருப்பசாமி இரவில் வேட்டைக்குச் செல்வதாக நம்பப்படுகிறது. குதிரைவாகனத்தில் ஊரைச் சுற்றி வந்து ஊர்மக்களைக் காவல் காப்பதாகவும் நம்பப்படுகிறது. பேய், பிசாசு போன்ற தீய சக்திகளினின்றும் ஊர்மக்களைக் காக்கும் கடவுளாகக் கருப்பண்ணசாமி போற்றப்படுகிறார்.

327. சங்கிலிக் கருப்பன் – இது ஒரு மாட தேவதை. இதுவும் தமிழகத் தென்பகுதிகளில் உள்ள ஒரு தெய்வமாகும். சங்கிலியால் தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கும். சொரி முத்து அய்யனார் கோயிலில் இத்தெய்வம் உள்ளது.

328. முத்தாலு ராவுத்தன் – சில மாரி அம்மன் கோயில்களில் துணைக் காவல்தெய்வமாக இசுலாமியரின் உருவம் காணப்படுகிறது. குதிரைமீது அமர்ந்த காட்சியில் இசுலாமியரின் கற்சிலைகள், மண் சிலைகள் அமைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. 'இராவுத்தன்' என்பதற்குக் 'குதிரை வீரன்' எனப் பெயர். இப்பெயர் தமிழ் நாட்டு முகம்மதியருள் ஒரு பிரிவினரின் பட்டப்பெயராக வழங்கப்படுகிறது. அரபு நாட்டில்தான் குதிரைகள் சிறப்பு என்பதும் இராவுத்தர் எனும் இனத்தார் குதிரை வியாபாரம் செய்து வந்தனர் என்பதும் தெரிகின்றன. மாரியம்மனை வணங்கி வழிபட்டுக் கைங்கரியமும் செய்ததால் இராவுத்தருக்குச் சிலை வைக்கப் பெற்றுள்ளது. மாரியம்மன் சிறப்புக் கருதி அத்தெய்வத்தை ஏற்று முத்தால் ராயன், முத்தால்ராவுத்தன் எனப் பெயரிட்டுக்கொண்டு மாரியம்மனை வழிபடவும் செய்கின்றனர். அத்துடன் தங்கள் முன்னோடியான 'முத்தால் இராவுத்தன்' என்ற காவல் தெய்வத்தையும் வழிபடுகின்றனர். அவர்களைக் காக்குமாறு இப்பகுதியில் வேண்டுகிறார்.

329. பெரியபாளையத்தமர்ந்தவள் – பார்க்க. வரி விளக்கம் 237 – 240

330. பாளையக்காரி – விசயநகரப் பேரரசில் பாண்டி நாடு 70 பாளையங்களாகப் பிரிக்கப்பெற்றுப் பாளையக்காரர்களால் ஆளப்பட்டது. பாளையக்காரர்கள் மாரியம்மன் வழிபாட்டை ஆதரித்தனர். எனவே மாரியம்மன் பாளையக்காரியம்மன் எனப்படுகிறாள்.

T5164

கன்னனூர் மாரிமுத்தே கைவிட்டி டாதே
உன்னைப் பணிந்தவர்க்கு உத்ததுணை நீயிரம்மா
ஆதி பரமேஸ்வரியே அருகேதுணை நீயிரம்மா
உன்னைப்போல் தெய்வத்தை உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்த ரெங்குமுண்டு வையகத்தில் 335
உன்மகிமை யறிந்தவர்கள் மண்டலத்தில் யாருமில்லை
உன்சேதி யறிவாரோ தேசத்து மானிடர்கள்

அம்மை நோயால் கால், தலை நோகாமல் காக்க வேண்டுதல்

கார்க்க கடனுனக்கு காரண சவுந்தரியே
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்

---

331. கைவிட்டிடாதே – காக்கத்தவறி விடாதே.

332. உத்ததுணை – உற்றதுணை.

334. உன்னைப்போல் . . . கண்டதில்லை – மாரியம்மன் கருணை உடையவளாதலால் இவ்வாறு கூறப்படுகிறாள்.

335. என்னைப்போல். . . வையத்தில் – இக்கதையைப் பாடியவர் தன்னை 'மைந்தர்' என்று கூறுவதால் அவர் அண்ணாவியாக இருக்கலாம். 'என்னைப்போல் மைந்தனனேக முண்டு' என மாரியம்மன் வர்ணிப்புக் கூறும்.

336. உன்மகிமை . . . யாருமில்லை – மழை உலக மக்கள் அனைவருக்கும் உயிர் வாழ அவசியம் என்பதால் மழையைப் பற்றி, மழைக் கடவுளான மாரியைப்பற்றி அறியாத மக்கள் இருக்கமாட்டார்கள் என்பது பொருள்; உன்மகிமை – மாரியின் புகழ்.

337. உன்சேதி – உன்னைப்பற்றிய வரலாறு.

338. கார்க்க கடனுனக்கு – உலக உயிர்களைக் காப்பது மழை என்பதால் இங்கு மாரி அம்மன் தெய்வத்திற்குக் காக்கும் தொழில் தொடர்பு படுத்தப்படுகிறது. மேலும் உலக மக்களைக் காப்பதற்காக சிவன் பார்வதியைக் கைலாயத்திலிருந்து பூமிக்கு அனுப்பி அங்கு மாரி யாக விளங்கும்படி வரம் அருளியதாகப் புராணங்கள் கூறுகின் றன. கார்க்க – காக்க என்பதன் திரிபு; காரண சவுந்தரி – காரண மாய் நின்ற கட்டழகி.

339. காரடி . . . நோகாமல் – காலும் தலையும் நோகாமல் காப்பாற்றுவாய் என மாரியிடம் வேண்டல். அம்மை நோய் ஏற்பட்ட பின்பு முகத்தில் அம்மை வடுக்களும் கைகால், முடக்கமும் ஏற்படும். எனவே 'காலுதலை நோகாமல்' என்கிறார். காரடி – காப்பாற்றடி. காரும் என்பன நெல்லை வழக்குகள். இப்பகுதியும் இதுபோன்ற பிறபகுதிகளும் கந்தசஷ்டிகவசம் போன்றன.

வேணுமென்று காரடிநீ வேப்பஞ் சீலையாளே
பக்கத் துணையிருந்து பாலகனைக் காருமம்மா
பொரிபோ லெழும்பி நீ பூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பி ஆத்தா ளிறக்குமம்மா

கேசாதிபாதமாக அம்மை முத்தைக் கீழே இறக்குமாறு வேண்டல்

சிரசினிற் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கு
முகத்தினில் முத்தையம்மா முன்னதாய் நீயிறக்கு

---

340. வேப்பஞ்சீலையாளே – மாரியம்மன் வேப்பிலையை ஆடையாகத் தரிப்பவள் என்ற கருத்து இதில் உள்ளது. எனவேதான், மாரியம்மன் பக்தர்கள் தங்களை மாரியம்மன் பிரதிநிதியாக உருவகித்து மாரி யம்மனைப் போலவே தோற்றம் அமைத்துக் கொள்வது வழக்கம். அதிக வேம்பு இலையுடன் கூடிய கொத்துக்களைக் கயிறால் ஒன் றாக இணைத்து ஆடைபோல் அணிந்து கொள்வர். இவ்வழக்கம் தற்போது சென்னை அருகிலுள்ள 'பெரியபாளையம்' என்ற ஊரில் நடைபெற்று வருகிறது. இங்குப் பெண்களும் ஆண்களும் உடம்பில் வேறு ஆடையின்றி வேப்பிலையால் மட்டும் உடலை மூடிக்கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர். பெண்கள் இவ் வாறு தம் உடம்பை அர்ப்பணிக்கும் தியாகத்தை அளவிடவிய லாது. வேப்பிலை உடம்பிலுள்ள வியாதிகளைப் போக்கும் என்பது நம்பிக்கை.

341. பக்தத்துணை – அருகிலிருந்து. அம்மை கண்டோரின் அருகிலிருந்து வேப்பிலையால் வருடுவர்; எனவே பக்கத்துணை என்கிறார்.

342– 343. பொரிபோலெழும்பி . . . ஆலித்து . . . ளிறக்குமம்மா – உப்புநீர் தெளித்து ஊறவைத்துப் பதப்படுத்திய சோளம் அல்லது கம்பு அல்லது நெல் அரிசி ஆகியவற்றைச் சட்டியிலிட்டு வறுக்கும்போது அத்தானியம் சூட்டால் உப்பி, கொப்பளித்துப் 'பொரி'யாகக் குதிக் கும். எனவே 'பொரிபோலெழும்பி' என்றார். அம்மை கண் டோர்க்கு முதலில் சிறு கொப்பளங்களே ஏற்படும். நாளாக நாளாக அது தடித்துக் கொப்பளிக்கும். இதை அம்மைமுத்து என்கிறோம். முத்தாக மனித உடலில் பூரித்து (பருத்து), ஆலித்து (விளையாடி) பின் அம்முத்தை நீக்குமம்மா எனக் கூறப்படுகிறது.

344. சிரசினில் முத்தை ... நீயிறக்கு – தலையில் அம்மைநோய் தோன்றி னால் அது உயிருக்கு மிகவும் ஆபத்தாகிவிடும் என்பதால் நீ உயி ரைப் பாதுகாத்து அம்முத்தை இறக்கு என மாரியிடம் வேண்டல். இதன் பிறகு தலை முதல் பாதம் வரை முத்தை இறக்குவதற்கு வேண்டப்படுகிறது. கேசாதி பாத நிலையாகக் கூறப்பட்டுள்ளது.

345. முகத்தினில் . . . நீயிறக்கும் – மனித உடம்பில் முக்கியமான பகுதி முகம். எனவே உடல் முழுவதும் அம்மை நோய் வந்துவிட்ட நிலை யில் முதலில் தலையிலிருந்து கீழே இறக்கிய பின், முகத்தில் உள்ள முகத்தை எடு என மாரியம்மனிடம் வேண்டல்;

கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கு
தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா வடிவழகி நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியரே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரினி லிறக்கிவிடும்
பூமியி லிறக்கிவிடும் பெற்றவளே காருமம்மா

அம்மை கண்ட பாலகன் அருகிருந்து காக்க அம்மையை அழைத்தல்

பெற்றவளே தாயே பேரரசி மாரிமுத்தே
உற்ற துணையிருந்து உகந்தரியே காருமம்மா

---

346. கழுத்தினில் . . . கட்டழகி நீயிறக்கும் – முகத்தின் கீழ்ப்பகுதி கழுத்து. அங்குள்ள முத்துக்களையும் இறக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

347–352. தோளினில் . . . இறக்கிவிடும் – மனித உடலில் தோன்றிய அம்மை நோயைத் தலையிலிருந்து கால் வரையில் ஒவ்வொரு பகுதியாக இறக்கும்படிக் கூறப்படுகிறது; கழுத்தின் கீழ் தோளிலும், தோளின் கீழ் உள்ள மார்பிலும், மார்பின் கீழ் வயிற்றிலும், வயிற்றின் கீழ் துடையிலும், துடையின் கீழ் முழங்காலிலும் உள்ள கணுக்காலிலும், கணுக்காலின் கீழுள்ள பாதத்திலும் உள்ள அம்மைக் கொப்பளங் களை இறக்கிப் பூமியில் இறுதியாக இறக்கிவிடுமாறு கூறுகிறார். பொதுவாகத் தலைக்கு ஏறிய விஷத்தைப் படிப்படியாகக் கீழே இறக்குவது இயல்பு. அதுபோல் இதுவும் உள்ளது; சக்தி பல வடிவங் களாக அவதரித்துள்ளாள் என்பது இந்துமத தத்துவம். அதன்படி மாரியை மதுரையில் தோன்றிய மீனாட்சியாகவும், காஞ்சியில் தோன்றிய காமாட்சியாகவும் காண்கின்றனர்.

353. பாதத்தில் . . . இறக்கிவிடும் – காலின் பாதம் பூமியில் ஊன்றி நடப்பதைப் பயனாகக் கொண்டது. எனவே பாதத்திற்குக்கீழ் பூமி உள்ளதாலும், பூமி எல்லாச் சுமைகளையும் தாங்கிக் கொள்ளும் சக்தியுடையது என்பதாலும் பாதத்தில் போட்ட முத்தைப் பூமியில் இறக்கிவிடும் எனக் கூறப்படுகிறது.

355. பெற்றவளே – உலக உயிர்களுக்குத் தாயாக மாரி கருதப்படுகிறாள்; ஒரு பேரரசின் ஆஸ்தான தெய்வமாக இருந்தவள்.

356. உகந்தரியே – விருப்பமானவனே.

உன்னைவிட பூமிதனில் உறுதுணை வேறுமுண்டோ
பக்கத் துணையிருந்து பாதுகாத்து நாச்சியம்மா
செக்கச் சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையெனும் மாதரசி மகராசி காருமம்மா
திங்கள் தவனியரே தேவிகன்ன னூராளே

அம்மையின் அருட்பார்வையால் காப்பாற்றக் கோருதல்

எங்கள்குல தேவியரே ஈஸ்வரியே கண்பாரும்
மங்கள விநோதினி மாதாவே கண்பாரும்
ஏழைக் கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுதா னெக்காலம் வார்ப்புச் சிலையாளே
ஆயி மகமாயி ஆரணங்கு சொற்காரணியே
மாயி மகமாயி மணிமந்திர சேகரியே
இரங்கிரங்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
மாரித்தாய் வல்லவியே மகராசி காருமம்மா

---

357. உறுதுணை – உற்றதுணை.

358. நாச்சியம்மா – நாச்சியார் எனும் அடிப்படையில் கூறப்பட்டது.

359. செக்கச் சிவந்தவளே – சிவந்த மேனியள்; செங்கண்ணன் தங்கையரே – சிவந்த கண்களையுடைய கண்ணனுக்குத் தங்கை உறவு கொண்ட மாரியே.

360. மங்கை எனும் மாதரசி – கன்னித் தன்மையுடன் விளங்கும் மாரி; மாதரசி – பெண்களுக்குத் தலைவியாக மாரி விளங்குபவள். மகராசி – செல்வமுள்ளவள் என்றும் பொருள்படும்.

361. திங்கள் தவனியரே–நிலவாகவும் சூரியனாகவும் விளங்கும் மாரியே.

362. எங்கள்குல தேவியரே – எங்களுடைய குலதெய்வமானவளே. 'குலம்' என்பது இனம் என்பதன் உட்பிரிவு. கிராமத்தினர்க்குக் குல தெய்வங்கள் பல இருக்கும். குலதெய்வம் என்பது ஒரே சொக்காரர் களால் (ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர் – சொந்தக்காரர் களால்) வணங்கப் பெறுவது. அவர்கள் மட்டும் அத்தெய்வத்தை வணங்கிக் கொடை அல்லது விழா எடுப்பர். கிராமத்தினர்க்குக் குல தெய்வமாக அமைகின்றாள் மாரியம்மன் என்பது கூறப்படுகிறது.

363. மங்கள விநோதினி – மங்களமான அழகு உடையவள்; கண்பார்த் தல் – அருட்பார்வை செலுத்துதல்.

365. வார்ப்புச்சிலை – அளவாகச் செய்யப்பெற்ற திருமேனிச் சிலையைப் பெற்றவள்.

366. ஆரணங்கு – பேரழகி; சொற்காரணியே – சொல்லின் ஆக்கத்திற்கும் காரணமாக விளங்குபவன்.

369. வல்லவியே – வலிமையுள்ளவளே.

அம்மை முத்துக்களை நீக்கக் கோருதல்

வீராணன் சோலையிலே ஆரணந் தான்சக்தி 370
நீதிமன்னர் வாசலிலே நேராய்க் கொலுவிருந்தாய்
கொலுவிருந்த சத்தியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்து
போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாத வாசகியே

அடங்காதவரை அடக்கும் அம்மன்

செடிலோ துடைப்பெருமன் தூண்டிமுள்ளு கைப்பெருமன்
தூண்டிமுள்ளில் தான்தூக்கி துடுக்கடக்கும் மாரிமுத்தே
அடங்காத மானிடரை ஆட்டிவைக்கும் மாரிமுத்தே
துஷ்டர்கள் தெண்டனிட துடுக்கடக்கும் மாரிமுத்தே
கண்டவர்கள் தெண்டனிட கலக்கமிடும் மாரிமுத்தே

---

370. வீராணன் . . . தான்சக்தி – 'வீராணம்' என்ற ஊரில் தெய்வமாக விளங்குகின்ற சக்தியே; ஆரணம் – அணிகலனாக விளங்குபவள்.

371. நீதிமன்னர் . . . கொலுவிருந்தாய் – மாரியம்மன் சோழநாட்டில் அழகு பொருந்தியவளாக வீற்றிருக்கிறாள் என்பதை இது குறிப்பதாகலாம். மனுநீதிச் சோழன் பரம்பரையினர் என்பதால் சோழமன்னர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம்; வாசலில் நேராய்க் கொலுவிருத்தல் – கோட்டை வாசலில் குடி கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

372. கொலுவிருத்தல் – ஒப்பனை செய்யப்பட்டுக் காட்சி தருதல்; சத்தியரே – சக்தியின் அமிசமானவளே; கோர்த்த முத்து – ஒன்றன்பின் ஒன்றாக உடம்பில் விதைத்த முத்துக்கள்.

373. பொய்யாத வாசகி – உண்மையே பேசுபவள்;

375. – 376 செடிலோ . . . மாரிமுத்தே – பார்க்க வரி விளக்கம் 269,270

377. அடங்காத மானிடர் – தம் விரும்பம் போல் தீய செயல்களில் ஈடுபடும் மனிதர்; ஆட்டி வைக்கும் – அடக்கி வைக்கும்.

378. துஷ்டர் – தீயோர்; தெண்டனிட – வணக்கமிட; துடுக்கு – தீச்செயல். தீயவர்களின் தீச்செயல்களை அடக்கி அவர்களைப் பணியச் செய்யும் தன்மையுடையவள் முத்துமாரி.

379. கண்டவர்கள் . . . . மாரிமுத்தே – மாரியைப் பார்த்தவர்கள் அனைவரும் அவளை வணங்கித் தம் மனக்கலக்கத்தை அவளிடம் கூறுவர்; கலக்கமிடுதல் – துன்பத்தைத் தருதல்.

அண்டாத பேர்களைத்தான் ஆணவத்தைத் தானடக்கி
இராசாக்க ளெல்லோரும் நலமாகத் தானடக்கி

அரசர்களும் பணியும் அம்மன்

மகுடமுடி மன்னர் மனோன்மணியைத் தான்பணிய
கிரீடமுடி தரித்த கீர்த்தியுள்ள ராசாக்கள்
மகுடமுடி மந்திரிகள் மன்னித் தெண்டனிட்டு நிற்க
பட்டத் துரைகள் படைமுகத்து ராசாக்கள் 385
வெட்டிக் கெலித்துவரும் வேதாந்த வேதியர்கள்
துஷ்டர்களைத் தானடக்கும் . . . கபாலியம்மா

---

380. அண்டாத பேர்களின் – மாரி அம்மனிடம் வந்து வணங்காத பேர்களின்; ஆணவத்தைத் தானடக்கி – அகம்பாவத்தை அடக்கக் கூடியவளே. 'அடங்காத பேர்கள்' என மாரியம்மன் வர்ணிப்பு ஏடு கூறும்.

381. இராசாக்கள் .... தானடக்கி – இராசாக்கள் அனைவரும் மாரியைப் பணிதல்.

382. மகுடமுடி . . . . தான்பணிய – இராசாக்கள் தம் மகுடத்துடன் மாரியை அடிபணிந்து வணங்கினர். இதனால் ஒரு காலத்தில் மாரியின் வழிபாடு தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது. மனோன்மணி – சிறந்த மணிபோல் விளங்குபவள். 'மாரியம்மன் வர்ணிப்பு' என்ற ஏட்டில், 'ராச ராசாக்களெல்லாம் நலமாக ஸ்நானம் பண்ணி மகிழ்ந்தந்த மன்னவர்கள் வந்து பணிந்து நிற்க.' என வந்துள்ளது.

383. கிரீட முடி .... ராசாக்கள் – மகுடம் தரித்து அரச பதவி வகிக்கும் மன்னர்கள்.

384. மகுடமுடி மந்திரிகள் . . . . நிற்க – அரச குடும்பத்தில் பிறந்து கிரீடமணிந்த மந்திரிகள் மாரியம்மன் முன்பாக மன்னிப்புக்கேட்டு வணங்கி நிற்கின்றனர்.

385. பட்டத்துரைகள் – பட்டத்துக்குரியவர்கள்; துரைமார்கள் எனவும் கூறலாம்; படைமுகத்து ராசாக்கள் – படையுடன் வந்து போர் புரிய நிற்கும் மன்னர்கள் கூட அம்மனை வழிபட்டுச் செல்வர்.

386. வேதாந்த வேதியர்கள் வேதாந்தப் பயிற்சியுடைய வேதியர்கள் கெலித்து வருதல் – செயித்து வருதல் கருத்துப்போரில் செயித்து வருதல்.

387. கபாலியம்மா – கபாலத்தைக் கையில் ஏந்தியவள். மாரியம்மன் வர்ணிப்பு என்ற ஏட்டில் 'துஷ்டர்களைத் தானடக்கு முத்தண்ட மாரிமுத்தே' என வந்துள்ளது.

அசுரர்களை வெற்றி கொள்பவள்

அடங்காத மானிடரை யடிமை[ப்]பலி கொண்டசக்தி
மிஞ்சிவரும் ராச்சதரை விருதுகண்ட கண்ணே
நஞ்சமென்ற மானிடரை[த்] தற்காக்கும் பராபரியே
அவரவர்கள் தான்பணிய வாக்கினையைப் பெற்றவளே

வாதாடி வாதாடி வென்றுவந்த அம்மன்

சிவனுடனே வாதாடும் சித்தாந்த மாரிமுத்தே
அரனுடனே வாதாடும் ஆஸ்தான மாரிமுத்தே
பிரமனுடன் வாதாடும் பெற்றவளே மாரிமுத்தே
விஷ்ணுவுடன் வாதாடும் வேதாந்த மாரிமுத்தே
எமனுடன் வாதாடும் எக்கால தேவியரே

---

388. அடங்காத . . . கொண்டசக்தி – தன் விருப்பம் போல் தீவினை செய்து சுற்றித் திரியும் மானிடர்களை அடிமைகளாகப் பலி கொள்பவள் மாரிசக்தி.

389. மிஞ்சிவரும் . . கண்ணே – எதிர்த்து வரும் அரக்கர்களை மாரி வெற்றிகண்ட செய்தி இங்குக் கூறப்படுகிறது; விருது – வெற்றி.

390. தஞ்சமென்ற . . . பராபரியே – மாரியிடம் அடைக்கலம் புகுந்த மனிதர்களை அவள் பாதுகாக்கும் இயல்புள்ளவள். பராபரி – உபகாரி.

391. அவரவர்கள் . . . பெற்றவளே – உலக மக்கள் அனைவரும் பணிந்து வழிபடத்தக்க கட்டளையைப் பெற்றவள்; ஆக்கினை – கட்டளை.

392–393 சிவனுடன் . . . ஆஸ்தான மாரிமுத்தே – முத்தாரம்மன் கதையைப் பார்க்க. சிவனுடன் சக்தி வாதாடுதல் இங்குச் சுட்டப்படுகிறது. சித்தாந்த மாரிமுத்து – சித்தாந்தக் கொள்கையுடையவள். வேதாந்தத் தினின்றும் வேறுபடுவது சித்தாந்தம். எனவே சித்தாந்த மாரிமுத்து என்றார்.

394. பிரமனுடன் . . . மாரிமுத்தே – பிரமன் படைப்புக் கடவுள்; இங்கு மாரியும் பெற்றவளாக (பிறப்பெடுக்கச் செய்பவளாக) கூறப்படுகிறாள்.

395. விஷ்ணுவுடன் . . . . மாரிமுத்தே – விஷ்ணுவுடன் மாரியம்மன் வாதாடுதல் கதைக்குறிப்பு 'மாரியம்மன் வர்ணிப்பு' என்ற சுவடியில் 'விஷ்ணுவுடன் . . .' வேதாந்த காரியம்மா என உள்ளது.

396. எமனுடன் .. எக்கால தேவியரே– பார்க்க வரி விளக்கம் 276. 'எமனுடன் . . . ஏகாந்த மாரியம்மா' என மாரியம்மன் வர்ணிப்பு கூறும்.

தேவருடன் வாதாடும் தேவிகன்ன னூராளே
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே கர்த்தனிட தேவியரே

அம்மையின் வெம்மைச் சொரூபம்

நெருப்பம்மா உன்சொரூபம் நிஷ்டூரக் காரியரே
அனலம்மா உன்சொரூபம் ஆஸ்தான மாரிமுத்தே
தணலம்மா உன்சொரூபம் தரிக்கமுடி போகாது
அண்டா நெருப்பேயம்மா ஆதி பரமேஸ்வரியே

காமாட்சியும் காத்தவராயன் – ஆரியமாலையும்

காத்தானைப் பெற்றவளே கட்டழகி மாரிமுத்தே
தொட்டியத்து[ச்] சின்னானைத் தொழுதுவர பண்ணசத்தி

---

397. தேவருடன் . . . கன்னனூராளே – கன்னனூர் மாரி தேவருடன் வாதாடிய கதைக்குறிப்பு.

399. கர்த்தனிட தேவியரே – சிவனுடைய தேவியாகிய பார்வதியின் அமிசமாகிய மாரி.

400. நெருப்பம்மா உன் சொரூபம் – மாரியின் மேனி தீ போன்று வெப்பமானது; நிஷ்டூரக்காரி – நிட்டூரக்காரி – கொடுமையான வெப்பமுடையவள்.

401. அனல் – தீக்கங்கு; ஆஸ்தான மாரி – அரசபைத் தெய்வம்.

402. தணல் – கனிந்த நெருப்பு; தரிக்கமுடி போகாது – தாங்க முடியாது. மாரியம்மன் வர்ணிப்பு என்ற ஏட்டில், 'தணலம்மா உன்சொரூபம் சங்கரியே மனோன்மணியே' எனவருகிறது.

403. அண்டா – அருகிலே செல்ல முடியாத; நெருப்பம்மா – தீயம்மா பரமேஸ்வரியாகிய மாரியம்மன் மக்களுக்கு அம்மை நோயை ஏற்படுத்தி மீண்டும் எடுக்கும் தன்மையினள். அவளே வெம்மையுமானவள் குளிர்ச்சியுமானவள் என்பது மக்கள் நம்பிக்கை. எனவேதான் வெம்மையாகிய, அம்மை நோய் முத்துக்களை மக்களிடம் விதைத்து அதை மழை மூலமும், வேப்பிலை, கூழ் மூலமும் குளிர்ச்சியடையச் செய்து குணமாக்குபவள் என்ற அடிப்படையில் மாரியின் வெம்மைத் தன்மையின் மிகுதி கூறப்படுகிறது. நெருப்பு, அனல், தணல் எனும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

404. காத்தானைப் பெற்றவளே – காத்தவராயனைக் காமாட்சியின் மகனாகக் 'காத்தவராயன் கதைப்பாடல்' சித்திரிக்கிறது. மாரியம்மன் அமிசமாகக் காமாட்சி அம்மன் கருதப்படுகிறாள்.

கருப்பனையுங் கூடவேதான் கண்டுபணிய வைத்தாய்
பெண்ணரசிக் காகப் பிள்ளையைக் கழுவில் வைத்தாய்
அடங்காத பிள்ளையென்று ஆண்டவனைக் கழுவில் வைத்தாய்
துஷ்டனென்று சொல்லி துடுக்கடக்கி[க்] கழுவில் வைத்தாய்

அம்மை முத்தை எடுக்க மாரியம்மன் தன் தோழியருடன் வரவேண்டுமெனல்

பாரினில் முத்தையம்மா பத்தினியே தாயாரே
வாரி யெடுக்கவொரு வஞ்சியரை உண்டுபண்ணாய்
முத்தெடுக்குந் தாதி மோகனப் பெண்ணேயென்று
தாதியரைத் தானழைத்துத் தாயாரே முத்தெடுப்பாய்
முத்தெடுத்துத் தான்புகுந்து உத்தமியாள் மாரிமுத்தே
மாயி மகமாயி மணிமந்திர சேகரியே

---

406. கருப்பனையும் . . . வைத்தாய் – 'கருப்பன்', இவனும் காத்தவராயன் கதையில் வருபவன்.

407. பெண்ணரசிக்காக . . . . கழுவில் வைத்தாய் – ஆரியமாலையின் பொருட்டுக் காத்தவராயன் கழுவேறுமாறு ஆயிற்று என்பது வரலாறு.

408– அடங்காத பிள்ளை . . . . துஷ்டன் என்று . . . கழுவில் வைத்தாய்
409. – காத்தவராயன் தாய் சொல் கேட்காது ஆரியமாலையைக் காதலித்துத் திருமணம் செய்ய நினைத்ததால் 'அடங்காத பிள்ளை' என்றும், 'துஷ்டன்' என்றும் கூறுகிறார்; ஆண்டவன் – காத்தவராயன்; காத்தவராய சுவாமி என மக்களால் வழிபடப் பெறுவதால் இவ்வாறு கூறப்படுகிறது.

410. பாரினில் முத்தை . . . தாயாரே – உடம்பில் விழுந்த முத்துக்கள் தலைமுதல் தொடங்கிக் கீழிறங்கிப் பாதம் வழியாகப் பாரினில் (பூமியில்) விழவும், அந்த முத்துக்களை மீண்டும் வாரி எடுக்கவும் கூறுதல்.

411. வாரியெடுக்க .... பண்ணாய் – மாரியம்மன் தாதிகளான கன்னியம்மன் தெய்வங்களை வரவழைத்து முத்துக்களைப் பொறுக்குமாறு கூறுகிறார்.

412. முத்தெடுக்குந்தாதி மோகனப்பெண் – விதைத்த முத்தை எடுப்பதற்கு வந்த தெய்வக் கன்னியின் அழகு இங்குக் கூறப்படுகிறது.

413. தாதியரைத் தானழைத்து . . . எடுப்பாய் – மாரியம்மன் முத்தை விதைக்கும்போது தன் தோழியரான தெய்வக் கன்னியரோடு வருவது வழக்கம். அது போன்று முத்தைப் பொறுக்கும் போது அவ்வாறு வருக என்கிறார்.

ஆயி வுமையவளே ஆஸ்தான மாரிமுத்தே
பாரமுத்தை நீயிறக்கிப் பாலகனைக் காருமம்மா
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்

காத்தவராயனுக்காக அழுத ஆரிய மாலையைக் காமாட்சி காப்பாற்றுதல்

சொல்கேளாப் பிள்ளையென்று தூண்டிக் கழுவில் வைத்தாய்
கழுதனுக்கு மோர்வார்க்க கட்டழுகி யுண்டுபண்ணாய் 420
நல்லதங்காள் யுண்டுபண்ணாய் நற்கழுவுக்கு மோர்வார்க்க
உறியில் தயிர்வார்க்க உத்தமியே யுண்டுபண்ணாய்
உன்மருமகளைக் காத்தாப்போ லுன்னடிமையைக் காருமம்மா

அம்மையின் கடைக்கண் பார்வையால் காக்கக் கூறுதல்

எவ்வளவு நேரமம்மா ஏறெடுத்துப் பாருமம்மா
கடுகளவு நேரமம்மா கண்பார்க்க வேணுமம்மா 425

---

418. காலுதலை நோகாமல் – தலைமுதல் கால்வரை எவ்வித உறுப்புக்களும் சேதமின்றி அமையுமாறு காப்பாற்றுக என்கிறார்.

419. சொல்கேளாப் பிள்ளை – காத்தவராயன்; தூண்டிக் கழுவில் வைத்தாய் – காத்தவராயன் தன் ஆணையை மீறி ஆரியமாலையை மணக்க விரும்பியதை வெறுத்த அவன் தாய் காமாட்சி அம்மன் அவனைக் கழுவேறும் நிலைக்கு ஆளாக்கினாள்; தூண்டி – சுட்டிக்காட்டி அல்லது தூண்டிவிட்டு.

420–422. கழுதனுக்கு மோர்வார்க்க . . . நல்லதங்காள் . . . உறியில் . . . யுண்டுபண்ணாய் – கட்டழுகி, உத்தமி என நல்லதங்காள் என்பவளைக் கூறினார். இவள் காத்தவராயனுக்குத் தங்கை உறவினள். மோரும் தயிரும் கழுவில் ஏறியவர்க்கு அளித்துக் காப் பாற்றினாள். கழுவினிலிருப்பார் தாக மெடுத்தபோது மோர், தயிர் வார்த்தல் இயல்பு போலும். இச்செய்தி காத்தவராயன் கதைப் பாடலில் விரிவாகக் கூறப்படுகிறது.

423. உன்மருமகளைக் . . . காருமம்மா – காமாட்சி அம்மன் தன்மருமகளான ஆரியமாலையைக் காத்தாற் போல் அம்மை நோய் கண்ட பாலகனைக் காக்குமாறு மாரியம்மனை வேண்டுகிறார்.

424. ஏறெடுத்துப்பார்த்தல் – நிமிர்ந்த பார்வையைப் பாலகன் மேல் செலுத்துதல்; ஏறிட்டுப்பார்த்தல்.

425. கடுகளவு நேரம் – அம்மன் பார்வை சிறிது நேரம் பட்டாலும் போதும்.

கடைக்கண்ணால் நீபார்த்தால் கடைத்தேறிப் போவேனம்மா
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக் காருமம்மா
பேரரசி மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா

எல்லோரையும் காக்குமாறு கூறுதல்

மகமாயி மாரிமுத்தே மைந்தர்களைக் காருமம்மா
பெற்றவளே மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா 430
ஆணழகி மாரிமுத்தே அடிமைகளைக் காருமம்மா
பூணாரம் பூண்டவளே பிள்ளைகளைக் காருமம்மா

பாலகனால் முத்தை இறக்க இயலாது எனக் கூறுதல்

பாரமெடுக்க வம்மா பாலனா லாகுமோதான்
வருத்தப் படுத்தாதே மாதாவே கண்பாரும்
பாலன் படுந்துயரம் பாக்கியவதி பார்க்கிலையோ 435

---

426. கடைக்கண்ணால் நீ பார்த்தால் – அருள் பார்வை மாரியம்மனிடம் கிடைத்தால் வாழ்க்கைக் கடலைக் கடந்து விடுவேன் எனக் கூறப் படுகிறது. கடைத்தேறி – ஈடேறுதல்; உய்தல்; மாரியம்மன் வர்ணிப் பில் இது "கடைக்கண்ணால் பார்த்தியானால்" என வருகிறது.

428. பேரரசி – உலக மக்களை ஆட்சி செய்யக்கூடிய மாரி அம்மன். அல்லது விசயநகரப் பேரரசின் தெய்வமானவள் எனலாம்.

429. மைந்தர் – மக்கள்.

430. பெற்றவளே – உலக மக்களைப் பெற்றவள்.

431. ஆணழகி– ஆண்களுக்கு வலிமையையும், வீரத்தையும் இணைத்துக் கூறுவது இயல்பு. பெண்மைக்கு மென்மைத் தன்மையையும், அழகுத்தன்மையையும் இணைத்துக் கூறுவது இயல்பு. இங்கு மாரியம்மன் வலிமையும் அழகும் உடையவள் என்பதால் ஆணழகி எனப்படுகிறாள்.

432. பூணாரம் பூண்டவள் – அணிந்துகொள்ள முத்துக்களைப் பெற்ற வள். அந்த முத்துக்களையே பாலனிடம் விதைத்தாள். "பூணாரம் பூண்டசக்தி புத்திரனைக் காருமம்மா" – என மாரியம்மன் வர்ணிப் பில் உள்ளது.

433. பாரமெடுக்க . . . லாகுமோதான் – பாரமெடுத்தல், பாரத்தைத் தாங் குதல்; அம்மை வெப்பத்தாலான பாரத்தைத் தானே இறக்கப் பாலா னால் இயலாது எனக் கூறுகிறார். மாரியம்மன் வர்ணிப்பில் பூணா ரந்தாளெடுக்கப் புத்திரனாலாகாது எனக் கூறப்பட்டுள்ளது. இதிலி ருந்து பாலனால் அம்மை முத்தைத்தானே இறக்க இயலாது; மாரி அம்மாதான் வந்து எடுக்க வேண்டும் என்பது கருத்து.

434. வருத்தப்படுத்தாதே – நோய் மிகுதியினால் அதிகமாகப் பாலனுடம் பைத் துன்பப்படுத்தாதே.

435. பாக்கியவதி – எல்லாம் பெற்றவள்.

மைந்தன் படுந்துயரம் மாதாவே பார்க்கிலையோ
குழந்தை படுந்துயரம் கொம்பனையே பார்க்கிலையோ
சிற்றடிகள் படுந்துயரம் தேவியரே பார்க்கிலையோ
பூணார முத்திரையை ஆத்தா விறக்குமம்மா 440
இறக்கிறக்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
அடிமைதனைக் காப்பாற்றி யாணமுகி நீயிறக்கும்
கும்பத்து மாரியம்மா கொலுவில் அலங்காரியரே
கொலுவில் அலங்காரியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே

மழைக்குரிய மாரியும் பிற தேவியரும்

மாரி என்றால் மழைபொழியும் தேவியென்றால் தேன்சொரியும்

---

438. சிற்றடிகள் – குழந்தையின் சிறிய பாதம் மென்மையானது என்பதால் சிற்றடி எனப்பட்டது. அப்பாதத்தில் அம்மை முத்து வந்துவிட்டால் நடக்கவியலாதபடி மிகவும் துயரம் ஏற்படும்.

439. பூணார முத்திரை – மாரியம்மன் பூண்ட முத்துக்களைப் பாலகன் உடம்பில் முத்திரை போன்று பதித்துள்ளதால், அவற்றை மாரிஅம்மனால் மட்டுமே இறக்கமுடியும் என்கிறார்.

440. ஆபரண முத்திரை – அம்மையின் அணிகலனில் இருக்கும் முத்துக்களைப் பதித்துள்ளதால் அவற்றை இறக்கக் கோருகிறார்.

441. இறக்கு இறக்கு – அடுக்குச் சொற்றொடர்; முத்தை இறக்குமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது.

442. கும்பத்து மாரியம்மா – கரகம் அல்லது கும்பத்தின் மீது உள்ள மாரியம்மன்.

443. கொலுவில் அலங்காரி – அம்மனுக்குக் கும்பம் படைக்கும் போதும், ஊர்வலம் நடைபெறும்போதும் அழகு செய்து வீற்றிருக்கச் செய்வர்; அவ்வாறு அம்மன் கொலுக்காட்சி தருதல் மிக அழகாக இருக்கிறது என்கிறார்.

445. கோர்த்த முத்து – முத்துக்களால் நெருக்கமாகக் கோர்க்கப்பட்ட முத்துமாலைபோல் உடலில் அம்மை முத்துக்கள் நெருக்கமாக அமைந்துள்ள நிலை குறிப்பிடப்படுகிறது.

446. மாரி என்றால் . . . தேன் சொரியும் – மாரியம்மனை நினைத்த உடனேயே மழை பொழியும். இங்குத் 'தேன்' என்பது மழைக்கு நிகராகக் கூறப்பட்டுள்ளது. தேன் எப்படி இனிமையானதோ அதேபோல் மக்கள் வாழ்க்கை இனிமை பெற மழை அவசியமானது. வெம்மைக்குப்பின் குளிர்ச்சி வரும். கோடை காலத்துக்குப்பின் மழை பெய்யும். வெப்பமான அம்மைநோய் நீங்கியபின் உடம்பு குளிர்ந்து சுகம் பெறும். அதனால் இவ்வாறு கூறுகிறார்.

தேவியென்றால் தேன்சொரியும் திரிபுர சுந்தரியே
திரிபுர சுந்தரியே தேசமுத்து மாரியம்மா
பொன்னுமுத்து மாரியரே பூரண சவுந்தரியே
தாயாரே பெற்றவளே சத்தகன்னி சுந்தரியே 450
பேருமறியே னம்மா பெற்றவளே தாயாரே

மாரியம்மன் கலியுகத் தெய்வம்

குருடன்கை கோலென்று கொம்பனையே நீயறிவாய்
கோலைப் பிடுங்கிக்கொண்டால் குருடன் பிழைப்பானோ
இப்படிக்கு நீயிருந்தா லினிப்பிழையோம் தாயாரே

---

447. திரிபுர சுந்தரி – முப்புராதி அம்மன் திரிபுரங்களான முக்கோட்டை களிலிருந்தவள். பார்க்க: முப்புராதி அம்மன் கதை அல்லது முத்தாரம்மன் கதை.

448. தேசமுத்து மாரியம்மா – உலக உயிர்கள் அனைத்தும் உயிர்வாழ மழை அவசியம் என்பதால் உலக மக்கள் அனைவரும் மாரியம்ம னுக்குத் தேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் கோயில் ஏற்படுத்தி வழிபடுகின்றதாகச் சுட்டப்படுகிறது. பார்க்க: பாரதியார் பாடல்

449. பொன்னுமுத்து – பொன் போன்ற நிறத்தையுடையவள்; பூரண சவுந்தரி – முழு அழகு பெற்றவள்.

450. சத்த கன்னி சுந்தரி – மாரியம்மனுடன் சேர்ந்த தெய்வக்கன்னியர் எழுவர் என்பது நம்பிக்கை. இவர்கள் சகோதரிகள் ஆவர். மாரியே இவர்களில் மூத்தவள். பிறர் இளையவர்கள். இவர்கள் எழுவருமே 'சத்தகன்னி' அல்லது 'சப்தகன்னியர்' எனக் கூறப்படுகின்றனர். அம்மை முத்துக்களை விதைக்க இவர்கள் எழுவரும் இரவில் பவனிவருவர் என்பது நம்பிக்கை.

451. பேருமறியேனம்மா – மேலே கூறப்பெற்ற சப்தகன்னியரின் பெயர்கள் தெரிந்தில என்கிறார். அந்த அளவிற்குப் பழமையான வரலாறு கொண்டவர்கள்.
நாகராசனுக்கும் நாக கன்னிக்கும் மாரியம்மன் சகோதரிகள் பெண்மக்களாகப் பிறந்ததாக ஒரு கதையும் வழங்கப்படுகிறது. இக்கதையைப் பின்பற்றியே மேலுள்ள வரிகள் அமைந்துள்ளன.

452– குருடன்கை . . . பிழைப்பானோ – குருடனுக்கு ஊன்றுகோல்
453. எவ்வளவு தேவையானதோ அதுபோல் மாரியின் கருணை தேவை. குருடன் கையில் கோலைக்கொடுத்துப் பின் பிடுங்கிக் கொண்டால் எவ்வளவு துன்பமுடைவானோ அதுபோல் மாரி யின் கருணை கிடைத்து, பின் கிடைக்காது போனால் வேதனையே ஏற்படும் என்கிறார்.

454. இப்படிக்கு நீயிருந்தா . . . தாயாரே – இவ்வாறு அருள்பாலித்து, பின் பிடுங்கிக் கொண்டால் நாங்கள் உயிர் பிழையோம்.

கலிபிறக்கு முன்பிறந்த கனத்ததோர் மாரிமுத்தே
யுகம் பிறக்கு முன் பிறந்த உத்தண்ட மாரிமுத்தே
கலியுகத்தில் தாயே கண்கண்ட தெய்வம்நீ
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை

மாரி அம்மன் பாதம் பாலகன் மீது பட வேண்டல்

என்னைப்போல் மைந்தர்தா னெங்குமுண்டு வையகத்தில்
அனலை மதியாய்நீ யாவரையுஞ் சட்டைபண்ணாய்
புனலை மதியாய்நீ பூலோகஞ் சட்டைபண்ணாய்
வருந்தி யழைக்கிறேனுன் திருமுகத்தைக் காணாமல்
பாலகனைக் காத்துப் பாதத்தா லுதைத்துவிடு
மைந்தனைக் காத்து மகராசி வுதைத்துவிடு
குழந்தையைக் காத்துக் கொம்பனையே வுதைத்துவிடு

455–457. கலிபிறக்கு முன்பிறந்த . . . . தெய்வம் நீ – கலியுகம் பிறப்பதற்கு முன் இருந்ததாகச் சக்தி எனும் மாரியம்மன் கருதப்படுகிறாள். கலியுகம் என்பது 4 யுகங்களுள் நான்காவது யுகம் ஆகும். இது கொடுமைகள் நிறைந்தது. மாரி கலிகாலத்திற்கு முன் தோன்றியவள் என்பதால் நன்மை பயக்கும் தெய்வம் எனக் குறிப்பிடப்படுகிறாள். மேலும் இக்கலியுகத்தில் மாரியம்மன் தான் மக்களுக்கு நன்மை பயக்கும் தெய்வமாக உள்ளாள் என்பதும் சுட்டப்படுகிறது. உத்தண்ட மாரிமுத்தே – உக்கிரம் நிறைந்த, வீரம் நிறைந்த, மகத்துவம் நிறைந்த தெய்வம்; கனத்ததோர் மாரிமுத்து – மிகவும் பலம் பொருந்திய சக்தியையுடைய தெய்வம் என்க; கலியுகத்தில் . . . கண் கண்ட தெய்வம் – கொடுமைகள் நிறைந்த கலியுகத்தில் மக்களுக்கு உடனே எளிதில் வணங்கக்கூடிய தெய்வம் மாரியம்மன். மாரியம்மன் வர்ணிப்பு எனும் சுவடி இதை, முன்பிறந்த கலியுக மாரிமுத்தே எனக் கூறும்.

460–461. அனலை மதியாய் . . . புனலை மதியாய் – நெருப்பையும் – நீரையும் கண்டு அஞ்சாதவள். காரணம், மாரியே நீராகவும் நெருப்பாகவும் விளங்குவதால் ஒரு சக்தியை மற்றொரு சக்தி மூலம் கட்டுப்படுத்தி விடுவாள்; சட்டை பண்ணாய் – யாருடைய உதவியையும் எதிர் பார்க்காது தன்னிச்சையாய்ச் செயல்படுதல். இங்கு மாரியம்மன் பிற தெய்வங்களையும் பூலோக மானிடர் மற்றும் சக்திகளையும் சட்டை பண்ணாதவள் எனக் கூறுகிறார்.

463. உதைத்துவிடு – காலால் தொடுதல்; காலால் தொட்டு அருள் வழங்கச் சொல்லுதல். பாதத்தின் பரிசம் பட்டாலே பாலகன் பிழைத்து விடுவான் என்பது கருத்து.

மாரி வந்த இடம் தழைக்கும்

ஆதிபரஞ் சோதியரே அங்கிக்கண்ணே வாருமம்மா
வெள்ளிக் கிழமையிலே கொள்ளிக்கண் மாரியரே
வெள்ளியிலுந் திங்களிலும் வேண்டியபேர் பூசை செய்ய
பூசை முகந்திற்கும் போனேனென்று சொல்லாதே
இந்த மனையிடத்தில் யீஸ்வரியே வந்தருள்வாய்
வந்தமனை வாழுமம்மா யிருந்தமனை யீடேறும்
இருந்தமனை யீடேற ஈஸ்வரியே வந்தருள்வாய்

மாரி அம்மனை இரதமேறி வரச்சொல்லுதல்

கண்பாரும் கண்பாரும் கனகவல்லித் தாயாரே

---

466. ஆதிபரஞ்சோதியரே — மூத்த முதலான, மேலான, ஒளியுருவ தெய்வம்; அங்கிக் கண்ணே — தீக்கண்ணினளே. மாரியம்மன் கண்கள் தீயாக ஒளிர்வதால் இவ்வாறு கூறப்பெற்றது.

467. வெள்ளி . . . மாரியரே — வெள்ளிக்கிழமை அம்மனுக்கு உகந்த நாள். அந்நாளில் அம்மனுக்கு வழிபாடு செய்து அழகு செய்து வீற்றிருக்கச் செய்வர். அப்போது மாரியின் கண்கள் கொள்ளி போன்று ஒளி வீசுவதாக விளக்கும்.

468. வெள்ளியிலும் திங்களிலும் . . . பூசை செய்ய — வாரத்தில் வெள்ளிக் கிழமையிலும் மாதாந்திர வெள்ளியிலும் (மாத இறுதி வெள்ளி) பூசை செய்வது நாட்டுப்புறங்களில் வழக்கம். மாரியம்மன் வர் ணிப்பு என்ற ஏட்டில் 'வெள்ளியுந் திங்களும் வேணவிடம் பூசை யம்மா' என்றும், 'செவ்வாயும் ஞாயிறுந் தேசமெங்கும் பூசையம்மா' என்றும் வருகிறது. தென்பாண்டி நாட்டு மாரியம்மன் கோயில் களில் செவ்வாய்க் கிழமையே அம்மனுக்குகந்த நாளாகக் கொண் டாடப்படுகிறது. அம்மன் கொடைகள் கூட செவ்வாய் தொடங்கி மறுநாள் புதன் பகலில் முடியும் இயல்புடையன. தமிழ்நாட்டில் சில பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை அம்மனுக்குகந்த நாளாகக் கருதப் பெற்றுப் பூசைசெய்யப்படுகிறது.

469— பூசை முகந்திற்கு . . . வந்தருள்வாய் — வெள்ளி, செவ்வாய், ஞாயிறு
470. ஆகிய நாள்களில் பூசை செய்கின்ற இடத்திற்கும் செல்வது அம்மன் வழக்கம். எனவே தன் வீட்டுக்கு வராமல் இருந்துவிடாதே என அம்மனிடம் வேண்டுகின்றார். ஈஸ்வரியாகிய நீ வந்தால்தான் என் வீட்டிலுள்ளவர் வாழ்வு சிறக்கும்; மனை — வீடு; வெள்ளி, செவ் வாய்க் கிழமைகளில் வீடுசுத்தம் செய்து, பொலிவு பெறச்செய்து அம்மனை உள்ளே வரவேண்டி நிற்பர்.

471. வந்தமனை வாழும் — அம்மன் புகுந்தவீடு செழிக்கும்;

472. இருந்த இடம் ஈடேறும் — அம்மன் வந்து தங்கியிருக்கும் இல்லம் எல்லாவற்றிலும் உயரும்.

473. கனகவல்லித் தாயார் — பொன்னிற வடிவப்பெண் தெய்வம். கனகம் — பொன்; வல்லி — பெண்; மாரியம்மன் பொன்னிற வடிவினள். 'கனகமாரி' என்றும் இவ்வம்மனுக்குப் பெயர் உண்டு.

நண்பான பிள்ளைகளை நலிந்திடச் செய்யாதே
உன்னை நம்பினோரை வோய்த்துவிடச் செய்யாதே
அன்னீதஞ் செய்யாதே ஆயி மகமாயி
வேம்பு ரதமேறி வித்தகியே வாருமம்மா
பச்சிலை ரதமேறிப் பார்வதியே வாருமம்மா
கொலுவிலிருந்த சத்தி கோர்த்தமுத்து நீயிறக்கும்
போட்டமுத்தை நீயிறக்கும் பூலோக மாரிமுத்து

நோயுற்றவர்க்கு உணவு உட்செல்ல வேண்டுதல்

கேளிக்கை யாகக் கிளிமொழியே முத்தையிறக்கும்
அரும்பாலகன் தன்னை அவஸ்தைப் படுத்தாதே
வருத்தப் படுத்தாதே மாதாவே கண்பாரும்
அன்ன மிரங்கவம்மா ஆத்தாளே கண்பாரும்
ஊட்டத்தை நீகொடுத்து வுத்தமியே காருமம்மா

---

474. நண்பான பிள்ளைகள் – அம்மன் மீது பற்று வைத்து வழிபட்டு வருவோர்; நண்பான – அன்பான; நலிந்திடச் செய்தல் – அவர்கள் வாழ இயலாதபடிச் செய்தல்.

475. ஒய்த்துவிடச் செய்யாதே – ஒய்ந்துவிடச் செய்யாதே; ஒய்தல் – நலிதல் – சோர்தல்.

476. அன்னீதம் – அநீதி என்பதன் மருவு; சார்ந்த வழக்குச் செய்ய வேண்டாம்.

477. வேம்பு ரதம் – வேம்பு இலைகளால் ஒப்பனை செய்யப்பட்ட சப்பரம், தேர்; வித்தகி – ஞானி; ஞானம் பெற்றவள்.

478. பச்சிலை ரதம் – வேம்பின் பசுமையான இலைகளால் அமைக்கப் பட்ட சப்பரம், தேர்.

479. கொலுவில் இருத்தல் – அலங்கரிக்கப்பெற்று, காட்சியில் இருத்தல்; கோர்த்த முத்து – ஒவ்வொன்றாகச் சேர்த்த மாலைபோல் நெருக்க மாக அமைந்த அம்மைமுத்துக்கள்.

481. கேளிக்கையாக . . . யிறக்கும் – கேளிக்கையாக – விளையாட்டாக; மாரியம்மன் விளையாட்டாகப் போட்ட முத்தை விளையாட் டாகவே எடுத்துவிடுமாறு கூறுதல்.

482. அரும்பாலகன் – அரிய பிள்ளை; தவம் செய்து பெற்றெடுத்த மகன். அவஸ்தை – வதை, துன்பம்

483. வருத்தப்படுத்துதல் – உடல் வேதனையைக் கொடுத்தல்

484. அன்னமிரங்க . . . கண்பாரும் – அம்மை நோய் வந்த காலத்து அந்நோய்க்குட்பட்டவரால் உணவு உண்ண முடியாத நிலை தோன்றும். அவர்களுக்குக் குளிர்ச்சியான கூழ், மோர் ஆகியவை மட்டுமே கொடுக்கப்படும். எனவே நோயை நீக்கி உணவு உட்செல்ல வழி வேண்டுகிறார்.

485. ஊட்டத்தை . . . காருமம்மா – உன் கருணையால் உடலில் பலத்தை, வலிமையை வழங்கிக் காப்பாய்

மாரி பாராமுகமாயிருந்தால் பழிவரும்

இரக்கங் கொடுத்துநீ ஈஸ்வரியே காருமம்மா
காருமம்மா பெற்றவளே காலுதலை நோகாமல்
எங்கேயோ பாராமுகமாய் யிருந்தேனென் றெண்ணாதே
அந்திசந்தி பூசையிலே அசதியா யெண்ணாதே
ஒட்டாரம் பண்ணாதே ஓங்காரி மாரிமுத்தே
பாவாடம் நேருமம்மா பழிகள் வந்து சேருமம்மா
பாவாடம் நேர்ந்ததென்றால் பாலனுக்கோராது
கண்டார் நகைப்பார்கள் கலியுகத்தா ரேசுவார்கள்
கலியுகத்தா ரேசுவார்கள் கட்டழகி மாரிமுத்தே
பார்த்தார் நகைப்பார்கள் பரியாசம் பண்ணுவார்கள்
உதடு படைத்தவர்கள் உதாசினஞ் சொல்லுவார்கள்

---

487. காலுதலை நோகாமல் – உச்சி முதல் உள்ளங்கால் வரை அம்மைநோய் தாக்கினாலும் உச்சியும் உள்ளங்காலும் முக்கியமானவை என்பதால் அவற்றை வலியின்றிக் காத்தருளுமாறு கூறப்படுகிறது.

488. பாராமுகமாய் – வேண்டுமென்று எண்ணாது இருந்துவிட்டதாகக் கருதுதல்; கவனிக்காமலிருத்தல்.

489. அந்திசந்தி பூசை – காலை, மாலை நேர வழிபாடு; அசதி – களைப்பு. 'அசதியாய் நில்லாதே' என மாரியம்மன் வர்ணிப்பில் உள்ளது.

490. ஒட்டாரம் – பிடிவாதம்; ஓங்காரி – பிரணவப் பொருளானவள்; சக்தி.

491. பாவாடம் . . . கட்டழகி மாரிமுத்தே – நாக்கை அறுத்துப் படையல் கொடுத்தல். மாரியம்மன் பக்தர்கள் தம் நாக்கை அறுத்துப் படையல் செய்யும் பழக்கம் கொண்டவர்கள் என்றும் அவ்வாறு செய்தால் அது மாரியம்மனுக்குப் பழிகள் வந்து சேரும் என்றும் கூறப்படுகிறது. இது ஒரு வழிபாட்டு முறை.

492. ஓராது – பொறுக்காது

493. கண்டார் நகைப்பார் . . . . ஏசுவார்கள் – மாரி கலியுக தெய்வமாதலால், அவள் தம் பக்தர்கள் நாக்கைப் பலிகொண்டால் அது நகைப்புக்கிடமாகும் என்கிறார். "கலியுகத்துப் பாவாடம் கட்டழகிக்காகாது" என மாரியம்மன் வர்ணிப்பில் உள்ளது.

495. பரியாசம் பண்ணுதல் – பரிகாசம் செய்தல்; சிரித்து ஏளனம் கூறுதல்; கேலி செய்தல்

496. உதடு படைத்தவர்கள் – பேசத் தெரிந்தோர் என்பது பொருள்; உதாசினம் – ஒதுக்கி விடுதல்; கைவிட்டுவிடுதல்.

பல்லைப் படைத்தவர்கள் பரியாசம் பண்ணுவார்கள்
நாவைப் படைத்தவர்கள் நாணயங்கள் பேசுவார்கள்
பார்த்தோர் நகைக்கவம்மா பரியாசம் பண்ணாதே

காமாட்சி அம்மனை அழைத்துக் காக்க வேண்டுதல்

கச்சிப் பதியாளே காமாட்சி தாயாரே
தாயாரே பெற்றவளே தயவு வைத்துக் காருமம்மா
மாதாவே பெற்றவளே மனம்பொறுத்துக் காருமம்மா
பார்வதியே பெற்றவளே பச்சம்வைத்துக் காருமம்மா

முத்துக்களின் எண்ணிக்கையும் அம்மன் உடலும்

ஆயிரம் கண்ணுடைய அலங்காரி வாருமம்மா
பதினாயிரம் முத்தினிலே பார்த்தெடுத்த வாணிமுத்து
நூறாயிர முத்தினிலே நூற்றெடுத்த வாணிமுத்து
ஆறாயிரங்கண் முத்துதனி வாத்தாள் வளர்ந்தெழுந்தாள்

497– பல்லைப் படைத்தவர்கள் . . . நாவைப் படைத்தவர்கள் – இதுவும்
498. பேசத் தெரிந்தவர்களைக் குறிக்கும்; நாணயம் பேசுதல் – தாங்கள் குறையில்லாதவர் போல் அடுத்தவர் குறையை மட்டும் பேசுதல்.

500. கச்சிப்பதியாளே காமாட்சி தாயாரே – காமாட்சி அம்மன் தோற்றம் தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் தொடங்குகிறது; சக்தியின் பல் வேறு அம்சங்களில் ஒன்றாகிய காமாட்சியம்மனை நோக்கி வேண்டுதல் நடைபெறுகிறது (கச்சி – காஞ்சிபுரம்).

501. தயவு வைத்துக் காரும் – கருணையுடன் காக்க.

502. மனம் பொறுத்துக் காருமம்மா – செய்த பிழைகளைப் பொறுத்துக் காத்தருளும் அம்மா.

503. பச்சம் வைத்துக் காருமம்மா – இரக்கம் கொண்டு காருமம்மா. காமாட்சி அம்மன் கதை பின்னால் இடம்பெறுகிறது.

504. ஆயிரம் கண்ணுடைய அலங்காரி – உடம்பில் முத்துக்கள் பதிந் திருப்பதைக் கண்களாகக் கருதுவர். அவை உடம்பில் பதிந்திருப்ப தைப் பானையின் துளைகளிட்டு, உடலாக உருவகித்து வழிபடுவர். இதையே 'ஆயிரங்கண் பானை' என்பர். மாரியம்மனுக்குரிய விழாக்களில் முளைப்பாரி, மாவிளக்கு போன்றவற்றை நேமிதப் பெண்கள் எடுத்துவருவதுபோல் ஆயிரங்கண் பானையையும் எடுத் துக் கோயிலுக்குக் கொண்டு வந்து வைத்து வழிபடுவது வழக்கம்.

505. பதினாயிரம் . . . வளர்ந்தெழுந்தாள் – அம்மை நோய் எனப்படுவது முத்து முத்தாக உடலின் மேல் கொப்பளித்துக் காணப்படுவது. இவற்றின் எண்ணிக்கை இங்கே கூறப்படுகிறது; ஆணிமுத்து – முத்துக்களிலே சிறந்த பெரிய முத்து. அம்மை முத்துக்களில் பெரியதை 'ஆணிமுத்து' என்கிறார்.
ஆயிரங்கண் புத்திலே அம்மா வளர்ந்தெழுந்தாய் என மாரியம்மன் வர்ணிப்பில் உள்ளது.

மாரி அம்மனுக்கும் நாகத்திற்கும் தொடர்பு

நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடப் பாம்பே
தேகத்தின் கண்ணேயம்மா சின்னவிடப் பாம்பே
அஞ்சுதலை நாகமுனக்கு கொஞ்சிவிளையாடுதம்மா
பத்துத்தலை நாகமம்மா காக்குதம்மா வுன்கொலுவில்
பெருந்தலை நாகமம்மா பிறழுதம்மா உன் கோவிலிலே
சேஷனென்ற பாம்பையெல்லாம் சேரவே பூண்டசக்தி
நாகமென்ற பாம்பையெல்லாம் நலமாகப் பூண்டசக்தி

---

508. நாகத்தின்கண் .... விடப்பாம்பே 'நாகராசனுக்கும் நாககன்னிக்கும் பிறந்தவள் மாரியம்மன்' என்ற கதை ஒன்று இருப்பதால் மாரியம்மனை நாகத்துடன் தொடர்புபடுத்தியுள்ளார்; நாகத்தின் கண் – மாரி அம்மையின் கண்கள் நாகத்தின் கண்ணுக்கு உவமிக்கப்படுகின்றன. விடப்பாம்பு – கொடிய நஞ்சு உள்ள பாம்பு; நல்ல பாம்பு.

509. தேகத்தின் கண் – மாரியின் உடம்பில் அம்மை முத்துக்கள் சிறிய நச்சுப்பாம்புக்கு ஒப்பிடப்படுகின்றன.

510. அஞ்சுதலை நாகம் – ஐந்து தலைகள் உள்ள நாகத்தை மாரிக்குரியதாகக் கூறுகிறார்; கொஞ்சி விளையாடுதல் – குழைந்து குழைந்து ஆடுதல்; உடலை வளைத்துப் படமெடுத்து ஆடுதல். மாரியின் தலைமேல் ஐந்து தலை நாகம் படமெடுத்து நிற்கும்.

511. பத்துத் தலைநாகம் – சற்றுமிகைப்படுத்தி 'பத்துத்தலை நாகமெனக் கூறுகிறார்; பதிந்து விளையாடுதல் – நன்றாக உடம்போடு ஒட்டி விளையாடுதல்.

512. கருந்தலை நாகம் – கருநாகம் எனும் ஒரு வகைப் பாம்பு அம்மன் சிலைக்குப் பின்புறமிருந்து காத்து வருகிறது எனக் கூறுகிறார்.

513. பெருந்தலை ... கோவிலிலே – பெரிய பெரிய தலைகள் உள்ள பெரிய நாகப்பாம்பு மாரி கோவிலில் பிறழ்ந்து செல்கிறதாகக் கூறுகிறார்.

514. சேஷனென்ற ... பூண்டசக்தி – ஆதிசேடன் போன்ற பாம்புகளை மாரி தன்னுடம்பில் அணிந்திருப்பதாகக் கூறுகிறார்.

515. நாகமென்ற பாம்பு – 'நாகம்' எனும் ஒரு வகையான நல்ல பாம்பை மாரி அணிந்துள்ளாள்.
இங்கு மாரியின் உடம்பிலுள்ள முத்துக்களை நாகத்தின் கண்களுக்கும், மாரியின் மேல் நாகங்கள் விளையாடுகின்றன என்றும், மாரியின் கோவிலில் நாகங்கள் உள்ளன என்றும், கூறுவதால் மக்களும் அக்கோயிலுள்ளே செல்லவோ அம்மனைப்பற்றிச் சாதாரணமாக எண்ணவோ அஞ்சுவர்.

அரவமென்ற பாம்பையெல்லாம் அழகாகப் பூண்டசக்தி
ஆபரணமாய்[ப்]பூண்டாய் அழகுள்ள பாம்பையெல்லாம்
நாகங் குடைபிடிக்க நல்லபாம்பு தாலாட்ட
பூரணமாய்[ப்]பூண்டாய் பொன்னுதிரு மேனியெல்லாம்
தாலாட்ட தாலாட்ட தாயார் மனமிரங்க
சேசன் குடைகவியச் செந்நாகம் வட்டமிட
வட்டமிட்டு வீற்றிருந்தாய் மாரிகன்னி ஞாரானே
மார்மேலே நாகமம்மா மடிமேல் புரண்டாட
தோள்மேலே நாகமம்மா துடைமேல் புரண்டாட
மார்மேலுந் தோள்மேலும் வன்னமடிமேலும்
கொஞ்சி விளையாடுதம்மா கோபாலன் தங்கையரே

நாகமிருப்பதால் அம்மனை வணங்க அஞ்சுதல்

ஏழையா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
குழந்தையா லாகுமோதான் கொம்பனையைத் தோத்தரிக்க
அடியேனா லாகுமோதான் ஆத்தாளைத் தோத்தரிக்க
என்னுனா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க

---

516. அரவம் – பாம்பு; பூணுதல் – அணிதல்.

518– நாகம், நல்ல பாம்பு – இரண்டும் ஒருவகையின; நாகம் குடைபிடித்
520. தல் – ஐந்துதலை நாகம் அம்மன் தலைக்குமேல் தன் படத்தை விரித்து அம்மன் மீது வெயிலும் மழையும் படாதபடி காத்து நிற்கும் என்பது நம்பிக்கை. அவ்வாறே உருவமும் சித்திரமும் படைத்துள்ளனர். நல்லபாம்பு தாலாட்ட – அம்மனுக்குத் தாயாக இருந்து தாலாட்டுப் பாடுவதாகக் கூறப்படுகிறது. பூரணமாய் – மேனி முழுவதுமாக.

521. சேசன் – ஆதி சேடன்; குடை கவிய – ஆதிசேடன் தன் படத்தை விரித்து மாரியின் தலைக்குமேல் கவிழ்த்துள்ளது; செந்நாகம் வட்டமிட – அம்மையைச் சிவந்த நாகங்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன; அம்மை உடம்பிலும் சுற்றியுள்ளன.

523– மார்மேலே . . . கோபாலன் தங்கையரே – பாம்பின் குழிவில் பிறந்
526. ததால் மாரியம்மனுக்கும் பாம்புக்கும் மிக நெருங்கிய நிலை கூறப்படுகிறது. எனவே அது அம்மனின் மார்பிலும் தோளிலும் மடியிலும் புரண்டாடுகிறது. மாரியம்மன் கண்ணனின் தங்கை.

527. ஏழையால் ஆகுமோ – மாரியம்மன் மேனியின் மேலும் கோயிலுக்குள்ளும் பாம்புகள் நிறைந்திருப்பதால் அவள் அருகே நெருங்கவோ, வணங்கவோ பயந்து கூறுவதாக உள்ளது; தோத்தரித்தல் – வணங்குதல்

529. ஆத்தாள் – 'அம்மா' என்பதற்குரிய வட்டார வழக்கு.

மாரியம்மன் தன் பக்தர்கள் பக்கத்தில் நிற்றல்

இல்லையென்பார் பங்கில் ஈஸ்வரியெ மாரிமுத்தே
நில்லா யரைநாழி நிஷ்டூரத் தாண்டவியே
உண்டென்பார் பங்கில் ஒளிவிளக்காய் நின்றசத்தி
பார்த்தோருக்குச் செல்வனம்மா பாலன் குழந்தையம்மா
உன்னைப் பகைத்தோர்க்கு உருமார்பி லாணியம்மா 535
நினைத்தோர்க்குத் தெய்வமம்மா எதிர்த்தார்க்கு மார்பிலாணி

அறியவல்லாதவர் அம்மனை அறியார்

தாயே நீ வாருமம்மா தற்பரையாய் நின்றசக்தி
வாக்கிட்டால் தப்பாது வரங்கொடுத்தால் பொய்யாது
பொய்யாது பொய்யாது பூமல்தான் பொய்யாது
பூவிரண்டு பூத்தாலும் நாவிரண்டு பொய்க்காது 540

---

531. இல்லையென்பார் பங்கில் . . . நில்லாய் – உன்னை 'இல்லை'யென்று கூறுபவர்களிடம் அரைநாழிகை கூட நிற்கமாட்டாய்; பங்கில், பக்கத்தில், அருகில்.

532. அரைநாழிகை – 12 நிமிட நேரம்; நிஷ்டூரத்தாண்டவி – நிட்டூரத் தாண்டவி, கொடுமை நிறைந்த நடனக்காரி. துர்க்கை என்பவள்.

533. உண்டென்பார் – நீ தெய்வமாக இருப்பது உண்மை என உன்னையே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வாழ்க்கைக்கு வெளிச்சமாய்த் திகழ்பவள்; அவர்களுடனேயே இருந்து அருள் பாலிப்பாள்.

534. பார்த்தோர்க்குச் செல்வனம்மா – பாலகனைக் காண்போர் எல்லோரும் எடுத்துக் கொஞ்சக்கூடிய இயல்பு உள்ளவன்.

535. உன்னைப் பகைத்தோர்க்கு . . . ஆணியம்மா – உன்னை இல்லையென்று நிந்திக்கும் பகைவர்களுக்கு மார்பில் அடித்த ஆணிபோல் துன்பம் விளைவிப்பவள்; உறுமார்பு – உற்றமார்பு.

536. நினைத்தோர்க்குத் தெய்வமம்மா – உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நீதான் அருள் வழங்கும் தெய்வம்.

537. தற்பரையாய் நின்ற சத்தி – உமாதேவி அம்சமாய் நின்றவள் மாரி.

538. வாக்கிட்டால் . . . பொய்யாது – மாரியம்மன் வாக்கு – அருள் வாக்குக் கொடுத்தால் அது நடக்கும். மேலும் அம்மன் அருள் நிறைந்திருக்கும். மாரி வரம் கொடுத்தால் அது எப்படியும் நிறைவேறும்.

539. பூமல் பொய்யாது – பூமியாகிய மண் ஏமாற்றாது. மாரியம்மன் வர்ணிப்பில் 'பொய்யாது . . . பூமலரும் பொய்யாது' என உள்ளது.

540. பூவிரண்டு . . . பொய்க்காது – பூ இரண்டு பூத்தாலும் மாரியம்மன் இரண்டு வகையாகப் பேசாள்; பொய்யாது – 'பொய்யாதுப் போகாது. மாரியம்மன் வர்ணிப்பில் 'பூவிரண்டு பொய்த்தாலும்' என உள்ளது.

மறவரிட வாசலிலே மல்லிகைப்பூ பூத்தாலும்
மறவ ரறிவாரோ மல்லிகைப்பூ வாசனையை
குறவரிட வாசலிலே குடமல்லி பூத்தாலும்
குறவ ரறிவாரோ குடமல்லி வாசனையை
பன்றி முதுகினில் பன்னீரைப் பூசினாக்கால்
பன்றியறியு மோதான் பன்னீரின் வாசனையை
எந்தனா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
மைந்தனா லாகுமோதான் மாதாவை நமஸ்கரிக்க
பிள்ளையா லாகுமோதான் பெற்றவளை நமஸ்கரிக்க
பாலனா லாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க

எச்சிலையும் தீட்டுகளையும் பொறுத்துக் கொள்ளச் சொல்லுதல்

எச்சி லொருகோடி இளந்தீட்டு முக்கோடி
தீட்டு மொருகோடி தெருவெங்குந் தானுமுண்டு
கன்னிகள் தீட்டுக் கலந்தோடி வந்தாலும்
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்தாலும்

541– 542. மறவரிட . . . வாசனையை – மறவர்கள் என்போர் போரிடுபவர். அவர்களுக்கு வன்மைத் தன்மை மட்டுமே தெரியும். மென்மைத் தன்மையுடைய மல்லிகைப் பூவின் வாசனையை அவர்கள் அறியார்.

543– 544. குறவரிட . . . வாசனையை – குறவர் சமுதாயம் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய தாழ்நிலையில் மலைப்பகுதியில் உள்ளவர்கள். எனவே அவர்களின் அன்றாட அடிப்படைத் தேவையான உணவுப் பிரச்சினைக்கே அவர்கள் போராடுகின்ற நிலையில் அவற்றிற்கு எல்லாம் சற்று மேலான நிலையில் உள்ள அழகை அனுபவிக்க இயலாது. எனவேதான் அவர்தம் வாசலில் குடமல்லி பூத்து மணம் வீசிக்கொண்டிருந்தாலும் அவற்றை அனுபவிக்க இயலாது என்கிறார். மாரியின் இயல்பைச் சிலர் அறியார் என்பது கருத்து.

545– 550. பன்றி . . . பார்வதியை நமஸ்கரிக்க – அழுக்கான, நாற்றமடிக்கும் இடத்தில் செல்லும் பன்றியின் புறத்தில் வாசனை நிறைந்த பன்னீரைப் பூசினாலும் அது போகக் கூடிய இடத்திற்கே போகும். பக்தியில்லாதவர்களைப் பன்றியாகவும் மாரியம்மனைப் பன்னீராகவும் நூலாசிரியர் உருவகித்துக் கூறுகிறார்; எந்தனால் . . . மைந்தனால் . . . பாலகனால் ஆகுமோ – மாரியை வழிபடத் தங்களுக்குத் தகுதியில்லை எனல்.

551– 555. எச்சிலொருகோடி . . . தயவாகக் காருமம்மா – அம்மனுக்குப் படையலிட்டுத் தீபாராதனை செய்வதற்கு முன்பாக அப்படையல் பொருள்களை, எச்சில் படுத்தினாலோ, இளங்குழந்தைகள் அறியாமல் படையல் பொருள்களைத் தீட்டாக்கினாலோ, பெண்களுக்கு மாதவிடாய் வந்த காலத்தில் ஏற்படும் தீட்டினாலோ,

தாயே மனம் பொறுத்துத் தயவாக[க்] காருமம்மா
எச்சிற் கலந்ததென்று இடைப்போயி நின்றாலும்
தீட்டுக் கலந்தாலும் ஈஸ்வரியே மனம்பொறுத்து
பாசஷம்வைத்துக் காருமம்மா பராபரியே அங்கிக்கண்ணே
விருப்பம் வைத்துக் காருமம்மா விருது படைத்த சத்தி
நீலி கபாலியம்மா நிறைந்த பஞ்சாட்சரியே
சூலி கபாலியம்மா சுந்தரியே மாரிமுத்தே
நிஷ்டுரக் காரியரே விஸ்தாரமுள்ள சத்தி
வேப்பிலையால் தான்தடவி வீசிறியா லமர்த்திவிடு
ஆனபரா சத்தியரே அம்மைமுத்தை அழுத்திவிடு
எறக்கிறக்குந் தாயே ஈஸ்வரியே நான்பிழைக்க

தீட்டு அல்லது எச்சில் பட்டுவிடுகிறது. இதில் கன்னிப் பெண்கள் 'தீட்டு' சற்று மிகுதி. இப்படிப் பல தீட்டுகள் வாழ்க்கையில் வீடு தோறும், தெருதோறும், ஊர்தோறும் நடைபெறக் கூடியவை. அவற்றை வாழ்க்கையின் இயல்பான நிகழ்வுகள் என எண்ணிப் பக்தர்களாகிய மக்களைக் காத்தருளும் தாயே என மாரியம்மனிடம் வேண்டப்படுகிறது; ஆறுதப்பு நூறுபிழை – பக்தர்கள் தாம் அறியாது செய்யும் பல பிழைகளையும் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுதல் உள்ளது.

556. எச்சிலும் தீட்டும் கலந்து இடைப்போயி நின்றாலும் – அம்மையுக்களிலவற்றுடன் இடையிலே சென்று கலந்துவிட்டாலும்

558. பக்ஷம் வைத்துக் காருமம்மா– அன்பு வைத்துக் காத்தல்; அங்கி – நெருப்பு.

560. நீலி–இசக்கி; மாரியை இசக்கியுடன் உருவகிக்கிறார்; கபாலி – கபாலத்தைக் கையில் ஏந்தியவள் என்பதால் மாரியை உருவகித்துக் கூறுகிறார்; பஞ்சாட்சரி– மாரி 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்துக்குரியவள்.

561. சூலி – சூலம் – சூலாயுதம் ஏந்தியவளாக உருவகப்படுத்துகிறார்; சுந்தரி – திரிபுர சுந்தரியாக மாரியை உருவகித்தல்.

562. விஸ்தாரமுள்ள சத்தி – விசாலமான மனம் கொண்டவள்.

563. வேப்பிலையால் . . . யமர்த்திவிடு– அம்மை நோய் கண்டவரை வேப்பிலையால் தடவியும், வேப்பிலையால் வீசியும் அம்மைக் கொப்பளங்கள் மறையுமாறு செய்வர். அவ்வாறு மாரியைச் செய்யக் கோருகிறார். வீசிறி – விசிறி; அமர்த்திவிடுதல் – நிறுத்தச் செய்தல்.

564. அம்மை முத்தை அழுத்திவிடு – அம்மை உடலில் தோன்றி அது நீங்குவது இருவழிகளில் நடைபெறும்.

1. கொப்பளம் உடைந்து அப்புண் ஆறுதல்; இதனால் தழும்பு ஏற்படும்.
2. கொப்பளம் உடையாமலே உடலில் அழுந்தி, அதிலுள்ள கெட்டநீர் இரத்தத்தில் கலந்து வெளியேறும். இதை அம்மை நோய் அழுந்தி விடுதல் என்பர். அம்மை நோய் தோன்றிய தொடக்கத்திலேயே அதற்குரிய மருத்துவம் மேற்கொள்வதால் உடல் குளிர்ச்சியுற்று அழுந்திவிடும்.

565. எறக்கு – இறக்கு.

மாரி அமர்ந்த தலங்கள்

படவேட்டை அமர்ந்தவளே பலிஉதிரம் கொண்டவளே
ஊத்துக்காட்டை அமர்ந்தவளே உதிரபலி கொண்டவளே
வீராம்பட்டண மமர்ந்த வேதாந்த மாரிமுத்தே
கன்னபுரத் தெல்லையெல்லாம் காவல்கொண்ட மாரியரே
எக்கலா தேவியரே ஈஸ்வரியே யிறங்குமம்மா 570
திக்கெல்லாம் பேர்படைத்த தேசத்து மாரியரே
அண்ட புவனமெல்லாந் துண்டரீக முள்ளசத்தி
கச்சப் பதியாளே காமாட்சித் தாயாரே

மாரி அம்மன் கொலுவிருத்தல்

கைலாச லோகமெல்லாம் காவல்கட்டி யாண்டவளே 575
பாதாள லோகமெல்லாம் பரதவிக்க பண்ணசத்தி
காலைக் கோலுவிலம்மா காத்துயிருந்தார் ஆயிரம்பேர்
உச்சிக் கொலுவிலம்மா உகந்திருந்தா ராயிரம்பேர்
அந்தக் கொலுவிலம்மா அமர்ந்திருந்தா ராயிரம்பேர்

566– படவேடு, ஊத்துக்காடு, வீராம்பட்டணம் இவற்றிலுள்ள அம்மன்
568. களாக மாரி திகழ்கிறாள் என்கிறார்.

569. கன்னபுரத்தெல்லை – மாரியின் வரம்புக்குட்பட்ட ஊர்கள்; காவல் கொண்ட மாரி – மக்களை, அவர்தம் வாழும் வீடுகளை, ஊர்களைக் காக்கும் தெய்வமாக மாரி விளங்குகிறாள்; மழை யாகிய மாரி நிலத்தில் பெய்து மக்கள் வாழ்க்கையைச் செழிக்கச் செய்கிறாள்.

572. துண்டரூகம் உள்ள சத்தி – குரூரம்; வன்மை நிறைந்த சக்தி.

574. கைலாச . . . . யாண்டவளே – கைலாயம் முழுவதிலும் ஆட்சி செலுத்துபவள். அங்கிருந்து மக்களைக் காப்பவள் என்பது பொருள்.

575. பாதாளலோக. . . . பண்ணசத்தி – பாதாளலோகத்திலுள்ள தீயவர்களை வருத்தக்கூடிய சக்தியாவாள்.

576– காலைக்கொலுவிலம்மா. . . . அமர்ந்திருந்தார் ஆயிரம்பேர் –
578. ஆறுகால பூசை என்பது தெய்வ வழிபாட்டோடு இணைந்தது. அதிகாலை, காலை, நண்பகல், மாலை, இரவு, சாமம் (நள்ளிரவு) ஆகிய வேளைகளில் பூசை மேற்கொள்வர். இங்குக் காலை, உச்சி, அந்தி ஆகிய வேளைகளில் அம்மனை அலங்கரித்துக் காட்சிக்காக வைத்திருப்பர். அப்போது பலர் அங்குக் கூடுவர்.

அம்மன் பூசையை அயல்நாட்டவர் பார்த்தால்

பாடும் புலவரெல்லாம் பண்பிசைந்த பாடல்சொல்ல
வடுகர் துலுக்கரோடு மராட்டியர் கன்னடியர்
கன்னடியர் காவலுடன் கர்நாட்டுப் பட்டாணியர்
இட்டசட்டை வாங்காத இடும்பரெல்லாம் காத்திருக்க
போட்டைசட்டை வாங்காத பொந்திலியர் காத்திருக்க
வடுகர் துலுக்கரம்மா மறுதேசப் பட்டாணியர்
வேடிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து

---

579. பாடும்.... பாடல் சொல்ல – அம்மனுக்குப் பூசைசெய்யும்போது பூசாரியே புலவராக மாரி அம்மன் மீது துதிப்பாடல்கள் பாடுவது இயல்பு, அம்மன் கொலுவிலிருக்கும் போது அவளைப் புகழ்ந்து பாடுவோர்.

580. வடுகர் – தெலுங்கர், தெலுங்குமொழி பேசுபவர்; துலுக்கர் – துருக்கி நாட்டவர்; முகமதியர்; துருக்கி மொழி பேசுபவர்; மராட்டியர் – மராட்டிய மாநிலத்தில் வாழ்பவர், மராட்டி மொழி பேசுபவர்; கன்னடியர் – கருநாடகத்தில் வாழ்பவர். கன்னட மொழி பேசுபவர்.

581. கன்னடியர் காவலுடன் – கன்னடியப் படைவீரர்கள் காவலில்; கர்நாட்டுப் பட்டாணியர் – கன்னட நாட்டிலுள்ல முகமதியர்; பட்டாணியர் – முகமதியரில் ஒரு பிரிவினர்.

582. இட்டசட்டை வாங்காதவர் – சட்டையைக் கழற்றாது அணிந்திருப்போர்; இடும்பர் அதிகாரத் திமிரில் பேசுபவர். காத்திருக்க – அம்மன் கொலுவில் அமர்ந்திருக்க.

583. போட்டசட்டை.... காத்திருக்க பொந்திலியர் என அழைக்கப்படும் பஞ்சாபிய இனத்தவரும் அவர்தம் வாழ்விடச் சூழலுக்கு ஏற்ப ஆடையைக் கழட்டாத நிலையில் எப்பொழுதும் ஆடையுடனே இருப்பர்.

584– 585. வடுகர் .... மாரிமுத்து – மாரியம்மன் தெலுங்கு நாட்டுத் தெலுங்கர், துருக்கி நாட்டுத் துலுக்கர், வேறுநாட்டில் வாழக்கூடிய துலுக்கர்கள் என எல்லா மக்களையும் அவர்தம் வாழ்க்கையையும் வேடிக்கை பார்த்திருந்தாள், மறுதேசப் பட்டாணியர் – அயல்நாட்டிலிருந்து வந்த முகமதியர்; கிளிமொழியாள் – கிளிபோன்று மொழி பேசுபவள்.

இதிலிருந்து மாரியம்மன் பக்தர்களாக வடுகர், கன்னடியர், மராட்டியர், துலுக்கர். பட்டாணியர் வேறுபல மொழியினைப் பேசுவோர் அனைவரும் திகழ்கின்றனர் எனத் தெரிகிறது; மாரியம்மன் வழிபாடு தென்னாட்டில் மிகுதி என்பதும், துருக்கியினத்தவரும் மாரியை மதித்த வரலாறும் தெரியவருகின்றன.

எல்லோரும் தழைக்க அருள் வேண்டல்

மாயமெல்லாம் உன்மாயம் மதளையெல்லாம் உன்மதளை
மருகர் தழைக்கவம்மா மருமக்க ளீடேற
பலிச்சட்டித் தானெடுக்கும் புத்திரர்கள் தான்தழைக்க
வேதங்கள் தான்தழைக்க விண்ணவர்க ளீடேற
குமாரரவர்கள் தான்தழைக்க கொம்பனையே கண்பாரும்
மைந்தர்கள் தான்தழைக்க மாதாவே கண்பாரும்

காமாட்சியம்மன் கதை

காஞ்சி புரியிலேதான் கர்த்தரையும் நீநினைத்து
கர்த்தரையும் நீ நினைத்து[க்] காமாட்சி பூசைபண்ணு

---

586. மாயமெல்லா உன்மாயம் – இவ்வுலகில் நிகழும் நிலையின்மை யெல்லாம் மாரியால் விளைவதுதான்; மதளை – மதலை என்பதன் திரிபு. மதலையெல்லாம் உன்மதளை – குழந்தைகள் எல்லாம் மாரியின் குழந்தைகள்தாம்.

587. மருகர் – மருமகன்கள்; மகள்களின் கணவன்மார்.

588. பலிச்சட்டி – முக்காலத்தில் ஆடு, கோழி இவற்றை மாரியம்மனுக்குப் பலி கொடுத்து அந்த இர்த்தத்தை ஒரு சட்டியில் (மட்பாண்டம்) பிடித்து அதைக் கையில் ஏந்தி, மேளதாளத்துடன் சென்று தெருச்சந்திகளில் உடைப்பர். தற்போது இரத்தத்திற்குப் பதிலாகச் சிறிது வெண்பொங்கல், மஞ்சள், சுண்ணாம்பு இவற்றை இரத்தமாகக் கருதி சட்டியிலிட்டுத் தெருச்சந்தியில் உடைக்கின்றனர். இங்குப் 'பலிச்சட்டி' என்பது இரத்தச்சட்டி ஆகும். இது 'மாரியம்மன் வர்ணிப்பு' என்ற ஏட்டில் ' பொலிச்சட்டி தானெடுக்கும்' என வந்துள்ளது.

589. வேதங்கள். . . . ஈடேற – நாட்டில் அறம் தழைக்கவும், வேதங்கள் சிறப்படையவும் நற்குணங்கள் பொருந்திய தேவர்கள் சிறந்த வாழ்வைப் பெறவும் மாரியம்மன் அருள் வேண்டப்படுகிறது.

590. குமாரரவர்கள் . . . . மாதாவே கண்பாரும் – 'குழந்தைகள் நாட்டின் கண்கள்' போன்றவர் என்பதாலும் அம்மை நோய் பெரியவர்களைவிட குழந்தைகளை மிகுதியாகப் போதிக்கும் என்பதாலும் அவர்களைக் காத்தருளும்படியும் அவர்கள் நல்வாழ்வுக்கு மாரியம்மன் அருள் வேண்டப்படுகிறது.

592–596. காஞ்சிபுரியிலேதான் கர்த்தரையும் நீ நினைத்து . . . பூசைபண்ணு... தவமிருந்தாய் – காஞ்சியின் தலைமைத் தெய்வமாக விளங்கக்கூடிய ஏகாம்பரேசுவரரை அடைய நினைத்துக் காமாட்சி பூசை செய்தது கூறப்படுகிறது. காமாட்சி கம்பை நதியின் மணலில் லிங்க உருவம் செய்து நாள்தோறும் வழிபட்டுவருவது வழக்கம். அப்படி ஒருநாள் பூசை செய்யும் வேளையில் நதியில் வெள்ளம் வர நீர் அடித்துச்

கங்கை முழுகியம்மா கிளிமொழியே தவமிருந்தாய்
வைகை முழுகியம்மா வனமயிலே தவமிருந்தாய் 595
பொய்கை முழுகியம்மா பெற்றவளே தவமிருந்தாய்
தவத்தில் மிகுந்தவளே சத்தகன்னித் தாயாரே
ஆற்று மணலெடுத்து அரனாரை யுண்டுபண்ணாய்
சேற்று மணலெடுத்துச் சிவனாரை யுண்டுபண்ணாய்
கம்பை நதியிலே காமாட்சி தவமிருந்தாய் 600
இருநூற்றுக் காதவழி திருநீற்றால் கோட்டையிட்டாய்
திருநீற்றால் கோட்டையிட்டாய் திகம்பரியே மாரிமுத்தே

செல்லாதபடி அந்த லிங்க வடிவத்தைச் சேர்த்து அணைத்துப் பிடித்துக் கொள்ள, சிவன் காட்சி தந்து காமாட்சிக்கு அருளினார் என்பது கதை. காமாட்சி இறுதியில் திருவண்ணாமலையில் சிவனுடன் சேர்ந்தாள். காஞ்சிப் புராணம் இவ்வாறு காமாட்சி கதையைக் கூறுகிறது.

காமாட்சி கம்பை நதியில் தவமேற்கொண்டு தவத்தின் வலிமையால் 'வன்னியன்' என்பானைச் சிவன் உதவியுடன் பெற்று அவன் மூலம் வாதாபி, எனதாபி என்ற அரக்கர்களை அழித்ததாக வன்னிய புராணம் கூறுகிறது.

காமாட்சி நதிக்கரையில் தவமிருந்தபோது அவள் தவத்தைக் கலைக்க எண்ணிய சிவன் பல கடவுளரை அனுப்பி அவள் தவநிலையைக் கலைக்க இயலாது போய் இறுதியில் தானே சென்று அவளுடன் பொருதித் தோற்றுப்போன பின் தேவர்கள் அனைவரும் சேர்ந்து சிவனுக்கும் காமாட்சிக்கும் திருமணம் நடத்திவைத்தனர் எனக் 'காமாட்சியம்மன் தவநிலை' கூறுகிறது. கங்கை, வைகை, பொய்கை என்று கூறப்படுவது சிறப்புப் பொருந்திய தீர்த்தங்களைக் காமாட்சியம்மனுடன் இணைத்துச் சொல்வதாகக் கொள்ளலாம்.

597. தவத்தில் மிகுந்தவளே சத்தகன்னித் தாயாரே – கம்பை நதியில் கடுந்தவம் மேற்கொண்டவள் காமாட்சி. இவள் இன்று கிராமங்களில் சப்த கன்னியர்களில் ஒருவராக வைத்து வழிபடப் பெறுகிறாள். காண்க: காமாட்சியம்மன் கதைப்பாடல்.

598. ஆற்று .... தவமிருந்தாய் – இதன் விளக்கம் முற்பகுதியிலும் பின்னாலும். உள்ளது. ஆற்றுமணல் – கம்பையாற்றுமணல்;

600. கம்பைநதி காஞ்சிக்கருகிலுள்ளது.

601– இருநூற்று ...... கோட்டையிட்டாய் – காமாட்சி திருநீற்றை ஒரு
602. கோடுபோல் தன்னைச்சுற்றி இருநூற்றுக்காதவழி தூரத்திற்கு இட்டு. அதற்குள் அமர்ந்து தவம் மேற்கொண்டாள். அவ்விடத்தைத் தவத்தின்கோட்டை என்பர். இக்கோட்டைக்குள் பிறர் செல்லக் கூடாது என்பதற்காக இது அமைக்கப்பட்டது. தவத்தின் போது இதற்குள் சென்று தவத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடாது என்பதற் காக இவ்வாறு எல்லை வகுக்கப்பெற்றது.

காமாட்சி இடப்பாகம் பெறல்

அருணா சலந்தனி லீசான மூலையிலே
திருவண்ணா மலையிலேதான்தேவி தவமிருந்தாள்
அருணாசலந் தனிலே ஆத்தாள் தவமிருந்தாள்
ஈசான மூலையிலே இருந்தாய் பெருந்தவசு
இருந்தாய் பெருந்தவசு இடப்பாகம் பேறுபெற்றாய்
இடப்பாகம் பேறுபெற்றாய் ஈஸ்வரியே மாதாவே

பாலகனைக் குணப்படுத்த வேண்டுதல்

காகமுதுகினில் கதம்பப்பொடி பூசிவைத்தால்
காகம் அறியுமோதான் கதம்பப்பொடி வாசனையை
கொக்கு முதுகினிற் கோமேதகங் கட்டி வைத்தால்
கொக்கு அறியுமோதான் கோமேதகத்தி னொளியை
மூலக்கனலின் முதன்மையாய் நின்ற சக்தி
பாலனுக்கு வந்த பார எரிச்சல்களில்
காலெரிவு கையெரிவு கட்டழகி வாங்குமம்மா

603– அருணாசலந்தனிலே . . . . . தவமிருந்தாள் – கயிலையில்,
608. விளையாட்டாக இறைவனது கண்களை உமை மூட, சூரிய சந்திர சூரியர்களையே கண்களாகக் கொண்ட இறைவனின் அருளொளி யின்றி உலகம் இருண்டது. அதனால் உலகிற்கு விளைந்த துன்பம் நீங்க அன்னையைக் காஞ்சியில் வந்து மணலால் இலிங்கத் திருவுரு வமைத்து வழிபட்டுப் பின் அண்ணாமலைக்கு வந்து இடப்பாகத் தைப் பெறுக என்று இறைவன் கூறிய வண்ணம், அன்னை அண் ணாமலைக்கு வந்து ஞானச்சுடராகிய இறைவனின் திருமேனியில் இடப்பாகத்தைப் பெற்று'அர்த்தநாரீசுவரர்' என்ற திருப்பெயரைச் சிவனுக்குத் தந்தார் என்று புராணம் கூறுகிறது.

611– கொக்கு . . . . ஒளியை – நவரத்தினங்களில் ஒன்றான,
612. கோமேதகத்தைக் கொக்கின் முதுகில் வைத்துக் கட்டினால் அதனால் கொக்கிற்கு எவ்வகை வேறுபாடும் தெரியாதிருக்கும். கோமேதகம் போன்ற மாரியம்மன் அன்பைத் தன்னால் வேறு படுத்தியறியவியலாது என நூலாசிரியர் கூறுவதாக உணரலாம்.

613. மூலக்கனலின் முதன்மையாய் நின்ற சக்தி – உலக முடிவிற்குரிய ஊழித்தீயாய் நின்ற மாரி என்கிறார்.

614. பார எரிச்சல் – சுமைமிக்க எரிச்சல்; வலி.

615. காலெரிவு கையெரிவு – கால், கைகளில் அம்மைக் கொப்பளங் களால் ஏற்படும் எரிச்சல். வலி தீ தாக்கியது போன்றிருக்கும்; வாங்குமம்மா – அவ்வாறான வலியை நீக்குமம்மா.

குத்தல் குடைச்சல் குலைமா ரிடிநோவு
மண்டை குடைச்சலோடு மாரடைப்பு தலைநோவு
வாதபித்த சீதசுரம் வல்பிணியைக் காருமம்மா
இடுப்புக் குடைச்சலைத்தான் ஈஸ்வரியே வாங்குமம்மா
பித்த யெரிவுகளைப் பெற்றவளே வாங்குமம்மா
கழுத்து விருமல்தனைக் கட்டழகி வாங்குமம்மா

வேப்பிலை, விபூதியின் மகிமை

பத்திரியால் தான்தடவி பாரமுத் தமுத்திவிடு
விபூதியைப் போட்டு விலக்கிவிடு முத்தினையே

---

616. குத்தல் குடைச்சல் .... கட்டழகி வாங்குமம்மா – தலை நோய்களான குத்தல் குடைச்சல், இருமல், மார் நோய்களான மாரடைப்பு, மாரிடிநோவு, இடுப்புக் குடைச்சல் மற்றும் வாதம், பித்தம், சீதசுரம் போன்றவை அம்மைக் கொப்பளங்களினால் ஏற்படும். இவற்றை நீக்குமாறு வேண்டுகிறார்;

617. மாரடைப்பு – நெஞ்சடைப்பு; மார்பில் உண்டாகும் வலிகளில் ஒரு வகை இரத்த அடைப்பால் ஏற்படுவது. தலை நோவு – தலைவலி.

618. வாதபித்தம் – வாதமாவது உடலில் வாயு மிகுதலாகிய பிணிக்கூறு. இது உடலுறுப்புகளில் வலியை உண்டுபண்ணும். இந்நோயை மூன்றுவகை நாடிகளுள் ஒன்றான வாத நாடி மூலம் அறியலாம். பித்தமாவது ஈரலிலிருந்து தோன்றும் நீர்வகை. இதில் தலைக்கிறுகிறுப்பு, மயக்கம் ஆகியவை உண்டாகும். இதை மூன்றுவகை நாடிகளுள் ஒன்றான பித்தநாடி மூலம் அறியலாம்; சீதசுரம் – குளிர்காய்ச்சல்; குளிரோடு வரும் சுரம்.

619. இடுப்புக் குடைச்சல் – இடுப்பு வலி.

620. பித்த எரிவு – பித்தத்தால் எரிச்சல் உண்டாக்கும் நோய்வகை.

621. கழுத்து விருமல் – தொண்டை வழியாக வறட்சியான காற்றைக் வெளியேற்றும் ஒருவகை கக்கல் நோய்.

622. பத்திரி – வேப்பிலை; பாரமுத்து – வலிமையான அம்மை முத்துக்கள்; அமுத்திவிடு – அமர்த்தி விடு. பத்திரியால்.... அமுத்தி விடு; – வேப்பிலை அம்மை நோய் கண்டவர்க்குக் குளிர்ச்சி தருவது என்பதால் அதை அம்மைக் கொப்பளங்கள் தோன்றியுள்ள இடங்களில் தடவி அந்நோயை நீக்குவர்.

623. விபூதியைப் ..... முத்தினையே – மாட்டுச் சாணத்தை எரித்துக் கிடைக்கும் 'சாம்பல்' கொண்டு விபூதி தயாரிக்கப் படுகிறது. மாடு, புல், இலை எனப் பல்வேறு மூலிகைகளை உணவாகக் கொள்வ தால் அதிலிருந்து பெறப்படும் சாணமும் மருத்துவக்குணம் உடை யது. எனவே அவ்விபூதியை அம்மைக் கொப்பளங்கள் மீது வீசி அந்நோயை நீக்குவர். வீபூதி வெம்மையைத் தணிப்பது.

வேப்பிலை பட்டவிடம் வினைகள் பறந்தோடுமம்மா
பத்திரி பட்டவிடம் பாவம்பறந் தோடுமம்மா 625
விபூதிபட்ட அச்சணமே வினைகள் பறந்தோடுமம்மா
பஞ்சாரம் பட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும்
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடப் பாம்பே
தேகத்தின் கண்ணேயம்மா சின்னவிடப் பாம்பே
பாம்பே தலைக்கணைதான் வேப்பிலையே பஞ்சுமெத்தை
வேப்பம்பா லுண்டவளே வேதாந்த மாரிமுத்தே
ஐந்நூறு பாம்புனக்கு அள்ளியிட்ட வீரசடை
வீரசடை மேலிருந்து விமலியரே கொஞ்சுமம்மா

---

624. வேப்பிலை . . . . . .பறந்தோடுமம்மா – வினைகள், நோய்கள்; பாவம் – மனிதர்களின் தீச்செயல்களால் விளையும் நோய்;

626. வேப்பிலை, விபூதிக்கு நோய்தீர்க்கும் சக்தி உள்ளதால் அவற்றைப் பயன்படுத்தி உடலில் உள்ள நோய்களைத் தீர்க்குமாறு கூறப் படுகிறது. அச்சணம் – அந்தப்பொழுதிலே, உடனே.

627– பஞ்சாரம். . . . தீர்த்துவிடும் – பஞ்சாரம் என்பது பஞ்சாட்சரம்;
630. பஞ்சாட்சரம் என்பது 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்து மந்திரம்; நாகத்தின் . . . பஞ்சுமெத்தை – மாரியம்மன் வழிபாட்டுடன் நாகம் தொடர்புபடுத்தப்படுகிறது. மாரியம்மன் நாகத்தைத் 'தலையணை' யாகவும் வேப்பிலையைப் பஞ்சுமெத்தையாகவும் கொள்பவள்.

631. வேப்பம் . . . . மாரிமுத்தே – வேப்பம் பால் வெள்ளையாக இருக்கும். வேப்பங் காய்களைப் பிய்த்தால் இப்பால் கிடைக்கும். மாரி வேப்பம்பால் பருகுவதாகக் கூறப்படுகிறது. வேப்பம் பால் கசக்கும்; வேப்பயிலையும் கசக்கும். கசப்பே நன் மருந்தாகக் கொள்ளப்படுகிறது.

632– ஐந்நூறு . . . . கொஞ்சுமம்மா – சிவனுக்குப் பாம்பு –
633. அணிகலனாக விளங்குவது போல் சக்தியின் அவதாரமும் நாக குலத்தில் பிறந்தவளுமான மாரியம்மனுக்கும் பாம்புகள் அணிகலனாக விளங்குகின்றன. மக்கள் தம்தம் விருப்பங்களுக்கு ஏற்ப மாரியம்மனுடன் பாம்புகளை இணைத்துக் கதைகளைக் கூறுவர். இப்பாம்புகள் மாரியம்மன் தலைக்குமேல் குடைபிடிப்பது போல் படம் எடுத்த நிலையில் இருக்கும் என்றும், மாரியின் கோயில்களில் நாகப்பாம்புகள் அலையும் என்றும் கதைகளை வழங்குவர். அள்ளியிட்ட வீரசடை – மாரி அம்மனுக்குச் சடைக்கற்றைகளாக 500 பாம்புகள் சுருண்டுள்ளன எனக் கொள்ளலாம்; விமலியரே – குற்றமற்ற; மாரி அம்மன் பாம்புகளின் மேலிருந்து மகிழ்ட்டும் என்கிறார்.

மாரியம்மன் சந்திக்கோயில்களும் விளக்கு வழிபாடும்

முநநூறுசந்தி முதற்சந்தி யுன்னுதென்றாய்
சந்திக்குச் சந்தி தனிச்சந்தி யுன்னுதென்றாய்
வீதிக்கு வீதி வெளிச்சந்தி யுன்னுதென்றாய்
பட்டத் தழகியம்மா படைமுத்து ராசகன்னி
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
திரிவிளக்கு நாயகியே தேவிகன்ன னூராளே
மணிவிளக்கின் மேலிருந்து மாதாவே கொஞ்சுமம்மா
விளக்கிற் குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா
திரிவிளக்கின் மேலிருந்து தேவியரே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மா பெற்றவளே கோபாலன் தங்கையரே

---

634. முந்நூறு .... தென்றாய் – உலக மக்கள் தாம் வழிபடு தெய்வங்களை வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி வைத்து வழிபடுவர். அவ்வாறான முந்நூறு சந்திகளுள் முதற் சந்தி மாரியம்மனுக்குரியதாகக் கூறப்படுகிறது. இதனால் மாரியம்மனுக்கு முதன்மை இடம் தரப்படுகிறது; உன்னுதென்றாய் – உன்னுடையது என்றாய். எனக்குரியது என மாரியே கூறியதாகும்.

635. தனிச்சந்தி – மாரியம்மனுக்கெனத் தனி இடம் சுட்டப்படுகிறது.

636. வெளிச்சந்தி – ஊருக்கு வெளியே உள்ள கோயிலும் மாரியின் கோயிலாகக் கூறப்படுகிறது.

637. பட்டத்தழகி . . . . ராசகன்னி – மாரியம்மன் உலக மக்களை ஆட்சி செய்யக்கூடிய அரசி; அம்மக்களுக்கு இடர் வந்த காலத்து அவர்களைக் காப்பாற்றுபவள். விசயநகரப் பேரரசு ஆட்சியில் மாரியம்மன் சிறப்பாகக் கருதப்பெற்றதால் பட்டத்து அழகி எனப்படுகிறாள். மேலும் விசயநகரப் பேரரசின் படைகள் முதலில் வந்து மாரியை வழிபட்டுப் பின் போரில் வெற்றி கண்டதால் படைமுத்து ராசகன்னி எனப்படுகிறாள்.

639. திரிவிளக்கு நாயகி – திரியினால் எரியும் அகல் விளக்கு, கைவிளக்கு, குத்துவிளக்கு முதலியன. மக்கள் வாழ்க்கைக்கு ஒளி விளக்காக விளங்குபவள் எனும் சிறப்பால் ‘ திரிவிளக்கு நாயகி’ எனப்படுகிறாள். மாரியம்மன் திருமேனியோ, பீடமோ, சிலையோ இல்லாத கோயில்களிலும் வீடுகளிலும் குத்துவிளக்கு அல்லது அகல் விளக்கு ஏற்றி வழிபடுவது வழக்கம். விளக்குப் பூசை அம்மன் கோயில்களில் நடத்தப்பெறுவது. பெண்கள் கலந்து வழிபடும் இவ்வழிபாட்டில் நாயகியாகிய மாரியம்மன் திகழ்வதை இவ்வரி எடுத்துக்காட்டுகிறது.

640. மணிவிளக்கின் . . . . . . கொஞ்சுமம்மா – தீபம் ஏற்றிய ஒளி விளக்கின் மேல் மாரி இருந்து அருள் தருவதாகக் கூறுகிறார்.

மாரியம்மன் தரும் தண்டனைகள்

சிரித்தார் முகத்தையம்மா செல்லரிக்கக் கண்டிடுவாய்
பரிகாசஞ் செய்தவரைப் பல்லைப் பிடுங்கிடுவாய்
மூலைவீட்டுப் பெண்களைத்தான் முற்றத்தி லாட்டிடுவாய்
அரண்மனைப் பெண்களைத்தான் அம்பலத்தி லாட்டிடுவாய்
பொல்லாத பெண்களைத்தான் தோற்பாதங் கட்டிடுவாய்
தோற்பாதங் கட்டிடுவாய் துரந்தரியே மாதாவே

மாரியம்மன் வேடிக்கை செய்தல்

நடுவீதியிற் கொள்ளிவைத்து நானறியே னென்றிடுவாய்
கடைவீதியிற் கொள்ளிவைத்துக் கடக்கப்போய் நின்றிடுவாய்

644– சிரித்தார் .... கண்டிடுவாய் ..... பிடுங்கி – மாரியை ஏளனம்
645. பேசிச் சிரிக்கின்றவர்களின் முகத்தைக் கறையான் அரிக்கச் செய்துவிடுவாள் என்றும் அவர்கள் பற்களைப் பிடுங்குவாள் என்றும் கூறுகிறார்.

646. மூலைவீட்டுப் ...... ஆட்டிடுவாய் – தெருக்களின் இறுதி ஓரத்திலிருக்கின்ற சில குடும்பங்களிலுள்ள பெண்கள் அல்லது ஒதுக்கி வைக்கப்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த ஒழுக்கமில்லாத பெண்கள் மிகுதியாக வீண்பேச்சுப் பேசுபவர்களாக இருப்பர். அத்தகைய பெண்களைப் பேய் பிடிக்கச் செய்து, அவர்கள் தம் முற்றத்தில் கிடந்து தலைகளைச் சுழற்றிச் சுழற்றி ஆடவைப்பாள் என்கிறார். மாரியம்மன் பிடியில் அகப்பட்டோர் தலையைச் சுழற்றி ஆடுவர். கோயிலில் சென்று அம்மன் பீடத்திற்கு முன்பிருந்தும் ஆடுவர்.

647. அரண்மனைப் ..... லாட்டிடுவாய் – அரண்மனை போன்ற வீடுகளில் வசிக்கும் பெரிய இடத்துப் பெண்கள் வீண்பேச்சுப் பேசுபவர்களாக இருந்தாலும் ஒழுக்கமில்லாதிருந்தாலும் அவர்களையும் பிடித்து அம்பலத்தில் ஆடுமாறு செய்து விடுவாள் என்கிறார்.

648– பொல்லாத ..... மாதாவே – தீய எண்ணம், தீய செயல்களை
649. யுடைய பெண்களைத் தோற்பாதம் கட்டிவிடுவாள் மாரி.

650– நடுவீதியிற் ...... கடக்கப்போய் நின்றிடுவாய் – மாரியம்மன்
651. அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டுவதற்காகச் சில மாயைகள் செய்யக் கூடியவள். எனவே நடுவீதியில் கொள்ளித்தீயை வைத்து விட்டு நானறியவில்லை என்று சொல்வாள். கடைவீதியில் தீ வைத்துவிட்டு ஒன்றும் அறியாததுபோல் தள்ளிப்போய் நின்று விடுவாள். கொள்ளி என்பது வெம்மையைக் குறிக்கும்.

கடியா விஷம்போலே கடிக்கவிட்டுப் பார்த்திருப்பாய்
தீண்டா விஷம்போலே தீண்டவிட்டுப் பார்த்திருப்பாய்
பாம்புக்கன்னி நீலியம்மா பழிகாரி மாரிமுத்து

மாரி வந்தால் மனை செழிக்கும்

தாயே துரந்தரியே சர்வலோக மாதாவே 655
ஆறாத கோபமெல்லாம் ஆச்சியரே விட்டுவிடு
கடலில் மூழ்கியம்மா கடுகநீ வாருமம்மா
காவேரியில் தான்முழுகிக் காமாக்ஷி வாருமிங்கே
இந்தமனை வாருமம்மா இருந்தமனை யீடேறும்

பாவாடைராயனை அழைத்துவரக் கோருதல்

கஞ்சா வெறியன் கனவெறியன் பாவாடை 660
பாவாடைராயனைத்தான் பத்தினியே தானழையும்

652–654. கடியா . . . . . தீண்டவிட்டுப் பார்த்திருப்பாய் – உயிர்களைக் கடிக்கவிட்டுக் கடியாததுபோல் பார்த்திருப்பாள். மாரி அம்மையின் வெம்மை உடம்பில் விசம் போல் பரவுகிறது என்கிறார்.

654. பாம்புக்கன்னி . . . . . மாரிமுத்து – பாம்பின் குலத்தில் பிறந்ததால் 'பாம்புக் கன்னி' என்றும், நீலியைப் போல் பழிவாங்குவதால் 'நீலியம்மா பழிகாரி' என்றும் கூறப்படுகிறது.

655. சர்வலோகமாதா – எங்கும் நிறைந்தவள்.

656–659. ஆறாத . . . யீடேறும் – 'மக்கள் அறியாமையால் செய்த பிழைகளைப் பொறுத்தருளும். அக்கோபம் நீங்கக் கடலில், காவிரியில் முழுகி வெப்பத்தைத் தணித்து விட்டு அருள் புரிய வாரும். அப்படி வந்தால் இந்த வீடானது சிறப்புப் பெறும்' எனக் கூறுகிறார்.

660. கஞ்சா வெறியன் – கஞ்சாச் செடியின் இலை கொண்டு தாயாரிக்கப்படும் போதைப்புகையை எந்நேரமும் பிடிப்பவன்; கனவெறியன் – அவ்வாறு கஞ்சாப்புகையில் மயங்கியிருக்குமவன் கூடுதல் ஆசை உடையவனாக இருப்பான்.

661. பாவாடைராயன் – அங்காளம்மையின் காவற்சேவகன். இவன் கீழ்க்குலத்துச் சத்தி பூசகன். அங்காளம்மை சுடுகாட்டில் இருக்கையில் அவளிடஞ் சென்று உடுக்க ஆடை கேட்டு அவள் கொடுத்த பாவாடையை உடுத்துக்கொண்டு அவளிட்ட பணிசெய்து கொண்டிருந்து, தவத்தால் பூத பிசாசங்களை வென்றிருந்தவன். இன்று கிராமங்களில் பாவாடைராயனுக்குப் பீடி, கள், சாராயம் ஆகியவை வைத்து வழிபடுகின்றனர். பாவாடைராயன் ஒரு நாட்டுப்புறத் தெய்வமாகும். இத்தெய்வத்தை உடன் அழைத்துவர மாரியம்மனிடம் விண்ணப்பம் செய்கிறார்.

தாயாரும் பிள்ளையுமாய் தற்காக்க வேணுமம்மா
மாதாவும் பிள்ளையுமாய் மனதுவைத்துக் காருமம்மா
ஆத்தாளும் பிள்ளையுமாய் அன்புவைத்துக் காருமம்மா
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
காசிவள நாட்டைவிட்டுக் காரணியே வந்தமரும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியே வந்தமரும்

மாரியம்மன் வேடிக்கைகளைக் கண்டுகளித்தல்

பம்பை முழங்கிவர பறமேள மார்ப்பரிக்க
சித்துடுக்கை கொஞ்சிவர சிறுமணிக ளோலமிட
வேடிக்கை பார்த்திருந்தாள் வேப்பஞ் சீலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து

மாரி ஞானத்தில் வல்லவள்

சமய புரத்தாளே சாம்பிராணி வாசகியே –
முக்கோணத் துள்ளிருக்கும் நல்லமுத்தே மாரியரே

662– தாயாரும் பிள்ளையுமாய் . . . . . . மாதாவும் பிள்ளையுமாய்,
664. ஆத்தாளும் பிள்ளையுமாய் – தாயாரும் பிள்ளையுமாய். அங்காளம்மை அமிசமான மாரியைத் தாயாகவும் அவள் மகன் பாவாடைராயனைப் பிள்ளையாகவும் உருவகிக்கிறார்.

666. காசிவளநாடு . . . வந்தமரும்–காசி நாட்டிலுள்ள 'விசாலாட்சி' அம்மையின் அமிசமாக மாரியம்மன் கருதப்பட்டு அழைக்கப் படுகிறாள்.

667. ஊசிவளநாடு – வளநாடுகளில் ஒன்றாக இருக்கலாம். முன் உள்ள வரியில் 'காசி'என வந்துள்ளதால் இங்கு எதுகைக்காக 'ஊசி' எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம்.

666– பம்பை . . . . . சிறுமணிகளோலமிட . . . . . . மாரிமுத்து – மாரியம்மன்
671. விழாவில் மேற்கொள்ளப்படும் வழிபாட்டில் பம்பை, பறை, மேளம், சிறிய உடுக்கை ஆகிய இசைக்கருவிகளைப் பக்தர்கள் இசைப்பர். கால்களில் கட்டிய சலங்கைகளிலிருந்து மணிகள் ஒலிக்கச் சிலர் நடந்தும் ஆடிப்பாடியும் வர விழா நடக்கும். மாரி அம்மன் அவளுக்குரிய ஆசனத்தில் அமர்ந்து அவற்றை வேடிக்கை பார்ப்பதாக வருணிக்கின்றார். வேடிக்கை, கேளிக்கை என்பன விழாவைக் காண்பதைக் குறிக்கும்.

672. சாம்பிராணி வாசகி – இறை வழிபாட்டில் அகில் அல்லது சாம்பிராணிப் புகையிட்டு வழிபடுவதும் உள்ளது. இது வாசத்தை ஏற்படுத்தும்; சிறு பூச்சிகளைக் கொல்லும்.

673. முக்கோணத்துள்ளிருக்கும் மாரி – சக்தி என்ற மூன்றெழுத்து மந்திரத்தை உள்ளடக்கி வரைவது முக்கோண எந்திரம் ஆகும். சக்தியின் அமிசமாக மாரி கருதப்படுவதால் முக்கோண சக்கரத்தைப் பயன்படுத்துவர் போலும். கூடுதல் சக்திக்காக எந்திரத்தை அமைத்து வழிபடுவர்.

பஞ்சாக்ஷரப் பொருளே பார்வதியைப் பெற்றவளே
அறுகோணத் துள்ளிருக்கும் ஆதிபர மேஸ்வரியே 675
அஷ்டாச்சரப் பொருளே ஆனந்த மாரிமுத்தே
நாயகியே மாரிமுத்தே நாராணனார் தங்கையரே

உலகை இரட்சிக்கக் கூடியவள் மாரி அம்மன்

அம்பலத்தோ ரச்சகி ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே அம்மைமுத்து மாரியரே
பேருலக ரச்சகியே பெருமாளுடன் பிறப்பே 680
பெருமாளுடன் பிறந்து பேருலகை யாண்டவளே
ஆயனுடன் பிறந்து அம்மைமுத்தாய் நின்றவளே

---

674. பஞ்சாக்ஷரப் பொருள் – 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைப் பஞ்சாட்சர மந்திரம் என்பர் . இது சிவனுக்குரியது. சக்திமேல் ஏற்றிக் கூறப்படுகிறது. இம்மந்திரத்தைப் பலமுறை சொல்லும் போது பலன் விளைவதால் அதை நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டிலும், மாந்திரீக வழிபாட்டிலும், இன்னும் பலவற்றிலும் பயன்படுத்துவர்.

675. அறுகோணத் துள்ளிருக்கும் ஆதி பரமேஸ்வரியே – 'சரவணபவ' என்பது ஆறெழுத்து மந்திரம். இது முருகனுக்குரியது. இந்த ஆறு எழுத்துக்களையும் * என்ற அறுகோணத்துள் அமைத்து வழிபடுவர். இவ்வாறு எழுத்துக்களை முறைமையாகவும், மாறி மாறியும் அமைப்பது உண்டு. இம்முறை சிறுதெய்வ வழிபாட்டில் மட்டுமின்றிப் பெருந்தெய்வ வழிபாட்டிலும், வீடுகளிலும், கடைகளிலும், தகடுகளில் எழுதிப் பதித்து வைத்தும் வழிபடப்படுகிறது. முருகனுக்கு உரிய இம்மந்திரம் அவன் தாயாகிய மாரியம்மனுக்கு ஏற்றிக் கூறப்படுகிறது.

676. அஷ்டாச்சரப்பொருள் – இது 'ஓம் நாராயணாய நம' என்ற எட்டெழுத்து மந்திரம்; விஷ்ணுவுக்குரியது. இம்மந்திரங்கள் சொல்லி வழிபடுவதும் வழக்கம். இதை 'அஷ்டாச்சரம்' என்றும் கூறுவர். விஷ்ணுவுக்குரிய இந்த மந்திரம் அவர் தங்கையாகிய சக்திக்கு, மாரிக்கு ஏற்றிக் கூறப்படுகிறது.

678. அம்பலத்தோ ரச்சகி – மாரியம்மன் மக்களைக் காக்கின்றவள். ஆதிசிவன் மாரி தேவியர் – பார்வதியின் அமிசமானவள். சிவன் மனைவி சக்தி. இங்கு மாரியம்மன் சக்தியின் அவதாரமாகக் கொள்ளப்படுகிறாள்.

682. பேருலகை . . . . . . நின்றவளே – இவ்வுலக மக்களைக் காக்கின்றவள். ஆயன் எனப்படும், பெருமாளின் தங்கையாகத் தோன்றி இந்த உலகை ஆட்சி செய்பவள் மாரி; அவள் மழையாகவும் நிற்கிறாள்; அம்மை முத்தாகவும் நிற்கிறாள்.

திருக்கோணத் துள்ளிருக்கும் திரிபுர சவுந்தரியே
ஆறாதாரப் பொருளே அபிசேகப் பத்தினியே
மூலாதாரப் பொருளே முன்பிறந்த தேவதையே 685

முத்துக்களை இறக்கச் சொல்லுதல்

தாயே துரந்தரியே சர்வலோ கேஸ்வரியே
பத்திரியால்தான் தடவிப் பாரமுத்தை[த்] தானிறக்கும்
வேப்பிலையால் தான்தடவி மெல்லியரே முத்திறக்கும்
மேனியெல்லாந் தான்குளிர விளையாடி முத்திறக்கும்
இறக்கிறக்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா 690
முத்திலு முத்து முகத்திலிடு மாணிமுத்து
எங்கும் நிறைந்த எல்லார்க்கும் மாரிமுத்து

மாரியின் கையில் கிளி

பெண்ணாய்ப் பிறந்து பேருலகை யாளவந்தாய்

---

683. திருக்கோணத் துள்ளிருக்கும் – 'சக்தி' என்ற மந்திரத்தை உள்ளடக்கிய முக்கோண சக்கர எந்திரங்களில் விளங்குபவள், சக்தியின் அமிசமாகிய மாரி.

684. ஆறாதாரப் பொருளே – மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனும் ஆறும் ஆறாதாரங்கள் ஆகும். இவை ஆறுமாக நிற்பவள் மாரி.

685. மூலாதாரப்பொருள் – குதத்திற்கும் கோசத்திற்கும் நடு இடம் முக்கோணம் நாபியிதழ்க்கமலம், மாணிக்க நிறம், கணபதி, குண்டலி சக்தி, ஒங்காரம்,

686. சர்வலோகேஸ்வரி – அனைத்துலகுக்கும் - இறைவியாகக் கருதப்படுகிறாள் மாரி; முன்பிறந்த தேவதை ஆதி பராசக்தி.

687-- பத்திரி – வேப்பிலை; மெல்லியர் – மென்மையான திருமேனி
688. யுடையவள்.

689. மேனியெல்லாந் ...... முத்திறக்கும் – அம்மைக் கொப்பளங்கள் உடலில் தோன்றிவிட்டால் உடல் எரிச்சல் அடையும். அந்தக் கொப்பளங்கள் நீங்கிவிட்டால் அதுவரை எரிச்சல் அடைந்த உடல் குளிர்ச்சி பெற்று நல்ல வளர்ச்சியைப் பெறும். மாரியம்மன் விளையாடியபடியே முத்துக்களை நீக்குமாறு கூறுகிறார்.

691. முகத்திலிடு ஆணிமுத்து – முகத்தில்தான் பருமனான, உயர்தரமான அம்மை முத்துக்கள் விழும் என்பது இதிலிருந்து தெரிகிறது.

692. எங்கும். ...... மாரிமுத்து – மாரி எங்கும் நிறைந்தவள் எல்லா மக்களாலும் வழிபடக்கூடியவள்.

பேருலகை யாளவந்தாய் பெண்ணரசி மாரிமுத்து
நித்தம் பராமரிக்க நிஷ்டூரி நீ பிறந்தாய் 695
கிளியேந்தும் நாயகியே கிளிமொழியே தாயாரே
நித்திய கல்யாணி நீலி பரஞ்சோதி
அம்மணி பார்வதியே ஆணிமுத்துத் தாயாரே
லோகமெல்லாம் முத்தளக்கும் லோக பரமேஸ்வரியே

இசைக்கருவிகள் முழங்குதல்

வெற்றிக் கொடிபறக்க விருதுபம்பை தான்முழங்க 700
எக்காள மூதிவர எங்குங்கிடு கிடென்ன
பஞ்சவர்ண டால்விருது பக்கமெல்லாம் சூழ்ந்துவர
நாதசுர மேளம் நாட்டியங்க ளாடிவர
தப்பட்டை மேளம் தவில்முரசு தான்முழங்க

---

695. நித்தம் – நாள்தோறும்; நிஷ்டூரி – நிட்டூரி, கொடியவள்.

696. கிளியேந்தும் நாயகி – மாரியம்மன் தன் ஒரு கரத்தில் கிளியேந்திய அமைப்பு இன்றும் வழிபாட்டில் உள்ளது. மேலும் மதுரை மீனாட்சி அம்மை தன் கையில் கிளியேந்தியுள்ளாள். அதன் காரணமாகவே மீனாட்சியின் தோற்றத்தை மாரி பெற்றுள்ளதாகக் கூறுகிறார்; கிளி மொழியே தாயாரே – மாரியம்மன் பேச்சு கிளிப்பேச்சுப் போன்றது.

697. நித்திய கல்யாணி – எப்பொழுதும் சிவன் பார்வதி சமேதராய் இருந்து திருமணக் கோலத்தில் காட்சி தரும் சக்தியாக மாரி கூறப் படுகிறாள். பரஞ்சோதி – பரனைப் போன்று ஒளி வடிவானவள்.

698. அம்மணி – பெண்ணைக் குறிக்கும் சொல்; இங்குப் பெண் தெய்வமான மாரியைக் குறிக்கிறது; ஆணிமுத்துத் தாயார் பெரிய, சிறந்த முத்துக்களை ஆணி முத்துக்களாக உடையவள்.

699. லோகமெல்லாம். . . . . .பரமேஸ்வரியே – அகில உலகினர்க்கும் அம்மை நோய் உண்டாக்கி அதிலிருந்து காப்பாற்றும் இயல்புள்ளவள். லோக பரமேஸ்வரி – அனைத்துலகத்தையும் புரப்பவள்.

700. வெற்றிக் கொடி – மாரிக்குரிய கொடியாகச் சில இடங்களில் சிவப்புக் கொடியும், சில இடங்களில் மஞ்சள் கொடியும் கட்டுவது வழக்கமாக உள்ளது; விருது – வெற்றியை அறிவிக்கும் நிலையில் ஓசையெழுப்புதல். பம்பை – ஓர் இசைக்கருவி.

701. எக்காளம் – ஓர் இசைக்கருவி; கிடுகிடென்ன – ஒலி எழ.

702. பஞ்சவர்ணடால் – ஐந்து நிறங்கள் கொண்ட ஒரு வகை அணிகலன். அம்மனுக்கு இடும் கழுத்தணி; அட்டிகை போன்றது.

703. நாதசுரம் – ஒரு குழல் கருவி; நாக்சுரம் என்பது பெயர்; மேளம், தப்பட்டை, தவில், முரசு, இவை முழவுக் கருவிகள்; நாட்டியங்களாடிவர – மாரியம்மன் விழாவில் கரகம் ஏந்தியும், சிலம்பம் ஆடியும் பிற ஆடல்கள் செய்தும் வரும் ஊர்வலம்.

காளங்க ளூதிவர கவிவ ர்ணரெச்சரிக்க
சின்னங்க ளூதிவர சிறப்பாய்[க்] கொடி பிடிக்க
ஜண்டா சிலர்பிடிக்க தனிமுரசு தானடிக்க
கொடிகள் சிலர்பிடிக்க கொக்கரிப்பார் வீரமக்கள்

புதிய இசைக்கருவிகள் மாரியம்மன் முன்முழங்குதல்

சாமரைகள் தான்வீசிச் சந்திப்பார் வீரமக்கள்
தாரைபூரி சின்னம் ஆராபாரமாய் முழங்க
தக்கை யுடுக்கைகளும் தவிலோடு பம்பைகளும்
நன்குமடியுஞ் சுதியும் நன்றாக வூதிவர
தம்பூரா வீணை தக்கபடிதான் வாசிக்க

---

705. காளங்கள் – எக்காளங்கள், கொம்புக் கருவிகள்; கவிவர்ணர் எச்சரிக்க – புலவர்கள் விருது கூறிப் 'பராக்' கூறிப் பாட்டு முழங்கிவர.

706. சின்னங்கள் – மேனோக்கி ஒலிக்கும் கொம்புக் கருவிகள்

707. ஜண்டா – கொடி போன்றது; இது அம்மன் பல்லக்கில் ஊர்வலம் வரும் போது அம்மனுக்கு முன்பாகப் பிடித்துச் செல்லப்படும்; தனிமுரசு – அம்மனுக்குரிய உருமி மேளம்.

708. கொக்கரிப்பார் வீரமக்கள் – வீர இளைஞர்கள் வெற்றி முழக்கத்துடன் ஆரவாரத்தோடு அம்மன் ஊர்வலத்தை நடத்திச் செல்வர்.

709. சாமரைகள் – கவரி விசிறிகள். இது மயிலிறகாலும் செய்யப் பெற்றிருக்கும். தெய்வ ஊர்வலத்தின் போது தெய்வங்களின் இருபக்கங்களிலும் பக்தர்கள் நின்று அந்த விசிறியை வீசி வருவர். இது மாரிக்கும் பொருந்தும். அரசர்களுக்கும் சாமரை வீசுவதுண்டு; சந்திப்பார் – எதிர் கொள்ளுதல். மாரியை எதிர்கொண்டு பக்தர்கள் வரவேற்றல்.

710. தாரைபூரி – ஓர் இசை; சின்னம் – கொம்புக் கருவிகள்; ஆராபாரம் – ஆரவாரம், முழக்கம்.

711. தக்கை . . . . . . பம்பைகளும் – தக்கை, உடுக்கை, தவில், பம்பை ஆகியன இசைக்கருவிகள்.

712. நன்கு மடியுஞ் சுதியும் – நன்கு மடியக்கூடிய, இனிய இசைதரக்கூடிய ஆர்மோனிய இசையும் ஒலித்து வர; சுதி – ஆர்மோனியப் பெட்டியிலிருந்து வருவது;

713. தம்பூரா – பக்கச் சுருதிக்குரிய ஒரு நரம்புக் கருவி; வீணை இருபத்திரண்டு வகையுள்ள யாழ்போன்ற நரம்புக் கருவிவகை. நரம்பை நயமுணர்ந்து சுருதி சேர்த்து இசைக்க உதவுவது.

பம்பை யடித்துப் பறமேளந் தானதிர
கெண்செட்டு வாத்தியமும் கிளாரிநெட்டு வாத்தியமும்
கோடிவாத்தியமும் புதிதாய்[க்] கொண்டுவந்தா ருன்மக்கள்

மாரியை இசைக்கருவிகளின் இசைக்கு இரங்குமாறு கூறுதல்

இத்தனை வாத்தியங்கள் இசைக்கிறார் பாருமம்மா
பார்த்துக் குளிருமம்மா பாங்கான வுன்மனது
கண்டு குளிருமம்மா கல்லான வுன்மனது
எப்படி யாகிலுந்தா னேழைகளு மீடேற
கண்காரும் பாருமம்மா காரண சவுந்தரியே
இந்திரனுக்கொப்ப யிலங்குமக மாரியரே
கும்பத் தழகியம்மா கொலுமுத்து ராசகன்னி
சகலகுற்றம் சகலபிழை தாயாரே நீபொறுப்பாய்
வணங்குகின்ற மக்களுக்கு வாழ்வுமிக வளிப்பாய்
ஓங்கார ரூபியென்று உன்னையே தோத்தரிக்க

---

715. கெண்செட்டு. . . . . . வாத்தியம் – பலவகையான வாத்தியங்கள்; கிளாரிநெட்டு வாத்தியம் – ஓர் இசைக்கருவி.

716. கோடிவாத்தியம் – புத்தம் புதிய இசைக்கருவிகள்; உன்மக்கள் மாரியை எதிர்கொண்டு வரவேற்கும் பக்தர்கள்.
இப்பகுதியில் அண்மைக் காலத்தில் நடைபெறும் ஊர்வலங்களில் வாசிக்கப்பெறும் புதிய புதிய இசைக்கருவிகளை ஆசிரியர் தொகுத்துக் கூறியிருப்பது சிறப்பு ஆகும்.

718. பாங்கானவுன்மனது – அழகான உன்மனம்.

719. கல்லான உன்மனது – கல் மனம் இசைக்கு இரங்கக்கோருதல் தெய்வங்கள் இசைக்கு வசைப்படும். ஆதலால் இவ்வாறு முழக்கு கின்றனர்.

721. கண்காரும் – கண் காட்டும்.

722. இந்திரனுக்கு . . . . மாரியரே – இந்திரன் தேவ லோகத்திற்குத் தலைவனாக விளங்குவதுபோல் மாரியம்மன் மேன்மையான பூலோக மக்களுக்குத் தலைவியாக விளங்குகிறாள்.

723. கும்பத் தழகியம்மா – கும்பம் – கலசம். அழகிய கலசத்தின் மேல் அழகாக இருப்பவள்.

724. சகலகுற்றம் சகலபிழை – மக்கள் செய்யும் எல்லாப் பிழைகளையும் பொறுத்துக்கொள்ளுமாறு கோருகிறார்.

726. ஓங்கார ரூபி – ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் வடிவாய் இருப்பவள் மாரி; தோத்தரிக்க – வணங்க துதிக்க.

அண்டபுவனமும் மாரியம்மனைத் தொழுதல்

படவேட்டில் வீற்றிருக்கும் பரஞ்சோதி தாயாரே
ஆர்அறிவா ருன்மகிமை ஆணிமுத்துத் தாயாரே
அண்ட புவனமெல்லாம் அம்மாவுனைத் தொழுவார்
தேசங்க ளெங்குந் தேவியைத் தோத்தரிப்பார்
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தசத்தி

அம்மன் தன் அருள் மேனியுடன் வந்து காக்கக் கோருதல்

எங்கும் நிறைந்தவளே எல்லார்க்குந் தாயாரே
சூலமும் கபாலமுந் துய்ய தமாரமும்
அஞ்சலென்ற ஹஸ்தமொடு அடியார்தமைக் காக்க
வேப்பிலையுங் கையில் விபூதியெங்குந் தூளிதமும்

---

727. படவேடு – திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தாலுகாவில் உள்ளது படவேடு கிராமம். இவ்வூர் ஆரணிக்கும் வேலூருக்கும் இடையில் மலைகளின் நடுவே அமைந்துள்ளது. கி.பி. 13 மற்றும் 14 ஆம் நூற்றாண்டுகளில், முதலில் தமிழ் மன்னர்களின் ஆட்சியில் கீழும், பின்னர் விஜயநகர அரசின் கீழும் இப்பகுதியில் ஆட்சி செய்தவர்கள் சம்புவராயர்கள். இவர்களது ஆட்சிக் காலத்தில் கலைகளுக்கும் மதத்திற்கும் சிறந்த சேவை செய்துள்ளதைப் படவேடு கிராமத்தின் மூலம் அறிய முடிகிறது. மிகவும் பழமை வாய்ந்த ரேணுகாம்பாள் கோயில் சம்புவராயர்கள் காலத்தில் மிகவும் மேம்பாடு அடைந்திருந்தது. இங்குள்ள ரேணுகாம்பாளையே மாரியம்மனாகக் குறிப்பிடுகின்றார். பார்க்க வரி: 228.

728. பரஞ்சோதி – ரேணுகா தேவியான மாரி.

729. அண்டம்–வானம்; புவனம்–பூமி. "அண்டங்களெங்குமம்மாவுனைத் தொழுவார்" என மாரியம்மன் வர்ணிப்பில் உள்ளது.

730. தேசங்கள் – நாடுகள்.

731. எள்ளுக்குளெண்ணெய் போல் . . . . . சத்தி – இங்கு 'எள்' உலகாகவும் 'எண்ணெய்' மாரியாகவும் உருவகப்படுத்தப் பெற்றுள்ளன. எள்ளுக்குள் எல்லா இடத்திலும் எண்ணெய் நிறைந்திருப்பது போல் உலகின் எல்லா இடங்களிலும் மாரியம்மன் நிறைவாக இருப்பாள்.

733–734. சூலமும் கபாலமும் . . . . தமாரமும் . . . . காக்க – அம்மன் கையிலுள்ள சூலமும்; கபாலமும், தமரகமும்(டமாரம்) என இவற்றைக் கொண்டு அடியார்களைக் காக்குமாறு கூறுகிறார்; அஸ்தம் – அபயமுத்திரை. இது வலது கையை மேலே தூக்கி அபயமளித்தலைக் குறிக்கிறது.

735. துளிதம் – திருநீறு.

மாரி அம்மனுக்கு முன்னால் மந்திரம் நிற்காது

கருணா கடாச்சியம்வைத்துக் காக்கும்அம்மாவுந்தன்
சரணார விந்தமதைத் தந்தருளும் மாரிமுத்தே
உன்பேர் நினைத்தால் பில்லிபிசாசு பறந்து ஓடுமம்மா
சூனியமும் வைப்பும் சூழன்றலைந் தோடிவிடும்
பாதாள வஞ்சனமும் பறந்துவிடும் உன்பேர்நினைத்தால்
சத்தகன்னி மாதாவே சங்கரியே மனோன்மணியே
கரகத்தில் வீற்றிருக்கும் கன்னனூர் மாரிமுத்தே

---

736. கருணா கடாச்சியும் – அருள்நோக்கு; கருணையோடு கூடிய கடைக்கண் பார்வை; கடாச்சியம் – கடாட்சம்.

737. சரணாரவிந்தம் . . . . மாரிமுத்து – உன்னை – உன் பாதங்களை அடைவதற்கான பேற்றைத் தந்தருள்வாய் மாரி. 'சரணாவிந்தம் என மாரியம்மன் வர்ணிப்பு எனும் ஏடு கூறுகின்றது.

738. பில்லி – சூனியக்காரர் ஏவும் துர்தேவதையால் ஏற்படும் வினை. பில்லி சூனியம் வைத்தல் மந்திர முறைகளிலொன்று. இது பிடிக்கப் பெற்றவர் வாழ்க்கையில் உழல்வர். இது செய்வினை போன்றது. மாரி இதை நீக்குகிறாள். பிசாசு – பேய் பிடித்தல்.

739. சூனியம் – பில்லி சூனியம்; வைப்பு – செய்வினை. இது அம்மன் முன் சுழன்று அலைந்து ஓடிவிடும். மாரி அம்மன் முன் இவை அகன்றுவிடும்.

740. பாதாள வஞ்சனம் – ஒரு வகை மந்திரம். மந்திரத்தால் பூமிக்குள் தகடு வைத்தால் போன்றது. பூமிக்கடியில் வைத்த தகட்டை எடுக்கவும் மந்திரம் உண்டு. மாரி அதை எடுப்பாள் என்கிறார்.

741. சத்தகன்னி . . . மனோன்மணியே – சத்தகன்னி, மனோன்மணி ஆகிய விடலைத் தெய்வங்கள் நாட்டுப்புறத் தெய்வங்களாகும். இவற்றில் ஒரு கன்னியைப் பார்வதியின் அமிசமான மாரியம்மனாக உருவகிக்கிறார்.

742. உன்பேர் . . . மனோன்மணியே – நாட்டுப்புறங்களில் மருத்துவத்தோடு தொடர்புடைய செயல்களுக்கு உடலியல், உளவியல் நோய்களுக்கு மாரியம்மன் அருள்புரிவாள் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. நாட்டுப்புறங்களில் போட்டி, பொறாமை, பகை போன்றவற்றால் ஒருவர் மற்றவருக்குக் கெடுதல் உண்டாக்க மந்திரவாதிகளை அழைத்துச் செய்வினை, பில்லி, சூனியம் வைத்தல், தகடு வைத்தல், துர்தேவதைகளை ஏவி விடுதல் போன்றவற்றைச் செய்வர். அவற்றால் வேதனை அடைவோர் வேறு மந்திரவாதிகளை வைத்து அவற்றை நீக்குவர். நீக்க முடியாத நிலையும் உண்டு. மாரியம்மன் கோயில்களில் கூட மந்திரவாதிகள் சாமிக்கே தகடு, செய்வினை, கண்கட்டல், வாய்கட்டல், போன்றவற்றை வைப்பர். அவற்றையும் தம் அடியார்கள் வீட்டிலுள்ளவற்றையும் மாரி நீக்கிவிடுவாள். சாமி ஆடுவோர் அருள் வந்து ஆடும்போது தகடு வைத்திருந்தாலோ, செய்வினை வைத்திருந்தாலோ அவற்றிற்குக் கட்டுண்டு பின் தகட்டினை எடுத்து மந்திரக் கட்டுகளிலிருந்து மாரியை நீக்குவர்.

பிழை பொறுத்துக் காக்கச் சொல்லுதல்

அடியார்தமைக் காப்பா யந்தரி நிரந்தரியே
அறியாதார் செய்தபிழை அம்மை மனம்பொறுப்பாய்
தெரியாதார் செய்தபிழை தேவிமனம் பொறுப்பாய் 745
கோவி லருமை கொண்டாடும் பாலனம்மா
சன்னதியில் பிள்ளை தாசனம்மா உன்னடிமை
உன்பாத மல்லாம லுத்ததுணைவேறறியேன்
சரணார விந்தனாள் தஞ்சமென்று நம்பிநின்றேன்
வருந்துறே னென்பங்கில் மாதாவே காத்திருப்பாய் 750
கொண்டாடும் பிள்ளைபங்கில் கொழுந்தளிராய்க் காத்திருப்பாய்

மங்கள வாழ்த்து

வாழி மிக்வாழி வானோர்கள் தான்வாழி
ஆனைமுக னாறுமுக னார்தான் வாழி

---

743. அடியார்–மாரியம்மன் தொண்டர்; அந்தரி–வானத்தில் வீற்றிருக்கும் பார்வதி என்பது பொருள். இங்குப் பார்வதியின் அமிசமாகிய மாரியம்மனுக்குக் கூறப்படுகிறது; நிரந்தரி – என்றும் அழியாமல் நிலையாக இருக்கக்கூடியவள் மாரி என்பது சுட்டப்படுகிறது.

744. அறியாதார் – அறியாதவர்; பாமரர்; அம்மா – மாரியம்மன்; மனம் பொறுப்பாய் – பக்தர்கள் செய்யும் தவறுகளை மனத்தில் கொள்ளாது பொறுத்துக் கொள்வாய்.

745. தெரியாதார்–தெரியாதவர். அறியாமை நிரம்பிய மாரியம்மன் பக்தர்கள்.

746. அருமை – சிறப்பு; பாலன் – இப்பாடலைப் பாடும் பக்தன் எனக் கொள்ளலாம்.

747. சன்னதியில் பிள்ளை – கோயில் பார்வையில் உள்ள பிள்ளை; தாசன் – அடிமை; தொண்டன் தாசனம்மா உன்னடிமை – மாரியம்மனுக்குத் தொண்டனாக ஊழியம் செய்யக்கூடியவன்.

748. உத்ததுணை – உற்றதுணை.

749. தஞ்சம் – அடைக்கலம்.

750. வருந்துறேன் – வருந்துகிறேன்; என் பங்கில் – என் பக்கத்தில்; என்னிடத்தில்.

751. கொண்டாடும் . . . . . . கொழுந்தளிராய்க் காத்திருப்பாய் – உன் பெருமைகளைக் கொண்டாடி மகிழும்; பிள்ளையினை – பக்தனை; செழித்த பயிர் போன்று காப்பாற்றுக.

752. வானோர்கள் – அமரர்கள்.

753. ஆனைமுகன் – வினாயகன்; ஆறுமுகன் – சுப்பிரமணியக்கடவுள்.

முப்பத்து முக்கோடி தேவர்மிக வாழி
நாற்பத் தெண்ணாயிரம் நல்முனிவர் தான்வாழி
இந்திராணி தேவேந்திர னிருபேர் மிகவாழி
சந்திரர்கள் சூரியர்கள் வானவர்கள் தான்வாழி
அரியயனும் லக்ஷ்மியு மாதி சரஸ்பதியும் வாழி
பரமசிவன் பார்வதியும் பாரிலுள்ளோர் தான்வாழி
காத்தமுத்து வென்னுங் கருப்பன் மிகவாழி
மண்டலத்தி லாளும் மன்னவர்கள் தான்வாழி
நாடுகள் ராச்சியமும் நல்லோர் மிகவாழி
வித்தை கற்றநல்லோர் வித்துவான்கள் மிகவாழி
அறியாதான் சொன்ன ஆரிமுத்து மாரிகதை

---

754. முப்பத்து முக்கோடி தேவர் – ஆதித்யர்(12), உருத்திரர் (11), வசுக்கள் (8), அசுவ தேவர் (2), திக்குபாலகர் (8) ஆகிய இவர்கள் அந்தந்தத் தொழில்களைச் செய்ய, கடவுளால் சிருட்டிக்கப்பட்டவர். இவர்க ளில் திக்குபாலகர் நீங்க முப்பத்து மூவர்ஆவர்; மீதியுள்ளோர் தேவர்கள் என்பர்.

755. நாற்பத் தெண்ணாயிரம் நல்முனிவர்– தவம் செய்யக் கூடிய முனிவர்கள் நாற்பத்தெட்டாயிரம் பேர் எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

756. இந்திராணி – பாற்கடலிற் பிறந்து. இந்திரனை மணந்தவள்; தேவேந்திரன் – அமரர் தலைவன், இந்திரன்.

757. சந்திரர்கள். சூரியர்கள்–நிலவு, சூரியன் ஆகிய ஒளிதரும் கோள்கள்.

758. அரி – திருமாலின் ஓர் அவதாரம். நரசிங்க அவதாரம் எடுத்ததால் இப்பெயர் தோன்றியது என்பர். அயன் – பிரமா; லக்ஷ்மி – திருமாலின் மனைவி; செந்தாமரையில் வீற்றிருக்கும் செல்வத்திற்குரிய தெய்வம்; சரஸ்வதி – கலைமகள்.

759. பரமசிவன் – முழுமுதற்கடவுள்; பார்பதி – பார்வதி தேவியார்; பாரிலுள்ளோர் – உலக மக்கள். இப்பகுதியில் கடவுளார்க்கும் வானோர்க்கும் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது.

760. காத்தமுத்து வென்னும் கருப்பன்– காத்தமுத்து என வழங்கப்பெறும் கருப்பன் இப்பாடலாசிரியரின் குலதெய்வமாக இருக்கலாம்; அல்லது குருவாக இருக்கலாம்.

761. மண்டலம் – உலகம்; மன்னவர்கள் – அரசர்கள். இப்பாடலாசிரியரைப் புரந்துவரும் செல்வந்தர்கள் அல்லது வசிக்கும் நாடாளும் மன்னர் குலம் எனலாம்.

762. நாடுகள் ராச்சியம் – பாடலாசிரியர் நாடும் ஊரும்; நல்லோர் – உதவும் சிந்தையுள்ளோர்.

763. வித்தை கற்ற நல்லோர் வித்துவான்கள் – கல்வி வல்லவர் அல்லது குருமார்கள்; பாட்டாளிகள்; புலவர்கள்; வில்லிசையில் உதவுகின்ற நண்பர்கள்; பிற வில்லிசைக் குழுவினர்.

764. அறியாதான் – அவை அடக்கம். ஆசிரியர் மற்றவர் முன்னிலையில் தன்னைத் தாழ்த்துதல்; ஆரிமுத்து – முத்து விதைக்கும் பார்வதியின் அமிசமாகிய மாரியம்மன் (ஆரி – பார்வதி); மாரிகதை – இதுவரை கேட்ட மாரியம்மன் கதை.

பெருமையுடன் கேட்கும் பெரியோர் மிகவாழி
மாரிமுத்து தன்கதையை மனமகிழ்ந்து கேட்டோரும்
பாருலகி லிக்கதையைப் படித்தோர் மிகவாழி
பிள்ளை பெறுவார் பெருமாள் பதம் பெறுவார்
இந்திரனைப் போலே இயலுடனே வாழ்ந்திருப்பார்
சந்திரனைப் போலே சதிராக வாழ்ந்திருப்பார்
சரணம் சரணமம்மா தையலிளம் பிறையே
சரணம் சரணமம்மா தாயே சரணமம்மா
எல்லாத் தெய்வங்களுக்கும் ஈஸ்வரியே யுன்சரணம்
காற்கிறேன் மகனேயென்று கட்டழகி கண்பாரும்
எங்கெங்குப் போனாலும் எத்தூரம் போனாலும்
அண்டையிலே நின்று அருகிருந்து காரடிதான்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல் அன்னைசுத்தம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்

மாரியம்மன் கதை முற்றும் முகிந்தது

765. பெருமையுடன் கேட்கும் பெரியோர் – மாரியம்மன் கதையை இதுவரை கேட்ட பெரியோர் அல்லது அவையோர்.

766. மாரிமுத்து தன்கதையை – முத்து (அம்மை முத்து) விலக்கித்து எடுக்கும் மாரியம்மன் கதையை.

767. பாருலகிலிக்கதையை – பார் உலகு – ஒருபொருள் பலமொழி; படித்தோர் – வில்லிசையில் பாடிய வில்லிசைக் குழுவினர்.

768. பிள்ளை பெறுவார்– தாய்மார்கள்; குடும்பத்தார்கள்; பெருமான் பதம் பெறுவார் – வைகுந்தப்பதவி பெறுவார், நற்கதி பெறுவார்.

769. இயலுடன் – இசைவுடன், பெருமையுடன்.

770. சதிராக வாழ்ந்திருப்பார் – தலைவராக வாழ்ந்திருப்பார்.

771. சரணம் – அடைக்கலம்; தையலிளம் பிறை – இளம் பிறை நிலவு, முழுவதும் வளராத நிலையிலுள்ள இளநிலவு இளம் பெண்ணுக்கு ஒப்புமையாகக் கூறப்படுகிறது.

774. காற்கிறேன் – காக்கிறேன்.

775. எங்கெங்கு, . . . எத்தூரம் – போகிற இடமெல்லாம், எவ்வளவு தூரம், வில்லிசை நிகழ்ச்சிக்குப் பல ஊர்களுக்குச் செல்வது வழக்கம். அங்கெல்லாம் வந்து காக்குமாறு கூறுகிறார்.

776. அண்டை – அருகில்; காரடி – காப்பாற்றுவாய்

777. ஆல் – ஆலமரம்; ஆல்போல் தழைத்து – ஆல மரமும் விழுதும் போல் பெற்றோரும் பிள்ளைகளும் தழைத்து, வளர்ந்து, அறுகு போல் வேர் ஓடி அறுகம்புல்லின் வேர்கள் பரந்து வளரும். அவை போல் வேர்விட்டு வளர்க.

778. மூங்கில்போல் . . . . . .வாழந்திருப்பீர் – மூங்கில் உயர்ந்து கூட்டமாக வளர்வது போல் மாரியம்மன் சிந்தனையுடைய உறவினர்கள் அந்த உறவுடன் தொடர்ந்து சேர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கூறிப் பாடலாசிரியர் நூலை நிறைவு செய்கிறார். (சுத்தம் – சுற்றம்); முசியாமல் – பிரியாது.

சொல்லகராதி

சொல்	வரி எண்
அ	
அக்கினி	14
அகில்	102
அங்கிக்கண்	466, 558
அசதி	489
அஞ்சல்	735
அஞ்சுதலை நாகம்	510
அடிமை	288, 388
அடுமை	284
அடை	42, 44
அண்டம்	572
அண்டாத பேய்கள்	380
அண்டி	158
அண்டையிலே	677
அண்ணா	135
அண்ணாவி	138
அணி	272
அத்தமகள்	185
அதிகாரம்	57, 70
அதிர	715
அந்தரம்	234
அந்திசந்தி பூசை	489
அந்திப் பொழுது	163
அபிஷேகம்	689
அம்பலம்	647, 678
அம்மணி	698
அம்மா	136, 137
அம்மை	31, 44, 58, 172
அய்ந்து	44
அயன்	759
அயோத்தி நகர் பட்டணம்	201
அரக்கர்	36

சொல்	வரி எண்
அரண்மனை	36
அரவம்	287, 315, 347
அரன்	516
அரி	201
அருகு	678
அருணாசலம்	393, 598
அரை நாழி	603
அலகு	532
அலங்காரி	760
அலரி	213, 443
அலுக்குதடி	163.
அவஸ்தை	482
அழகு	46, 516
அழுத்திவிடு	564
அறியாத மானிடர்	235
அறுகோணம்	675
அன்னங்கள்	42
அன்னம்	484
அன்னிதம்	476
அன்னை சுத்தம்	679.
அனல்	401
அஷ்டாச்சரம்	676
அஸ்தம்	735
ஆ	
ஆச்சி	240, 250, 555
ஆசாரம்	319
ஆட்டி	236
ஆட்டொலி	128
ஆடி	121, 122
ஆடை	377
ஆண்டவள்	247, 248, 408

ஆணவம் 380
ஆணி 535, 536
ஆணிமுத்து 505, 506
ஆத்தா 287, 343
ஆதி 95
ஆதிசரஸ்வதி 759
ஆதிசிவன் 193
ஆதிபரமேஸ்வரி 333
ஆபரணம் 440, 517
ஆம்பிளை 185
ஆயன் 194, 682
ஆயி 361
ஆயிரங்கண் 502
ஆயிரம் 91, 122, 192
ஆர்ப்பரித்தல் 668
ஆரணங்கு 361
ஆரணம் 370
ஆரணி 239
ஆரிமுத்து 765
ஆல் 678
ஆலித்தல் 342, 343
ஆளடுமை 172
ஆற்றங்கரை 239, 240
ஆற்றுமணல் 598
ஆறாதாரம் 684
ஆறு 99, 554
ஆறுமுகனார் 754
ஆனந்தம் 676
ஆனை 95
ஆனைமுகன் 754
ஆஸ்தானம் 194, 393

இ

இசைந்து 579
இடம் 12
இடிநோவு 616
இடுப்பு 26
இடுப்புக் குடைச்சல் 619
இடும்பர் 582
இடும்பு 63, 75, 145
இதழ் 205
இந்திரபுரம் 205
இந்திரன் 219, 261
இந்திராணி 10
இமயகிரி 723
இரக்கம் 486
இரட்சகி 658
இரட்டை 272
இராசாக்கள் 381, 383, 385
இருதயம் 296
இருநூறு காதம் 601
இரும்பு 723
இலை 28, 29
இளந்திட்டு 551
இளம்பிறை 672

ஈ

ஈச்சங்கூடை 311
ஈசன் 51, 66
ஈசான மூலை 603
ஈட்டி 266
ஈட்டிக்காரர் 159
ஈட்டுக்கீடு 145
ஈமத்துப் பேய் 141
ஈரேழு 29
ஈஸ்பரனார் 126
ஈஸ்வரி 299, 362

உ

உகந்தரி 356
உச்சி 232
உடுக்கை 203
உத்தண்ட மாரி 446
உத்த துணை 332
உத்தமி 310
உத்திராட்ச பூமி 203

உதடு 496
உதாசினம் 496
உதிரபலி 227, 556, 567
உதிராது 29
உமை 5, 193
உயரச்செடிலசைய 232
உயிர் 127
உரி 422
உலகம் 56, 140, 242, 308, 334
உலையாது 24
உற்றதுணை 356
உறக்கம் 157
உறுதுணை 357
உவை 15

ஊ

ஊஞ்சல் 109
ஊட்டம் 485
ஊத்துக்காடு 227, 567
ஊர் 15, 127, 138, 271
ஊழி 23

எ

எக்கால தேவி 195, 246, 247, 276, 277, 396
எக்காளம் 701
எச்சல் 551
எட்டு 19
எண்ணம் 489
எண்ணெய் 732
எத்தூரம் 676
எமன் 275, 395
எரிச்சல் 614
எருமைக்கிடா 171, 275, 276
எள் 295, 732
எறப்பு 158

ஏ

ஏந்திழைமார் 179
ஏப்பம் 174
ஏழு 210
ஏழுகடல் 78
ஏழை 132, 292, 364, 527
ஏற்றவர் 246

ஐ

ஐந்து 91, 209
ஐந்நூறு 632

ஒ

ஒட்டாரம் 490
ஒண்டி 158
ஒப்பு 723
ஒரு கோடி 551
ஒலி 128
ஒளி விளக்கு 534
ஒற்றை 271

ஓ

ஓங்காரரூபி 727
ஓங்காரி 490
ஓசை 123, 125
ஓமகுண்டம் 256
ஓலக்கால் மண்டபம் 11

க

கங்கை 594
கங்காளி 178
கச்சிப்பதியாள் 500
கஞ்சகிரி 205
கஞ்சா வெறியன் 560
கட்டழகி 279, 300, 301, 302, 303, 342
கட்டியம் 100
கடல் 23, 101, 653

கடன் 71, 338
கடுக்கன் 184
கடுகளவு நேரம் 425
கடும்பாடியெல்லை 226, 300, 301
கடைக்கண் 426
கடைவீதி 651
கண் 504
கண்ணார் 137
கண்ணுடையாள் 213
கணங்கள் 13
கணபதி 13
கணுக்கால் 352
கத்தி 265
கதம்பப் பொடி 608
கதலி 33
கதை 767, 768
கப்பாறை 40
கபாலி 225
கபாலியம்மா 387
கம்பை நதி 600
கயம் 95
கயா 82
கயிலாயமலை 118
கயிறு 284
கர்த்தன் 399
கர்நாடு 581
கரகத்தழகி 302
கரகம் 198, 208, 209, 210, 211, 303
கருணாகடாச்சியம் 737
கருத்து 205
கருந்தலைநாகம் 512
கருப்பண்ணசுவாமி 326
கருப்பண்ணன் 406
கருப்பன் 761
கல் 165, 169, 181, 295
கல்வி 7
கலக்கமிடும் 379
கலகம் 77
கலி 455
கலியுகம் 493, 494
கவி 5
கவிவர்ணர் 705
கவுண்டைகள் 712
கழு 407, 409
கழுத்து 155, 346
கழுத்து இருமல் 621
கள்ளப் பேய்கள் 71
கள்ளர் 158
களஞ்சியம் 89
களிச்சல் 83
கற்பகம் 26
கன்னபுர எல்லை 225
கன்னபுரத்தாள் 196, 224
கன்னபுரம் 220, 221
கன்னி 77
கன்னிகள் 553
கன்னிமார் 80
கன்னியாகுமரி 278
கன்னனூர்மாரி 7, 20, 33, 87, 98, 109, 114, 146, 178
கன்னனூர் மேடை 198
கனகசபை 256, 257
கனகவல்லி 473
கனம் 455
கனவெறியன் 560
கனி 32

கா

காகம் 83, 179
காச்சல் 77, 278, 279
காசி 153
காஞ்சிபுரி 572
காட்டுப்பறவை 32
காடு 153
காணம் 167

காத்தமுத்து 761
காத்தவராயன் 322
காத்தான் 404
காதவழி 37
காது 110
காம்பு 32
காமாச்சி 352, 500
காரடி 339, 340
காரண சவுந்தரி 196, 224, 256, 257, 338
காரணி 225
காருமம்மா 294
காரும் 341
கால் 339
காலம் 28, 136
காவல் 226
காவு 35, 241, 274, 275
காவேரி 658
காளி 137
காளை 133

கி

கிந்தி 164
கிரீடமுடி 383
கிளாரிநெட்டு 716
கிளிப்பிள்ளை 45
கிளிமொழி 485

கீ

கீர்த்தி 383

கு

குச்சி 112
குடமல்லி 543, 544
குடி 62
குடிகள் 67
குடிகொண்டமாரி 230
குடுக்கல் 183
குடை 521
குடைச்சல் 616
குண்டலம் 110
குத்தல் 616
குதிரை 106
குப்பை 8
கும்பத்தழகி 304
கும்பம் 305, 443
கும்மி 8
குமரகுருபன் 321
குமாரர் 207
குமரிதேசம் 280
குரல் 183
குரவை 90, 93, 106
குரு 74
குருடன் 442
குருதேசிகர் 235
குருநாதர் 6, 17
குரும்பல் 72
குரும்பு 71
குருவி 45
குலுக்காடுதல் 215
குவலயம் 74
குழந்தை 281, 292, 293
குழல் 110
குழலாள் 190
குழி 155
குழை 22
குற்றம் 725
குறக்கூடை 313
குறவர் 543, 544
குறி 18, 132
குறிப்பு 131

கூ

கூடை 99
கூந்தல் 24, 160

கெ

கெருடன் 130, 134

கே

கேடு 69
கேதார பூமி 149
கே(ள்)க்கலையோ 281. 282. 283
கேளிக்கை 481, 671

கை

கை 77, 119
கைபெருமன் 263, 269, 270
கையிலாசலோகம் 574
கையிலமலை 87
கைலாயமலை 11

கொ

கொக்கு 611
கொங்குதேசம் 106
கொங்கை 110, 190
கொஞ்சும் 303, 305
கொட்டாவி 150
கொடி 706
கொண்டை 112
கொப்பு 110
கொம்பனை 207, 313, 373
கொம்பு 93
கொல்லிமலை 321
கொலு 371, 372, 443
கொவ்வைக்கனி 113
கொழுந்தளிர் 752
கொள்ளி 162
கொள்ளிக்கண் 467
கொள்ளை 172
கொன்றைமாமலர் 112
கொன்றையணி 1

கோ

கோட்டிகள் 144
கோட்டை27, 117, 150, 151, 601
கோட்டைக்காரன் 160
கோடி 21, 188
கோடிப்பொண்கள் 93
கோப்பு 177
கோபம் 142, 656
கோபாலன் 304, 526
கோமேதகம் 611
கோயில் 284, 288, 304
கோல் 442
கோலியனூர் எல்லை 230
கோவில் 15, 64, 74, 116, 144, 281
கோஷ்டி 170

ச

சக்தி 370, 388
சகலகுற்றம் 725
சகலபிழை 725
சகோதரி 194
சங்கரி 195, 216, 251, 289
சங்கலி 109
சங்கிலிக்கருப்பன் 327
சங்கு 92
சட்டை 582
சட்டை பண்ணுதல் 461
சடுதி 327
சடை 41, 43
சண்முகசிகாமணி 3
சத்தகன்னி 450, 742
சத்தங்கள் 106
சத்தி 241, 372
சதிர் 671
சந்தடி 314, 320
சந்தனமலர் 35

சந்தனமாரி 61, 139
சந்தானம் 207
சந்தி 635
சந்தித்தெரு 163
சந்திரமண்டலம் 14
சந்திரவட்டக்குடை 131
சந்திரர்கள் 758
சந்திரன் 20
சந்நிதி 286, 289
சப்பரம் 88, 109
சமையபுர எல்லை 223
சமையபுரம் 220
சமையபுரத்தாள் 222, 672
சர்வயோகம் 655
சரணம் 672, 673
சரணாரவிந்தம் 738
சரவணப் பொய்கை 121
சரஸ்வதி 5
சனி 84

சா

சாட்சி 115
சாட்டைக்காரர் 159
சாம்பிராணி வாசகி 222, 672
சாமபொலி 138
சாமரைகள் 709
சாம வேதம் 121
சாவு 151
சிங்காதனக்காரர் 104
சித்தம் 90
சித்தாந்தம் 392
சித்துடுக்கை 669
சிரசு 344
சிவனார் 12
சிவன் 52, 137, 392
சிற்றடி 438
சிறுபிள்ளை 55
சிறுமணிகள் 669
சின்னங்கள் 706, 710
சின்னான் 405
சினம் 62

சீ

சீதசுரம 618
சீலம் 172

சு

சுடலை 260
சுண்ணாம்பு 8
சுந்தரம் 4
சுந்தரி 450
சுதி 713
சுவை 167

சூ

சூரியமண்டலம் 41
சூரியர்கள் 758
சுரியன் 20
சூலம் 38, 172, 200
சூனியம் 740

செ

செக்கச்சிவந்தவள் 359
செங்கண்ணன் 360
செங்கிடா 166
செடில் 231, 271, 272
செடிலசைதல் 231, 234
செண்டு 45
செந்தில் 3
செந்தாமரை 17, 49
செந்நாகம் 521
செல்லரித்தல் 644
செல்வன் 34
செவி 47, 58

சே

சேகரி 242, 367
சேடன்கயம் 146
சேதி 337
சேராடல் 306, 307
சேலை 111
சேவகர் 328
சேவல்(க்)காரர் 40
சேவித்தல் 191
சேற்றுமணல் 599
சேனை 96, 150
சேஷன் 514, 521

சொ

சொரூபம் 400

சோ

சோலி 154
சோறு 161

த

தக்கை 704, 711
தங்கச்சி 136
தங்கம் 39
தங்கை 197, 258, 259
தஞ்சம் 390, 750
தட்டு 56
தடிக்காரார் 186
தண்டிகை 88
தண்டைக்கால் 43
தணல் 402
தப்பட்டம் 704
தப்பு 554
தம்பட்டை 92
தம்பிரான் 86
தம்பூரா 714
தமரம் 734
தமிழ் 3
தயவு 501
தயிர் 422
தரம் 59
தலை 17, 110
தலைக்கணை 630
தலைநோவு 617
தவசு 55
தவம் 594, 595
தவில் 704, 711
தழைத்தல் 678
தற்பரை 536
தனிக்குட்டி 241

தா

தாடகை 81, 119
தாசன் 748
தாண்டவி 532
தாதி 412
தாமரை 4, 34
தாய் 5, 251
தாயார் 109, 142, 195, 197, 297, 223
தாரை 710
தாலாட்டு 518, 520
தாலி 154
தாழங்கூடை 312
தாளம் 92
தாளங்கள் 705

தி

திக்கு 195, 247, 277
திகம்பரி 248, 602
திங்கள் 361
திசைகள் 125
திண்ணம் 103

திரிபுரசவுந்தரி 683
திரி விளக்கு 639, 642
திருக்கோணம் 683
திருநீர் 8, 40, 141
திருநீறு 601
திருமனம் 51
திருமுகம் 52
திருமேனி 49, 519
திருவண்ணாமலை 604
திருவாக்கு 58
தில்லை 150, 187
தில்லைவனம் 261
திவ்வியம் 182

தீ

தீ 97
தீக்குழி 116
தீட்டு 552
தீண்டல் 653
தீர்த்தங்கள் 121
தீர்த்தம் 98
தீவினை 297, 298

து

துகிலாடை 23
துடுக்கு 263, 269, 270, 376, 378
துடை 350, 524
துடைப்பெருமன் 263, 269, 270
துணை 148
துந்துமி 117
துரந்தரி 195, 216, 251, 347
துருத்தி 108
துரைமகன் 323
துலங்குமணிமண்டபம் 200
துலுக்காண எல்லை 216
துலுக்கர் 580
துஷ்டர்கள் 378

தூ

தூக்கு 110
தூண்டி முள்ளு 263, 269
தூண்டில் 82, 236, 263
தூளிதம் 736

தெ

தெண்டனிடல் 378, 309, 337, 448
தெய்வம் 242, 334, 536
தெற்கு 88, 94, 101, 122

தே

தேசம் 96, 309, 337, 448
தேர் 88, 149
தேரோடல் 231
தேவதை 685
தேவர் 397
தேவர்கள் 31
தேவிமுகம் 291
தேவியர் 193, 350
தேவேந்திரன் 757
தேன் 98, 447

தை

தையல் 672

தொ

தொட்டியத்துசின்னான் 323, 405
தொண்டை 180

தோ

தோத்தரித்தல் 727
தோரணம் 188
தோல் 84
தோள் 24, 38, 146, 347
தோற்பாதம் 648

ந

நகை 144
நகைத்தல் 493
நட்டுவன் 175
நடுவீதி 650
நடை 100
நம்பினோர் 475
நல்லதங்காள் 421
நல்லபாம்பு 518
நல்லோர் 764

நா

நாககன்னி 197
நாகம் 44, 508
நாச்சிமார் 151, 171, 173
நாச்சியம்மா 358
நாட்டியம் 703
நாடுகள் 763
நாணயம் 498
நாதசுர மேளம் 703
நாமகூட்டம் 120
நாய்கள் 176
நாய்ப்படை 173
நாயகி 639
நாரணர் 134
நாரணனார் 143
நல்லமுத்துமாரி 259
நாலுகுரவை 100
நாலு திக்கு 187
நாலு பூதம் 76, 100, 172
நாலு மூலை 256
நாற்பத்தெண்ணாயிரம் 756
நான்முகன் 2

நி

நித்தம் 695
நித்திய கல்யாணி 697
நிஷ்டூரக்காரி 562
நிஷ்டுரம் 532

நீ

நீதி 5
நீதிமன்னர் 371
நீர் 135
நீலவர்ணம் 101
நீலி 255

நூ

நூற்றல் 506
நூறாயிரம் 506
நூறு 554

நெ

நெருப்பு 400

நே

நேருதல் 491, 492

நோ

நோவு 154, 184

ப

பக்கச் செடில் 273
பக்கத்துணை 341, 358
பக்கம் 234
பகல் 89
பச்சம் 503
பச்சை 124
பஞ்சாட்சரி 560
பஞ்சாரம் 141
பஞ்சுமெத்தை 630

புட்டத்துரைகள் 385
பட்டு 306
படலம் 119
படவேடு 228, 229, 566
படி 40
படித்தோர் 768
படை 79, 120, 133
படைமன்னர் 273
படைமுகம் 385
படையல் 187
பண்டிதர்கள் 181
பண்பு 579
பணக்காரர் 79
பத்தி 119
பத்திரகாளி 178
பத்திரி 267, 622, 687
பத்தினி 229, 325
பத்து 162, 211
பத்துகோடி 79
பத்துத்தலைநாகம் 511
பதம் பெறுவார் 669
பதினாயிரம் 505
பதினாயிரம் கண் 214
பதினாயிரம் கோடி 89
பந்தம் 89
பம்பை 94, 204, 668, 715
பம்மி 152
பரசுராமன் 228
பரஞ்சோதி 466, 728
பரமசிவன் 274
பரமேஸ்வரன் 1, 85
பராசக்தி 214
பராபரி 390
பரியாசம் 495, 497
பருவதம் 76, 94
பல் 167, 181, 330
பல்லக்கு 190
பல்லாக்கு 88, 94
பல்லிகள் 158
பலி 388
பலிச்சட்டி 588
பழிகள் 491
ப்ழிகாரி 330
பழமை 68
பள்ளிவீடு 162
பளிங்குமாமண்டபம் 204
பறமேளம் 668, 715
பன்றி 545, 546
பன்னிரண்டு 50
பன்னீர் 545, 546
பனையோலை 9
பக்ஷம் 558

பா

பாக்கியம் 85, 86
பாக்கியவதி 435
பாக்கு 48
பாசவலை 82
பாசை 96
பாச்சல் 164
பாட்டொலி 128
பாடகக்கால் 306
பாடல் 579
பாதம் 17, 107, 353, 463
பாதாளலோகம் 575
பாதாளவஞ்சனம் 741
பாம்பனை 130
பாம்பு 185, 508, 509
பாய் 161
பார் 353, 760
பார்வதி 12, 283
பாரச் செடில் 234
பாராமுகம் 488

பாரிசா மன்னன் 187
பால் 245
பால்பசு 274
பாலகன் 341
பாலன் 283, 293, 746
பாவம் 625
பாவனை 267
பாவாடம் 491, 492
பாவாடைராயன் 325
பாற்கடல் 2, 123, 124
பாளையக்காரி 330

பி

பிச்சாண்டி சந்நிதி 202
பிச்சி 34
பிச்சை 88
பிசாசு 739
பிடாரி 171
பிணி 618
பித்தம் 618
பித்தயெரிவு 620
பிரம்பு 37, 202
பிரமன் 394
பிராணிகள் 145
பிழை 725
பில்வி 739
பிள்ளை 13, 186, 244
பிள்ளைகள் 565

பீ

பீச்சல் 83

பு

புகழ் 147
புகை 97
புண்ணியவதி 7
புண்ணியம் 147
புதுமாரி 107, 132, 178
புதுமை 68
புத்தி 86, 186
புத்திரர் 588
புல் 10
புலவர் 579
புலவர்கள் 10
புலிகள் 46
புலிக்குட்டி 105
புனுகு 28

பூ

பூ 540
பூக்கள் 34, 50
பூக்குடம் 174
பூங்காவனம் 1
பூச்சியம் 173
பூசுனை 174
பூசுரர் 1
பூசை 74, 107, 139, 144
பூணாரம் 432
பூதகணங்கள் 189
பூதங்கள் 101, 150
பூத்தல் 540
பூதம் 36, 75, 94, 160
பூப்படை 80, 118, 173
பூமி 140, 147, 192, 354, 357
பூரி 710
பூரித்தல் 342
பூலகம் 480

பெ

பெசல்காற்று 24
பெண் 215, 218
பெண்கள் 68, 646
பெண்ணரசி 694
பெண்பிள்ளை 185
பெரியபாளையம் 237, 238, 329

பெரியோர் 766
பெருமாள் 681
பெருமூச்சு 152
பெருமை 766
பெற்றவள் 228, 290

பே

பேச்சி 170, 237, 329
பேய்கள் 65, 141
பேய்ப்படை 162, 173, 177
பேய்ப்பிள்ளை 176
பேர் 739
பேரரசி 35, 238
பேரன்மார் 318
பேருலகு 681

பொ

பொங்கல் 105, 166, 271, 272
பொட்டல் 156
பொடை 116
பொருந்து 186
பொருந்திலியர் 583
பொய்கை 596
பொய்யாத வாசகி 374
பொய்யாது 338, 539
பொரி 342
பொல்லாப்பு 140
பொற்கரகம் 209, 212
பொற்சுருகை 111
பொன் 1, 107, 311, 312
பொன்னரைங்காணி 111

ம

மக்கள் 317
மகமாயி 193, 366, 367
மகராசி 294, 360, 369
மகிமை 729
மகுடமுடி 382, 384
மங்கை 12, 22, 24, 360
மச்சி 233
மஞ்சணை 39, 48, 79
மஞ்சள் 108
மட்டகுத்து 83
மடி 523
மண் 148
மண்டலம் 336, 736
மண்டைக் குடைச்சல் 617
மணிமந்திரம் 367
மணியறுகு 47
மத்திப்பு 83
மதளைகள் 206
மதுக்குடம் 198
மதுரைவீரப்பன் 324
மந்தி 164
மந்திரிகள் 384
மயக்கம் 83
மரம் 26
மராட்டியர் 580
மரியாதி 69
மருந்து 52, 161
மருகர் 587
மருமக்கள் 317, 587
மருமகள் 423
மலைகள் 19, 51
மலையாள தேசம் 218, 219
மழை 21, 97, 446
மறவர் 541, 542
மறி 382
மறையோர்கள் 8
மன்னர் 382
மன்னி 384
மனம் 502, 768
மனோன்மணி 382
மனை 470

பாரிசா மன்னன் 187
பால் 245
பால்பசு 274
பாலகன் 341
பாலன் 283, 293, 746
பாவம் 625
பாவனை 267
பாவாடம் 491, 492
பாவாடைராயன் 325
பாற்கடல் 2, 123, 124
பாளையக்காரி 330

பி

பிச்சாண்டி சந்நிதி 202
பிச்சி 34
பிச்சை 88
பிசாசு 739
பிடாரி 171
பிணி 618
பித்தம் 618
பித்தயெரிவு 620
பிரம்பு 37, 202
பிரமன் 394
பிராணிகள் 145
பிழை 725
பில்லி 739
பிள்ளை 13, 186, 244
பிள்ளைகள் 565

பீ

பீச்சல் 83

பு

புகழ் 147
புகை 97
புண்ணியவதி 7
புண்ணியம் 147
புதுமாரி 107, 132, 178
புதுமை 66
புத்தி 86, 186
புத்திரர் 588
புல் 10
புலவர் 579
புலவர்கள் 10
புலிகள் 46
புலிக்குட்டி 105
புனுகு 28

பூ

பூ 540
பூக்கள் 34, 50
பூக்குடம் 174
பூங்காவனம் 1
பூச்சியம் 173
பூசுமை 174
பூசுரர் 1
பூசை 74, 107, 139, 144
பூணாரம் 432
பூதகணங்கள் 189
பூதங்கள் 101, 150
பூத்தல் 540
பூதம் 36, 75, 94, 160
பூப்படை 80, 118, 173
பூமி 140, 147, 192, 354, 357
பூரி 710
பூரித்தல் 342
பூலகம் 480

பெ

பெசல்காற்று 24
பெண் 215, 218
பெண்கள் 68, 646
பெண்ணரசி 694
பெண்பிள்ளை 185
பெரியபாளையம் 237, 238, 329

பெரியோர் 766
பெருமாள் 681
பெருமூச்சு 152
பெருமை 766
பெற்றவள் 228, 290

பே

பேச்சி 170, 237, 329
பேய்கள் 65, 141
பேய்ப்படை 162, 173, 177
பேய்ப்பிள்ளை 176
பேர் 739
பேரரசி 35, 238
பேரன்மார் 318
பேருலகு 681

பொ

பொங்கல் 105, 166, 271, 272
பொட்டல் 156
பொடை 116
பொருந்து 186
பொருந்திலியர் 583
பொய்கை 596
பொய்யாத வாசகி 374
பொய்யாது 338, 539
பொரி 342
பொல்லாப்பு 140
பொற்கரகம் 209, 212
பொற்சுருகை 111
பொன் 1, 107, 311, 312
பொன்னரைங்காணி 111

ம

மக்கள் 317
மகமாயி 193, 366, 367
மகராசி 294, 360, 369
மகிமை 729
மகுடமுடி 382, 384
மங்கை 12, 22, 24, 360
மச்சி 233
மஞ்சணை 39, 48, 79
மஞ்சள் 108
மட்டகுத்து 83
மடி 523
மண் 148
மண்டலம் 336, 736
மண்டைக் குடைச்சல் 617
மணிமந்திரம் 367
மணியறுகு 47
மத்திப்பு 83
மதலைகள் 206
மதுக்குடம் 198
மதுரைவீரப்பன் 324
மந்தி 164
மந்திரிகள் 384
மயக்கம் 83
மரம் 26
மராட்டியர் 580
மரியாதி 69
மருந்து 52, 161
மருகர் 587
மருமக்கள் 317, 587
மருமகள் 423
மலைகள் 19, 51
மலையாள தேசம் 218, 219
மழை 21, 97, 446
மறவர் 541, 542
மறி 382
மறையோர்கள் 8
மன்னர் 382
மன்னி 384
மனம் 502, 768
மனோன்மணி 382
மனை 470

மா

மாசு 78
மாணிக்க விளக்கு 16
மாதம் 91
மாதரசி 360
மாதா 285, 316, 324, 329, 348
மாப்பிள்ளைமார் 182
மாயன் 148, 194
மாயி 193, 367
மார்பு 254, 264, 348, 377
மாரடைப்பு 617
மாரி 19, 26, 172, 237
மாரி அம்மன் 190
மாரித்தாய் 369
மாரிமுத்து 197, 207, 355, 373
மாரியம்மை 54, 92
மால் 134
மாயம் 586
மாவு 98
மாவுத்தன் 96
மாளிகை 282, 285, 316
மானிடர் 337

மி

மிருதங்கம் 712

மீ

மீனாச்சி 351

மு

முக்கோடி 551
முகம் 178, 345
முகில் 119
முக்காலம் 64
முக்கோட்டை 47
முக்கோணச்சக்கரம் 249
முகியாமல் 778
முட்டை 42
முத்தம் 185
முத்தாரம்மன் 59, 138
முத்தாலுராவுத்தன் 328
முத்திரை 439, 623
முத்து 184, 306, 307, 309 345, 353
முத்துமாரி 194, 448
முதுகு 545
முந்நூறு 634
முப்பத்திரண்டு 264
முப்பத்தி முக்கோடி 755
முரசு 704
முழங்கால் 351
முழுகி 594,595
முள்ளு 264
முற்றம் 646
முனிவர் 756

மூ

மூங்கில் 41, 679
மூலக்கனல் 613
மூலாதாரம் 685
மூலைவீடு 646
மூன்று 178, 208

மே

மேகம் 97

மை

மைந்தர் 335
மைந்தன் 282, 294

மோ

மோகனப்பெண் 412
மோகினிமார்கள் 108
மோதிரங்கால் 307
மோர் 420, 421

யு

யுகம் 456

யோ

யோசனை 192

ர

ரதம் 477

ரா

ராசகன்னி 637
ராச்சதர் 36, 389
ராசாக்கள் 6
ராவுத்தர் 8

ரி

ரிசபம் 53

ரெ

ரெண்டுலட்சம் 75

ல

லச்சகோடி 120
லக்ஷ்மி 759

லெ

லெட்சுமி 4

லோ

லோக பரமேஸ்வரி 699
லோகம் 265

வ

வங்காள தேசம் 104
வச்சிரமணித் தோள் 262
வஞ்சி 411
வட்டம் 87, 175
வடக்கு 175
வடம் 245
வடவாசல் 22
வடவாமுகம் 53, 54
வடிவழகி 349
வடுகர் 580
வண்டி 99, 122
வண்டு 164, 190
வண்ணம் 525
வண்ணன் 133
வம்பு 168
வயிரவன் 60
வயிறு 181, 349
வரம் 10, 246
வருக்கை 33
வருத்தம் 483
வருந்துகிறது 281–283
வருந்துகிறேன் 751
வல்லவர் 254
வல்லவி 369
வல்லாண்மைக்காரி 253
வலம் 12, 59, 73, 126
வலியவர் 254
வலை 82
வலையக்காரர் 179
வள்ளல் 12
வனமையில் 595

வா

வாக்கினை 391
வாசல் 159, 274, 275, 371
வாசனை 542
வாத்தியம் 716, 717
வாதம் 618
வாதாடுதல் 392
வாய் 30, 38, 161
வார்த்தை 58, 74

வார்ப்புச் சிலையாள் 262, 365
வாலக்குழந்தைகள் 9
வாழி 753–758, 759
வாளி 29
வான் 97
வானரிசி 9
வானோர்கள் 753
வானவர்கள் 758

வி

விசயநகரம் 191
விசயநகர் பட்டணம் 199
விசுவநர்தர் 191
விண் 31
விண்ணவர் 589
வித்தகி 268
வித்துவான்கள் 764
வித்தை 268
விபூதி 623
விம்மி 152
விமலியர் 633
விருது 123, 125, 389, 559
விருது பம்பை 700
விருந்து 161
விருப்பம் 559
விலாடபுரம் 221
விழுது 43
விளக்கு 188
விளையாடுதல் 18, 212
விநாயகன் 2
வினை 147
வினைகள் 624
விஷ்ணு 394
விஷம் 652
விஸ்தாரம் 562

வீ

வீடு 153, 174
வீணை 9, 714
வீதி 212
வீரசடை 632
வீரபத்திரன் 60
வீரமக்கள் 708
வீராணஞ்சோலை 370, 636
வீராம்பட்டணம் 241, 568
வீற்றிருக்கும் 743

வெ

வெட்டி 381
வெண்ணைலூரு மாரி 179
வெள்ளவட்டம் 95
வெள்ளி 11
வெள்ளிக்கிழமை 467
வெற்றிடிக்கொடி 700
வெறிதடுப்பு 84

வே

வேட்டை 149
வேடிக்கை 585
வேணும் 340
வேதியர் 386
வேதாந்தம் 6, 386
வேப்பஞ்சிலையாள் 340
வேப்பம்பால் 631
வேப்பிலை84, 212, 265, 266, 268
வேம்பு 26, 199
வேரோடுதல் 678

வை

வைகை 595
வேப்பு 740
வையகம் 244, 335
வையங்கள் 206

ஜ

ஜண்டா 707

பெயரகராதி

அணிகலன்கள்

ஆரம்
கடுக்கன்
கொப்பு
தண்டை
தாலி
பாடகம்
மோதிரம்

ஆட்சி தொடர்பானவை

கிரீடமுடி
கொடி
சாமரைகள்
பல்லக்கு
மன்னன்
முத்திரை

ஆயுதங்கள்

அலகு
இரும்பு
ஈட்டி
கத்தி
கொக்கி
கோல்
சூலம்
தூண்டில்
பிரம்பு

இசைக்கருவிகள்

உடுக்கை
எக்காளம்
கிளாரிநெட்டு
கெண்செட்டு
சவுண்டை
சித்துடுக்கை
சிறுமணிகள்
சின்னங்கள்
சுதி
தக்கை
தப்பட்டை
தம்பட்டம்
தமரம்
தம்பூரா
தவில்
தாளம்
துந்துமி
நாதசுரம்
பம்பை
பறை
மிருதங்கம்
முரசு
மேளம்
வீணை
ஜண்டா

இடப்பெயர்கள்

அயோத்திநகர் பட்டணம்
இந்திரபுரம்
உத்திராட்ச பூமி
கர்நாடு
கைலாசம்
கேதார பூமி
பாதாளம்

பாரிசா பூமி
பூலோகம்
வனம்
விசய நகர் பட்டணம்
வையம்

உடலுறுப்புகள்

இடுப்பு
இருதயம்
உதடு
கணுக்கால்
கண்
கரம்
கழுத்து
காது
கால்
கூந்தல்
கை
கொங்கை
சடை
சிரம்
செவி
தலை
துடை
தொண்டை
தோல்
தோள்
நாக்கு
பல்
பாதம்
மண்டை
மார்பு
முதுகு
முழங்கால்
முகம்
மேனி
வயிறு
வாய்
வீரசடை

உறவுகள்

அண்ணன்
அத்தைமகள்
அம்மா
ஆச்சி
குமாரர்
குழந்தை
குழந்தை
ஆத்தாள்
ஆம்பிளை
சகோதரி
சேவகர்
செல்வன்
பாலன்
பெண்
தங்கச்சி, தங்கை
தாதி
தாயார்
பிள்ளை
புத்திரர்கள்
பேரன்மார்கள்
மங்கை
மதலை
மருகர்
மருமகன்
மருமக்கள்
மாதா
மானிடர்
மாப்பிள்ளை
மைந்தன்

ஊர்கள்

அருணாசலம்
ஆரணி
ஊத்துக்காடு
கச்சிபதி
கடும்பாடி
கன்னபுரம்
கன்னனூர்
கன்னியாகுமரி
காசி
காஞ்சிபுரம்
கோலியனூர்
கைலாயம்
சமயபுரம்
திருவண்ணாமலை
தில்லை, தில்லைவனம்
படவேடு
பெரியபாளையம்
விலாடபுரம்
வீராம்பட்டணம்
வீராணஞ்சோலை
வெண்ணனூர்

எண்ணுப்பெயர்கள்

ஆயிரம்
ஆறு
ஈரோடு
எட்டு
ஏழு
ஐந்து
கோடி
பத்து
பதினாயிரம்கோடி
பன்னிரண்டு
முப்பத்திரண்டு
மூன்று
ரெண்டு லட்சம்
லச்ச கோடி

ஒப்பனைப் பெயர்கள்

கொலு
தோரணம்
பட்டு
பொன்

கட்டடப் பெயர்கள்

அரண்மனை
கோயில்
மனை
மாளிகை

காலப்பெயர்கள்

கலியுகம்
திங்கள்
வெள்ளிக் கிழமை

கொலைக்களம் தொடர்பானவை

உறி
கழுமரம்

சந்நிதிகள்

பிச்சாண்டி சந்நிதி

சமயம் தொடர்பானவை

அறுகோணம்
அஷ்டாச்சரம்
சக்கரம்
பஞ்சாட்சரம்
முக்கோணம்

மூலக்கனல்

வேதங்கள்

வேதியர்கள்

சிறுதெய்வங்கள்

ஆரிமுத்து

இராச்சதர்

எமன்

கருப்பண்ணசாமி

கருப்பன்

காத்தவராயன்

சங்கிலிகருப்பன்

சின்னான்

தாடகை

துரைமகன்

பாவாடைராயன்

பிசாசு

பூதகணங்கள்

மதுரை வீரப்பன்

முத்தாலுராவுத்தன்

தாவரங்கள் தொடர்பானவை

குடமல்லி

பத்திரி

மல்லிகைப்பூ

வேப்பிலை

வேப்பம்பால்

திசைகள்

ஈசான மூலை

திக்கு

தெற்கு

வடக்கு

தெய்வப் பெயர்கள்

அங்கிக் கண்ணி

அந்தரி

அம்மணி

அம்மை முத்து

அலங்காரி

அழகி

ஆண்டவன்

ஆணழகி

ஆதிசரஸ்பதி

ஆதிசிவன்

ஆதிபரஞ்சோதி

ஆயன்

ஆயி

ஆரணங்கு

ஆறுமுகன்

ஆனைமுகன்

ஆஸ்தான மாரிமுத்து

இந்திரன்

இந்திராணி

இரட்சகி

இராசகன்னி

ஈசன்

ஈஸ்வரி

உகந்தரி

உத்தண்ட மாரிமுத்து

உத்தமி

உமை

உவை

எக்காலதேவி

ஓங்காரரூபி

ஓங்காரி

கட்டழகி

கஞ்சாவெறியன்

(பாவாடைராயன்)
கண்ணர்
கணபதி
கபாலி
கர்த்தர்
கன்னிமார்
கனகவல்லி
காரணி
காளி
குமரகுருபரன்
குழலாள்
கொம்பனை
கொள்ளிக்கண்மாரி
கோபாலன்
சங்கரி
சத்தகன்னி
சந்தனமாரி
சந்திரர்
சவுந்தரி
சரஸ்வதி
சித்தாந்தமாரிமுத்து
சிவன்
சூரியர்
சூலி
செங்கண்ணன்
செந்திலோன்
சேடன்
சேகரி
தற்பரை
திகம்பரி
திரிபுரசுந்தரி
திரிவிளக்கு
திரிவிளக்கு நாயகி
துரந்தரி
தெய்வம்
தேவதை
தேவர்
தேவி
தேவேந்திரன்
தையல்
நல்லதங்காள்
நாககன்னி
நாச்சிமார்
நாச்சியம்மா
நாரணன்
நான்முகன்
நித்தியகல்யாணி
நிரந்தரி
நிஷ்டூரி
நீலி
பத்திரகாளி
பத்தினி
பரசுராமன்
பரஞ்சோதி
பரமசிவன்
பராபரி
பாக்கியவதி
பாரளந்தோன்
பார்பதி
பிடாரி
பிரமன்
பூரணசவுந்தரி
பெண்ணரசி
பெருமாள்
பேச்சி
பேரரசி
மகமாயி
மகராசி
மங்கை
மனோன்மணி

மாதரசி
மாயன்
மாரி
மாரிஅம்மன்
மாரிமுத்து
மாரியம்மை
மால்
மீனாட்சி
முத்தாரம்மன்
முத்துமாரி
மோகினி மார்கள்
லக்ஷ்மி
லெட்சுமி
லோகபரமேஸ்வரி
வஞ்சி
வயிரவன்
வாசகி
வார்ப்புச் சிலையாள்
வானோர்
விசுவநாதர்
விண்ணவர்கள்
விநோதி
விமலியர்
வினாயகன்
விஷ்ணு
வீரபத்திரன்
வேப்பஞ்சிலையாள்

தேசங்கள்

குமரி தேசம்
கொங்கு தேசம்
துலுக்காணம்
மலையாள தேசம்
வங்காள தேசம்

தெய்வ வாகனங்கள்

செடில்
தேர்
வச்சிரமணித்தேர்
பல்லக்கு
வடம்

தொழிற்பெயர்கள்

இராசாக்கள்
ஈட்டிக்காரர்
கள்ளர்
கிளிமொழியாள்
குறவர்
சாட்டைக்காரர்
சிங்காதனக்காரர்
சேவல்காரர்
தாடிக்காரர்
தாசன்
துஷ்டர்கள்
நட்டுவன்
நீதிமன்னர்
பட்டத்துரைகள்
படை மன்னர்
பண்டிதர்கள்
பாம்புக்கனி
புலவர்கள்
மகுடமுடிமன்னர்
மறவர்
மறையோர்கள்
மாவுத்தன்
மானிடர்
ராவுத்தர்
வலையக்காரர்

நவரத்தினங்கள்

கோமேதகம்
தங்கம்
பொன்
மாணிக்கம்
முத்து
வெள்ளி

நறுமணப்பெயர்கள்

அகிள்
கதம்பப்பொடி
சாம்பிராணி
திருநீறு
பன்னீர்
பிச்சி
புனுகு
மஞ்சணை
மஞ்சள்
விபூதி

நிறப்பெயர்கள்

சிவப்பு
நீலம்
பச்சை
பஞ்சர்வணம்

நோய்களின் பெயர்கள்

அம்மை
களிச்சல்
காய்ச்சல்
சளி
பீச்சல்
மட்டக்குத்து
மத்திப்பு
மயக்கம்
வெறிதடுப்பு

பழங்கள்

கதலி
கொவ்வைக்கனி
பலாப்பழம்

பறவைகள்

அன்னங்கள்
காகம்
கிளிப்பிள்ளை
குருவி
கெருடன்
கொக்கு
மயில்
வண்டு

பாம்பின் பெயர்கள்

அரவம்
சேடன்
சேஷன்
நல்ல பாம்பு
நாகம்

மண்டபங்கள்

ஓலக்கால் மண்டபம்
சந்திர மண்டபம்
சூரிய மண்டபம்
துலங்குமணி மண்டபம்
பளிங்கு மண்டபம்

மரங்கள்

ஆல்
கற்பகம்
சந்தன மரம்

பனை
பாக்கு
மூங்கில்
வருக்கை
வேம்பு

மலைகள்

இமயகிரி
கஞ்சகிரி
கயிலாய மலை
கொல்லி மலை

மொழி, நாடுகள்

கன்னடியர்
துலுக்கர்
பட்டாணியர்
பொந்திவியர்
மராட்டியர்
வடுகர்

வழிபாடு தொடர்புடையன

அனல்
ஈச்சங்கூடை
உதிரபலி
எண்ணெய்
எள்
ஒளிவிளக்கு
ஓமகுண்டம்
கரகம்
தணல்
தயிர்
தாழங்கூடை
தீர்த்தம்
தூளிதம்
தேன்
நெருப்பு
படையல்
பலிச்சட்டி
பால்
பொங்கல்
பொரி
பொற்கரகம்
மணிவிளக்கு
மதுக்குடம்
மோர்
விளக்கு

விலங்குகள்

ஆனை
எருமைக்கிடா
காளை
குதிரை
செங்கிடா
நாய்
பசு
பல்லி
பன்றி
புலி
புலிக்குட்டி
மந்தி
மறி

தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்: வெளியீடுகள்

1. மார்க்கண்டேயன் கதைப்பாடல், பக்.520, விலை ரூ.50, பதிப்பாண்டு 1992 (மகா சிவராத்திரியன்று இரவு முழுவதும் உறங்காதிருப்பதற்காகப் படிக்கப்பெறுவது).

2. திருக்குற்றாலப் புராணம், பக்.504, விலை ரூ.50, பதிப்பாண்டு 19[illegible] (கி.பி. 1595 இல் பாடி அரங்கேற்றம் செய்யப்பெற்ற குற்றாலத்திற்குரிய முதல் தலபுராணம்).

3. முப்புராதி அம்மன் கதைப்பாடல், பக்.400, விலை ரூ.49, பதிப்பாண்டு 1994 (முப்புராதி அம்மன் கோயில்களில் பாடப்பெறும் வில்லுப்பாட்டு நூல்).

4. அய்யனார் கதைப்பாடல், பக்.160, விலை ரூ.40, பதிப்பாண்டு 1994 (அய்யனார் – ஐயப்பன் வழிபாட்டை வலியுறுத்தும் வில்லுப்பாட்டுக் கதை).

5. ஒட்டக்காரசுவாமிக் கதைப்பாடல், பக்.120, விலை ரூ.30, பதிப்பாண்டு 1994 (மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குக் கொடிமரம் வெட்டச் சென்றவர்க்குத் தூது போனவர் கதை).

6. கம்சன் கதைப்பாடல், பக்.140, விலை ரூ.35, பதிப்பாண்டு 1994 (கம்சன் வதைபற்றிய வில்லுப்பாட்டுக் கதை).

7. தமிழில் வசைப்பாடல்கள், பக்.140, விலை ரூ.35 (வசை கவி ஆண்டான் கவிராயன் பற்றிய ஆய்வு நூல்)

8. மாரியம்மன் கதைப்பாடல், பக்.180, விலை ரூ.45, பதிப்பாண்டு 1994 (தமிழகத்தில் மாரியம்மன் வழிபாட்டை உணர்த்தும் வில்லுப்பாட்டுக் கதை)

9. அருஞ்சுனை காத்த அய்யனார் கையேடு, பக்.150, விலை ரூ.45 பதிப்பாண்டு 1994 (திருச்செந்தூர் தேரிக்கருகிலுள்ள அய்யனார் கோயில் வழிகாட்டி நூல்).

10. ஸ்ரீபத்மநாபசுவாமி கதைப்பாடல், பக்.200, விலை ரூ.49, பதிப்பாண்டு 1994 (திருவரங்கத்துப் பெருமாள் திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்ட வரலாற்று வில்லுப்பாட்டுக் கதை)